கழக வெளியீடு : சஅக

கடலின்கண் முத்து

அல்லது

யான் கண்ட இலங்கை

இந்து அறநிலைப் பாதுகாவற் கழகத்தின்
ஆணையாளராயிருந்த
இராவ்பகதூர்
சி. எம். இராமச்சந்திரன் செட்டியாரவர்கள்
பி. எ., பி. எல்.
இயற்றியது

திருநெல்வேலி தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்,
திருநெல்வேலி, ... சென்னை. 1.

முதற்பதிப்பு : திசம்பர் 1948

[All Rights Reseved]



THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD.
TINNEVELLY & MADRAS 1

அப்பர் அச்சகம், 6, டேவிட்சன் தெரு, சென்னை 1.

முன்னுரை

நாடுகள் சுற்றுவது என்றால் எனக்கு மிக விருப்பம். வாய்ப்புக்கள் கிடைக்கும்பொழுதெல்லாம் அவைகளை விட்டுவிடுவது இல்லை. கூடியமட்டில் அவைகளை முற்றுவித்துக்கொண்டு வெளியேறிவிடுவதே எனது செயல். இவ்வாறாக எனது கல்லூரி நாட்கள் முதற்கொண்டு நாளதுவரைப் பற்பல நாடுகளையும் சுற்றி வந்துள்ளேன். நாட்டின் தன்மையாவது சங்கத்துச் செய்யுளில் ஔவைப்பிராட்டியார்,

> "நாடா கொன்றோ காடா கொன்றோ.
> அவலா கொன்றோ மிசையா கொன்றோ
> எவ்வழி நல்லவர் ஆடவர்
> அவ்வழி நல்லை வாழிய நிலனே"

என்று கூறியவாறு அன்றோ? நாடு காண்பதில் இயற்கை வனப்புகளைக் கண்டு மகிழ்வதுமட்டும் அன்றி, நான் பார்க்கும் நிலப் பகுதிகளில் காணும் மக்களின் குணங்களைக் கண்டு அவர்களோடு அளவளாவி மகிழ்தலும் யான் கொண்ட விருப்பம். இவ்வாறாக நாடுகாண இயற்கையிலே நான் பன்முறை என் ஓய்வுநாட்களைக் கழித்திருக்கிறேன். அவ்வாறு கண்ட நாடுகளிலே ஈழநாடு என்ற இலங்கை ஒன்று ஆகும்.

'ஈழநாடு' அல்லது 'இலங்கைத்தீவு' என்றால் எனக்கு மிக விருப்பம். மூன்றுமுறை சென்றிருக்கிறேன். பல பகுதிகளையும் பார்த்திருக்கிறேன். மறுபடியும் செல்லவும் எனக்கு விருப்பம் உண்டு. ஆகவே, அது ஒரு சிறந்த நாடாக நான் கருதுகின்றேன். அதன் இயற்கைவளங்களைக்காட்டிலும், அதில் வசிக்கும் மக்களுடைய அன்பே சிறப்பாக விளங்கியது. ஆகவே, அந்நாட்டைக்குறித்து எழுதவேண்டும் என்று தோன்றியது. அதனை எழுதச்சொல்லியும் சில அன்பர்கள் என்னைக் கேட்டார்கள். இருமுறைகள் நான் சென்றபோதும் நான் சென்ற செலவைப்பற்றி எழுதும்படி எனக்கு வேண்டுகோள் வந்தது. நானும் 'இந்து சாதனத்'திற்கு இரண்டு கட்டுரைகள் எழுதினேன். அவைகள் போதா; பெரியதாக ஒரு நூல் வெளிவரவேண்டும் என்ற விருப்பம் பலருக்கு இருந்தது. அதையும் ஒத்துக்கொண்டு இந்நூலை எழுதினேன். எழுதி முடித்துப் பல திங்கள் ஆயின. அது அச்சு ஊர்தி ஏற இப்பொழுதே இயன்றது. இது மக்களுக்குப் பயன்தரும் என்று எண்ணுகிறேன்.

நான் எழுதியிருக்கும் இந்நூலுக்கு என்ன பெயரிடுவது என்று நினைத்தேன். என் நண்பர் பெரியார் திரு. வி. க. போல 'எனது இலங்கைச் செலவு' என்று பெயரிட்டால் அதனைக் 'கருத்துத் திருட்டு' என்பார்கள். ஆகவே, வேறொரு பெயரைக் குறிக்க வேண்டும் என்று எண்ணினேன். இந்தியாப்படத்தைப் பார்த்தால் அது ஒரு மனிப்பதக்கம் போலவும், இலங்கை அதன் அடியில்

தொங்கும் முத்துப்போலவும் தோன்றும். அம்முத்து கடலில் இருக்கிறது. இலங்கைக் கடலில்தான் முத்தும் விளைகிறது. ஆகவே, இலங்கையைக் குறிப்பதற்குக் "கடலின்கண் முத்து" என்றால் பொருந்தும் என்ற எண்ணம் தோன்றிற்று. அதை இந்நூலுக்கு இட்டால் குற்றம் இல்லை என நினைத்தேன். அதையே தலைப்பாக இட்டேன்.

நமது நாட்டிலே நாட்டுரிமை இயக்கம் தொடங்கியதே பரத கண்டத்துப் படத்தைப் பாரததேவியின் உருவாக இயற்றி, காசுமீரத்தில் தேவியின் தலையும், குமரியில் தேவியின் பாதமும் நிலைக்கும்படி ஓவியம்தீட்டி வெளியிட்டார்கள். அப்படத்தில் இலங்கையைத் தேவியின் பாதத்திற்கு அடுத்து முளைத்த ஒரு தாமரைமொட்டாகத் தீட்டிவைத்தார்கள். இதன்படி இலங்கை ஒரு தாமரைமொட்டு ஆகிறது. குளத்தில்தான் தாமரை இருக்குமேயன்றிக் கடலில் தாமரை இருக்காதாகவே, கடலில் ஒரு தாமரை என்ற பெயர் இதற்குப் பொருந்தாதென்று விட்டேன்.

மேலும், இந்த நாளில் பயணநூல்கள் நமது மொழியில் மிகுதியாக இல்லை. அண்மைக்காலத்தில்தான் சில தோன்றியிருக்கின்றன. இந்நூல் பயணவரலாற்று நூலாகும். அந்தச் செய்தியையும் குறிக்கவேண்டி, முன் எண்ணின தலைப்பின்கீழே 'யான் கண்ட இலங்கை' என்ற விளக்கச்சொற்களும் சேர்த்தேன்.

இந்நூலில் நான் இலங்கை சென்றபோது கண்டவைகளை மட்டும் - எழுதினால் போதாது. மக்களுக்குப் பயன்படவேண்டுமானால், சென்று பார்த்த நாட்டைக்குறித்துப் பொதுவாய் அறிந்து கொள்ளக்கூடிய வரலாறுகள், நாட்டு விவரங்கள், மக்கள் ஒழுக்கங்கள், ஆட்சிமுறைகள் முதலியவைகளும் சேர்க்கவேண்டும் அன்றோ? ஆகவே, இவைகளையும் திரட்டி ஒழுங்குபடுத்திச் சேர்த்துள்ளேன். இந்தச் செய்திகளைத் தெரிந்துகொள்ள முன்னமேயே வெளிவந்து மக்கள் கைகளில் வழங்கிவரும் சில வரலாற்று நூல்கள் பெரிதும் உதவியாக இருந்தன. அந்நூல் ஆசிரியர்களுக்கு எனது நன்றி உரித்து.

இந்நூலில் கண்ட விவரங்களை விளக்கிவைப்பதற்காகப் பின்னால் சில சேர்க்கைகளைச் சேர்த்திருக்கிறேன். அரச பரம்பரைகள், நாட்டு விவரங்கள் முதலியவைகளை அதில் காணலாம்.

மேலும், சில நாட்டுப்படங்களும் காட்சிகளின் படங்களும் இக்கால மக்களுக்கு இன்றியமையாதனவாகத் தோன்றும். அவைகளையும் சேர்த்திருக்கிறேன். இவைகளை எல்லாம் சேர்த்துக் கொள்ள உதவிபுரிந்த அன்பர்களுக்கு எனது நன்றி உரித்தாகுக.

கோவை. ம. இராமச்சந்திரன்.

பொருளடக்கம்

MADRAS

பக்கம்

1. முத்துக்கு ஓர் இணைப்பு — க—உஉ

சேது என்ற இயற்கை அணைக்கட்டு க, இராமகாதை உ, இராமேசுவரமும் பாம்பனும் ச, படகிற் செல்லல் அ, முத்துக் குளித்தல் கஉ, மன்னர் கசு, திருக்கேதீச்சரம் கஎ, மதவாச்சி உக.

2. முத்தின் தலையில் ஒரு குத்து — உஉ—நக

யாழ்ப்பாண நகரம் உஉ, யாழ்ப்பாணத்தின் விளைபொருள்கள் உடு, யாழ்ப்பாண நகரமைப்பு உஅ, நல்லூர் நக, போக்குவரவுப் பாதைகள் நந, சைவசமய மாநாடு நசு.

3. முத்தைச்சுற்றிலும் ஒரு வற்சம் — நக—நுஎ

யாழ்ப்பாண வட்டம் நக, மேலைப்புலோலி சசு, வடமராட்சி சஎ, தென்மராட்சி சஎ, வலிகாமம் சஅ, மாவிட்டபுரம் நுஏ, இராமநாதன் கலாசாலை நுஉ, தீவுகள் நுந, ஊர்காவற்றுறை நுடு, நாகத்தீவு நுடு, படைவீடுகள் நுசு.

4. வற்சத்தின் நற்பொலிவு — நுஎ — எஉ

தமிழர் சிறப்பு நுஎ, மகதநாட்டுத் தொடர்பு நுஅ, தமிழர் படையெடுப்பு நுக, சிங்கள ஆரிய சக்கரவர்த்திகள் சுக, பேசும் மொழி சுஉ, எழுதும் மொழி சுசு, பழக்கவழக்கங்கள் சுஅ.

5. முத்துப்பரப்பில் பண்டைச் சித்திரம் — எஉ—அள

அநுராதபுரப் பழைமை எஉ, சேதுவன ஆராமம் எஎ, உலோப மகாபயம் எஅ, மகாதூபம் எக, தூபாராமம் அக, ஈசுவரமுனி அக, ஏலேலசிங்கன் அந, துட்டகெமுனு அச, தமிழ் மன்னர்கள் அடு, தற்காலநிலை அசு, தமிழ்க் கல்வெட்டுக்கள் அஎ.

6. கீழ்க்கோட்டில் ஒரு சிற்பம் — அஅ—கஏசு

திருக்கோணமலை அஅ, துறைமுகம் அசு, மாணவர் சமய ஈடுபாடு கஏ, வங்கத் துறவிச் சிங்கம் ககு, கோயில் சென்றது கஉ, கோட்டை கந, சுவாமிப்பாறை கச, இயற்கைப் பிளவு கடு, கன்னியா வெப்பக்கிணறுகள் கசு, ஐதீகம் கஎ, சரிதை கஅ, யாழ்ப்பாணத்தில் ஆரிய சக்கரவர்த்திகள் கஏந, பறங்கியர் புகுகை கஏந, சைவர்கள் பெற்ற உரிமை கஏடு.

7. மேற்கோட்டில் ஓர் ஓவியம் ...... ௧0௯—௧௨௪

கொழும்புத் தலைநகர் ௧0௯, புத்தபகவான் எழுந்தருளினமை ௧0௭, கோட்டை ௧0அ, புத்தபகவான் உறுப்புக்கள் ௧0க, விவேகானந்த சபை ககo, கோட்டையும் பேட்டையும் ககக, அடிமைத் தீவு ககஉ, பண்டைத் தலைநகர் ககஙூ, போர்த்துகீயர் வருகை ககஙு, போர்த்துகீயர் கோட்டை கட்டினது ககஙு, ஒல்லாந்தர் வருகை ககசு, ஆங்கிலேயர் வருகை ககள, விவேகானந்தர் ககள, விவேகானந்தசபை அமைப்பு ககஅ, சமய நிலையங்கள் ககசு, கண்காட்சிச்சாலை கஉo.

8. நடுவில் ஓர் இரேகை ..... கஉக—கசo

கழனிப் பள்ளத்தாக்கு கஉக, இரப்பர்த் தோட்டம் கஉஉ, இரப்பர்த் தாள்கள் கஉச, சிறு இருப்புப்பாதை கஉடு, நெருங்கிய ஊர்கள் கஉசு, கோட்டை கஉசு, சீதுவாகை கஉள, விசயவாகுவின் வீழ்ச்சி கஉள, புவனேகவாகுவின் பொருந்தாச் செய்கை கஉஅ, போர்த்துகீயர் தோல்வி கஉசு, இராசசிங்கன் வீழ்ச்சி கஙo, விமலதருமன் ஆட்சி கஙஉ, இரத்தினபுரம் கஙஙு, அரபியர் வாணிகம் கஙஙு, சிந்துபாத்து கதை கஙஉச, மணி பொறுக்குதல் கஙடு, சாணைத்தொழிலும் மணி இழைப்பும் கஙசு, சிவஞானபாதம் கஙள, பௌத்தச் சார்பு கஙஅ, சைவச் சார்பு கஙஅ, இசுலாமியச் சார்பு கஙஅ, சபரகாமம் கஙக, இணைப்பு கசo.

9. நடுநாயக ஓவியம் ..... கசக—கசo

மாறுதலில் இன்பம் கசக, வழிச்செழிப்பு கசக, அயவழி கசஉ, தூலவழி கசஉ, அருவிகள் கசஙூ, கொத்தளப்பாறை கசச, கணவாய்களும் தோட்டங்களும் கசடு, பேராதனை கசடு, பூங்கா கசசு, எதிர்காலக் கலைக்கழகம் கசள, கண்டிப் பெருநகர் கசள, அருமைப்பாடு கசஅ, புத்தர் கோயில் கசக, பெரஹரா கசக, குருக்கள் கடo, வரலாறு கடo, பரங்கியர் கடுக, ஒல்லாந்தர் கடுச, ஆங்கிலர் கடுசு, கொடுங்கோன்மை கடுசு, கண்டி வீழ்ச்சி கடுள, மாத்தளை கடுஅ, குகைக் கோயில் கடுக, இணைப்பு கசo.

10. இயற்கைமேட்டின் பொலிவு ..... ககo—களசு

தென்மலைநாடு ககo, அதன் செழிப்பு ககக, பண்ணைத் தோற்றமும் நில மாறுபாடும் ககஉ, கம்பளை ககஉ, சமய நிலையங்கள் ககஙூ, பண்ணைப் பெருக்கம் ககச, தொழிலாளர் சேர்க்கையும் அவர்கள் நிலைமையும் ககச, தேயிலைப் பயிர் ககசு, அதன்

இயல்பு கசுஎ, நாற்றுவிடல் கசுஅ, இலை கிள்ளுதல் கசுஅ, தரப் பிரிவினை கசுக, இரவில் காட்சி கசுக, தொழிலாளர் இருப்பிடங்கள் கஎ0, பண்ணை மாளிகைகள் கஎ0, சிவஒளி பாதம் கஎக, மழை வளம் கஎஉ, நீர்வீழ்ச்சிகள் கஎஉ, உயர்ந்த முடிகள் கஎங, நூரளை கஎங, சீதா எலியா கஎச, ஹெக்கலைப் பூங்கா கஎச, ஒரு படைவீடு கஎடு, பண்டாரவளை கஎடு, வதுளை கஎடு, இணைப்பு கஎசு.

11. இயற்கையில் செயற்கை [நடுமாகாணம்] கஎசு—ககசு

இயற்கையோ செயற்கையோ கஎசு, பெரியதொரு பாதகச் செயல் கஎஅ, மலையரண் கஎக, ஓவியங்கள் கஎக, காட்சி யழகு கஎக, புகழ் யாருக்கு கஅ0, தம்பளை கஅ0, தொழிலாளி யின் துயரங்கள் கஅஉ, குகை கஅங, குகை ஓவியம் கஅச, அலுவிகாரம் கஅடு, விசிதபுரம் கஅடு, பண்டைப்பெரும் போர் கஅசு, தூபி கஅஎ, வாவிகள் கஅஎ, வேலையின் அரு மைப்பாடு கஅஅ, அரிய புத்த சிலை கஅக, சிலையின் சிறப்பு ககo, நீர்வளம் ககஉ, மின்னேரிவாவி ககஉ, சமயப்பரப்பு ககச, வேறொரு கோயில் ககடு, அழிந்த நகரம் ககடு, இணைப்பு ககசு.

12. கண்கவரும் கண்ணியக் காட்சி ககசு—உகச

பொலனறுவைப் பழம்பதி ககசு, சிங்களத்தின் தலைநகர் ககசு, பராக்கிரமபாகு ககக, குறை ககக, துணிவு ககக, செயல் கள் உ00, வெற்றி உ0க, பிறநாடு செல்லல் உ0க, தமிழ் நாட்டில் உ0க, பொதுநலச்செயல்கள் உ0உ, சமயத்தில் ஈடு பாடு உ0உ, நாட்டுவளம் பெருக்கல் உ0ங, அழகுபடுத்தி யது உ0ங, அரண்மனைப் பெருமை உ0ச, இராச மாளிகை உ0ச, நீராடும் நிலையம் உ0டு, பூங்கா உ0டு, திருக் குளம் உ0சு, சமய நிலையங்கள் உ0எ, வட்டதகை உ0எ, ஹெத தகை உ0அ, சிவன்கோவில் உ0அ, சேதவனம் உ0க, குடை கோயில் உ0க, தமிழர் மகாசயம் உக0, தமிழ்க் கல்வெட்டுக் கள் உகக, அரசன் கொடிவழி உகங, இணைப்பு உகச.

13. முத்தின் அடிப்பகுதி வனப்பு [தென் மாகாணம்] உகடு—உஙச

தெற்கே வழிநடை உகடு, இளைஞர் எண்ணப்போக்கு உகசு, கரையோரக் காட்சி உகஎ, செழுமை உகஅ, ஊர் அமைப்பு உகக, மலைவெனியா உகக, தென்னந்தோப்புகள் உஉ0, மக்கள் தொழில் உஉக, குடியிருப்பு உஉங, வாழ்க்கைத்தொழில் உஉச, இசுலாமியர்கள் உஉடு, உபாத்திமைத்தொழில் உஉசு, பள்ளி நிலை யங்கள் உஉஎ, விவிலியச் சமயம் உஉஎ, ஆறுகள் உஉஅ, படகு

கள் உஉ, மீன் உஉ, மரமேறிகள் உஉ, ஊர்கள் உ0, களுத்துறை உ0, காலி உக, பண்டைவரலாறு உக, ஊர்வளம் உஉ, குடிசைத்தொழில்கள் உங, இணைப்பு உச.

14. முத்து இணைப்பின் அடித்துளை அழகு [உருளைவட்டம்] உச—உடு

வடிவம் உச, பண்டைப் பிரிவுகள் உடு, வழிநடை உடு, திசைமாராமை உஎ, அதன் பெருமை உஅ, அதன் வரலாறு உக, அடவி வழி உ0, கதிர்காமம் உஉ, வழிபாடும் கோயிலும் உங, தூய்மைக் கோயில் உச, கோயிற்பகுதிகள் உடு, ஊர் உடு, திருவிழா உசு, கதைகள் உள, நடவடிக்கைகள் உஅ, ஊர் வரலாறு உக, ஆட்சி உடு, இலக்கியம் உடு, இணைப்பு உடு.

15. முத்துப்பரப்பில் சில அழகுகள் [பண்டைப் பதிகள் சில] உடு—உசஉ

எனைய இடங்கள் உடு, யாபகுவை உடு, மட்டக்களப்பு உடு, அடிகள் உடு, இன்னிசை உடு, நீரரமகளிர் உசு0, [வடமேற்கு மாகாணம்] புத்தளம் உசஉ.


பின்னுரை உசுக

சேர்க்கை உசுடு—உள0

சிங்கள அரசர்கள் உசுடு, யாழ்ப்பாண ஆரிய சக்கரவர்த்திகள் உசுசு, மேல்நாட்டார் உசுள, இலங்கையைப்பற்றிய சில புள்ளி விவரங்கள் உசுள.

படங்கள்

	பக்கம்
இலங்கை—பண்டை மூப்பிரிவுகள்	க
திருக்கேதீச்சரம்	கள
இலங்கை—விளைபொருள்கள்	உடு
இலங்கை—மாகாணங்களும், நகரங்களும்	ங்ங
போதி மரம்	எசு
ஈசுவரமுனி கோயில்	அக
கழனி கங்கை	க0எ
சிங்களப்பெண் இரப்பர் எடுக்கிறது	கஉங
இலங்கை புத்த குருக்கள்	கடு0
தேயிலைத்தோட்டம்	கசுசு
புத்தர்	கஅசு



இலங்கை—பண்டை மூப்பிரிவுகள்

[பக்கம்-க]

கடலின் கண் முத்து

அல்லது

யான் கண்ட இலங்கை

1. முத்துக்கு ஓர் இணைப்பு

'சேது' என்ற இயற்கை அணைக்கட்டு

இலங்கையைத் தெற்குக்கடலில் விளைந்த ஒரு முத்து என்போம். இம் முத்து, இந்தியாவாகிய ஓர் அருமை வேலைப்பாடு உள்ள மணிப்பதக்கத்திற்கு ஒரு தொங்கடம் போன்றது. இத் தொங்கடமாகிய முத்தை அப் பதக்கத் தோடு இணைத்திருக்கும் இயற்கைத் தங்கச் சங்கிலி ஒன்று இருக்கிறது. அச் சங்கிலி இயற்கையாய் அமைந்துள்ள தீவுகளின் இணைப்புத் தொகுதி ஆகும். அச்சங்கிலியில் இரண்டு பெரிய கொக்கிகளும், பல சிறிய கொக்கிகளும் உண்டு. பெரிய கொக்கிகள் சங்கிலியின் இரு முனைகளி லும், சிறு கொக்கிகள் இவ்விரு முனைகளைப் பிணைக்கும் வகையிலும் ஏற்பட்டிருக்கின்றன. பெரிய கொக்கிகள் இரண்டில் பதக்கத்தோரத்தில் உள்ளது இராமேசுவரத் தீவு. முத்து ஓரத்தில் உள்ளது மன்னர்த்தீவு. இவ் விரண்டு பெரிய கொக்கிகளுக்கிடையில் மணல் திடல்க ளாகிய பல சிறு தீவுகள் என்ற கொக்கிகள் உள்ளன. இந்த இணைப்பு இயற்கையாக ஏற்பட்டதென்க. இந்த இணைப்பை ஏற்றுக்கொள்ளப் பதக்கத்திலிருந்து மண்ட பம் என்ற முனை ஒன்று நீண்டிருக்கிறது. அது இராமேசு வரத் தீவை இணைத்துக்கொண்டு நிற்கிறது. இந்த இரண் டிற்கும் இடையில் இருக்கும் சிறு நீர்ச் சந்தியையும் இப் போது இருப்புப்பாதைப் பாலத்தால் சேர்த்துவிட்டனர்.

அதுபோலவே, மற்றொரு நூலில் மன்னர்த்தீவினை இலங்கைப் பரப்புடன் இருப்புப்பாதையால் பிணைத்துள்ளார்கள். ஆகவே, இந்தப் பிணைப்புச்சங்கிலி ஒரு முழுமையைக் கொண்டிருக்கிறது எனலாம்.

இவ்வித இயற்கை அமைப்புக்கள் மனிதனுக்கு வியப்பைத்தருவன. ஆகவே, இவைகளைப்பற்றிப் பலவகைக் காரணங்களை உண்டுபண்ணுவது அவனுடைய முயற்சிகளில் ஒன்றாகும். முதன்முதலில் மனிதனுடைய கற்பனைக் கதைகளே தோன்றுவன. அக்கதைகள் நாட்டுக்கதைகளிலும் புராணக்கதைகளிலும் சமயத்தை ஒட்டிய கதைகளிலும் தோன்றிநிற்கும். பிறகு, விஞ்ஞான ஆராய்ச்சியாளர் தோன்றி உண்மைச் சரித்தத்தைக் கூறத் தொடங்குவார்கள். இவ்விதக் கதைகளைச் சுருக்கமாகக் கூறுவாம்.

இராம காதை

இராவணன் மிகச் சிறப்போடு இலங்கையை ஆண்டு வந்தான். அப்போது வடநாட்டில் அயோத்தியை ஆண்ட தசரதன், தன் மூத்த மகன் இராமனுக்குப் பட்டம் கட்ட எண்ணுகையில், இளையமனைவி கைகேயியின் தூண்டுதலால், இராமன் தன் மனைவி சீதையுடனும் தம்பி இலக்குவனுடனும் வனவாசம் செய்யவேண்டிவந்தது. அப்பொழுது சூர்ப்பனகையின் தூண்டுதலால் இராவணன் சீதையைக் கவர்ந்துசென்றான். சீதையை மீட்டுக்கொண்டுவர இராமன் முயற்சி செய்கையில் கிட்கிந்தை நகரத்து வானரர்களின் உதவி கிடைத்தது. பெருஞ் சேனையுடன் கடலைத் தாண்டி இலங்கையின்மீது படையெடுக்கவேண்டிவந்தது. கடலைத் தாண்டுவது எப்படி? அதற்காக ஓர் அணை கட்டலாம் என்று எண்ணினார்கள். அதற்கு வானர சேனை உதவிபுரிந்தது. அவ்வாறு இராமனுடைய இலங்கைப் படையெடுப்பிற்காக வானரர்கள் கட்டின அணையே இந்த இயற்கைச் சங்கிலியாம் என்று இராமாயணம் என்ற இந்து நாட்டு இதிகாசம் கூறும். இந்த அணைமீது வானர சேனை சென்று, இராவணனுடன் பெரும்போர் புரிந்து, அவனைத் தோற்கடித்தது. பிறகு இராவணனுடைய தம்பி

விபீடணனை அரசனுக்கிவிட்டு இராமன் அயோத்திக்குத் திரும்பினன். அப்போது அணையை என்ன செய்வது என்று கேட்கையில், விபீடணன் 'அணையின் பயன் முடிந்து விட்டது; இனி அணை வேண்டாம்; இரு நாடுகளுக்கும் இடையில் அணை இல்லாதிருத்தலே நன்று,' எனக் கூறினன். அதை ஒப்புக்கொண்டு இராமன் தன் வில்லின் நுனியால் அணையில் பல இடங்களையும் கீறிவிடவே, நீர்ப் பிணைப்புகள் ஏற்பட்டு, ஒரே இணைப்பாக இருந்த அணை பல சிறு தீவுகளாக ஆகிவிட்டதாம். இது தற்போது உள்ள நிலைக்குக் காரணம் என்று இதிகாசக் கதை கூறும். அணையின் பெயர் வடமொழியில் 'சேது' என்பது. ஆகவே, இந்தத் தொகுதி சேது என்று வழங்குகிறது. இராமேசுவரத்துக்கு அரசர்கள் இராமநாதபுரத்து அரச வமிசத்தினர்கள். இவர்கள் அணையை ஆளும் உரிமையும் பாதுகாக்கும் கடமையும் பெற்றவர்கள். ஆகவே, இவர்களுக்குச் சேதுகாவலர் என்ற விருதும் உண்டு. இத்தீவின் கீழ்கோடி முனைக்குத் தனுக்கோடி என்பது பெயர். இராமனுடைய தனு முனையால் கீறப்பட்ட இடமாகையால் இப் பெயர்பெற்ற தென்பர். இந்த வரலாறு இந்து சமயத்தினர் கூறுவதாகும்.

அரபியர்கள், சென்ற 20 நூற்றாண்டுகளாக இலங்கையுடன் போக்குவரவு வைத்துக்கொண்டிருந்தார்கள். ஆகவே, இலங்கையினுடைய கரையோரங்களை நன்கு அறிந்திருந்தார்கள். அவர்கள், இலங்கையில் இருக்கும் சமணர்களை பாதம் என்றும், சிவனொளிபாதம் என்றும் வழங்கும் உயர்ந்த சிகரத்தையும் அறிவார்கள். அதன் பேரில் ஆதாம் என்ற ஆதி மனிதர் அடிவைத்திருந்தார் என்றும், அதனால் அது தூய்மை அடைந்ததென்றும் அவர்கள் கூறுகிறார்கள். ஆதாம் அதை அடைவதற்கு இந்தச் சங்கிலித் தீவுகளின் (அணை) வழியாகச் சென்றார் என்றும் நம்புகிறார்கள். ஆகவே, இந்த அணைக்கு 'ஆதாம் அணை' என்று அரபியர்கள் பெயரிட்டார்கள். அப் பெயரையே தற்காலத்து மேற்கு நாட்டார்களும் தங்கள் பாட நூல்களிலும் படங்களிலும் குறித்திருக்கிறார்கள்.

இராமேசுவரமும் பாம்பனும்

இந்தத் தீவுகளின் கோவையில் இராமேசுவரம் முதல் தீவு என்று கூறினேம். இத் தீவிற்கும் இந்து தேசக் கரையாகிய மண்டபத்திற்கும் இடையில் நீரிணைப்பு ஒன்றுண்டு. இதனை முன்னை படகுகளினுல் கடந்து சென்றார்கள். அது 4 கல் தொலைவாகும். முதல் தடவை இராமேசுவரம் சென்றபோது நீராவிப் படகில்தான் சென்றேன். அடுத்த கரையில் பாம்பன் என்ற சிற்றூர் இருக்கிறது. அங்கிருந்து இராமேசுவரம் 8 கல். அதற்கு நடந்தோ, எருது வண்டியின் மூலமாகவோ செல்லல்வேண்டும். இப்போதோ இந்தப் பாம்பன் கால்வாயை இருப்புப்பாதைப் பாலத்தின்வழியே புகைவண்டி மூலமாகக் கடக்கலாம். இதன் நீளத்தைக் குறுக்கி இருக்கிறார்கள். இங்கே நீர் மிக ஆழமாக இல்லாததனுல் பாறைகளை அடுக்கி, அவற்றின்மீது இருப்புக்கழிகள் நிறுத்தி, தண்டவாளப்பாதை போடப்பட்டிருக்கிறது. இப்பாலத்தின்மீது வண்டி செல்லும் போது, இருபுறங்களிலும் காட்சி இன்பமாக இருக்கும். இடையில் கப்பல் போவதற்கு ஆழமான கால்வாய் ஒன்று உண்டு. அதன்மீது இயந்திரப்பாலம் கட்டப்பட்டுள்ளது. அது கப்பல் வரும்பொழுது திறக்கப்படும்; பிறகு மூடப்படும். இந்தப் பாலவேலை மிகவும் புதுமையானது. அதில் ஏறி எதிர்க்கரைக்குச் சென்றுல் பாம்பன் என்ற ஊர் நிலையத்தை அடையலாம். இந்த நிலையத்தில் பாதை இரண்டு கிளைகளாகப் பிரிகிறது. இராமேசுவரக் கிளை புனிதத் தலமாகிய இராமேசுவரத்திற்குச் செல்லுகிறது. அத்தலத்தில் அது நின்றுவிடுகிறது. மற்றொரு கிளை தனுக்கோடிக்குச் செல்லுகிறது. அதன் நீளம் 18 மைல். அங்கே தனுக்கோடி ஊருக்கு ஒரு கிளையும், தனுக்கோடித் துறைக்கு மற்றொரு கிளையும் செல்லுகின்றன. இலங்கைக்குச் செல்லுகிற மக்கள் துறைக்குச் செல்லவேண்டும்.

பாம்பன் சிறிய ஊர். பெரும்பான்மையாக இசுலாமிய மக்கள் குடியிருக்கிறார்கள். ஏனையோர் மீன் பிடிக்கும் பரவர்கள். இவர்கள் கிறித்து சமயத்தில் சேர்ந்திருக்கிறர்

கள். புகைவண்டி, அரசியல் அலுவலகங்கள் முதலியவை களில் இருப்பவர்கள் சிலரே இந்துக்கள். இங்கே பிரயாணி கள் தங்குவது இல்லை. இராமேசுவர வழியாகவே சில ஆண்டுகளுக்குமுன் தனுக்கோடிப் பாதை இருந்தது. ஆனால், இருப்புப்பாதையின்மீது அடிக்கடி கடலின் உவர் நீர் அடித்துப் பாதை கெட்டுக்கொண்டு வந்ததனால், இராமேசுவரத்திலிருந்து தனுக்கோடிக்குச் செல்லும் பாதையை நீக்கிவிட்டு, தீவின் நடுவில் உள்ள இடத்தில் பாதை புதிதாகப் போடப்பட்டிருக்கிறது. ஆகவே, இலங்கை செல்லுகிறவர்கள் இராமேசுவரநிலையத்தின் வழிச் செல்லுவதில்லை. அதில் இருந்து மூன்று கல் தொலைவி லிருக்கும் 'இராமேசுவரப்பாதை' என்ற நிலையத்தை மட்டும் காணமுடியும். அந்த நிலையத்தில் மீன் பிடிப்ப வர்களே தங்கள் சரக்குகளை வண்டிகளில் ஏற்றுவதுண்டு.

இனி, பாம்பன் என்ற பெயர் கேட்ட அளவில், ஒரு பெரிய துறவியினுடைய நினைவு வரக்கூடும். அவர் சில ஆண்டுகளுக்குமுன் தென்நாட்டில் வாழ்ந்த முருகன் அடியார்களில் சிறந்தவர். முருகக்கடவுள்மீது பேரன்பு கொண்டு 6,666 அருள்வாக்குகளைப் பாடியுள்ளார். அப் பெரியாருடைய பாடல்கள் மிகவும் அருமையான கருத் துக்கள் கொண்டவை. அவருடைய இயற்பெயர் 'குமர குருதாச சுவாமிகள்' என்று இருந்தாலும், பொதுமக்க ளுள்ளே அவர் பெயர் 'பாம்பன் சுவாமிகள்' என்றே வழங்குகிறது. அவருடைய சமாதி சென்னைக்கடுத்த திருவாய்மூரில் கடற்கரையில் இருக்கிறது. அவர் பாடல் கள் இருக்கும்வரை பாம்பனுக்கு அவை ஒப்பற்ற பெருமையை அளித்துவரும்.

பாம்பனிலிருந்து இராமேசுவரம் போகும் வழியில் அக்கா மடம், தங்கச்சி மடம் என்ற இரண்டு மடங்களும், அம் மடங்களை ஒட்டிய சிற்றூர்களும் உண்டு. தங்கச்சி மடம் என்பது வண்டிநிலையம். முன் காலத்தில் இதன் வழியே வழிநடப்போர் செல்லுகையில் இங்கே தங்குவ துண்டு. இப்போது அஃது இல்லை. நேரடியாக இராமேசு

வரம் சென்றுவிடுவார்கள். இராமேசுவரத்தின் பெருமை இங்கே கூறவேண்டுவதில்லை. இதனை 'அனைத்திந்தியத் திருப்பதி' என்றால் போதுமானது. எல்லாச் சமயத் தார்களும் இங்குவந்து வழிபடுவார்கள். இராமன் வழிபட்ட தால் கடவுளுக்கு 'இராமநாதன்' என்பது பெயர். திருக் கோயில் மிகப் புகழ்பெற்றது. இது பாடல்பெற்றது. மேலும் பன்னிரண்டு சோதிலிங்கங்களுள் ஒன்று. இங் கிருந்தே சம்பந்தரும் சுந்தரரும் ஈழநாட்டுத் திருக்கோயில் களைப் பாடினார்கள் என்று சேக்கிழார் பெருமான் அருளிச் செய்திருப்பதால், இதற்கு ஒரு தனிப்பெருமை ஈழ நாட்டார் கொடுக்கக் கடமைப்பட்டுள்ளார்கள்.

பாம்பன் கால்வாய்க்குத் தெற்கே கடலில் சிறிது தொலைவில் இரண்டு மூன்று தீவுகள் இருக்கின்றன. அவைகளில் தென்னைமரங்கள் நிரம்ப வளர்ந்திருக் கின்றன. தொலைப்பார்வைக்குக் கடலில் மிதக்கும் தென்னஞ் சோலைகள்போலத் தோன்றும். அவைகளில் ஒன்றிரண்டு மண்டப மரக்காயரைச் சேர்ந்தவை. அத் தீவுகளில் மாடுகள், எருமைகள் மேய்ச்சலுக்கு விடப்பட் டுள்ளன. சில மைல் தொலைவில் உள்ள இத் தீவுகளுக்கு எருமைகள் நீந்திச் செல்லுகின்றன எனக் கேட்டு வியப்பு அடைந்தேன். இத் தீவுகளில் சிறந்தது குறுசடை என்பது. அதில், சென்னை அரசியலார் ஒரு மீன்பண்ணை வைத் திருக்கிறார்கள். பலவகை மீன்களை வளர்ப்பதற்காக இப் பண்ணை ஏற்பட்டிருக்கிறது. இதற்காகச் சில உயிர் நூல் கலைஞர்களை இங்கே அமர்த்தியுள்ளார்கள். அவர்கள் இருப் பிடங்களும், பகுதிக் கட்டடங்களும் இத் தீவில் உண்டு. இம் மீன் வளர்ச்சிச்சாலை கீழ்நாடுகளிலே மிகப் பெயர் பெற்றது.

பாம்பனிலிருந்து தனுக்கோடி செல்லும் புகை வண்டி சிறிதுதொலை மணற்றிடர்களின் இடையிலே செல்லுகின்றது. குன்றுகள்போல் இவைகள் குவிந்திருக் கின்றன. அது கடற்காற்றின் செயல் என்று அறிதல் வேண்டும். இராமேசுவரப் பாதை நிலையத்திற் கருகில்

இம் மணல்திடர்களுக்கிடையில் சில குத்துச் செடிகள் முளைத்திருக்கின்றன. அவைகளில் கூரிய முட்கள் நீண்டிருக்கும். சிறிது எச்சரிக்கை இன்றி அருகில் சென்றால், அவைகள் உடலில் ஏறித் துன்புறுத்தும். இத்தனைக் கொடுமையைச் செய்கிற இம் முள் கிளைகட்கு, அவற்றின் உருவத்தைக் கருதி, 'இராவணன் மீசை' என வியப்பான பெயர் தந்திருக்கிறார்கள். இவற்றின் பெயரைக் கேட்டதும், என்னுடன் ஒருமுறை வந்த என் உறவினர்களும் நண்பர்களும் இவற்றில் சில கிளைகளைப் பிடுங்கிக்கொண்டு ஊருக்குக் கொண்டுபோய்த் தம் நண்பர்களுக்குக் காட்டப் பத்திரப்படுத்திக்கொண்டார்கள்.

இந்த நிலையம் தாண்டினதும், புகைவண்டி மிக விரைவாகச் செல்லுகிறது. 'கோதண்டராமன் கோயில்' என்ற நிலையம் வழியில் இருக்கிறது. இங்கே வண்டி நிற்பதில்லை. அக் கோயில் ஒரு கல் தொலைவில் வடக்கே கடற்கரையில் ஒரு மணல்மேட்டின்மேல் இருக்கிறது. மழைக் காலங்களில் இக்கோயிலுக்கு நிலையத்திலிருந்து செல்ல முடியாது. தாழ்வான நிலம் இரண்டிற்கும் இடையில் உள்ளதால், நீர் நிரம்பிக் கிடக்கும். கோடைக்காலத்தில் நடந்து செல்லமுடியும். பிறகு நேரே செல்லுகையில், வண்டிப் பாதைக்கு இருபுறங்களிலும் ஓர் அடி நீர் நின்றவண்ணமாக இருக்கும். இங்கே ஆயிரக்கணக்கான நீர்ப்பறவைகள் பறக்கின்றன. நீரில் உள்ள மீன்களைக் கொத்தி உண்கின்றன. இவைகள் கூட்டங் கூட்டமாக நீரின்மேல் பறப்பதைக் கண்டால் மிக அழகாய்த் தோன்றும். போகப் போக இருபக்கங்களிலும் கடல் நெருங்கிக் கொண்டே வருகின்றது. தெற்குக் கடல் மிக நீல நிறமாகத் தோன்றும். இங்கே கடல் மிக ஆழமாம். இறங்குவது மிக அபாயமாம். இந்தக் கரையில் ஒரு கிறித்தவ கோயில் இடிந்த நிலையில் நிற்கிறது. இங்கே சின்னஞ் சிறு குடி இருப்புகள் உண்டு. அவைகளில் பரதவர்கள் குடியிருக்கிறார்கள். இவர்கள் எல்லாம் சில நூற்றாண்டுகளின் முன்னர், காதலிக் குருக்களால் விவிலியத்தில் சேர்க்கப்

பட்டார்கள். நூற்றாண்டுகள் சில ஆகியுங்கூட இவர்களிடத்தே போதிய படிப்பும் நாகரிகமும் இல்லை. இவ்வகைக் காட்சிகளையெல்லாம் கண்டுகொண்டே பிற்பகல் 4 மணிக்குத் தனுக்கோடித் துறையை அடைந்தோம்.

படகிற் செல்லல்

தனுக்கோடித் துறையில் ஒரு நீண்ட மரப்பாலம் கட்டப்பட்டுள்ளது. இது கடலிலே 600 அடி வரையில் நீண்டிருக்கிறது. இதன்மேலில் இரண்டு சோடித் தண்டவாளங்களை அமைத்திருக்கிறார்கள். புகைவண்டி அந்தத் தண்டவாளங்களின்மேலில் சென்று நீருக்குமேல் நிற்கும். நீராவிப் படகு அதனை அடுத்து நீரில் மிதந்துகொண்டிருக்கும். புகைவண்டியிலிருந்து இறங்கினதும், நேரே பாலத்தின்மேலில் நடந்து, படகின் ஏணியின்மேல் ஏறி, படகுக்குள் செல்லலாம். ஆனால், போனவுடனே படகுக்கு ஏறவிடுவதில்லை. வழிச்செல்வோர் மூட்டை முடிச்சுக்களை இறக்கினவுடன் கூலியாட்கள் வருவார்கள். அவர்கள் மூட்டை முடிச்சுக்களை எடுத்துக்கொண்டு ஒரு கொட்டத்திற்குச் செல்லுவார்கள். நாமும் செல்லவேண்டும். அங்கே முதற் பரிசோதனை நடைபெறும். நம் சீட்டுக்கள் முதலியன சரியாக இருந்தால் படகுக்குள் விடுவார்கள். எங்களை உள்ளே அனுப்புவதற்கு உதவி செய்ய நண்பர் சிலர் இருந்தார்கள். ஆகவே, நாங்கள் யாதொரு வருத்தமுமின்றிப் படகுக்குள் ஏறிக்கொண்டோம். பல பேர்கள் சோதிக்கப்படுவதற்கு நெடுநேரம் ஆயிற்று. உடல் நலப் பரீட்சை என்ற பெயர்வைத்துக்கொண்டு இங்கே நடத்தும் சோதனை, ஏழை மக்களுக்கு மிகுதியும் தொந்தரவாக இருக்கிறது. மூன்றும்வகுப்பு மக்கள் உள்ளே செல்வதற்கு ஒரே பொழுதில் முடிவதில்லை. முன்னைய வண்டியில் போய் ஒரு பகலுக்கு முன்னமே அமரவேண்டும். அது சிறையில் அடைத்தாற்போல இருக்கும். இரண்டாம் வகுப்பும், முதல் வகுப்பும் பெற்ற மக்கள் மிகுதியும் தொந்தரவு இன்றிப் படகுக்குள் ஏறலாம். நாங்கள் சைவமாநாட்டிற்குச் செல்லுகிறவர்கள் என்று கேட்டவுடன்,

அங்குப் படகில் இருந்த அலுவலாளர்கள் எங்களுக்கு மிகுந்த மரியாதை காட்டினர்கள். இந்திய நாடுகளில் சைவத்திற்குப் பெருமை குறைந்துள்ள போதிலும், இலங்கையிலே அதற்கு மிகுந்த மதிப்பு உண்டு என்று இந்தச் செய்தியே எடுத்துக்காட்டியது. ஆகவே, மிகுந்த மகிழ்ச்சியுடன் சென்றோம்.

படகு துறையில் நின்றிருந்தபோது, பரதவர் பிள்ளைகள் நீரில் நீந்திக்கொண்டே துட்டுக் கேட்கிறார்கள். துட்டு எறிந்தால், அது மணலடிக்குச் செல்லுமுன்பே அவர்கள் முழுகி அதை எடுத்துக்கொண்டு வந்துவிடுகிறார்கள். அப் பிள்ளைகள், நீருள் முழுகுவதும், மேலே வருவதும் பார்க்க மிக வேடிக்கையாக இருக்கிறது. இதனைக் கண்டு மகிழும் பிரயாணிகள் அடிக்கடி காசு எறிகிறார்கள். இந்த வகையில், இச் செம்படவப் பிள்ளைகள் உணவுக்கு வேண்டிய காசு பெறுகிறார்கள். படகு நின்ற இடத்தில் நீர் மட்டம் 35, 36 அடிகள்தான் இருக்கும். அடி மணல் மிகத் தெளிவாகத் தெரிகிறது. ஒரு தம்பிடி விழுந்தாலும் அதைக் காணமுடியும். பிள்ளைகள் மீன் குட்டிகளைப் போலவே ஒரு சிறிது வருத்தமும் இன்றி நீந்துகிறார்கள். இவர்களைப்போலவே பல வகையான மீன்கூட்டங்களும் நீரில் நீந்துகின்றன. கூட்டங் கூட்டமாகச் செல்லும் மீன்களைப் பார்க்கவே மிக இன்பமாக இருக்கிறது. பொரி அல்லது கடலை வீசிவிட்டால், அவற்றைத் தின்பதற்கு மீன்கள் ஒன்றின்மேல் ஒன்று விழுந்துவருவதைக் காண வேடிக்கையாக இருக்கிறது.

படகில் மேல்வகுப்பில் 100 பேர்களும், கீழ்வகுப்பில் 200 பேர்களும் இருந்திருக்கலாம். இரு வகுப்புகளிலும் ஆடவர் பெண்டிர் பிள்ளைகள் உட்பட இருந்தார்கள். மேல்வகுப்பார் பலவகையான உடைகளும் நகைகளும் அணிந்தவர்கள். இந்தியாவில் இருந்து இலங்கை செல்பவர்களில் வடநாட்டாரும் தென்நாட்டாரும் இருந்தார்கள். இசுலாமியரும் சிலர் இருந்தார்கள். மிகுதியாக வணிகர்களே இருந்தார்கள். இலங்கை வாசிகளே சிலர் திரும்பிச்

செல்லுபவராக இருந்தார்கள். ஐரோப்பிய உடை அணிந்த சில கருப்புப் பெண்கள் இருந்தனர். அவர் உடை பார்வைக்கு அமைவின்றித் தோன்றியது. அதற்கு எதிரிடையாக ஒரு மங்கை, வெள்ளை நிறத்தாள், இந்திய உடையில் இருந்தாள். ஆனால், மூன்றும் வகுப்பாகிய அடித்தட்டில் தான் வகைவகையான ஆட்கள் இருந்தார்கள். தேயிலைத் தோட்டத்துக் கூலிகளும், சில்லறை வியாபாரிகளும் அவர்களிலே மிகுதியானோர். கீழே சென்று பார்த்துவிட்டு மேலே வருவதற்குள் நரக வேதனைபட்டதுபோல் இருந்தது. எங்கும் தீநாற்றம், சிந்திய நீர், உண்ட எச்சில், குழந்தைகளின் சிறுநீர்; போதாக்குறைக்கு நாய்களும் பூனைகளும் இருந்தன. நாற்காலிகள், பெஞ்சுகள் இல்லை. எல்லாரும் தரையிலேயே உட்கார்ந்திருந்தார்கள். பலபேர் படுத்துக்கிடந்தார்கள். சுருட்டு நாற்றம் பொறுக்க முடியவில்லை. இந்த அழகில் அங்கிருந்த மக்கள் மிக மகிழ்ச்சியோடு பேசிக்கொண்டே காலம் போக்கிக்கொண்டிருந்தார்கள். மலத்தில் இருக்கும்படியான புழுவுக்கு அந்த மலநாற்றம் தெரிகிறதா என்று எண்ணிக்கொண்டேன். தமிழ்க் கூலிகளோ, தாழ்ந்த வகுப்புகளிலிருந்து செல்லுகிறவர்கள். ஆகவே, அவர்களுடைய நடையுடை பாவனைகள் அதற்கேற்றாற்போலவே இருக்கும். இருந்தாலும், அவர்கள் பெண்களுக்கு இருக்கும் நகைப்பைத்தியத்திற்கு அளவில்லை. காதுகள், மூக்கு, கை, கால், விரல்கள் இவைகளில் அணிந்திருக்கும் மாறுபாடான நகைகளுக்கு அளவில்லை. இவைகளைச் சுமந்துகொண்டே தோட்டங்களுக்குச் சென்று வேலைசெய்கிறார்கள். தகுந்த படிப்பு இருந்தால் இவர்கள் வேறு செவ்விய முறையில் இருப்பார்கள் அன்றோ? தமிழ்க் கூலிகளைவிடச் சிங்களக் கூலிகள் நல்ல வகையில் உள்ளார்கள் என்று நான் அறிந்தேன். தமிழ்க் கூலிகளுக்குத் தகுந்த சம்பளமும் படிப்பும் கொடுத்தால் இவர்கள் நல்ல நிலைமையில் மனிதர்கள் போல் வாழமுடியும். அவ்வாறு இல்லாமல் இருப்பதற்கு முதலாளிகள் கவனக்குறைவே காரணம் என்று சொல்ல வேண்டும். அதைவிட அதிகார வர்க்கத்தார் அன்பு

இன்மையே என்று துணிவாகக் கூறலாம். இனிமேலாவது படிப்பும், போதிய கூலியும் தொழிலாளர்களுக்குக் கிட்டும் என்று எதிர்பார்ப்போமாக.

படகு போகவேண்டிய தொலை 20 மைல். அதைக் கடந்து செல்ல இரண்டு மணி பிடித்தது. $5\frac{1}{2}$ மணிக்குப் புறப்பட்டு $7\frac{1}{2}$ மணிக்கு எதிர்க்கரை சேர்ந்துவிட்டது. படகில் ஆட்டமே இல்லை. அன்னப்பறவைபோல மிதந்து சென்றது. பிரயாணிகளுக்கு வேண்டிய வசதிகள் இருந்ததனால் அமைதியாகச் சென்றோம். என் நண்பர்கள் படகிலேயே மாலை வழிபாட்டை முடித்துக்கொண்டார்கள். நாங்கள் கொண்டுபோன சிற்றுண்டியை அருந்தினோம். சோதனை செய்வோர்கள் சாமான்களைச் சோதித்தார்கள். மதுரையில் அருச்சித்த மலர்கள் முதலியவற்றை ஒரு குடலையில் வைத்திருந்தோம். இலங்கை அன்பர்களுக்குக் கொடுப்பதற்காக எடுத்துக்கொண்டு சென்றோம். ஆனால், அவைகளைக் கொண்டுசெல்ல அனுவலாளர்கள் இசையவில்லை. மலர்கள் மூலம் கிருமிகள் இலங்கையில் புகுந்துவிடுமாம். அந்தக் காரணத்தினாலே அம்மலர்களைப் புகையிடவேண்டும் என்றார்கள். அவ்வாறு புகையிட்டால் பயனில்லை என்று சொல்லி அவர்களிடமே பிரசாதங்களைக் கொடுத்துவிட்டோம். அந்த அனுவலாளர், இதுவே சமயம் என்று கருதி, மலர்களை எடுத்துக்கொண்டு சென்றுவிட்டார். யாழ்ப்பாணத்து நண்பர்களுக்கு என்று வைத்திருந்த அர்ச்சனைப் பொருள்கள் மன்னார் அனுவலாளர்களின் இல்லத்திற்குச் சென்றன. தலைமன்னார்த்துறை சென்ற பிறகு சோதனை முடிந்ததும், படகைவிட்டுக் கீழே இறங்கி, அருகில் இருந்த புகைவண்டியில் ஏறினோம். இலங்கை வண்டி ஒரே இருட்டு. வண்டியில் இடம் பிடித்து அமருவதே வருத்தம். இரண்டாம் வகுப்பு வண்டி எமது மூன்றாம்வகுப்பு வண்டியைவிடத் தாழ்ந்த நிலையில் இருந்தது. இந்த வகையில் இலங்கையில் இறங்கினோம்.

படகு இறங்கும் துறைக்குத் தலைமன்னர் என்பது பெயர். அந்த நிலையம் மன்னார்த் தீவின் மேற்கு நுனியில்

இருப்பது. இது கடல்மட்டத்தில் இருப்பது. மரம் மட்டைகள் இல்லாத வெட்ட வெளியில் கட்டப்பட்டுள்ளது. தலைமன்னர் ஊரும் செழிப்பானதன்று. எங்கும் நீர் தேங்கி இருப்பதால் மலேக்காய்ச்சல் மிகுதி. வண்டி நிலையத்தில் எச்சரிக்கை விளம்பரம் எழுதப்பட்டிருக்கிறது. நூற்றுக்கு நூறுவீதம் மலேரியா என்று குறிக்கப்பட்டிருந்தது. அதைக் கண்டதே நாங்கள் அஞ்சினோம். எவ்வகையாக இங்கே இரவைக் கழிப்பது என்று எண்ணினோம். நிலைய அதிகாரியின் வீட்டிற்கு இருப்புக் கொசுவலை போடப்பட்டிருந்தது. மன்னார்த் தீவு 20 கல் நீளம் இருக்கும். அது வடமேற்கிலிருந்து தென்கிழக்காக அமைந்திருக்கிறது. தென்கிழக்குக் கோடியில் உள்ளது கோட்டைமன்னார். இவ்விரண்டிற்கும் நடுவில் பேசாலை என்ற ஊர் இருக்கிறது. பேசாலையில் பனிக்கட்டி செய்யக்கூடிய ஓர் ஆலை இருந்தது. இதனை ஓர் இந்திய நகரத்துச் செட்டியார் வைத்திருந்தார். இந்த ஊரில் மீன் பிடித்தல் உண்டு. பிடித்த மீன்களைத் தொலைவான இடங்களுக்கு ஏற்றுமதி செய்வார்கள். அம்மீன் கெடாமல் இருக்கும்படி அவைகளைப் பனிக்கட்டியால் மூடிவைப்பார்கள். அந்த வேலைக்காகப் பனிக்கட்டி மிகுதியும் வேண்டப்படுகிறது. அந்த வியாபாரத்தை அறிந்து அந்தச் செட்டியார் ஒரு பெரிய பனிக்கட்டி செய்யும் ஆலை வைத்திருந்தனர். வண்டி ஒரு மணி நேரத்தில் மன்னர்க்கோட்டை வந்து சேர்ந்துவிடுகிறது. மன்னர் ஒரு சிறந்த ஊர். இங்கே எல்லாப் பகுதி நிலையங்களும் உண்டு. இங்கேயும் காய்ச்சல் வரும். ஆகவே மக்கள் எச்சரிக்கையோடு இருக்கவேண்டும்.

முத்துக் குளித்தல்

மன்னர் பண்டைக்கால ஊர். இப்போதும் அஃது ஒரு சிறந்த ஊர் ஆகும். அதன் பெயர், புவியியல் நூலில் நிலைத்துவிட்ட ஒரு பெயர் ஆகும். திருநெல்வேலி வட்டக் கரைக்குக் கிழக்கும், இராமர் அணைக்குத் தெற்கும், இலங்கைக்கரைக்கு மேற்கும் உள்ள கடற்பகுதிக்கு

'மன்னர் வளைகுடா' என்பது பெயர். இந்தக் கடற்பகுதியில் இராமர் அணை, மன்னர்த் தீவு இவைகளுக்குத் தெற்கிலும், இலங்கையின் வடமாகாணத்திற்கு மேற்கிலும் உள்ள கடலில்தான் 'முத்துக் குளித்தல்' என்ற சிறந்த தொழில் பண்டைக் காலத்திலிருந்து நடைபெற்றுவந்திருக்கிறது. இங்கே முத்துக்கள் விளையும் இடங்களும், அவைகளுக்கு அருகில் மணல் திடல்களும் உண்டு. இத் திடல்களுக்கு 'முத்துத் திடல்கள்' (Pearl Bank) என்பது பெயர். இவைகளில் பெரிய திடல்கள் சிலவும், சிறிய திடல்கள் பலவும் இருக்கின்றன. முத்து ஒரு மணி. அது ஒன்பது மணிகளில் ஒன்று. மணிகளில் வைரம் முதலிய ஏழும் நிலத்தில் தோண்டி எடுக்கப்படுபவை. முத்தும் பவழமும் கடலில் எடுக்கப்படுபவை. பவழம் பூச்சிகளால் உண்டான வன்மையான சிவப்புக் கொடி. முத்தோ, 'முத்துச் சிப்பி' என்ற நத்தையின் தசைக்குள் விளையும் வலிய கல். முத்துச்சிப்பிகள் சில பருவங்களில்தான் உண்டாகின்றன. அந்தப் பருவங்களை அறிந்து அவைகளை எடுப்பார்கள். இத்தொழில் மிகப் பொருள் வருவாய் உடைய தொழில். ஆகவே, இதனை அரசியலாரே நடத்திவருவார்கள். வருமானத்தில் ஒருபகுதி அரசியலுக்குச் சேரும். இந்த வருமானத்தைக் கருதிப் பலவகைப் போர்களும் நடந்திருக்கின்றன. இந்தத் தொழிலும், அதனைச் சார்ந்த வியாபாரமும் முன்னிட்டு நெடுந்தொலை நாடுகளிலிருந்து மக்கள் இங்கே வருவதுண்டு. மேற்கு நாட்டு வாணிபத்தைக் கிழக்கே இழுத்தது இந்த முத்துக் குளித்தலே ஆகும்.

உலகத்திலேயே இரண்டு இடங்களில்தான் முத்து கிடைக்கிறது. அவற்றில் சிறந்தது இந்த மன்னர் குடா முத்து. இரண்டாவது பாரசீக வளைகுடா முத்து. பாரசீக முத்து பழுப்பாக இருக்கும். ஆகவே, அது தாழ்ந்தது; விலை குறைவானது. மன்னர் முத்துக்களோ, வெள்ளை வெளேர் என்று ஒளிதரும். மன்னர் குடாவிலும் இரண்டு பகுதிகளில் முத்து அகப்படும். தூத்துக்குடிக்கு அருகிலும் மன்னர்த் தீவுக்கு அருகிலும் கிடைக்கும். ஆகவே, இந்தத் தொழிலில் சென்னை மாகாணத்து மீன் தொழில் பகுதி

யாரும் (Fisheries Department), இலங்கைப் பகுதி யாரும் ஈடுபடுவார்கள். முத்துக் குளித்தல் 10, 12 ஆண்டு களுக்கு ஒருமுறைதான் நடைபெறுவது உண்டு. பேரா சையினாலே கடலில் உள்ள சிப்பிகள் எல்லாவற்றையும் வாரி எடுத்துவிட்டால், பின்னால் விளைவதற்கு வகை இல் லாமல் போய்விடும். இதைக் கருதித்தான் மீன் தொழில் பகுதியார் இந்தத் தொழிலுக்கும் சில கட்டுப்பாடுகள் இட்டுவருகிறார்கள். விஞ்ஞானிகள் ஆராய்ச்சியின்படி முத்து உண்டாவதன் காரணம் என்ன வெனில், மிருது வான சதை உடைய முத்துச்சிப்பியின் உடலுக்குள் கடின மான மணல் ஒன்று புகுந்துகொண்டால், அதைச் சரிக்க முடியாமல் போக, அதனைச் சுற்றிக் கெட்டியான தசை வளர்ந்து, அது நாளாவட்டத்தில் கடினப் பொருள் ஆகி விடுகிறது; அதுவே முத்து எனப்படும் என்பதே. மனித னுடைய தசையிலும் சில காலங்களில் கட்டிகள் புறப் படும். இவைகளை வெளியேற்றிவிட்டால் நோய் உண் டாகும். இதுபோலவே, முத்துச் சிப்பிப் புழுவுக்கு முத்து ஒரு நோய் போன்றதே. அதற்கு நோய் ஆக இருப்பதே மக்களுக்கு மணியாகவும் மருந்தாகவும் விளங்கு கிறது. நோய் ஆகிய முத்தின் விளைவு ஒருவித சிப்பி களில் மட்டும் ஏற்படும்; மற்றும் ஒவ்வொரு பருவத்தில் மட்டும் ஏற்படும் என்று அறியவேண்டும்.

முத்துக் குளிப்பு என்பது, முத்துக்களுக்காகக் கடல் நீரில் முழுகிக் கடலடியில் உள்ள சிப்பிகளை வாரி எடுப்பது ஆகும். இதைச் செய்ய மிகுதியும் பழக்கம் வேண்டும். நீருக்குள் இரண்டு நிமிடத்திற்குமேல் மூச்சுவிடாமல் இருக்கமுடியாது. ஆகவே, மிகத் தேர்ந்த ஆட்களை முத் துக்குளி வாருவதற்கு அமர்த்தப்படுவார்கள். இக்காலத் திலோ மணிக்கூண்டுகளை அமைத்து, அவைகளில் ஆட் களைவிட்டு, நீருக்குள் சங்கிலிகளின் வழியாக இறக்கிச் சிப்பிகளை எடுப்பார்கள். மேலும், நீர் புகாத உடைகளை உடுத்தி, உயிர்வளியை உட்கொள்ளுவதற்கு வசதிகள் செய்து, நீருக்குள் செலுத்துவதும் உண்டு. புதிய கருவிக ளால் முத்துக்குளித்தல் எளிதாகிக்கொண்டு வருகிறது.

மீன் தொழிற்பகுதியார் முத்துக்குளிக்கும் நாள்களை ஆராய்ந்து வெளியிடுவார்கள். அப்போது தொழிலாளிகளும் வணிகர்களும் பகுதியிடத்திற்கு வருவார்கள். கூலி முதலியவைகள் முடிவுசெய்யப்படும். படகுகள் முதலிய சாதனங்கள் ஏற்படுத்தப்படும். முத்துக்களை எடுப்பதற்குக் கட்டணங்கள் விதிக்கப்படும். வணிகர்கள் விலை கோருவார்கள். அந்த வருவாய் அரசியலுக்குச் சேரும். ஆனால், எத்தனை முத்து கிடைக்கும் என்று எவரும் கூற முடியாது. முடிவில் இது ஒரு சூதாட்டமாகவே முடியும். சிலருக்கு மிகுந்த வருவாய் கிடைக்கும். சிலருக்கு மிகுந்த கைப்பிடிப்பும் ஏற்படும். ஏனெனில், சில சிப்பிகளில் முத்து இருக்கும்; சிலவற்றில் இருக்காது; சிலவற்றில் பெரிதாக இருக்கும்; சிலவற்றில் சிறிதாக இருக்கும். இந்த வகையில் உறுதியாக இத்தனை முத்துத் தான் கிடைக்கும் என்று கூறமுடியாது. வணிகருக்குக் கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும் அரசியலார்க்கு வருவாய் உண்டு.


நம் பண்டைய தமிழ் நூல்களின்படி கடலில்மட்டும் முத்து விளையும் என்பதன்று. வலம்புரிச் சங்கு, நெற்பயிர், கொண்டல், யானை மருப்பு முதலியவைகளிலும் முத்து விளையும் என்பர். இதனை இக்காலத்து மக்கள் நம்புவதில்லை. நானும் பல நாள் வரைக்கும் நம்பவில்லை. சில ஆண்டுகளுக்கு முன் தென்கன்னடம் வட்டம் கொல்லூர் மூகாம்பிகை கோயிலுக்குச் சென்றபோது, அக் கோயிற் பண்டாரத்தில் யானை மருப்பில் விளைந்த சிறந்த முத்து ஒன்றைக் கண்டேன். அதை நான் நன்றாக ஆராய்ந்துபார்த்ததில், யானைத் தந்த முத்து என்று அறிந்தேன். சிப்பியில் எவ்வாறு முத்துத் தோன்றியதோ, அதே முறையில் இந்தத் தந்த முத்தும் தோன்றியது என அறிந்தேன். ஆகையால் அதனை 'முத்து' என்று கூறுவது தப்பு அன்று.

இனி, முத்து பளபளப்பாக இருப்பதால் அஃது அணிகலங்களுக்குப் பயன்படுகிறது. பெண்கள் தொங்கடங்களுக்

கும் மாலைகளுக்கும் முத்துக்களைப் பயன்படுத்துவார்கள். பெரிய முத்துக்களுக்கு மதிப்பு மிகுதி. ஓர் அங்குலம் நீளமுள்ள முத்து ஒரு நூறுயிரம் வெள்ளி மதிப்பு உண்டு. பெரிய கோயில்களில் முத்தாலாகிய அங்கியும் ஆடையும் இருக்கின்றன. பரோடாவில் முத்துக் கம்பளம் ஒன்று இருக்கிறது. அதன் மதிப்புப் பல நூறுயிரம் பொன். உரோமானிய அரசியர் முத்துக்களை அணிந்தது மட்டு மன்றி, முத்துக்களை அரைத்துப் பானத்தில் கரைத்துக் குடித்தார்களாம். முத்தை நீற்றி, மருந்தாகப் பயன்படுத்துவதுண்டு. முத்துக்களை இத்துடன் விட்டுவிடுவோம்.

மன்னர்

இனி, மன்னர் நகரம் பண்டைநாளில் அரண் பெற்ற நகரமாயிருந்தது. ஆகையால், கோட்டை மன்னர் என்ற பெயரால் முன்னாளில் இருந்து வழங்கி வந்திருக்கிறது. கி. மு. இரண்டாம் நூற்றாண்டில் ஏலேலசிங்கன் இலங்கையைப் பிடித்தபொழுது தன் புதிய நாட்டை வலுப்படுத்துவதற்காக 32 கோட்டைகளைக் கட்டினானும். அவற்றில் ஒன்று மன்னர் ஆகும். அது கட்டப்பட்ட இடம் 'மாந்தோட்டம்' அல்லது 'மாந்தை' என்பது. இதுவே மாதோட்டம் என்று பின்னால் வழங்கியது. ஆறாம் நூற்றாண்டில் முத்து வாணிபத்திற்காகப் பாரசீகர்கள் மன்னருக்கு வந்தார்கள். பாரசீக வாணிகர் சிலர் மன்னரிலே முத்துக் குளிப்புக்காகக் குடியேறியும் இருந்தார்கள். ஒருகாலத்தில் இலங்கை அரசர்கள் அவர்களைத் துன்புறுத்திய காரணத்திற்காகப் பாரசீக அரசன் ஒரு கப்பற்படையையும் மன்னருக்கு அனுப்பினான். பிறகு சமாதானம் ஏற்பட்டது. கி. பி. 1544-ல் பிரான்சிஸ் சேவியர் என்ற காதலிக் பாதிரி, மன்னர் வட்டத்தில் இருந்த இந்துக்களை எல்லாம் கிறித்தவர்கள் ஆக்கிவிட்டார். அவ்வட்டம் யாழ்ப்பாணத்து மன்னன் ஆட்சிக்குள் இருந்தது. அதை அறிந்த சங்கிலி என்ற அரசன், மன்னர் மீது படையெடுத்து, 600 கிறித்தவர்களை அழித்துவிட்டானும். ஆனால், அவன் முயற்சி வெல்லவில்லையாம்.



திருக்கேதீச்சரம்

மன்னர், போர்த்துகல்நாட்டுப் பறங்கியர்வசம் ஆகி விட்டது. கண்டி அரசன் வீரவாகு என்பவனை மாயாதுனை என்பவள் 1580-ல் துரத்திவிட்டாள். அவன் மன்னருக்குச் சென்று பறங்கியரிடம் அடைக்கலம் புகுந்தான். உடனே அவன் கிறித்தவன் ஆக்கப்பட்டான். அவன் மகள் டோனகாதரீனு என்ற பெயர் பெற்றாள். கோணப்ப பண்டாரம் என்ற ஓர் இளவரசன் பறங்கியரிடம் வந்து கிறித்தவன் ஆனான். அவனும் மன்னரிலே சிறிது காலம் இருந்தான். பிறகு பறங்கியர் உதவியினாலே கண்டி அரசைப் பெற்று, பௌத்தனாகி விமலதருமன் என்ற பெயருடன் ஆண்டான். 1594-ல் மன்னரில் இருந்த டோனா காதரீனாவை விமலதருமன் சிறைப் பிடித்துத் தானே மணந்துகொண்டான். கி. பி. 1652-ல் டச்சுக்காரர் மன்னரைப் பறங்கியரிடமிருந்து பிடிக்க முயன்றனர். 1658-ல் மன்னரும் அடுத்துள்ள தீவும் பிடிபட்டன. டச்சு ஆட்சியிலே மன்னர் அருகில் விளைந்த முத்துக் குளித்தலிலிருந்தே வருவாய் பெற்றார்கள். 1796-ல் மன்னர் ஆங்கிலர் வசம் வந்துவிட்டது. மன்னரில் உள்ள கோட்டை பறங்கிகளாலும் டச்சுக்காரர்களாலும் வலுப்படுத்தப்பட்டது.

திருக்கேதீச்சரம்

மன்னர் நகரம் மற்றொரு செய்திக்குப் பெயர் போனது. இதனருகே ஒரு பாடல்பெற்ற தலம் இருப்பதே அஃது ஆகும். அதுதான் சம்பந்தராலும் சுந்தரராலும் தேவாரம் அருளிச்செய்யப்பட்ட 'திருக்கேதீச்சரம்' ஆகும். திருக்கேதீச்சரமென்ற ஒரு புகைவண்டி நிலையம் மன்னருக் கடுத்தாற்போல் மதவாச்சி வழியில் இருக்கிறது. அதில் இறங்கி மூன்று கல் நடந்துசெல்லலாம். அது காட்டுப்பாதை. வண்டி கிடைக்காது. ஆகையால், கோட்டை மன்னரிலிருந்தே கேதீச்சரம் செல்வது நல்லது. நாங்களும் ஒருமுறை அப்படியே சென்று வணங்கினோம். கோட்டைமன்னரிலிருந்து கேதீச்சரம் ஆறு கல் அளவில் இருக்கிறது. அவ்வூர்க் கோயில் மன்னர்த் தீவில் இல்லை. இலங்கைப்பரப்பில் அதன் கரைக்கருகில் உள்ளது.

இரண்டிற்கும் இடையில் கடல் நீர்ச்சேர்த்தி இருக்கிறது. இஃது ஒரு பர்லாங்கு அகலமே இருக்கும். மன்னரில் ஒரு கரத்தையை (வண்டி) அமர்த்திக்கொண்டு சென்றோம். மூன்று கல் சென்றதும் அந்த நீர்ச்சேர்த்தி வந்தது. அதனைத் தாண்டுவதற்கு ஒரு மரப்பரசல் இருக்கிறது. அதில் நாமும் வண்டியும் மாடும் ஏறிக்கொள்ளவேண்டும். அடுத்த கரையைச் சேர்ந்தவுடனே, மீண்டும் வண்டியைப் பூட்டிக்கொண்டு செல்லவேண்டும். மூன்று கல் சென்றால் திருக்கேதீச்சரம் அடையலாம். அது நெடுங்காலம் இடம் தெரியாமல் மறைந்திருந்தது. பிறகு, சில அடியார்கள் கண்டுபிடித்துத் திருக்கோயில் முதலியவற்றைப் புதுக்கியுள்ளார்கள். கோயிலோ விமானம், மண்டபங்கள் முதலியவை கொண்டதேனும் சிறிய அளவு கொண்டதுதான். வழிச்செல்வோர் தங்கியிருக்க விடுதியும், குருக்கள் விடுதியும் உண்டு. உணவுக்குக் குருக்களிடம் சொல்லி ஏற்பாடு செய்துகொள்ளலாம். கோயில் தூய்மையாக வைக்கப்பட்டிருந்தது. இப்பொழுது பழுதுபார்க்கவேண்டிய நிலையில் இருக்கிறதாம்.

திருக்கோயிலுக்கு எதிரே திருக்குளம் இருக்கிறது. அது மணல் குளம்தான். கரைகள் கட்டப்படவில்லை. நாங்கள் அதில் குளிக்கலாம் என்று சென்றோம். ஆனால், குருக்களோ குளத்தில் இறங்கக்கூடாது என்றும், தீர்த்தத்தை வெளியே கொண்டுவந்து குளிக்கவேண்டும் என்றும் சொல்லி, ஒரு பெரிய பாத்திரம் கொடுத்தார். எங்களுக்கு விளங்கவில்லை. இந்தத் தீர்த்தம் கால் படாத படி அத்துணைத் தூய்மை ஆனதா என்று எண்ணினோம். இந்த விதி தென்னாட்டுத் திருக்கோயில்களில் இருந்தால் மேன்மையாக இருக்கும் என்றும் எண்ணினேன். அவ்வாறே நீரைக் கொண்டுவந்து வெளியே பாத்திரத்தில் விட்டுக் குளித்தோம். பிறகு, அந்தத் தூய தீர்த்தத்தைப் பார்க்கலாம் என்று பிற்பகலில் சென்றோம். அதில் பல தென்னை மட்டைகள் மிதந்துகொண்டிருந்தன. இவை காலையில் இருக்கவில்லையே என்று எண்ணினோம். சிறிது

கூர்மையாகப் பார்த்த அளவில், அவைகள் மட்டைகள் அல்ல என்று தெரிந்தன. அவைகள் பெருமூச்சுவிடும் தலைகளையும் ஆட்டும் வால்களையும் கொண்டிருந்தன. கல் வீசினேம்; உடனே ஒவ்வொன்றும் நீரில் முழுகிவிட்டன. முதலைகள் என்று அறிந்தோம். அப்போதுதான் குருக்கள் இட்ட விதியினுடைய பொருள் தெரிந்தது. நம் கோயில் திருக்குளங்களிலும் இதைப்போல முதலைகள் இருந்தால் அவைகள் தூய்மையாக இருக்கும் என்று எண்ணினேன். பிறகு பகலில் கோயிலில் வழிபாட்டை முடித்துக்கொண்டு, உணவு அருந்திவிட்டு, சிறிதுநேரம் ஓய்வு எடுத்துக் கொண்டு மன்னர் திரும்பினேம்.

இனி, திருக்கேதீச்சரம் என்ற பெயர் நவக்கிரகங்களில் ஒன்றான கேது வழிபட்டதால் வந்ததென்பது, "செய்ய கேது தலையற்ற அந்நாள், திருந்தும் பூசைகள் செய்து முடிப் போன்" என்ற குறிப்பால், கதிரைமலைப்பள்ளு என்ற நூலில் காணப்படுகிறது. இக்கேதீச்சரம் 'பாலாவி' என்ற தன் 'கரைமேல்' இருப்பதாகச் சுந்தரர் தம் தேவாரத்தில் கூறியிருக்கிறார். கி. பி. முதல் நூற்றாண்டில் இருந்த தாலமி, பிளினி என்ற உரோமானிய அறிஞர்கள் இலங்கை யில் 'பாலாவி மண்டி' என்று குறித்துள்ளது, 'பாலாவி மண்டலம்' என்ற சொல்லின் சிதைவு என்று ஆராய்ச்சி யாளர் கூறி, இந்நகர் முதல் நூற்றாண்டில் இருந்ததென்பர். சம்பந்தரோ இதனை மாதோட்ட நன்னகரில் இருப்பதாகக் கூறுவர். இவ்விரண்டையும் இணைக்கும்போது இந்தக் கோயில் பாலாவியின் கரைமேல் மாதோட்ட நன்னகரில் இருந்ததெனக் கூறலாம்.

இனி, மாதோட்டம் என்ற பெயர் மாந்தை எனக் குறுகிற்று. இங்கே 'விசுவ கருமனால்' காந்தக்கோட்டை ஒன்று நிறுவப்பட்டது. இரும்பாலாகிய அக்கோட்டை காந்தமலை என்ற பெயர்பெற்றது. யாத்திரிகர் இந்த மலைக் கருகில் செல்லும்போது, அஃது அவர்கள் கப்பல்களை இழுத்துவிடும்; அப்போது அக்கோட்டை ஆட்கள் அக் கப்பலில் உள்ள பொருள்களைத் திருடிக்கொள்ளுவார்கள்

என்ற இச்செய்தி விசுவகரும புராணத்திலும் மாந்தைப் பள்ளிலும் கூறப்பட்டுள்ளது. இதனைச் சங்கச் செய்யுளில்,

"மன்னகர் **மாந்தை** முற்றத் தொன்னர்
பணிதிறை கொணர்ந்த பாடுசெய் நன்கலம்,"

என்ற மாமூலனர் அகநானூற்றுப் பாடலாலும் அறியலாம். இதை யுவான்சங்கு என்ற சீன யாத்திரிகன் குறிப்பு களும் அரபிக்கதைகளும் வற்புறுத்துகின்றன.

திரிபுரங்களின் கதையும் இலங்கையுடன் இணைக்கப் பட்டுள்ளது. திரிபுராதிகள் பொன், வெள்ளி, இரும்பு முதலிய உலோகங்களால் கோட்டைகள் கட்டினதாகப் புராணம் கூறும். அவைகளைத் தேவர்கள் இச்சைப்படி திரிபுராந்தகர் அழித்தார். பின்னர் இராவணன் கோட் டையை இராமன் அழித்தான். பிறகு சோழமன்னன் தூங்கெயில் ஒன்றை இலங்கைக்கரையில் அழித்தான். (சிலப்பதிகாரம் வாழ்த்துக் காதையில் 'தூங்கெயில் மூன்று எறிந்த சோழன்காண் அம்மானே,' என்றதில் காண்க). இக்கோட்டைகள் வெவ்வேறு சாதியார்களுடைய கோட் டைகளாக இருக்கலாம். அசுரர், அரக்கர், இயக்கர் என்பார்களுடைய செயல்களாக இருக்கலாம். இவைகள் மாதோட்டத்தில் காந்தக்கோட்டை இருந்ததற்கு ஆதரவு கள் என்று கூறப்படுகின்றன.

திருவாசகம் முதலிய நூல்களினுல் மண்டோதரி சைவ சமயத்தினர் எனல் வேண்டும். தேவாரத்தினுல் இராவண னும் சைவசமயத்தினன் என அறியலாம். இவர்கள் இலங்கையில் இருந்தவர்கள். மண்டோதரியின் தகப்பன் மயன். அவன் ஒரு சிற்பி. அவனே மாந்தை என்ற மாதோட்டத்தில் இருப்புக்கோட்டை கட்டினவன். அது கட்டின காரணம் பிறநாட்டார் படையெடுக்காமல் இருப் பதற்காகவே என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

திருக்கேதீச்சரத்தில் கேது பூசித்தவரலாறு பெருமை யாக வாய்ந்துளது. இதனைக் கதிரைமலைப்பள்ளு கூறு கிறது என்று கூறினேம். அந்தச் செய்தியையே சுந்தரர் தேவாரமும் கூறுகிறது.

அங்கம்ஒழி அந்நாள் அரவு அமரர் தொழுதேத்த
வங்கம் மலிகின்ற கடல் மாதோட்ட நன்னகரில்
பங்கம் செய்த பிறைசூடினன் பாலாவியின் கரைமேல்
செங்கண் அரவசைத்தான் திருக்கேதீச்சரன் தானே

என்ற பாவில் தொனிக்கிறதைக் காண்க.

இந்தப் பெயர்பெற்ற திருக்கோயில் 15-ம் நூற்றாண்டின் முன்னரே யாதோ ஒரு காரணத்தினால் அழிவுபெற்றது. பிறகு வெறும் மணல்திடராகிவிட்டது. இங்கே அழிந்து கிடக்கும் பாழ் இடங்கள், அடிக்கடி கண்டெடுக்கப்பட்ட புதையல்கள் முதலியன இங்கே முன்காலத்தில் ஒரு பெரிய நகரம் இருந்திருக்கவேண்டும் என்பதைக் காட்டுகின்றன. இவ்வழிவுக்குப் புராணகதைகள் கூறுவர். சூரியபகவான் சாபத்தால் இந்நகர் அழிவுற்ற தென்பர். அதற்கு நூல் ஆதரவு இல்லை. ஆனால், பறங்கியர் காலத்துச் சரித ஆசிரியர் ஒருவர், மன்னருக் கருகில் அழிந்த சின்னங்கள் இருந் தனவாகக் கூறியிருக்கின்றார். அவற்றில் ஒன்று ஒரு விசித்திரமான இரும்புச் சங்கிலியாம்.

இந்த இடத்தைக் கண்டுபிடித்து மிகுபொருள் செல வழித்து நகரத்தார்கள் ஆலயத்தைப் புதுக்கியுள்ளார்கள் அதுதான் இப்போதுள்ள 'கேதீச்சரம்' ஆகும்.

மதவாச்சி

இனி, திருக்கேதீச்சரம் விட்டு, மதவாச்சி போகும் வழியில் முருங்கன் என்ற ஒரு நிலையம் இருக்கிறது. இதன் அருகில் அரக்கர் குளம் (Giants Tank) என்னும் ஒரு பெரிய ஏரி இருக்கிறது. இந்த இடங்களை நாம் நேரில் காண்பதில்லை. ஏனெனில் புகை வண்டி இந்த வழியே இரவில்தான் செல்லுகிறது.

மேலும், இந்த வடக்கு மாகாணத்தில் 'மது' என்ற ஒரு நகரம் இருக்கிறது. அதற்கு ஏகும் வழியில் மதுப்பாதை என்ற ஒரு நிலையம் இருக்கிறது. இதனருகில் விவிலியர்கள் மிகுதி. தெரு ஓரங்களிலும் சிலுவை நிறுத்தித் தொழு வார்கள். அப்படிப்பட்ட தொன்று மதுரோடு நிலைக்கு

அருகில் உள்ளது. இங்கே ஒவ்வோர் ஆண்டிலும் சூலை மாதத்தில் பெருங்கூட்டம் கூடுகிறது. அத் திருவிழாவில் ஏனைய சமயத்தார்களும் வழிபடுகிறார்கள். இந்த நாடு முழுவதும் செழிப்பில்லாத ஊர்; காடுகள் மிகுதி; மக்கள் நெருக்கம் இல்லை; மலைக்காய்ச்சல் மிகுதி. ஆகவே மதிப்பு குறைந்து உள்ளது. இவ்விதமான நிலப்பான்மை மத வாச்சிச் சந்தி வரைக்கும் இருக்கிறது.

இலங்கையை ஒரு முத்தாகக் கூறினேம். அது தொங்கல் முத்து ஆகையால், அதை இணைக்க ஒரு துளை வேண்டும். பண்டைய முத்துக்களுக்கு எல்லாம் துளை உண்டு. அந்தத் துளையும் அழகாக அமைந்திருக்கும். இலங்கையில் அந்த அழகான துளைப்பகுதிதான் யாழ்ப் பாணம் ஆகும். அஃது ஓர் ஊர். ஆகையால், ஒரு குத்துப் போலப் படத்தில் தோன்றும். ஆகவே, யாழ்ப்பாணத்தை முத்தின் தலைப்பகுதியில் உள்ள ஒரு குத்து என்று கூறு வோம். இலங்கையை இந்தியாவுடன் இணைப்பது தமிழ் மொழியே. யாழ்ப்பாணத்தின் மூலம் அம்மொழியிணைப்பு ஏற்படுகிறதென் றறிக.

---

2. முத்தின் தலையில் ஒரு குத்து

யாழ்ப்பாண நகரம்

'யாழ்ப்பாணம்' என்ற பெயர் கேட்ட மாத்திரத்திலே தமிழ் நாட்டிலே பலவித நினைவுகள் தோன்றும். தமிழ் அறிஞர்கள், அஃது ஆறுமுக நாவலர் தோன்றிய ஊர் என்று கருதுவர். சைவ மக்கள் அது சைவப்பற்று உள்ள பகுதி என்று நினைப்பர். தமிழ்நாட்டு வாணிபர்கள் அது தூய்மையான இலக்கணத்தமிழில் மலையாள உச்சரிப் பைப் புகுத்திப் பேசுபவர் வசிக்கும் ஊர் என்று எண்ணு வர். தமிழ்ப் புலவர்களோ, இது யாழ் இசைக்கும் பாணர் கள் வசித்த இடமாக இருக்குமோ என்று ஐயுறுவர். இவ்வித மாகப் பல பேர்களும் பலவிதக் கருத்துக்களைக் கொள்ளும் படியாகப் பலவேறு பண்புகளைப் பெற்றிருப்பது யாழ்ப்


பாணமாகும். இந்த ஊரைக் கண்டு அதன் அருமை பெருமைகளை நேரில் அறியவேண்டும் என்று ஒரு முறையும், அங்கிருந்த அன்பர்கள் அழைப்புக்கு இணங்கி இரு முறையும், ஆக மும்முறை அங்குச் சென்றிருக்கின்றேன். அக்காலங்களில் அவ்வூரினுடைய இயல்புகளைக் கண்டு வியந்ததுமன்றி, அதன் மக்களின் அருமைகளை நன்கு அறிய வாய்ப்பும் எனக்குக் கிடைத்தது. படிப்பிலும் அறிவிலும் சிறந்திருந்ததுமன்றி, நட்புரிமையிலும் இவ்வூர் மக்கள் மிகுந்த ஆர்வம் கொண்டுள்ளார்கள் என்று கண் கூடாக அறிந்தேன். அப்படிப்பட்ட மக்கள் வாழும் ஊரைப்பற்றி எழுத எனக்கு மிகுந்த மகிழ்ச்சி யுண் டன்றோ?

மாலை இருள் அடைந்ததும் தலைமன்னரில் வண்டி ஏறுகின்றோம். இரவு முழுவதும் வண்டியோ ஒவ்வொரு நிலையத்திலும் நெடுநேரம் நின்று நின்று செல்லுகிறது. இவ்வாறு இரவு முழுதும் வண்டியிலே செல்லுவோம். இருட்டிலே ஊர்களும் மக்களும் நன்றாகத் தெரிவதில்லை. புகைவண்டி நிலையங்களிலும் போதுமான வெளிச்சமும் இல்லை. வெளிச்சக் குறைவினால் பிரயாணிகள் வண்டியில் ஏறவும் இறங்கவும் வருத்தம் அடைகின்றார்கள். நாமும் இவைகளைப் பார்த்துவிட்டுச் சலித்துப் படுத்துக்கொள்ளு கின்றோம். களைப்பினால் தூக்கமும் வந்துவிடுகிறது. மதவாச்சி யில் பாதை இரண்டாகப் பிரிகிறது. ஒரு வழி வடக்கே யாழ்ப்பாணம் செல்லுகிறது. மற்றொன்று தெற்கே கொழும்பு செல்லுகிறது. யாழ்ப்பாணம் செல்லுகிறவர் கள் அதற்கு ஏகும் வண்டியிலே ஏறிக்கொண்டால், இந்தச் சந்தியிலே இறங்க வேண்டியதில்லை. வண்டி நேராக யாழ்ப்பாணத்து வழியிலே திரும்பிவிடும். நடுஇரவிலே இந்த நிலையத்தை அடைந்து, அதைவிட்டு ஒரு சந்தடியும் இன்றி வண்டி வடக்கே திரும்பிச்செல்லும். நன்றாகத் தூங்கிக்கொண்டு செல்லும் நமக்கோ, வண்டி வழி மாறி னது தெரிவதில்லை. விடியும்போது, அடர்ந்த கட்டிடங் கள் எல்லாம் தாண்டி, இலங்கைச் சமஸ்தானத்திலிருந்து யாழ்ப்பாணத் தீவகற்பத்தைப் பிரிக்கும் கடற்கழியைத்

தாண்டிவிடுவோம். அப்போது தென்மருட்சிப் பகுதியிலே சென்றுகொண்டிருப்போம்.

இந்த வண்டியிலே சென்றுகொண்டிருக்கையில், முன்னைய தடவையில் எங்களுக் கேற்பட்ட ஒரு செய்தியைப் பற்றிக் கூறாமல் மேல் செல்ல என் மனம் துணியவில்லை. அந்தத் தடவையும் யாழ்ப்பாணச் சைவமாநாட்டில் கலந்துகொள்ளவே சென்றோம். அப்போது குன்றக்குடிச் சைவ மாநாட்டில் பங்கு எடுத்துக்கொண்டு நேராக இலங்கைக்குப் புறப்பட்டோம். எங்களுடன் நீராவிப் படகிலே பல பேர் யாழ்ப்பாணச் சைவ மக்கள் இந்தியாவிலிருந்து திரும்பி வந்துகொண்டிருந்தார்கள். தலைமன்னாரில் நாங்கள் ஏறிய வண்டியிலேயே அவர்கள் ஏறினார்கள். நாங்கள் ஏறிய 2-ம் வகுப்பு அறையில் ஒரு தமிழ் ஆசிரியை ஏறி அமர்ந்தாள். அவளுடைய உடன்பிறந்தானும் அவளை வண்டியில் அமர்த்திவிட்டு மூன்றும் வகுப்பில் ஏறச் சென்றதைக் கண்டு வியந்தோம். அந்த அம்மாளிடம் அறிமுகம் செய்துகொண்டு, இதற்குக் காரணம் என்ன வென்று கேட்டோம். அவள் ஓர் அரசியல் பாடசாலையில் ஆசிரியை என்றும், தில்லைச் சிதம்பரம் சென்று திருவாதிரைத் திருநாள் கண்டுவிட்டு வருவதாகவும், அதற்குச் செல்லும் ஆசிரியைகளுக்கு அரசியலார் 2-ம் வகுப்பு இலவசச் சீட்டு அளிக்கிறார்கள் என்றும், ஏனையோர்கள் தங்கள் கைப்பொறுப்பில் செல்லவேண்டும் என்றும், அவள் குடும்பம் ஏழையாகையால் தன்னுடன் பிறந்தான் 3-ம் வகுப்பில் செல்லுகிறான் என்றும் உரைத்தாள். அந்த அம்மாள் சைவசீலத்தோடு இருந்ததையும் பார்த்தோம். இலங்கை அரசியலார் தங்கள் ஊழியர்கள் திருவிழாக்களுக்கு இந்தியா செல்லவும் இலவச உதவி செய்கிறார்கள் என்று கேட்க, எங்களுக்குப் பெரும் வியப்பு ஏற்பட்டது.

மேலும், ஒன்றிரண்டு பெரிய நிலையங்களில் வண்டி நின்றவுடனே, சிறு சிறு கூட்டத்தார்கள் இன்னிசையுடன் தேவாரம் முதலியவைகளை ஓதிக்கொண்டு வண்டித்தொட


இலங்கை
விளைபொருள்கள்
காங்கேசன்துறை
யாழ்ப்பாணம்
இராமேசுவரம்
மன்னார்
சேது
வட மாகாணம்
திருக்கேதீச்சுரம்
முத்துத்திடல்
மதவாச்சி
திருக்கோணமலை
வட மத்திய மாகாணம்
அநுராதபுரம்
கிழ் மாகாணம்
கலோயா
புத்தளம்
புத்தளம் வடமேற்கு மாகாணம்
நடு மாகாணம்
பொலன்னறுவை
மாகாணம்
மட்டக்களப்பு
சிலாபம்
மாத்தளை
நீர்கொழும்பு
பராதேனி
உவா மாகாணம்
கொழும்பு
கதிர்காமம்
திசமகாராமம்
தெற்கு மாகாணம்
ஹம்பந்தோட்டை
இரப்பர்
தேயிலை
தென்னை
காலி
மாத்தறை

[பக்கம்-உ (ந)]

ருக் கருகில் வந்தார்கள். நாங்களும் மிகுந்த வியப்புடனே எட்டிப்பார்த்தோம். அவர்கள் வண்டிகளில் ஏறி ஒவ்வொரு பிரயாணியையும் நோக்கி 'இடியாப்பம் பெற்றுக்கொள்ளுங்கள்' என்று கை நீட்டினார்கள். இடியாப்பம் என்பது அரிசிமாவினால் செய்த சேமியா என்று அன்றுதான் முதன்முதலில் அறிந்துகொண்டேன். நாங்கள் 'என்ன விலை?' என்று கேட்டோம். 'இதற்கு விலை இல்லை; அன்பினால் கொடுக்கிறோம்' என்றார்கள். 'ஏன் அவ்விதம் தருகிறீர்கள்?' என்று கேட்டோம். 'நீங்கள் சிறந்த நாடாகிய இந்தியா சென்று, புண்ணியத் தலமாகிய சிதம்பரம் அடைந்து, தில்லை நடராசரைக் கண்டு வணங்கி வருகிறீர்கள்; இத் துணைத் தூய மக்களைக் காணும் யாங்கள் தங்கள் பசியைத் தீர்ப்பதற்காக இடியாப்பமாவது கொடுக்கலாகாதா? தில்லைப்பெருமானைக் கண்டு வணங்குதற்குத் தவம் செய்யாத நாங்கள், தங்களைப் பார்த்தாவது சிறிது புண்ணியம் செய்ய முயலுகிறோம்,' என்றார்கள். அவர்களுடைய அன்பும் ஆர்வமும் கண்டு நாங்கள், அந்த அன்பளிப்புகளைக் கையால் ஏந்தி உண்டு ஆசிகூறினோம். இவ்வாறு ஆண்டுதோறும் திருவாதிரைக்குச் செல்லும் அடியார்களுக்கு அன்பளிப்புகள் இங்கே நடக்கின்றனவாம். எங்கள் நாட்டு வெள்ளிமலை ஏறி இறங்கும் ஆண்மக்களை, அங்கு ஏறமுடியாத பெண்மக்கள் நீர்கொண்டு அடி அலம்பி வணங்கும் வழக்கத்தை இந்தச் சடங்கு ஒத்திருக்கிறதன்றோ என்று எண்ணினேன்.

யாழ்ப்பாணத்தின் விலை பொருள்கள்

மதவாச்சிக்கு வடக்கே உள்ள இலங்கைப் பகுதிக்கு வடமாகாணம் என்பது பெயர். இதில் உள்ள குடிகள் எல்லாம் தமிழர்கள். இவர்கள் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் தெற்கே கடல் தாண்டிக் குடியேறினவர்கள். இம் மாகாணம் இரண்டு பகுதிகளாக உள்ளது. தென்பகுதி மற்றைய நிலப்பாகங்களைப் போலக் காட்டடர்ந்த நாடு; ஊர்கள் மிகக் குறைவு; மக்கள் தொகையும் குறைவே. வடபகுதி யாழ்ப்பாணத் தீவகற்பம்; மக்கள் தொகை மிக நெருக்கம்.

எங்கும் ஊராகவே இருக்கும். ஆனல் செழிப்புக் குறைவு; மழை வளம் தாழ்வு; நில வளமும் அப்படியே. மணற்றிடல்களும் பழுப்பு மண்ணும் எங்கும் உள்ளன. தென்னந் தோப்புகளைக் காணலாம். ஆனல், கிணறுகளிலிருந்து நீர் இறைத்தே பயிரிடவேண்டும். ஆகவே, மற்ற மாகாணங்களைப்போல நெருக்கடியான பச்சை மரத் தோப்புகளை இங்குக் காணமுடியாது. தென்பகுதியில் காணுத மற்ற ஒரு மரம் உண்டு. அதுதான் பனை. அதற்கு நீர்ப்பாய்ச்சல் வேண்டியதில்லை. நட்டுவிட்டால், தானே நெடுக வானை அளாவிக்கொண்டு வளரும். பார்வைக்குப் பசுமையாகத் தோன்றுவிட்டாலும் பயன் தருவதில் அம்மரம் எதற்கும் இளைக்காது. அடிமரம் கடினமாக இருக்கும். வைரம் (சேகு) ஏறிவிட்டால் எந்தப் புழுவும் அதை அரிக்காது. வீடுகளுக்கு விட்டங்களாகவும் கைம் மரங்களாகவும் பனை மரமே பயன்படுகிறது. ஓலைகளோ விசிறிகளாகவும், நீர் இறைக்கும் தோண்டிகளாகவும், உட்காரும் பாய்களாகவும், எழுதும் ஏடாகவும் பயன்படும். ஆனல், சிறப்பாகக் கூறை வேயவும் வேலி கட்டவும் பயன்படுகின்றன. பனங்காய்களோ உணவு ஆகும். நுங்குகளோ விடாய் தீர்க்கும் இனிய உணவு. பனங்கிழங்கோ வறுத்துத் தின்னவும் பலவகை இனிய தின்பண்டங்கள் செய்யவும் பயன்படும். தீவுகளிலே இக் கிழங்குகளை ஒருவகையாகப் பக்குவப்படுத்தி வருடம் முழுதும் எடுத்துவைத்துத் தின்னக்கூடிய பண்டமாக ஆக்குகிறார்கள். மேலும் பனை மரத்தில் தெளிவு இறக்கி, அதிலிருந்து வெல்லம் காய்ச்சுகிறார்கள். பனைவெல்லம் உடலுக்கு மிகவும் குளிர்ச்சி தரும். அதிலிருந்து பனங்கற்கண்டும் செய்கிறார்கள். இது நோயாளிகளுக்கு மிகவும் பயன்படும். தெளிவைக்கொண்டு கள்ளும் செய்கிறார்கள். பனங்கள்ளு இந்த இடங்களில் மிகுதி. இவ்விதமாகப் பனைமரம் பலவகைகளில் இந்நாட்டில் பயன்தருகிறது. தீவுகளிலும் வடமராட்சி தென்மராட்சிப் பகுதிகளிலும் பனை சிறந்து வளர்கின்றது.

மழை மிகுதியாகப் பெய்யாததனல் இந்நாட்டு மக்கள் வேளாண்மை செய்ய மிகுதியாகப் பாடுபடவேண்டும்.

தோட்டங்களில் எல்லாம் கிணறுகள் வெட்டி, ஏணியேற்றம் அமைத்து, அவைகளினால் நாள் முழுதும் நீர் இறைக்க வேண்டும். இவ்விதம் நீர் இறைத்து, நெல், புகையிலை, காய்கறிகள் முதலியவைகளை விளைவிக்கிறார்கள். இந்நாட்டு நெல் மிகப் பெரிதாகவும் சிவப்பாகவும் இருக்கிறது. தமிழ் நாட்டிலிருந்து செல்பவர்களுக்கு அவை சுவைப்பதில்லை. நெல்விளைவும் மிகக் குறைவு. இந்நாட்டிற்குப் பெரும் பாலும் தஞ்சையிலிருந்தே நெல் போகவேண்டியிருக் கிறது. சென்ற போரினும் போருக்குப் பின்னும் அரிசி விலை மிகக் கூடுதல் ஆகிவிட்டது. யாழ்ப்பாணப் பகுதியில் மிகுதியாகச் சாகுபடி ஆவது புகையிலை. இதனால் அதிக ஆதாயம் கிடைக்கிறது. இங்கே விளையும் புகையிலை தெற்கே காலி, மாத்துறை வரைக்கும் செல்லுகிறது. காய்கறிகள் உள்நாட்டு உணவிற்காகப் பயன்படுகின்றன. அவற்றில் இராசவல்லிக் கிழங்கை மிகவும் ஆர்வத்துடன் உண்ணுகிறார்கள். அதனைத் துவையல்போல் ஆக்கி, சீனி சேர்த்து, இனிய தின்பண்டமாக உண்ணுகிறார்கள். நம் நாட்டு அல்வா போன்று அது சுவைக்கிறது. ஆகவே, வறண்டு கிடக்கும் நிலப்பகுதியிலிருந்தும் மனிதன் வாழ் விற்கு இன்றியமையாத உணவுகளை, இந்த நாட்டு மக்கள் தங்கள் முயற்சியாலும் உழைப்பினாலும் ஆக்கிக்கொள்ளு கிறார்கள் என்று கூறலாம். இங்கே ஆறுகள் குளங்கள் இல்லை. சுற்றிலும் கடலும் உவர்க்கழிகளுமே உண்டு. நடுவில் தோட்டங்களிலும் ஊர்களிலும் மணற்கேணிகள் தாம் உண்டு. ஒவ்வொரு வீட்டிற்கும் ஒரு கேணி இருக் கும். அது 10 அடி ஆழந்தானிருக்கும். ஆனால், தெளி வாக இருக்கும். அதிலிருந்து கைஏற்றத்தினால்தான் நீர் இறைக்கவேண்டும். வீட்டைச் சுற்றிலும் உள்ள தோட்டத் திற்கு இந்நீரே இறைக்கப்படும். எல்லா வீடுகளும் வேலி களைக்கொண்ட வளவுகளாகத் தனித்தனியாகக் கட்டப் பட்டுள்ளன. பெரும்பான்மை ஓலை வீடுகள்தான். சில மாளிகை வீடுகளாக இருக்கும். மேலே சீமை ஓடுகள் வேயப்பெற்றிருக்கும். கைம்மரம் எல்லாம் பனங் கைகளே. கடைவீதி தவிர ஏனைய இடங்கள் முழுதும்

தனித்தனியே பிரித்துக் கட்டப்பட்டிருக்கும். இவைகளைப் பார்த்தால் மலையாள நாட்டில் இருக்கிறோமோ என்றே ஐயுறவேண்டும்.

யாழ்ப்பாணத்தில் பெருங்கடற்கழியைத் தாண்டின வுடன் இதுவரையில் கூறிய நிலப்பான்மையையே கண்டு கொண்டு புகைவண்டியில் செல்வோம். வண்டி வட மேற்கே வளைந்து சென்று, பிறகு நேர் மேற்கே செல்லு கிறது. பிறகு நிலத்தின் பான்மை சிறிது செழிப்பாகத் தோன்றுகிறது. மா பலாத் தோப்புகளும் சில காணப் படுகின்றன. ஆனால், அவை மக்கள் பெரு முயற்சியால் உண் டாக்கப்பட்டவை. பிறகு விடிந்து ஒரு மணி நேரத்திற் குள் யாழ்ப்பாண நிலையத்தைப் போய்ச் சேருகிறோம். இங்கு நாம் இறங்குகிறோம். ஆனால், அவ் வண்டி இங்கே தங்கிவிடுவதில்லை. அது வடக்கே திரும்பி, நேராக வட கோடியில் கடற்கரையில் உள்ள காங்கேசன்துறை வரைக் கும் சென்று, அங்கே தங்கிவிடுகிறது. இங்கே இவ்விரண்டு கற்களுக்கு ஓர் ஊர்நிலையம் இருக்கக் காணலாம். மக்கள் தொகுதிகள் அத்துணை மிகுதி என்றறிக.

யாழ்ப்பாண நகரமைப்பு

யாழ்ப்பாணம் ஒரு பெரிய நகரம். அதற்கு ஒரு நகரசபை உண்டு. அச்சபைக்கு, ஒரு தலைவர், துணைத்தலை வர் முதலியோர்கள் இருக்கின்றனர். இச்சபைதான் அந் நகரத்தை ஆட்சிபுரிவது. மேலும், இந்நகரமே வட மாகா ணத்தின் தலைநகரம். ஆகவே, அம்மாகாணத்தினுடைய எல்லாக் காரியாலயங்களும் இதில் இருக்கின்றன. ஆட்சிப் பகுதிகளுடைய கட்டடங்களும் அவற்றை நடத்தும் அலுவ லாளர்களும் இங்கு இருக்கின்றார்கள். பல கல்லூரிகளும், பாடசாலைகளும் இங்கு உண்டு. யாழ்ப்பாணம் ஒரு பெரிய வாணிபத் தலம். இங்கே மக்களுக்கு வேண்டிய சரக்கு மளிகைகள், நாட் சந்தை, அச்சாலைகள், தொழிற் சாலைகள், ஒலி ஒளிப்படச்சாலைகள், விசைவண்டிநிலை யங்கள் முதலியவைகளும் உண்டு. கச்சேரி, சிறைச்சாலை,

படகுத்துறை, வைத்தியசாலை முதலிய இன்றியமையாத நிலையங்கள் உண்டு. இவை தவிர, இந்து கிறித்தவத் தேவாலயங்களும், மூகம்மதியர் பள்ளிகளும் உண்டு. பல அழகிய தெருக்களும், சந்துகளும் உண்டு. இவைகள் எல்லாம் ஒரு நகரத்தின் அடையாளங்கள் அல்லவா?

யாழ்ப்பாணம், கடற்கரையோரமாக அதன் கீழ்க்கரையில் இருக்கிறது. இது பதினைந்து உட்பகுதிகளைக் கொண்டிருக்கிறது. அவைகள் குறிச்சி, கோட்டை, வண்ணார் பண்ணை, பறங்கித் தெரு, சுண்டிக்குழி, நல்லூர், நாயன்மார்காடு, கொக்குவில், கொண்டாவில், கொழும்புத்துறை, திருநெல்வேலி என்பன. இப்பகுதிகள் தனித் தனிச் சிற்றூர்கள் அல்லது மஜராக்களாக முன் நாளில் ஏற்பட்டிருந்த போதிலும், இந்நாளில் அவைகள் வளர்ந்து ஒன்றோடொன்று பிணைத்துக்கொண்டிருக்கின்றன. இப்பகுதிகளைப் பிரித்துப் பார்க்கும்வண்ணம் அமைந்திருக்காமல் எல்லாம் ஒரே ஊராக வளர்ந்திருக்கின்றன. ஆனாலும், பழைய பெயர்கள் இன்னும் வழக்கத்தில் இருக்கின்றன. இவைகளில் வண்ணார்பண்ணை என்பது நகரத்தின் நடுவில் இருக்கிறது. அதுவே சிறந்த பகுதியாகவும் இருக்கிறது. அதில்தான் சைவப் பழங்குடிகள் பெரும் பான்மையாக வசிக்கிறார்கள். ஆறுமுகநாவலர் பெயரால் விளங்கும் வீதியும் அதிலே உண்டு. அவ்வீதியில் நாவலருடைய திருச்சமாதிக்கோயிலும் உண்டு. அதனை அடுத்து ஒரு பெரிய மண்டபமும் நூற்சாலையும் இருக்கின்றன. அம்மண்டபத்தில் நாவலர் பாடசாலை நடைபெறுகின்றது. நாவலர் பெயரால் நடக்கும் அறச்சாலையும் அங்கேயே நிலவுகின்றது. நாவலர் சாலைக்குச் சிறிது தொலைவில் காங்கேசன்துறைச்சாலையில் 'இந்துக்கல்லூரி' என்ற ஒரு சிறந்த கல்லூரி இருக்கிறது. இதை யாழ்ப்பாணத்துச் சைவபரிபாலனசபையார் நடத்துகிறார்கள். அச்சபையின் நிலையமும் அக் கல்லூரியை அடுத்தே இருக்கிறது. அதில் நூற்சாலை, வாசகசாலை, அச்சகம், 'இந்து சாதனம்' என்ற பத்திரிகையின் பதிப்பகம், ஆங்கில வெளி

யீட்டின் பதிப்பகம் முதலியவைகள் இருக்கின்றன. ஒரு மானவர்விடுதியும் யாத்திரிகர் தங்குமிடமும் கட்ட முடிவுசெய்திருக்கிறார்கள். இந்துக்கல்லூரியில் தமிழ்க் கலாசாலைமண்டபமும் இருக்கிறது. ஆண்டுதோறும் நடைபெறும் சைவ மாநாடும் இந்த மண்டபத்தில்தான் நடைபெறுகின்றது. ஆகவே, இந்தத் தாபனம் மிகச் சிறந்த சமயத்தொண்டு புரிந்துவருகின்றது என்னலாம். இதற்கருகில் 'கலாநிலையம்' என்ற ஒரு நூலகம் சிறந்த நூல்களை வைத்துக்கொண்டிருக்கிறது. அதன் செயலாளர் ஒரு சிறந்த கலைஞர். அவர் வெளியீடு ஒன்று சிலநாள் வெளியே வந்துலாவியது. மேலும், வண்ணார்பண்ணையில் இரண்டு மூன்று பெரிய ஆலயங்களும் இருக்கின்றன. சுற்றிலும் உள்ள தெருக்களில் வழக்கறிஞர்கள், ஆசிரியர்கள், அதிகாரிகள், ஓய்வு பெற்றவர்கள் முதலிய அறிவாளிகள் வசிக்கிறார்கள். ஆகவே, இப்பகுதியே யாழ்ப்பாணத்திற்கு நடுநாயகமாக விளங்குகிறது.

இனி, கோட்டை என்பது கடற்கரையோரத்தில் கட்டியுள்ள அரணும், அதையொட்டிய கட்டடங்களுமேயாம். இக்கோட்டை நான்கு நூற்றாண்டுகளுக்கு முன் பறங்கியர்களால் கட்டப்பட்ட அரணாகும். நாற்புறங்களிலும் வலுவான கருங்கற்களால் கட்டப்பட்டுள்ளது. அது பல நூறு அடி நீளமும் அகலமும் கொண்டது. உள்ளே அகன்ற நிலம் கொண்டது. இதில் பல பகுதிச்சாலைகள் இருக்கின்றன. ஒரு சிறைச்சாலையும் இருக்கிறது. இக்கோட்டை பல தடவைகளில் பிடிபட்டும், இடிக்கப்பட்டும், மறுபடியும் கட்டப்பட்டும் ஆகியிருக்கிறது. பீரங்கிகளும், வெடிகுண்டுகளும், வானவிமானங்களும் தோன்றியிருக்கும் இந்நாளில், இந்தக் கோட்டையால் யாது பயன்? சரித்திரச் சின்னமாகத்தான் இது நிறுத்தப்பட்டுள்ளது. இது முன்னாளில் கட்டப்பட்டபோது பறங்கிகளுக்கு ஒரு வலுவான அரணகத்தான் இருந்தது. இதில் பல அரசகுமாரர்களை அடைத்துவைத்திருந்தார்கள். இங்கிருந்தே பல மக்களைக் கிறித்தவர்கள் ஆக்கினர்கள். அவற்றின் விவரங்களை இந்நாட்டுச் சரித்திரத்தில் காணலாம்.

கோட்டைக்கு அடுத்தாற்போல் உள்ள பகுதி பறங்கித் தெரு என்ற பெயரால் வழங்குகிறது. இதில் வீடுகள் ஒழுங்காகக் கட்டப்பட்டுள்ளன. தென்இந்திய நகரங்களைப்போல வீடுகள் இடம் விடாமல் கட்டப்பட்டுள்ளன. தெரு ஓரமாகத் திண்ணைகள் உண்டு. ஆனால் அத்திண்ணைகளில் உள்ள தூண்களில் நிலமட்டத்திற்குமேல் $3\frac{1}{2}$ அடி உயரத்தில் இரண்டு அடி அகலமான மறைப்பு, அத்திண்ணை அகலத்திற்குப் பிணைக்கப்பட்டுள்ளது. அம்மறைப்பு மரத் தப்பைகளால் அழகாக இணைக்கப்பட்டுள்ளது. உள் பக்கத்திலிருந்து வெளியே தெருவில் போவாரைப் பார்க்க முடியும். தெருவில் போவார் உள்ளே நிற்பவர்களைப் பார்க்க இயலாது. இவ்வித மறைப்பு படுதா வழக்கமுள்ள முகம்மதிய நாடுகளுக்குமட்டும் இருக்கமுடியும். ஆனால், யாழ்ப்பாணத்துப் பறங்கிகள் இதனை ஏன் அமைத்துக் கொண்டார்களோ அறியமுடியவில்லை. ஆனால், வெளிப் பார்வைக்கு இம்மறைப்பு அழகாகத்தான் இருக்கிறது. இதனைக் கண்டு தமிழ்ச் செல்வர் சிலரும் தங்கள் மாளிகைகளில் அமைத்திருக்கிறார்கள். இந்தத் தெருவில் வசிக்கும் குடிகள் போர்த்துகீசியர் காலத்தில் அவர்களுக்கும் நாட்டு மக்களுக்கும் கலப்புமணத்தால் உண்டான மக்களின் சந்ததியார்கள். பலபேர் மணமில்லாமல் வைப்பு முறையிலே பிறந்தவர்கள் என்றும் கூறுவர். இம்மக்கள் சில்லறைத் தொழில்கள், சில்லறை உத்தியோகங்கள், கடைகள் இவைகளை வைத்து நடத்திப் பிழைக்கிறார்கள்.


நல்லூர்

'நல்லூர்' என்பது ஒரு பண்டைய பகுதி. இது சரித்திரத்தில் மிகப் புகழ்பெற்றது. இதனைப் பின் கூறுவோம். இவ்வூரில் முன்னாளில் கோட்டை இருந்தது. அரசியல் நிலையமும் இருந்தது. எல்லாவற்றிலும் சிறந்தது இங்கே உள்ள கந்தகோட்டம். இக்கோயில் மிகப் பழமையானது. கோயில் பெருந்தெருவில் இருக்கிறது. அதற்கு எதிர்ப் புறத்தில் நந்தவனமும் தடாகமும் இருக்கின்றன. திருக் கோயில் மதில்கள் மிக உயர்ந்தவை. உள்மண்டபங்கள்

தென்இந்தியக் கோயில்களைப்போலக் கருங்கற்களால் கட்டப்பட்டுள்ளன. மூலத்தானத்தில் வேல் அமைக்கப் பட்டுள்ளது. அதற்கு நேர்க்கோணமாக உள்ள கருப்பக் கிருகத்துள் ஆறுமுகமூர்த்தி எழுந்தருளியிருக்கிறார். இக் கோயிலின் முன்புறத்தில் வில்லைக்கொட்டம் ஒன்று பெரி தாக அமைக்கப்பட்டிருக்கிறது. மூலத்தானத்திற்குப் பின்புறத்தில் பள்ளியறை இருக்கிறது. இக்கோயில் மிகத் தூய்மையாக வைக்கப்பட்டிருக்கிறது. குடி-கள் கோயிலுக் குள் செல்லுவதற்கு முன், கைகால் முகம் கழுவி விட்டுத் திருநீறு அணிந்துகொண்டுதான் செல்வார்கள். மார்பின்மேல் துணி போர்த்தாமல்தான் உள்ளே புகுவார் கள். ஆதிசைவக் குருக்கள்தான் பூசாரிகள். அன்பர்கள் அழகாகத் திருப்புகழ் பாடுவதுண்டு. வெள்ளி, கிருத்திகை சட்டித் திதிகளில் மிகுதியான அன்பர்கள் கோயில் சென்று வழிபடுவது உண்டு. நல்லூர் கந்தகோட்டம் ஈழ நாட்டு ஆறு கோட்டங்களில் ஒன்று என்ற புகழ் பெற்றது.

கொக்குவில், கொண்டாவில் என்ற பகுதிப்பெயர் களில் காணும் **வில்** என்ற விகுதி ஒரு சிங்களச்சொல். அதன் பொருள் குளம் என்பது. கொக்குவில் என்பதற்குக் கொக்குக் குளம் என்பது பொருள். அதனாலே கொக்கு கள் இருக்கும் குளம் என்று எண்ணலாம். இப்பொருள் தான் இயல்பாகத் தோன்றும். கொக்கு, மீன் பிடிக்கக் குளத்தில் இருப்பது இயல்புதானே. உண்மையில் அது சரியான பொருள் அன்றும். குக் (Cook) என்ற ஒரு வெள்ளைக்காரன் வெட்டிய குளம் என்பது இதன் வரலா றும். குக் என்ற பெயர் கொக்கு என்று தமிழில் மருவி விட்டதாம். இதைப்போலவே கொண்டாவில் என்ற பெயரும் ஏற்பட்டதாம். யாழ்ப்பாணச் சரகத்தில் இப் போது சிங்களர்கள் இல்லாவிட்டாலும் முன்னாளில் இங்கே சிங்களர் மிகுதியாக இருந்தார்கள். ஆகவேதான் இந்தப் பகுதியில் இப்போதும் பல சிங்களப் பெயர்களையும் காண் கிறோம்.

கொழும்புத்துறை என்பது கழியோரத்தில் உள்ள ஒரு துறை ஆகும். யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்



இலங்கை — மாகாணங்களும் நகரங்களும்

[பக்கம் - நாநா]

குச் சென்றுகொண்டிருந்த படகுகள் இந்தத் துறையிலிருந்து புறப்பட்டதனால் இத்துறைக்குக் 'கொழும்புத் துறை' என்ற பெயர் வந்திருக்கலாம்.

திருநெல்வேலி என்ற பகுதி ஒரு பரந்த பகுதியாகும். இதனைத் தென்இந்தியாவில் உள்ள திருநெல்வேலியுடன் மயங்கக்கூடாது. இந்தப் பகுதியில்தான் சர். பொன்னம்பலம் இராமநாதன் கட்டிய கல்லூரி இருக்கிறது. இக் கல்லூரியின் பெயர் பரமேசுவரன் கல்லூரி என்பது. மிகப் பரந்த இடமும், நூற்றுக்கணக்கான பிள்ளைகள் படிக்கக்கூடிய வசதிகளும் இதில் உண்டு. நாற்களஞ்சியம் திருக்கோயில் முதலியவைகள் இங்கு உண்டு. விளையாட்டிடங்கள் பரந்த வெளியாக இருக்கின்றன.

இனி, குறிச்சி என்பது சிற்றூர் என்று பொருள் படப் பொதுவாக வழங்கினாலும் சிறப்பாகக் குறிஞ்சி நாட்டுச் சிற்றூருக்கு முன்னாளில் ஏற்பட்ட பெயராகும். அஃது இங்கே ஒரு பகுதியின் பெயராக அமைந்துள்ளது.

சுண்டிக்குழி என்ற சொற்றொடரிலிருந்து அது முன்னாளில் ஒரு நீர்நிறைந்த குழியாக இருந்து, பின்னால் நீர் சுண்டிவிட்டதனால் வெறும் குழியாக இருந்து, மனைகள் கட்டப் பயன்பட்டு, ஊரின் ஒரு பகுதி ஆகிவிட்டதென அறியலாம். சுண்டின குழி, சுண்டிக்குழி ஆயிற்று என்க.

இனி, நாயன்மார்கட்டு என்பது மற்றொரு பகுதி. குணபூடணசிங்கன் காலத்தில் மந்திரியாக இருந்த அடியார்க்குநல்லார், குளங்களும் பாடசாலைகளும் நாயன்மார் மடமும் கட்டினாராம். அரசன் பெயரால் கட்டின குளம் ஆரியகுளம் எனவும், தன் பெயரால் கட்டினது அடியார்க்குநல்லான் குளம்; அல்லது கன்னுதிட்டிக் குளம் எனவும், 63 நாயன்மார் மடம் இருந்த இடம் நாயன்மார்கட்டு எனவும் வழங்கினவாம்.

போக்குவரவுப் பாதைகள்

யாழ்ப்பாணம் ஒரு மாகாணத்தின் தலைமை நகரம் ஆனதனால், அங்கிருந்து அம்மாகாணத்தின் பல பகுதி

களுக்கும் போக்குவரவுப் பாதைகள் ஏற்பட்டிருக்கின்றன. அப்பாதைகள் மிக உறுதியாக ஆக்கப்பட்டு அவ்வப் போது பழுதுபார்க்கப்பட்டு வருகின்றன. யாழ்ப்பாணத் திற்குத் தெற்கேயும் மேற்கேயும் கடற்கழி பரவிக் கிடக்கிறது. மேற்கே கழியைத் தாண்டினால் தீவுகள் இருக்கின்றன. முன்னாளில் அத் தீவுகளுக்குப் படகின் வழியாகச் செல்லவேண்டும். போக்குவரவு மிகவும் தாமதமாகவும் அபாயமாகவும் இருந்தது. இப்போதோ யாழ்ப்பாணத்துடன் தீவுகளை இணைத்துவிடப் பெரிய அணைகள் கட்டப்படுகின்றன. அவ்வணைகள் வழியாகப் பாதைகள் போடப்படுகின்றன. யாழ்ப்பாணத்திலிருந்து நேர் மேற்கே மெலணை முதலிய தீவுகளுக்குப் புதிதாகப் போகும் பாதையில் சென்றால், முன் ஆறு மணி நேரம் பிடித்த பயணத்தை இப்போது அரை மணிக்குள் முடித்து விடலாம். நாங்கள் இந்தக் கழி வழியாகப் படகில் ஏறிச் சென்றோம். அன்று மாலை இருட்டும்பொழுது படகு ஏறி, இளகிய காற்று வீச, இன்பசாகரத்தில் மூழ்கினவ ராய் யாழ்ப்பாணத்துறை வந்துசேர்ந்தோம். பாதையில் விசைவண்டியில் செல்லுகையில் எத்துணை விரைவாக யாத்திரையை முடித்தபோதிலும், படகில் தென்றல் காற்று வீச, படகோட்டி அழகிய இன்னிசையில் பாடல் களைப் பரப்ப, நாம் செல்லும் உல்லாச யாத்திரை பதின் மடங்கு இன்பம் தருகிறதென்று அறிந்தோம். அப்போது முழுமதியம் உதயமானால் அந்தக் காட்சி வேறு எந்த இயற்கை அழகையும் மீறிவிடும் அன்றோ? இந்த இன்பம் வேறு எந்தக் காலத்தில் கிடைக்கும்?

யாழ்ப்பாணத்திலிருந்து வடமேற்கே மற்றோர் அணை ஒரு கழியைத் தாண்டுகிறது. இதன் வழியே சென்றால் மணல்திடல்களை அருகே காண்போம். அருகே நெல் புலங்கள் இருக்கின்றன. கழிநீர் இறைத்துப் புலங்கள் ஆக்கியிருக்கிறார்கள். ஆனால், மண் பழுப்பாக இருக்கிறதே யன்றி, அத்துணைச் செழிப்பாகத் தோன்றவில்லை. இந்த வழியே சென்றால் விவிலியர் கல்லூரி ஒன்றைக் காணலாம்.

இது மிகப் பெரிய கல்லூரி. அதனையும் தாண்டிச் சென்றால் காரைத்தீவை அடையலாம்.

யாழ்ப்பாணத்திலிருந்து வடக்கே போகும் பாதை மற்றொன்று. இப்பாதை புகைவண்டித் தடம் ஓரமாகவே காங்கேசன் துறை கீரிமலை வரைக்கும் செல்லுகிறது. இப் பாதை செல்லும் வழி முழுதும் செழிப்பான நிலம். பல ஊர்கள் உள்ள பகுதி. எப்போதும் மக்கள் நடமாட்டம் உள்ள பகுதி.

மற்றொரு பாதை வடகிழக்கே பருத்தித்துறை செல்லுவது. இது செல்லும் வழியில் தொண்டைமானாறு முதலிய பெருங்கழிகள் இருக்கின்றன. பனங்காடுகள் மிகுதி.

மற்றொன்று, மேற்கே கொடிகாமம் செல்வது. இது தான் தென்னாடுகளுக்குச் செல்லும் பெருஞ் சாலைவழி. ஆகவே, யாழ்ப்பாணம் மையமாக இருந்து அதனைச் சுற்றிலும் பல பெரிய பாதைகள் கிரணங்களைப் போலச் செல்லுவதைக் காணலாம். இதுவே இந் நகருடைய பெருமையை விளக்குகிறது.

நகருக்கு இருபுறங்களிலும் கடற்கழி இருப்பதனாலே ஊரின் பருவநிலை நடுநிலைமையில் இருக்கிறது. மேலும், ஊருக்குள் வீடுகளைச் சுற்றிலும் பெரிய மரங்கள் இருப்பதனாலேயும் மிகுதியான சூடும், மிகுதியான குளிரும் ஏற்படுவதில்லை. இராக்காலங்களிலே நல்ல கடற்காற்று வீச, மிகுந்த இன்பம் ஏற்படுகிறது. ஆகவே, தென் இந்தியாவிலிருந்து செல்லுபவர்கள் யாழ்ப்பாணக் காற்றை விரும்புவதில் வியப்பு ஒன்றும் இல்லை. ஆனால், யாழ்ப்பாணக் காற்றைவிட, அங்கு இருக்கும் சைவ மக்களின் அன்பு மிக இனிமையானது. நான் சமயமாநாட்டிற்குச் சென்ற இரு சமயங்களிலும் அவர்கள் காட்டின அன்புக்கு அளவே இல்லை. அருமையாகக் குடி இருப்பு வசதிகளை ஏற்படுத்தியிருந்தார்கள். உணவு முதலிய வசதிகளும் செவ்வையாக இருந்தன. இரண்டாம் முறை சென்றபோது அமர்த்தியிருந்த வீடு விசாலமானது. வீட்டிற்கு முன்னால் இருந்த வெளிமுற்றம் மிக அமைதியாக இருந்தது. நான்கு

பெரிய மாமரங்கள் விதானம் அமைத்தாற்போல அவ் வெளியிடத்தை அலங்கரித்தன. நடுப்பகலிலும் வெய்யிலி னுடைய கொடுமை தெரியவில்லை. இரவிலோ குளிர்ந்த காற்று நறுமணத்தோடு வீசிற்று. அங்கு இருந்த பத்து நாட்களும் இரவில் தூக்கத்திற்குச் சிறிதேனும் இடையூறு ஏற்படவே இல்லை. இவ்வித நலங்கள் யாழ்ப்பாணம் போன்ற தோட்ட நகரங்களிலே நடக்குமேயன்றி, சென்னை மாகாணத்து நகரங்களில் நடைபெறுது என்று துணிவாகக் கூறமுடியும். இலங்கையிலும் மற்ற பெரிய ஊர்களிலும் காணமுடியாது.

சைவ சமய மாநாடு

இரண்டு முறைகளில் சைவசமயமாநாட்டின் பொருட்டாகவே சென்றேன் என்று கூறினேன். முதன் முறை சென்றது குளிர்காலத்திலே; அதாவது மார்கழி மாதத்திலே. இரண்டாவது முறை சென்றது கோடைக் காலத்திலே; அதாவது சித்திரை மாதத்திலே. இரண்டு தடவைகளிலும் தமிழ்க் கலாசாலைக் காவணத்திலேயே மாநாடு கூடிற்று. ஆண் பெண் உட்பட நூற்றுக்கணக்கான மக்கள் வந்து மிக அமைதியோடு சொற்பொழிவுகளைக் கேட்டார்கள். அச் சபையாரின் வழக்கப்படி, ஆறுமுக நாவலர் பாடசாலையிலிருந்து கடவுள் வழிபாடுசெய்து, தேவாரம் ஓதிவிட்டு, தலைவர்களை ஊர்வலமாக அழைத்துச் சென்றே சபையைத் தொடங்கினர்கள். சபையும் கூத்தப் பெருமான் வழிபாட்டுக்குப் பிறகே தொடங்கிற்று. தலைவர் முன்னுரை, பேச்சாளர் விரிவுரைகள், தலைவர் பின்னுரை யோடு கூட்டம் முடிவடைந்தது. இவ்வாறு மூன்று நாட்கள் மாநாடு நடைபெற்றது. இடையில் இன்றியமை யாத முடிபுகள் சில நிறைவேற்றப்பட்டன. அம்முடிபுகள் தமிழ்மக்களின் சமய மேம்பாட்டைக் கருதி நிறைவேற்றப் பட்டன. இவ்வாறு சபைக் கூட்டங்கள் நடைபெற்ற நாட் களில், மாலை கழிந்தவுடன், அடுத்த ஊர்களிலிருந்து அன்பர்கள் வந்து தலைவர்களை அழைத்துச்சென்று, தங்கள் ஊர்களில் பேசச்செய்வார்கள். இவ்விதப் பேச்சுக

ளால் இரவில் நெடுநேரம் ஆகிவிடும். பிறகே ஊர் திரும்ப வேண்டிவரும். இவ்வகையாக மாநாடுகள் மிகச் சிறப் புடன் இருமுறைகளிலும் நடைபெற்றன.

முதல்முறை சென்றபோது திரு. C. K. சுப்பிரமணிய முதலியார் ஒருநாளும், நான் இரண்டு நாட்களும் தலைமை ஏற்றோம். முகவுரையும் முடிப்புரையும் நீங்கலாக இரு வரும் இரண்டு தனிப்பேச்சுகளும் நிகழ்த்தினோம். நான் பேசின தனிப்பேச்சுகள் "நாயன்மார்களும் கல்வெட்டுக் களும்", "சைவசமயப் புள்ளிக்கணக்கு" என்பவைகள். பிறகு, அக்கம்பக்கத்து ஊர்களில் சில பேச்சுகளைப் பேசி விட்டுக் கொழும்பு சென்று அங்கே விவேகாநந்த சபையில் பேசிவிட்டு ஊர் திரும்பினோம். இரண்டாம் முறை நாங்கள் சென்றபோது C. K. சுப்பிரமணிய முதலியார் இரண்டு நாட்களும், நான் ஒருநாளும் தலைமை ஏற்றோம். தனிப் பேச்சுகளாக C. K. சுப்பிரமணிய முதலியார் அவர் கள் இரண்டைப்பேசின பிறகு, நான்,

"மறையோடு மன்னுயிர் மகிழ்ந்த குறிக்கோள்"
"இளமையும் முதுமையும் இயக்கிய வாழ்நலம்"

என்ற பொருள்களைப் பற்றிப் பேசினேன். பிறகு சில ஊர்களுக்குச் சென்று சில பேச்சுகளைப் பேசினோம். C. K. சுப்பிரமணிய முதலியார் அவர்கள் இரண்டு நாட் களில் ஊருக்குப் புறப்பட்டுவிட்டார்கள். நானே சிலநாள் தங்கிப் பல இடங்களில் பேசினேன். யாழ்ப்பாணத்தில் தமிழ்க் கல்லூரியிலே மறுபடியும் ஒரு பேச்சுப் பேசினேன். அது சைவபரிபாலனசபையின் சார்பிலே. அப்போது "பிள்ளையார் தத்துவம்" என்பதைப்பற்றிச் சில கருத்துக் களை வெளியிட்டேன். அன்பர்கள் மிக ஆர்வத்துடன் கேட்டார்கள்.

முதன்முறை நான் இலங்கை சென்ற செய்திகளை இந்துசாதனத்தில் "கடல் கடந்த தமிழர்" என்ற தலைப் பின்கீழ் எழுதினேன். இரண்டாம்முறை சென்ற செய்தியை "எனது இலங்கை விசயம்" என்ற தலைப்பின் கீழ் அதே வெளியீட்டிற்கு எழுதினேன். அக்கட்டுரையை

இரண்டு பிரதிகளில் பதிப்பித்தார்கள். மேலும், இலங்கை அன்பர்கள் என் அனுபவங்களையும் பேச்சுகளையும் ஒரு நூலாக எழுதி வெளியிடச் சொன்னார்கள். அந்த வேண்டு கோளின்படிதான் இந்த நூல் எழுதப்படுகிறது.

நான் இலங்கையில் இருந்தபோது, அங்குக் கண்ட அன்பர்கள் எல்லாரும் மிகுந்த ஆர்வத்தோடு என்னை வரவேற்று உபசரித்தார்கள். அவர்கள் காட்டிய அன்பை எழுத்தினால் எழுதமுடியாது. நான் சென்ற ஒவ்வோர் இடத்திற்கும் என்னுடன் கூடவந்து எனக்கு வேண்டிய வசதிகளை எல்லாம் செய்துதந்தார்கள். இவ்விதம் எனக்காகப் பாடுபட்ட அன்பர்கள் கல்வியில் சிறந்தவர்களை. மிகுதியாகத் தமிழ் ஆசிரியர்களும் வழக்கறிஞர்களுமே ஆவார்கள். இந்திய நாட்டில் இவ்வித அருமைப்பாடு இத்தகைய தொழிலாளர்களிடம் காண்பது அரிது. அதிலும் ஒரு சைவப்பிரசாரகனுக்கும், தமிழ் அறிஞனுக்கும், சிறப்பாக இரண்டும் கலந்தவனுக்கும் செய்யவே மாட்டார்கள். அந்த முறையில் இலங்கை மிகச் சிறப்புற்றது என்று வாய் விட்டுக்கூறலாம்.

குறைவு ஒன்றைக் குறிக்காமல் விட்டுவிட என் நெஞ்சு இடந்தரவில்லை. யாழ்ப்பாணத்தில் நடக்கும் சைவசபைகளுக்கு யாழ்ப்பாணத்துச் சைவமக்களே மிகுதியாகச் சென்று பயன் அடைகிறார்கள். வெளி நாட்டிலிருந்து அழைக்கப்பட்டு, அங்குச் சென்று சொற் பொழிவுகளை இயற்றும் எங்களைப்போன்ற பேச்சாளர்கள் ஈடுபடும் கூட்டங்களுக்கும் அன்னார்களே சென்று பயன் பெறுகிறார்கள். அன்னவர்களும் நெடுந்தொலைவிலுள்ள சிற்றார்களிலிருந்தும் வருகிறார்கள். சிலர் இருநூறு இரு நூற்றைம்பது கற்களுக்கு அப்பாலிருந்தும் வந்து கேட்கிறார்கள். ஆனால், அருகிலேயே இருந்து வாணிபம் செய்து பொருள் தேடும் இந்திய மக்களோ, அக் கூட்டங்களுக்கு வருவதே இல்லை. இந்தியாவிலிருந்து பொருள் தேட இவர்கள் இலங்கை சென்றிருக்கிறார்கள். இலங்கை மக்களிடம்இருந்து பெரும்பொருள் தேடுகிறார்கள்.

இவர்களுக்கோ சமயத்தில் ஈடுபாடு இல்லை. தாம் பொருள் வாங்கி உண்ணும் இலங்கை மக்களிடம் சிறிதேனும் நன்றி செலுத்தவேண்டாமா? சமயத்தில் நம்பிக்கை இல்லாவிட்டாலும், நாட்டு மக்களிடம் நட்புரிமை காட்டி, அவர்களுடன் அளவளாவி இருந்து, அவர்கள் கூட்டும் அவைகளுக்குச் சென்று, அவர்களை மகிழ்விப்பது இந்திய வணிகர்களின் கடமைஅன்றே? இந்தியா விற்கும் இலங்கைக்கும் நட்புரிமைவேண்டும் என்று அரசியல் மேடைகளில் பேசுகிறார்கள். அவர்களுடைய சமயக் கூட்டங்களில் கலந்துகொண்டு அவர்களைத் தங்கள் கூட்டுறவினால் மகிழ்விப்பதே சிறந்த செயலாகும். இக் குறையை இந்திய வணிகர்கள் நீக்குவார்களாக!

முத்தில் ஒரு துளை இட்டால், அதனை அழகுபடுத்த ஒரு திருகாணியோ அல்லது பொன்வட்டவற்சமோ இட்டுச் சங்கிலியோடு இணைப்பது உண்டு. இலங்கை என்ற முத்தின் மேல்துளையாகிய யாழ்ப்பாண நகரைச் சுற்றி யாழ்ப்பாண வட்டமாகிய ஒரு பொன்வட்டவற்சம் அல்லது பொன்திருகாணி இருக்கிறது. இதுவும் தமிழ் மயமானது. அந்த வட்ட வற்சத்தை இனி விவரிப்போம்.

---

3. முத்தைச் சுற்றிலும் ஒரு வற்சம்

யாழ்ப்பாண வட்டம்

யாழ்ப்பாண தீவகற்பம் யாழ்ப்பாண நகர வட்டத்தைத்தவிர ஆறு உட்பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவைகள் வடமராட்சி, தென்மராட்சி, தென்வலிகாமம், வடவலிகாமம், மேல்வலிகாமம், தீவுகள் என்பன. இவைகளில் மராட்சி, வலிகாமம் என்ற பகுதிகள் தீவகற்பத்தில் அடங்கியவை. தீவுகள் அந்தத் தீவகற்பத்தின் மேற்கே கடலில் உள்ள பல நிலப்பகுதிகள். இவைகள் முழுதும் தமிழ் மக்கள் குடியேறிஇருக்கும் நிலப்பகுதிகளே. இவர்களுக்குத் தமிழ்மொழி அன்பும் சைவப்பற்றும் மிகுதியும்

உண்டு. இவர்களே எங்களே அடிக்கடி அழைத்துக் கொண்டு உபசரித்தார்கள்; பேசவும் செய்தார்கள். ஆகவே, அச் சுற்றுப்பிரயாணங்களில் இப்பகுதிகளைப் பற்றிப் பல செய்திகள் அறிய எனக்கு வாய்ப்புக்கள் கிடைத்தன. அவைகளைக்கொண்டு இப்பகுதி எழுதப் படுகிறது.

மருட்சி என்பது யாழ்ப்பாணத் தீவகற்பத்தின் கீழரைப்பகுதி என்னலாம். இது வடமருட்சி, தென் மருட்சி என்று இருவகைப்படும். மருட்சி என்பதை மறவர் + ஆட்சி எனப் பிரித்து, முன் காலத்தில் இந்தியாவி லிருந்து இலங்கையில் குடியேறின மறவர் குடிகள் ஆண்ட பகுதி எனப் பொருள் படுத்துகின்றனர். இதுதான் சரித ஆராய்ச்சியில் வல்லவர் கூறும் காரணம். இனி வேறு சிலர் வடமர் + ஆட்சி, தென்மர் + ஆட்சி எனப் பிரித்து, வடக்கே குடிகொண்டவர் ஆளுகைக்கு உட்பட்ட பகுதி என்றும், தெற்கே குடிகொண்டவர் ஆட்சிக்கு உட்பட்ட பகுதி என்றும் கூறுகின்றனர். மேலும், இந்தியாவில் வட பாகத்திலிருந்து குடியேறி வந்தவர் பகுதி என்றும், தென் பாகத்திலிருந்து குடியேறிவந்தவர் பகுதி என்றும் கூறு வாரும் உண்டு. தமிழ்ப் பிராமணரில் 'வடமர்' என்ற ஒரு பகுதியார் இருப்பதை அறிவோம். இதைப்போலப் பல காரணங்களும் கூறுவர். மருட்சிகள் இரண்டும் தென் இந்தியாவில் மறவர் குடியுள்ள இராமநாதபுரம், திருநெல் வேலி வட்டங்களில் காணும் நிலப்பான்மைகள் கொண் டிருப்பதை அறிக. நிலம் எங்கும் மணற்பாங்கான இடம்; மரங்கள் பெரும்பாலும் பனையும் பூவரசும்; வீடுகள் பனை ஓலைக் குடிசைகள். இவைகளைக் காணும்போது மறவர் குடிகளே இந்நிலப்பகுதியை விரும்பிக் குடியேறி இருக்கக் கூடும் என்று தெளிவாகவும் திண்ணமாகவும் உரைக்க லாம்.

இனி, வடமருட்சியில் காணும் சிறந்த ஊர்கள் பருத்தித்துறை (Point Pedro) நெல்லியடி, வல்வட்டுத் துறை, வியாபாரமூலை, மேலைப்புலோலி, அலவை, கருணை

வாசல் முதலியன. இவைகளில் பருத்தித்துறை என்பது யாழ்ப்பாணத் தீவகற்பத்தின் வடகிழக்கு மூலையில் உள்ளது. இதனைப் பறங்கிக்காரர்கள் பீட்ரோமூனை எனப் பெயர் இட்டிருக்கின்றனர். இங்கே வடக்கிலும் கிழக்கிலும் கடல் உண்டு. இந்த இடத்திலிருந்து படகு வாணிபம் நடக்கும். வேதாரணியத்துக் கோடிக்கரைக்கு இங்கிருந்து காற்றுக்கப்பல் மூலமாகச் சரக்குகள் ஏற்று மதி இறக்குமதி ஆவதுண்டு. தஞ்சைச் சில்லாவில் உள்ள கோடிக்கரைக்கும் இந்தத் துறைமுகத்திற்கும் 30 கல் தொலைதான் உண்டு. சிறப்பாக நெல் இறக்குமதி ஆகும். மேலும், இங்கிருந்து வங்கக்கடல் தாண்டிப் பர்மாவில் உள்ள அரக்கன் துறைமுகங்களுக்குக் காற்றுக்கப்பல் செல்லுவதுண்டு. ஆகவே, இவ்வூரில் வாணிபம் மிகுதி. கடைத்தெருவும் பெரிதாக உண்டு. இங்கிருந்து வடகடல் ஓரமாக மேற்கே காங்கேசன் துறை முதலிய இடங்களுக்கு ஒரு பெரும் பாதை போகிறது. கடற்கரையோரம் சென்னைக் கரைபோல மணல் அதிகமாக இல்லை. சுக்கான் கற்கள் நிரம்ப இருக்கின்றன. ஆகவே, கடற்கரை உலாவுவ தற்கு வசதியாக இல்லை.

மேலும், இவ்வூரில் ஒரு பகுதிக்கு வியாபாரமூலை என்பது பெயர். அப்பெயரைக்கொண்டே இந்த ஊரின் பெருமையை அறியலாம். இங்கே அரசியல் முதலிய பகுதிகளில் பணி செய்து ஓய்வு பெற்றிருக்கும் பல பெரி யார்கள் வசிக்கிறார்கள். ஊரில் கடைத்தெருவில் வீடு களும் கடைகளும் நெருக்கமாகக் கட்டப்பட்டிருந்தபோதி லும் பொதுமக்கள் வசிக்கும் வீடுகள் வேலிகளைக்கொண்ட வளவுகளுக்குள் தனித்தனியே கட்டப்பட்டுள்ளதைக் காணலாம். பருத்தித்துறை உடல்நலம் பயப்பதெனக் கூறுவார்கள். சுற்றிலும் உள்ள நிலம் வறட்சியாக இருப்பதனால் இங்கே நோய்கள் ஏற்படக் காரணம் இல்லை.

இவ்வூர்ப் பெருமக்கள் தங்கள் பெண்மக்களுக்குக் கல்வி கற்பிக்கும் நோக்கங்கொண்டு ஒரு பெரிய பாட சாலையை இரண்டு ஆண்டுகளுக்குமுன் தொடங்கினர்கள்.

பெருந்தொகைகளைக் கொடையாகக் கொடுத்து ஒரு நிதி சேர்த்துப் பரந்த இடத்தில் பெரிய கட்டடங்களைக் கட்டியிருக்கிறார்கள். இரண்டு ஆண்டுகளுக்குள்ளாக அப் பாடசாலையில் 400 பெண் குழந்தைகள் சேர்ந்து வாசிக் கிறார்கள். அதனுடைய முன்னேற்றத்தைக் கண்டால் விரை வில் ஒரு பெரிய கல்லூரி ஆகக்கூடும் என்று எதிர்பார்க்கப் படுகிறது. இந்த முயற்சியில் ஈடுபட்டிருக்கும் பெருமக்கள் சைவத்தில் ஆர்வம் உள்ளவர்கள். அது காரணமாகச் சமய பாடங்களும் தேவாராதிகளும் கற்றுக்கொடுக்கப் படுகின்றன. இதன் செயலாளர் ஓர் ஓய்வு பெற்ற கல்விப் பகுதியினர். சமயத்தொண்டு செய்யும்பொருட்டாக இப் பெரியார் 'கடவுள்வணக்கச் செய்யுள் திரட்டு' ஒன்றைத் தொகுத்திருக்கிறார். ஒவ்வொரு நாளும் மாணவர்கள் பாடக்கூடிய பண்டைச் செய்யுட்களைத் தெரிந்தெடுத்து, நாள் வரிசையாகவும் கருத்து வரிசையாகவும் தொகுத் திருக்கிறார். இந்நூல் விரைவில் வெளிவருமாயின் மாண வர்களுக்கு மிகுதியும் பயன்படும்.

இப்பாடசாலையில் சைவப் பெருமக்கள் திருநாட்களைக் கொண்டாடும் முறையைக் கொண்டிருக்கிறார்கள். நான் சென்ற நாள் மங்கையர்க்கரசியார் திருநாள் கொண்டாடப் பட்டது. அன்று மாலை பாடசாலையில் ஒரு பெருங்கூட்டம் கூட்டிவைத்தார்கள். பாடசாலைத் தலைவர் தலைமை ஏற்றார். என்னை மங்கையர் பெருமையைப்பற்றிப் பேசச் சொன்னார்கள். நான் பல துறைகளிலும் தமிழ்ப் பெண் மணிகளின் பெருமையைப்பற்றிப் பேசினேன். தொடக் கத்தில் ஒரு பெண்மணி தேவாரம் ஓதினர். இறுதியில் ஒரு பெண்மணி நன்றி கூறினர். அவர்களுடைய குரல், விவிலியப் பெண்மணிகள், ஆங்கிலரைக் கண்டு அவர்கள் குரலை, ஒத்துப் பழகியதைப்போல இருந்தது. இது மேற்குத் திசைக்கு அடிமைப்படுதலையே ஒக்கும். தேவாரத்தையும் அந்தக் குரலில் பாடியது காதுக்கு வெறுப்பாக இருந்தது. இந்தக் கெட்ட பழக்கம் நம் நாட்டைவிட்டுப் போகும்வரை நமக்கு ஈடேற்றம் இல்லை. தென்இந்தியாவிலிருந்து ஒரு நல்ல ஓதுவாரை அழைப்பித்து, அழகாகப் பண்முறை

யில் தேவாரம் பாடக் கற்றுக்கொள்வதே இந்தப் பெண் மணிகளுக்கு அழகு. இப்பாடசாலை மேன்மேலும் வளர்ச்சிபெற்று ஓங்கி இந்நாட்டுப் பெண்மணிகளுக்கு உதவுவதாகுக.

இப் பருத்தித்துறையிலிருந்து நான்கு பெரும் பாதை கள் புகைவண்டி நிலையங்களுக்கு உண்டு. ஒன்று தென் மேற்கே யாழ்ப்பாணத்திற்குச் செல்வது. அதன் வழி யாகத்தான் நான் சென்றுவந்தது. மற்றொன்று தென் மேற்காகச் சாவகச்சேரிக்குச் செல்வது. மற்றொன்று நேர் மேற்கே காங்கேசன்துறைக்குக் கரையோரமாகச் செல்வது. இறுதியாக நேர் தெற்கே செல்வது கோடிகாம நிலைபோய்ச் சேருவது. வடமராட்சிப் பாடசாலைக்குச் சென்று திரும்பிவருகையில், அலவை என்ற ஊர் வழி யாகத் திரும்பினேன். இச்சிறிய ஊர் சைவமாநாட்டுக்கு எங்களை அழைத்துப் பெருமைப்படுத்திய இளைய செய லாளர் அவர்களுடைய பிறந்தகம். அவர் இப்போது யாழ்ப் பாணத்தில் ஆசிரியத்தொழில் செய்துவருகிறார்; சைவத் தில் மிகுந்த ஊக்கம் கொண்டவர்; செயல்முறையில் மிகுந்த உற்சாகம் பூண்டவர்; தம் ஊரின் வழியே அழைத் துச்செல்லவேண்டும் என்ற அவாவுடன் எங்களை அழைத் துச்சென்றார். அவ்வூரை வழியிலிருந்தே பார்த்துவிட்டுத் திரும்பினேம்.

பருத்தித்துறையிலிருந்து யாழ்ப்பாணம் செல்லும் பாதையில் 'உடுபட்டி' என்ற ஓர் ஊர் இருக்கிறது. இவ் வூரில் ஒரு தமிழ்ப்பாடசாலை இருக்கிறது. அதன் ஆசிரி யர்கள் ஒரு கூட்டம் ஏற்படுத்தி, அதில் என்னைப் பேசும்படி அழைத்திருந்தார்கள். அக்கூட்டத்தில் நான் பெரிய புராணம் என்ற பொருளைப்பற்றிப் பேசினேன். அப் போது வருணி யாதீனத்துச் சைவக் குருக்களில் ஒருவர் தலைமை தாங்கினர். திருமுறைகளின் பெருமையைக்கூறி, அவைகள் ஒவ்வொரு சைவர் இல்லத்திலும் இருக்க வேண்டும் என்றும் வற்புறுத்திக் கூறினேன். கூட்டம் முடியும்போது எனக்கு நன்றிகூற வந்த இளஞ் செயலாளர்

தன்னுடைய நாட்டிலே ஒவ்வொரு இல்லத்திலும் சைவத் திருமுறைகள் இருக்கின்றன வென்றும், அதைப்பற்றி வற்புறுத்தியிருக்க வேண்டியதில்லை என்று தான் கருதின தாகவும் பேசினார். அதைக்கேட்டு எனக்கு வியப்பு ஏற்பட்டது. இலங்கையிலே சிறந்த பகுதியாகிய யாழ்ப் பாணத்திலும் இவ்விதமான நற்செய்தி கேட்டதே இல்லை. திருமுறைகள் போதாது; இன்னமும் நூறாயிரமாக அச்சடித்து வெளியிடவேண்டும் என்று அவர்கள் சொன்னது என் நினைவிற்கு வந்தது. அப்படியிருக்கக் கல்வியில் அதிகப்பயிற்சி இன்னமும் பெற்றிராத இந்தச் சிற்றூரிலே ஒவ்வோர் இல்லத்திலும் சைவத்திருமுறை இருக்கிறது என்றவுடன், என் வியப்புக் களவு கூறவும் வேண்டுமா? தென்இந்தியாவில் 'இப்படிப்பட்ட 'திரு ஊர்கள் இருந்தால் நலம் என்று எண்ணி என் துணை யாளர் இடமும் கூறினேன். சிறு தோத்திரத் திரட்டுகளை வைத்துக்கொண்டு இவ்விதமாக உயர்வுநவிற்சியிலே கூறி யிருப்பார் என்று ஒருவாறு என்னையே தேற்றிக்கொண் டேன். இவ்விதமாய்ப் பெருமிதமான எண்ணங்களைத் தவிர்த்துவிட்டுக் கூடியமட்டிலும் ஒவ்வொரு வீட்டிலும் திருமுறைகளைப் புகுவிக்கத் தக்க சமயப்பிரசாரம் இந்த ஊர்ச் செயலாளர்கள் செய்வார்கள் என்று நம்பி இருந்தேன்.

இந்த ஊர்க் கூட்டத்தில் வரணி ஆதீனத்துச் சைவக் குருக்களைக் கண்டதும், வேதாரணியத் திருக்கோயிலில் ஆட்சிபுரிந்துவந்த சுப்பிரமணிய பண்டார சந்நிதியின் நினைவு எனக்கு வந்தது. வரணி என்பது இந்தப் பக்கத் தில் உள்ள ஒரு சிற்றூர். அவ்வூரில் முன் காலத்தில் சிறந்த சைவ அன்பு மிகுந்த சைவக்குடிகள் சில இருந்தன. இக் குடிமக்கள் சைவத்திலும் தமிழிலும் மிகுந்த பயிற்சி பெற்று, ஏனைய தமிழ்ச் சைவர்களுக்கு ஆசாரிய முறையில் குருக்கள் தொழில் செய்துவந்தார்கள். அவர்களில் சிலர் தென்இந்தியாவில் சென்று வேதாரணியம் திருத்துறைப் பூண்டி தாலுகாக்களில் உள்ள கோயில்களில் ஈடுபட்டு வந்தனர். கோடிக்கரைக்கும் வடமறுட்சிக்கும் மிக

அண்மையாம் என்று முன்னமே கூறியிருக்கிறேன். ஆகவே, போக்குவரவு மிக எளிது. மிக சைவ சீலர்களாகவும் தமிழறிஞர்களாகவும் இருந்தபடியால் மிக எளிதில் ஆலயங்களின் மேல்பார்வை இவர்களுக்குக் கிடைத்தது. அவ்விதமாக அந்த இரண்டு தாலுகாக்களிலும் பல கோயில்களின் மேற்பார்வைகளையும் இவர்களை நம்பி மக்கள் தந்திருந்தார்கள். அவர்களும் மிக நன்முகத்தான் தங்கள் கடமைகளைச் செய்துவந்தார்கள். இவ்விதமாக வரணிக் குருக்கள்மார் இரண்டு மூன்று நூற்றாண்டுகளாகவே வேதாரணியம் முதலிய கோயில்களை ஆண்டுவந்தார்கள். இக்குருக்கள்மார் குடும்பங்கள் இவ்வூரில் இருபது இருபத்தைந்து இருக்கலாம். இவர்கள் கூட்டம் கூடி ஒருவரைத் தெரிந்தெடுப்பார்கள். அந்தப் பெரியார் தஞ்சைச் சில்லா சென்று, அங்கே கோயில்களில் ஆட்சிபுரிவார். அவர் இறந்துவிட்டாலோ, அல்லது விட்டுவிட்டுத் திரும்பிவந்தாலோ வேறொருவரைத் தெரிந்தெடுத்து அனுப்புவார்கள். இவ்விதம் தெரிந்தெடுக்கும் உரிமை வரணிக் குடும்பங்களுக்குப் பரம்பரை உரிமையாகிவிட்டது. அங்குச் சென்று ஆட்சிபுரிபவர் பண்டார சன்னிதி என்று பட்டங்கொள்ளத் தொடங்கினர். ஏனைய பண்டாரச் சன்னிதிகளைப் போல இவர் துறவி அல்லர்; இல்லறத்தில் இருப்பவர்; இவருக்குக் கோயில்களில் மரியாதை, சொத்து உரிமை, மடங்கள் முதலியவைகள் உண்டு.

தொடக்கத்தில் மிக நன்முக ஆட்சிபுரிந்துவந்த பண்டார சன்னிதிகள் நாளாவட்டத்தில் சரியாகக் கடமை செய்யவில்லை. பல ஆலயங்களில் சீர்கேடுகள் ஏற்பட்டன. நாட்டில் அவர்கள் ஆட்சியைக் குறித்துக் குறைகள் கூறத் தொடங்கினர். வழக்குகளும் ஏற்பட்டன. நீதிபதிகள் அவர்களை ஆட்சியிலிருந்து நீக்கிவிடத் தொடங்கினர். ஆதியில் இருந்த இருபது இருபத்தைந்து ஆலயங்களில் ஒவ்வொன்முகக் குறைந்துபோய், இப்போது வேதாரணியமும், அதனைச் சேர்ந்த நான்கு சிறு கோயில்களுமே நிலைத்திருக்கின்றன. இவைகளில் வேதாரணியத்தைக் குறித்துச்

சென்ற பல ஆண்டுகளாக வழக்குகள் நடந்துகொண்டிருக்கின்றன. நீதிமன்றத்தில் பண்டாரசன்னிதிகள் ஆட்சி அத்துணை ஒழுங்காக இல்லை என்று கூறி, அவருக்கு ஒத்தாசை புரிய மூன்று அறக்காப்பாளர்களை நியமித்துள்ளார்கள். பண்டாரசன்னிதிக்கு ஒரு குறிப்பிட்ட தொகையே ஊதியமாகவும் முடிவுசெய்து வைத்துள்ளார்கள். ஆகவே, வரணி ஆதீனத்திற்கு இருந்த பெருமை இப்போது மிகச் சுருங்கிவிட்டது எனலாம்.

வரணியிலும், ஆதீனச் சைவக் குருக்கள் நாளாவட்டத்தில் மெலியத்தொடங்கினர்கள். பிறகு அங்கிருக்க விருப்பமில்லாமல் சொத்துக்களை விற்றுவிட்டு வடமராட்சியில் உள்ள கரணவாசல் என்ற ஊருக்குக் குடிஏறினர்கள். அதுமுதல் பெயருக்கு மட்டும் வரணி ஆதீனம் என்று உள்ளதே தவிர, உண்மையில் எல்லாக் குருக்கள் மாரும் கரணவாசலில்தான் குடியிருக்கிறார்கள். அந்த ஊரிலிருந்துதான் இந்தக் கூட்டத் தலைவரும் வந்திருந்தார். நான் இங்கே கூட்டத்தில் இருந்தபோது இந்த எண்ணங்கள் எல்லாம் எனக்குத் தோன்றின. அப்போது இந்தக் குருக்கள்மார் கூட்டத்திற்கு ஆதீனத்தார் என்ற பெயர் எப்படி வந்ததோ என்று எண்ணி, அது வெறும் உபசார வார்த்தையோ, அல்லது மற்றத் தென்இந்திய ஆதீனங்களைக்கண்டு வைத்துக்கொள்ளப்பட்டதோ ஆகும் என்று வியந்தேன்.

மேலைப்புலோலி

மேலைப்புலோலி என்ற ஊர், தமிழ் இலக்கியத்தில் பெயர்பெற்ற பேர் ஆகிவிட்டது. புலமை வாய்ந்த பெரியார்கள் இந்த ஊரில் பிறந்தவர்கள் என்று நாம் அறிவோம். அகராதி தொடாத அறிஞன் எந்த மொழியில் உள்ளான்? தமிழ்மொழிக்கு அகராதி வகுத்தது இந்த ஊர் அன்றோ? அகராதி வெளியிட்ட கதிரைவேற் பிள்ளையை யாரே கேட்டறியாதார். அவர் பெயரைக் கூறிய அளவில், மேலைப் புலோலி என்ற சொல் நம் கண்முன் நிற்கிறதன்றோ? இவ் வூர் வடமராட்சியிலேதான் உள்ளது.

நெல்லியடி என்ற பெயரினாலேயே அங்கு ஒரு நெல்லி மரம் இருந்திருக்கவேண்டும்; அதன் அடியிலே ஒரு குடி ஏற்பட்டிருக்கவேண்டும்; அது பின்னால் பெருகி ஊராகி இருக்கவேண்டும் என ஆராயக்கூடும். இஃது இந்த வட்டத்தில் ஒரு சிற்றூர். மற்றொரு முக்கியமான ஊர் வல்வட்டித் துறை என்பது. இதில் பெருத்த வாணிபம் நடக்கிறது. இதன் மக்கள் செல்வத்தில் சிறந்து இருக்கிறார்கள். அண்மையில், சமயத்தில் ஈடுபட்டு, இந்தியாவிலிருந்து சொற் பொழிவாளர்களை அழைத்துப் பெருங்கூட்டங்களை நடத்தியிருக்கிறார்கள். தங்கள் கோயில்களில் மிகவுஞ் சிறப்பாகத் திருவிழாக்களை நடத்திவருகிறார்கள்.

வடமராட்சி

வடமராட்சியிலே தொண்டைமானாறு என்ற பெரிய கழி ஒன்று இருக்கிறது. இதனைக் கலிங்கத்துப் போர் வென்ற கருணாகரத் தொண்டைமான் வெட்டினதாக ஆராய்ச்சியாளர்கள் கூறுவர். இந்தப் பகுதியிலே செல்லக் கந்தர் கோயில் என்ற புகழ்பெற்ற கோயில் இருக்கிறது. நாள்தோறும் நூற்றுக்கணக்காகக் குறையாளர்கள் இங்கே தவம் கிடந்து குறைகளை நிறைவேற்றிக்கொள்ளுகிறார்களாம். ஒருநாள் இரவில் 12 மணிக்குமேல் இக்கோயிலைக் கண்டோம். பலபேர் இதன் தாழ்வாரங்களில் படுத்துக் கொண்டிருந்தார்கள்.

தென்மராட்சி

தென்மராட்சி, செழிப்புக் குறைந்த இடம்; வடமராட்சிக்குத் தெற்கில் கிழக்குக்கரை யோரமாக தென்கழி வரைக்கும் எட்டி உள்ள பகுதி. இதில் இருப்புப் பாதை கீழ்மேலாக ஓடுகிறது. அப்பாதையில்தான் முக்கிய ஊர்கள் உள்ளன. சாவகச்சேரி, பழை, கொடிகாமம், யாழ்ப்பாணம் என்பன. மற்ற உள்நாட்டு ஊர்கள் மட்டுவில், வரணி என்பன. இவைகளில் சாவகச்சேரி என்பது சாவகத்தீவில் இருந்துவந்த மக்கள் குடியேறின சேரி என்பது அதன் பெயராலேயே விளங்குகிறது. சாவகம் என்பது கிழக்கிந்தியத் தீவுகளில் ஒன்றான சாவா என்பது.

இதிலிருந்து இந்த ஊரில் குடிகள் வந்து அமர்ந்தார்களாம். பண்டைக்காலத்தில் சிறப்பாகச் சோழ சாம்ராச்சிய காலத்தில், சாவகம் தமிழர்களால் வெல்லப்பட்டு, அவர்கள் ஆட்சியில் இருந்ததெனச் சரித்திரம் கூறும். அக்காலத்தில் சாவகக் குடிகள் இவ்வூரில் தங்கியிருக்கலாம். இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன் இலங்கை உலாந்தர் வசத்தில் இருந்தது. அவர்கள் யாழ்ப்பாணத்தில் கோட்டையைப் புதுக்கினார்கள். அவர்களே சாவகத்தையும் பிடித்து, அதனை நாளதுவரையில் ஆண்டுவருகிறார்கள். அக்காலத்தில், அஃதாவது, இவ்விரண்டு நாடுகளும் ஒரே ஆட்சியில் இருந்தபோது, சாவகத்தவர் இந்த ஊரில் குடியேறி இருக்கலாம் அன்றோ? ஆனல் இப்போது சாவகக் குடிகள் அங்கே காணப்படவில்லை. அவர்கள் திரும்பிச் சென்றிருக்கவேண்டும்; அல்லது நாட்டுமக்களோடு வந்து ஒன்றுபட்டு இருக்கவேண்டும். கொடிகாமம் என்ற பெயரில் காமம் என்ற விகுதி கிராமம் என்ற பொருளில் வந்துள்ளது. அது சிங்களத்தில் உள்ள மரூஉச்சொல். மட்டுவில் என்பதில் உள்ள **வில்**லும் சிங்களச் சொல்லே. வில் என்றால் குளம் என்று முன்னமே கூறியிருக்கிறோம். இனி, யானைஇறவு என்பது யானை தாண்டமுடியாமல் இருக்கும் சிறு நிலப்பகுதி. வருணி என்ற கிராமத்தைப் பற்றி முன்னமே கூறியிருக்கிறோம். இது முதலிலே வருணி ஆதீனச் சைவக் குருக்கள் இருந்த இடமாகும்.

வலிகாமம்

இனி மரூட்சிகளுக்கு மேற்கே உள்ளது வலிகாமம் என்ற பெரும் பகுதி. இது மூன்று உட்பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. தென்வலிகாமத்தில் அச்சுவேலி, புத்தூர், கோப்பை, உரும்பராய் என்பன சிறந்த ஊர்கள். அச்சுவேலி என்பது சைவப் புலமையில் சிறந்து விளங்குகிற ஆதிசைவக் குருக்களான குமாரசாமிக் குருக்கள் வாழும் ஊர். வடவலிகாமத்தில் காங்கேசன்துறை, மாவிட்டபுரம், தெல்லிப்பழை, ஏழாலை, சுன்னாகம், கந்தரோடை, அளவெட்டி முதலிய ஊர்கள் உள்ளன. இப்பகுதி செழிப்பானது; யாழ்ப்பாணத்திலிருந்து வடக்கே

செல்லும் பெரும்பாதையில் உள்ளது காங்கேசன் துறை; வடகோடியில் கடற்கரையில் உள்ளது. காங்கேயனை முருகப்பெருமான் சூரபதுமாதிகளை வென்றுவிட்டு வடக்கே திரும்புகையில், முதலில் இறங்கிய துறை இது வென்பர். இங்கேதான் இருப்புப்பாதை முடிகிறது. இதற் கருகில் கந்தவனக் கடவுள் என்ற ஒரு கோயில் இருக்கிறது. முருகக்கடவுள் காங்கேசன் துறையைவிட்டு இந்த இடத் தில் அமர்ந்ததனால் அந்த இடம் கந்தவனம் ஆயிற்று. அங்கே அமர்ந்த கோயில் ஒரு சிறந்த முருகன்கோயிலாகி விளங்குகிறது. இந்த இடத்தை வனம் என்றால் இப் போதும் தகும். உயர்ந்த பெரிய குளிர்நிழலைத் தரும் படியான பல மரங்கள் இந்தக் கோயிலைச்சுற்றி இருக் கின்றன. இந்தக் கோயில் இலங்கையில் உள்ள ஆறு முருகன் கோயில்களில் ஒன்று. இவைப்பாறுகிற ஆசிரியர் கள் இதனருகில் ஓய்வு எடுத்துக்கொள்ளுவது வழக்கம். இதற்கு மேற்கே கீரிமலை என்ற ஓர் அருமையான இடம் இருக்கிறது. இங்கே கடலோரத்தில் ஓர் அருமையான திருக்குளம் கட்டப்பட்டுள்ளது. அதனை யாழ்ப்பாணத் துச் செல்வர் ஒருவர் கட்டினாராம். இந்தச் சுற்று வட்டாரங்களில் உள்ள இந்துக்கள் எல்லாரும் இந்த இடத்தில் அபரக்கிரியைகள் செய்வது உண்டு. கடற் கரையில் கட்டப்பட்டிருக்கும் இத் திருக்குளம், 40 அடி அகலமும் 100 அடி நீளமும் இருக்கும்; ஆழம் 4 முதல் 6 அடி இருக்கும். இதற்கும் கடலுக்கும் போக்கு வழி இருக்கிறது. அவ்வழியில் ஒரு மதகும் அடைப்புப் பலகையுடன் கட்டப்பட்டுள்ளது. அடியில் வெண் கற்பாறை; தென்கிழக்கு மூலையில் ஒரு சிறு நல்ல நீர் ஊற்று இருக்கிறது. இதிலிருந்து நல்ல தண்ணீர் எப்போ தும் குளத்திற்கு வரும். அங்கே பாறைக்குள் குகை போன்ற ஒரு வழி இருக்கிறது. அதற்குள் புகுந்து ஒன்றிரண்டு நிமிடம் இருக்கமுடியும். மதகு வடமேற்கு மூலையில் இருக்கிறது. இதன்வழி நீர் கடலுக்குச் செல்லும். நீர்மட்டம் உயரும் காலத்தில் (High tide) கடல் நீர் குளத்திற்கு ஏகும். தாழும் காலத்தில் (Low tide)

ஊற்று நீர் கடலுக்கு ஓடும். ஆகவே, இந்தக் குளத்து நீர் உடல்நலத் தன்மை பொருந்தியது. கேரளநாட்டு ஆல்வாய் போன்ற அருமை இதற்கு உண்டு. நிறைநிலாக் காலங்களில் இந்தக் கிரிமலைக்குப் பல மக்கள் குளிக்கச் செல்லுவார்கள். ஆண்களுக்கு இந்த வட்டவடிவான குளம் பயன்படுகிறது. பெண்களுக்கு இதனருகில் மற்றொரு சிறு குளம் பயன்படுகிறது. அக்குளத்திற்குச் சுற்றுமதில் மறைவிற்காகக் கட்டப்பட்டுள்ளது. குளங்களில் குளிக்கலாமே ஒழிய துணி துவைக்கக்கூடாது. அதற்காகக் கடலுக்கு ஏகும் வாய்க்காலில் படித்துறைகள் உண்டு. இரு குளங்களுக்கும் அழகிய படித்துறைகள் ஒழுங்காகக் கட்டப்பட்டுள்ளன. இருடியின் சாபத்தினால் கிரியான ஒருவன் இங்குக் குளித்துச் சாபம் நீங்கப் பெற்றதனால் இப்பெயர் இந்த இடத்திற்கு வந்ததென வரலாறு கூறும்.

மாவிட்டபுரம்

கிரிமலையிலிருந்து தெற்கே சிறிது தொலைவு வந்தால் மாவிட்டபுரத்துப் பெருங்கோயில் தெரியும். மேற்குக் கோபுரம் பெரிதாகத் தமிழ்நாட்டுக் கோபுரம்போல் கட்டப் பெற்றிருக்கிறது. ஆனால், முன்வாயில் கீழ்ப்புறந்தான் இருக்கிறது. உள்ளே மண்டபங்கள் பெரியவை. ஆனால் ஓடு வேய்ந்தவையே. மூலத்தானம் நிலமட்டத்திற்கு மேல் 5, 6 அடி உயரம் உள்ள தளத்தின்மேல் இருக்கிறது. முன்கட்டடங்கள் பழுதாக இருக்கின்றன. இக்கோயில், குருக்களின் பார்வையில் இருக்கிறது. கோயிற் பணியாளன் ஒருவன் ஒரு மத்தளத்தைப் புதிதாகக் கட்டிக்கொண்டிருந்தான். இந்தக் கோயில் இலங்கையில் ஆறு முருகன் கோயில்களில் ஒன்று. இது மிகப் பேர்போனது. செங்கற் காரையினால் கட்டிய தூண்கள் மிகப் பெரியவையாகவும் உயர்ந்தவையாகவும் இருக்கின்றன; திருவஞ்சைக்களத்தில் முன்மண்டபத் தூண்களைப்போலத் தெரிந்தன. இந்தத் தலத்தின் பண்டைய வரலாறு மிகப் புகழ்பெற்றது. சாபம் பெற்ற ஓர் அரசகுமாரன் குதிரை முகத்தனாகி இந்தப்

பெருமானைத் துதித்து வழிபட்டதனால், குதிரை முகம் நீங்கி மனிதமுகம் பெற்றனும். இதனால் இந்த இடம் 'மாவிட்டபுரம்' என்று பெயர்பெற்ற தென்பர். மா-குதிரை, விட்டது-அதன் உயிர் விட்டது என்று பொருள் கூறுவர்.

இதை விட்டுத் தெற்கே சென்றால், தெல்லிப்பழை என்ற ஒரு சிறந்த ஊர் இருக்கிறது. இங்கே சிறந்த சைவக் குடிமக்கள் பலர் இருக்கின்றனர். அவர்கள் விருந்தினராகச் சென்றோம். அவ்வூரில் ஒரு பெரிய பாடசாலை இருக்கிறது. அதில் அவர்கள் அழைப்பிற் கிணங்கி, நானும் என் நண்பரும் பேசினோம். என் பேச்சு சமயநிலையங்களைப் பற்றியது. அன்பர்கள் மிக உவப்போடு கேட்டார்கள். அதற்குச் சிறிது தொலைவில் நன்செய் நிலங்களுக்கு இடையில் அளவெட்டி என்ற சிறந்த ஊர் இருக்கிறது. அவ்வூர் மக்கள் ஒரு வாசகசாலை நடத்துகிறார்கள். அங்கேயும் பேசினோம். அச்சங்கத் தலைவர் எங்களை வரவேற்றுப் பேசினர். எங்கள் பேச்சுக்கள் சேக்கிழாரைப்பற்றியும் தமிழ்க்கலையைப்பற்றியும் இருந்தன.

அவ்வூரிலிருந்து அருகே ஓர் இடத்தில் ஒருநாள் இரவில் சங்கத் திருவிழாவில் பேசினேன். ஆண் பெண் உட்பட நூற்றுக்கணக்கானபேர் வந்திருந்தார்கள். இரு பிள்ளைகள் "வீர சுதந்தரம்" என்ற பாரதி பாடல் பாடினர்கள். பெரிய மரங்களின் இடையில், இருண்ட வெளியில், மின்னும் விண்மீன்கள் பொலிந்த வானவிதானத்தில், ஒங்கின குரலில் ஒரு சிறுமியும் ஒரு சிறுவனும் வீர சுதந்தரப் பாடல் பாடினபோது எத்துணை உருக்கமாக இருந்தது என்று கூறவும் வேண்டுமா? ஓர் இளைஞன் ஒரு கதை சொன்னன். அது மூடத்தனத்தினால் கோயில்களில் பலி கொடுக்கும் வழக்கத்தைக் கண்டித்த முறையில் யாக்கப்பட்ட கதை. மிகவும் உருக்கமான படிப்பினையை அது தந்தது. அங்கே என் பேச்சு "தமிழ்க்கலை"யைப் பற்றி. அச்சங்கம் வெறும் கலைச்சங்கம். அதில் கிறித்தவர்களும் இருந்தார்கள். ஆகவே, அங்குதான் தேவாரம்

பாடப்படவில்லை; தமிழ்த்தெய்வ வணக்கம் மட்டும் பாடப் பட்டது.

அங்கிருந்து தெற்கே சென்று சிறிது தொலை ஒரு குறுக்குவழியில் திரும்பினால், எழாலை என்ற ஓர் ஊரை அடையலாம். அவ்விடத்திற்கு எங்களை அவ்வூர் மடத் தார் அழைத்துச்சென்றார்கள். மடம் மிகவும் தூய்மை யான இடத்தில் சிறந்த முறையில் கட்டப்பட்டுள்ளது. நடைமுறையில் எல்லாராலும் போற்றப்பட்டுவருகிறது. அங்கே ஓர் இளைஞரான குருக்கள் பூசை செய்கிறார். மூன்முறை இந்த இடத்திற்குப் போனபோது என் நண்பரும் நானும் இரவு 10 மணிக்குமேல் பேசினோம். மக்கள் நெடுநேரமானபோதிலும் அமைதியுடன் கேட் டார்கள். இரவில் செல்லும்பொழுதெல்லாம் அடிக்கடி வழிமுழுதும் எங்களை நிறுத்தி, பூரணகும்பத்துடன் தீப தரிசனமும் பிரசாதமும் வழங்கினார்கள்.

இராமநாதன் கலாசாலை

இராமநாதனர் கலாசாலை வடக்குப் பெரும்பாதை யின்பேரிலே இருக்கிறது. மிகப் பெரிய வளவில் மிக நன்முகக் கட்டப்பட்டுள்ளது. சைவசமயப் பெரியாரான சர். பொன்னம்பல இராமநாதன் இந்தப் பாடசாலையைக் கட்டினர். இப்போது அவருடைய மனைவியாரும் மகளும் மருமகனரும் அக்கல்லூரியை நடத்துகிறார்கள். ஆயிரம் பெண்மக்கள் இருந்து படிக்கக்கூடிய அளவில் அது கட்டப்பட்டிருக்கிறது. இந்துசமயப்போதனை அங்கே கொடுக்கப்படுகிறது. தொழுகைமண்டபம் மிகத் தூய் மையாக வைக்கப்பட்டிருக்கிறது. அந்த வளவில் இராம நாதனர் சமாதியின்மேல் ஓர் அழகிய கோயில் எழுப்பப் பட்டிருக்கிறது. சிற்பச் சித்திரங்கள் மிக அழகாகவும் நுணுக்கமாகவும் இருக்கின்றன. மாணவிகளின் உறை விடங்கள், படுக்கை இடங்கள், புத்தக சாலைகள் எல்லாம் பெரியவைகளாக இருக்கின்றன. இக்காலத்தில் அத் தனைப் பெரிய கட்டடங்களை ஆக்குவது மிக அரிது.

சுன்னாகம் என்பது யாழ்ப்பாணத்திற்கு மூன்று கல்லில் அதே பாதையில் உள்ள ஊர். இவ்வூரில் ஒரு பெரிய அச்சகம் உண்டு. அதை ஒட்டி ஒரு நூற்சாலை இருக்கிறது. அங்கே ஈழகேசரி என்ற ஒரு பத்திரிகையை நடத்துகிறார்கள். இவ்விடத்தில் பல அரிய தமிழ் நூல்கள் வெளியாகியிருக்கின்றன.

மேல்வலிகாமத்தில் வட்டுக்கோட்டை, அராலி, நவாலி, மூளாய், சுளிபுரம், தொல்புரம், மானிப்பாய், பண்டத்தரிப்பு முதலிய ஊர்கள் இருக்கின்றன. இவைகளில் வட்டுக்கோட்டை சிறிது பெயர்பெற்றது. இங்கிருந்து பல தமிழ்ப்பிள்ளைகள் சைவப் புலமைத் தேர்தல்களுக்கு வந்திருக்கிறார்கள். மக்கள் சைவத்தில் ஈடுபட்டவர்கள்.

கண்ணகி கோயில் கட்டி விழா நடத்திய இலங்கைக் கயவாகு அரசன் காலத்தில், யாழ்ப்பாண வட்டம் அவன் வசத்தில் இருந்தது. அவ்வாறு சிங்கள அரசர்கள் ஆட்சியிலே இருந்த காலத்தில் சிங்களக்குடிகளை அவர்கள் குடியேற்றி வைத்தார்கள். அவ்விடங்கள் இதுகாறும் சிங்களப் பெயர்களாலேயே நடைபெறுகின்றன. அவை மானிப்பாய், சண்டிருப்பாய், சேர்ப்பாய், சுன்னாகம், மல்லாகம், கொடிகாமம், சூராவத்தை, சித்தாவத்தை, கற்பொக்கணை, உடுவில், கொண்டாவில், கொக்குவில், மிரிசிவில் முதலியன. அவ்விடங்களில் புத்தர் கோயில்களையும் ஏற்படுத்தியிருந்தார்கள். எடுத்துக்காட்டாகச் சண்டிருப்பாயில் ஓரிடம் இன்னமும் புத்தர்கோயிலடி என்ற பெயரால் வழங்குகிறது.

தீவுகள்

யாழ்ப்பாணத்திற்கு மேற்கே பாக்ஸ் நீர்ச்சேர்த்தியிலே பல தீவுகள் இருக்கின்றன. யாழ்ப்பாணத்திற்கருகில் இருப்பவைகள் இப்போது யாழ்ப்பாணத்தோடு இணைக்கப்பட்டுள்ளன. இவைகளுக்கு இடையில் உள்ள கடற்பகுதி கழிபோல் ஆழமில்லாதது. ஆகவே,

அணை கட்டிப் பாதை போடுவது எளிதாகிவிட்டது. இவ் வகை உள்ள தீவுகள் காரைத்தீவு, ஊர்காவல்தீவு, வேலணை, சரவணை முதலியன. இனி நடுக் கடலில் உள்ளவை நெடுந்தீவு, நயினுத்தீவு முதலியன.

இவைகளிலே காரைத்தீவு சிறந்தது. அத்தீவில் படித் தவர்கள் மிகுதி; அரசியல் வேலைகளிலும் வழக்கறிஞர் துறைகளிலும் பலபேர் அமர்ந்திருக்கிறார்கள். அண்மையில் இத் தீவில் பிறந்த ஓர் அறிஞர்தான் உயர்நீதிமன் றத்தில் நீதிபதியாக அமர்ந்தார். அவர் பெயர் நடராசர். வேலை முற்றுப்பெறுததற்கு முன்னமே மேலுலகு அடைந் தார். மக்கள் முன்னேற்றத்திலும் பிறர்க்குதவிபுரிதலிலும் மிகப் பாடுபட்டுச் செயல் புரிந்தவர். இத் தீவினர் தங்கள் ஊரைக் காரைநகர் என்று மாற்றியிருக்கின்றனர். இவ் வூரில் ஒரு பள்ளிக்கூடத்தில் நாங்கள் பேசினோம். காலை 8 மணிக்குப் போகவேண்டியவர்கள் சில காரணங்களினால் பகல் 12 மணிக்குத்தான் போய்ச் சேரவேண்டிவந்தது. அப்படியிருந்தும், அவ்வூர் மக்கள் அதுவரை காத் திருந்து, பேச்சுகளைக் கேட்டுவிட்டு, 2 மணிக்கு வீடு சென் றார்கள். அவர்கள் ஆர்வத்தைக் கூறவும் வேண்டுமா?

காரைநகர் விட்டுச் சிறிது தொலை சென்றவுடன் அதே தீவில் ஒரு கந்தப்பெருமான்கோயில் இருக்கிறது. இது கருங்காலி சுப்பிரமணியர் கோயில் எனப்படும். ஒரு பெருந் திருவிழா நடந்தது. அதை ஒட்டி ஒரு சொற்பொழிவு நிகழ்த்தும்படி என்னைக் கேட்டார்கள். அஃது அக்கோயி லுக்கு அருகில் இருந்த பாடசாலையில் நடந்தது. அப் பாடசாலையில் கைத்தொழிலும் கற்பிக்கப்படுகிறது. இது தான் இலங்கையில் கைத்தொழிலுக்கு என்று ஏற்பட்ட பாடசாலைகளில் முதலாவதாக நான் கண்டது. இங்கே "திருக்கோயிலும் சமயப்பணியும்" என்பதுபற்றி யான் பேசினேன். இந்தப் பாடசாலை கடற்கரை ஓரத்தில் ஒரு பனந்தோப்பில் கட்டப்பட்டுள்ளது. கடற்கரையில் சிறிது தொலை மணலில் நடந்தேன். பலவகையான கிளிஞ்சல்

களைப் பொறுக்கி எடுத்துக்கொண்டேன். பனங்கிழங்கு களை இப்பாடசாலையார் உண்ணக் கொடுத்தார்கள்.

காரைத்தீவிலிருந்து தெற்கே சென்றால், வேலணை சரவணை என்ற இரண்டு தீவுகள் இருக்கின்றன. இத்தீவுகளில் பல சிறு ஊர்கள் இருக்கின்றன. அவைகளில் வேலணையில் இருந்துதான் சைவமாநாட்டுச் செயலாளர் யாழ்ப்பாணம் வந்திருக்கிறார். இத்தீவுகளில் சைவ மக்கள் படித்தவர்களாகவும் அன்பு நிறைந்தவர்களாகவும் இருக்கிறார்கள். முதல்முறை இலங்கை சென்றபோது வேலணையில் ஒரு பாடசாலையில் பேசினேன். மாலை 4 மணிவரைக்கும் இவ்வூர் மக்கள் உணவு உண்ணாமல் பேச்சு கேட்பதற்கென்றே காத்திருந்தார்கள். அஃது அவர்களுடைய ஆர்வத்தைக் காட்டுகிறதன்றோ?

ஊர்காவற்றுறை

ஊர்காவற்றுறை என்ற தீவு கடலில் சிறிது தொலை தள்ளி இருக்கிறது. இத்தீவில் டச்சுக்காரர்கள் ஒரு கோட்டையைக் கட்டியிருக்கிறார்கள். அஃது இப்போது சிறைச்சாலையாகப் பயன்படுகிறதாம். தொலைவிலிருந்து பார்த்தால் கடலில் மிதக்கும் ஒரு பெரிய கப்பல்போல அது தெரிகிறது. அது கப்பற் கொள்ளைக்காரர்கள் வராமல் தடுப்பதற்கே அமைந்துள்ளது என்னலாம். ஆகவே, அஃது ஊர்காவல் ஆகும் அன்றோ? இதனை ஆங்கிலத்தில் சையிட்ஸ் (Cytes) என்பர்.

நெடுந்தீவு என்பது இன்னும் சில கற்கள் தள்ளிக் கடலில் இருப்பது. இது பெரியதாகையால் நெடுந்தீவு எனப்பட்டது. அதனை ஆங்கிலத்தில் டெல்ப்ட் (Delft) என்பார்கள்.

நாகத்தீவு

இனி, நைனாத்தீவு என்பது ஒரு பெயர்பெற்ற சிறு தீவு. இதற்கு மறுபெயர் நாகத்தீவு என்பது. இதில் ஒரு பெயர்பெற்ற கோயில் இருக்கிறது. இதில் எழுந்தருளியிருக்கும் தேவதையை நாகபூடணி, நாகேசுவரி, நாகம்

மாள் என்ற பெயர்களாலே கூறுவர். இக்கோயிலில் ஆண்டுக் கொருமுறை ஒரு பெரிய திருவிழா நடைபெறும். அப்போது அளவில்லாத மக்கள் அங்கே சென்று வேண்டுதல் செலுத்துவார்கள். அங்கே கோரிக்கொண்டவை எல்லாம் நடைபெறும் என்ற நம்பிக்கை மக்களுக்குள் உண்டு. நாகம்மாள் கோயிலைப்பற்றி ஒரு கதை உண்டு. இங்கு இருக்கும் சிலையைத்தான் இரண்டாம் நூற்றாண்டில் கயவாகு மன்னன் நிலைநிறுத்திப் பத்தினிக்கடவுளாக வழிபட்டான் என்பதாம். ஐம்பெருங் காவியங்களில் ஒன்றான சிலப்பதிகாரத்தின்படி கோவலன் பாண்டியனால் விசாரிக்கப்படாமல் கொலையுண்டபிறகு, கண்ணகி தன் சிலம்பைக் கொண்டு அரசனிடம் தன் கணவன் குற்றம் செய்யாதவன் என்று எடுத்துக்காட்டித் தன் முலையைப்பிடுங்கி ஊர்மீது எறிந்து, மதுரை எரியும்படி சபித்துவிட்டுச் சேரநாட்டிற்குச் செல்ல, அவ்வாறே மதுரை எரிந்துபோக, சேரமான் அவள்பொருட்டுப் பத்தினிக்கோயில் எழுப்பினதாகவும், அதைத்தொடர்ந்தே ஏனைய அரசர்களும் பத்தினிக்கோயில்கள் எழுப்பினர்கள் என்றும், அவற்றில் ஒன்று இலங்கைக் கயவாகு ஏற்படுத்தியதென்றும் சிலப்பதிகாரத்தால் அறிகிறோம். ஆனால், நாகத்தீவு என்று சொல்லுவதனாலே, இத்தீவு மணிமேகலையில் கண்ட மணிபல்லவமாக இருக்குமோ என்பது சிலர் கருத்து. மணிபல்லவத்தைப்பற்றி மணிமேகலையில் கூறும் பகுதி இந்தத் தீவின் தோற்றத்திற்கு ஏற்றதாக இருக்கிறதென்பர். இந்தக் குறிப்பு ஆராயத்தக்கது.

படை வீடுகள்

தமிழ்நாட்டில் கந்தப்பெருமானுக்கு ஆறு படை வீடுகள் இருப்பதைப்போலவே, இலங்கையிலும் ஆறு கந்த கோட்டங்கள் உண்டு. மேலே சொன்ன நல்லூர்க் கந்தர், மாவிட்டபுரக் கந்தர் கோட்டங்கள் அன்றி, வில்லூன்றிக் கந்தர், மேலைப்புலோலிக் கந்தர் என்பவைகளும், தெற்கே கொழும்புக் கந்தர், கதிர்காமக் கந்தர் கோட்டங்களும் இவ்வாறில் அடங்கியுள்ளன. இவைகளே அன்றி, கந்த

வனக்கடவுக் கந்தர், செல்லக் கந்தர், காரைத்தீவுக் கந்தர் கோயில்களும் உண்டு.

இனி, யாழ்ப்பாணத்தைப்பற்றிக் கூறும் நூல்களாவன :—

1. யாழ்ப்பாணச் சரித்திரம்—ஆசிரியர். ஆ. முத்துத் தம்பிப் பிள்ளை—உரைநடை.
2. இலங்கைச் சரித்திர சூசனம்—ஷெயார்
3. யாழ்ப்பாண வைபவம்—மயில்வாகனப் புலவர் —உரைநடை.
4. யாழ்ப்பாணச் சரித்திரம்—ஆசிரியர். முதலியார். செ. இராசநாயகம்.
5. நல்லூர்க் கந்தர்மீது பல பிரபந்தங்கள்— சேனதிராய முதலியார் சந்திரசேகரபண்டிதர்.

இனி, முத்தின் துலையைக் கவர்ந்து இருக்கும் பொன் வட்ட வற்சத்தின் பொலிவே முத்தின் வனப்பை எடுத்துக் காட்டும் அன்றே? யாழ்ப்பாணவட்டத்தின் பொலிவானது அதனுடைய தமிழ்மொழிச் சிறப்பே ஆகும். தமிழ்நாட்டில் யாழ்ப்பாணப் பெருமக்களால் தமிழ்ப் பொலிவு போற்றப்பட்டதை அறிவோம். அதனை இனிக் கூறுவோம்.

---

4. வற்சத்தின் நற்பொலிவு

தமிழர் சிறப்பு

தமிழர் இலங்கையில் குடியேறின வரலாறு மிகவும் வியக்கத்தக்கது. பதினைந்து நூற்றாண்டுகள்வரை இடைவிடாது தொடர்ந்து, எப்படிப்பட்ட எதிர்ப்போ தோல்வியோ உற்றபோதிலும் மனம் சலியாது போர்கள் புரிந்து குடியேறின வரலாறு வியக்கத்தக்கதன்றே? தமிழர்கள் விடாமுயற்சி கொண்டவர்கள் என்பதும், கருமமே கண்ணு

யினர் என்பதும் இவ்வரலாற்றில் அமைந்துகிடக்கும் அரிய செய்தியாகும். தமிழ்நாட்டிலும் கண்டு அறியாத அரிய வீரச்செயல்களைத் தமிழர்கள் இலங்கையில் செய்திருக்கிறார்கள். ஆனால், அச்செயல்களைத் தமிழர்கள் எழுதி வைக்கவில்லை. இவர்களுக்கு எதிரிகளான சிங்களர்களே அவ்வரலாறுகளை அழியாமல் எழுதிவைத்திருக்கிறார்கள். அவர்களுடைய நூல்களையும் கல்வெட்டுக்களையுங்கொண்டே இலங்கையில் தமிழ்மக்கள் செய்த வீரச்செயல்களை ஒருவாறு தொகுக்கக்கூடும்.

மகதநாட்டுத் தொடர்பு

இலங்கையிலே, முதலில் பண்டைக்குடிகளே இருந்தார்கள். அவர்களே வேடர்கள், நாகர்கள் எனப்பட்டனர். இப்போதும் அக்குடிகளில் சிலபேர் காட்டுமனிதர்களாகச் சில அடர்ந்த மலைக்காடுகளில் வசிக்கிறார்கள். கி. மு. 545-ல் மகதநாட்டு அரசகுமாரன் விசயன் என்பவன் இலங்கைக்குச் சென்று அங்கே அரசனானன். அவன் முதலில் நாக கன்னிகையை மணந்து அரசாளத் தொடங்கினன். பிறகு அரச இரத்தத்தைத் தன் சந்ததியில் நிலைநிறுத்தும் பொருட்டுத் தமிழ்நாட்டுப் பாண்டியன் மகளை மணம் செய்து அரசுரிமையை நிலைநிறுத்தினன். அவனே இலங்கை அரச வமிசத்து முதல் மன்னன் ஆனன். அவனோடு உடன் சென்ற மகதநாட்டு மக்கள் இலங்கையிலே குடியேறி, அந் நாட்டு நாககன்னிகைகளை மணந்து அங்கேயே தங்கினர்கள். அவர்களே சிங்களர் ஆயினர். அக்குடிகள் பெருகின. அதற்குப்பிறகு இரண்டு நூற்றாண்டுகளில் மகதநாட்டில் அசோகன் என்ற பேரரசன் ஆண்டான். அவன் பௌத்த சமயத்தைத் தழுவி மிகப் புகழோடு இந்நாடு முழுதும் தன் ஆளுகைக்குள் கொண்டுவந்தான். பௌத்தசமயத்தை உலகம் முழுதும் பரப்பும் எண்ணங்கொண்டு பிரசாரகர்களை அனுப்பினன். அப்போது தன் மகன் மகிந்தனையும் மகள் புத்தமித்தையையும் அனுப்பி, அவர்களுக்குப் புத்த சின்னமாக வெள்ளரசையும் தரவே, அவர்கள் இலங்கைக்குச் சென்று சிங்களர்களை பௌத்தர்கள் ஆக்கினர்கள்.

அதுமுதல் இலங்கை பௌத்த சமயம் ஆயிற்று. அப்போது தான் கந்தரோடையில் ஒரு விகாரமும் (Vihara) கட்டப் பட்டது.

தமிழர் படையெடுப்பு

பிறகு, ஒரு நூற்றாண்டின்போது சூரதீசன் (247-187 கி.மு.) காலத்தில் தமிழ்த் தலைவர்கள் இலங்கையின்மீது படையெடுத்தார்கள். சேனன் குத்தகன் என்ற தமிழ்த் தலைவர்கள் 237 முதல் 137 வரை படையெடுத்துக் குடிபுகத் தொடங்கினர்கள். பிறகு அசுலன் (215-155) காலத்தில் தமிழ்ப்பேரரசன் ஏலேலசிங்கன் (215-245) இலங்கையின் மீது படையெடுத்து, சிங்கள மன்னனைத் துரத்திவிட்டு 40 ஆண்டுகள் ஆண்டான். எங்கும் தமிழர்கள் ஆதரிக்கப்பட் டார்கள். இம்மன்னன் மிகப் புகழ்பெற்றவன். கி. மு. 161-ல் துட்டகெமுனு என்ற சிங்கள அரசகுமாரன் ஏலேல சிங்கனை வென்று தமிழர்களை முறியடித்தான். தமிழர்கள் இதனால் மனச்சலிப்பு அடையவில்லை. வலிகம்பா (104-44) காலத்தில் வேறு சில தமிழர் படையெடுத்து அரசனைத் துரத்தித் தாங்களே அரசாளத்தொடங்கினர். 103-44 வரை ஐந்து தமிழ் மன்னர்கள் ஆண்டார்கள். மீண்டும் சிங்களர்கள் தமிழர்களைத் துரத்திவிட்டார்கள். இவ் வரலாறு கிறித்துக்குமுன் நடந்தது.

கி. பி. 110-ம் ஆண்டில் கரிகால்சோழன் இலங்கையின் மீது படையெடுத்து 12000 சிங்களர்களைச் சிறைப்படுத்தி, சோழநாட்டிற்குக் கொண்டுபோய்க் காவிரிக்கு அணை கட்டு வித்தான். பிறகு இலங்கை மன்னன் கயவாகு (113-173) அத்தோல்வியை எண்ணி, அதனை மறைத்தருளச் சோழ நாட்டின்மீது படையெடுத்து அச்சிங்களர்களை மீட்ட தன்றித் தமிழர்களை அழைத்துவந்து குடிவைத்தான். அப் போது ஏற்பட்ட பத்தினிக்கடவுள் ஆராதனையில் தானும் ஈடுபட்டுக் கண்ணகிக்குக் கோயில் கட்டினான். அப்போது தமிழ்நாட்டிற்கும் ஈழத்திற்கும் நட்பு ஏற்பட்டது. அபய நாகன் (237-291) காலத்தில் தமிழர்களுடைய உதவியினால் யாழ்ப்பாண வட்டத்தில் புத்தப்பள்ளிகள் கட்டப்பட்டன.

மகாநாமன் (412-468) காலத்தில் தமிழ்நாட்டுக் குளக் கோட்டன் திருக்கோணமலைக் கோயிலைக் கட்டினான். அத் தமிழரசன் சிங்கள அரசியை மணந்தான். வன்னியர்கள் திருக்கோணமலை ஆதிக்கம் பெற்றனர். 436-491-க்குள் ளாகத் தமிழர்கள் மீண்டும் புகுந்தபொழுது ஆறு அரசர்கள் ஆண்டார்கள். ஆனால், 491-ல் தாதுசேனனால் அவர்கள் துரத்தப்பட்டார்கள். 439-526-ல் ஆண்ட காசியபன் தன் தகப்பனைக் கொன்று அரியாசனம் ஏறி, சீயகிரியில் கோட் டைகட்டி ஆளுகையில், உரிமைகொண்ட தாயாதி முகலன், தமிழ்நாடு சென்று தமிழர்கள் படையைத் திரட்டிவந்து 497-ல் அரசை மீட்டுக்கொண்டான். 614-672-ல் ஆண்ட சிலமேகன் காலத்தில் தமிழர்கள் மறுபடியும் வந்தனர்; ஆனால் தோல்வி பெற்றார்கள். பிறகு 7-வது நூற்றாண்டில் பல்லவர் உதவியைக்கொண்டு தமிழர்கள் இலங்கையில் புகுந்து புத்தவிகாரங்களைக் கட்டினார்கள். 8-வது நூற் றாண்டில் தமிழர்கள் மேலுக்குமேல் வந்து குடியேறினர் கள். 785-ல் மாவிட்டபுரக் கந்தகோட்டம் கட்டப் பெற்றது. 823-ல் வரகுணன் இலங்கையில் படையெடுத் தான். சேனன் காலத்தில் அநுராதபுரம் தமிழர்களால் கொள்ளையடிக்கப்பட்டது. 941-ல் சோழர்கள் மீண்டும் படையெடுத்தனர். 945-ல் பராந்தக சோழன் இலங்கையை வென்றான். 995-ல் இராசராசன் மீண்டும் படையெடுத் தான். 1014-ல் ஈழநாடு சோழர்மாகாணம் ஆகிவிட்டது. மும்முடிச்சோழமண்டலம் என்ற பெயரும், பொலனறுவை சனநாதபுரம் என்ற பெயரும் பெற்றன. அப்போது ஒரு நூற்றாண்டுவரை ஈழநாடு சோழர் ஆட்சியில் இருந்தது. தமிழர்கள் குடியேற்றம் மிகப் பெருகியது; கோயில்கள் கட்டப்பட்டன; ஆட்சி சிறந்து விளங்கியது.

சோழர்கள் ஆதிக்கத்தில் கலிங்கப்போர் வென்ற கரு ணாகரத்தொண்டைமான் இலங்கைக்கு வந்து தொண்டை மானாற்றிற்குத் தன் பெயர் தந்தான். பிறகு சோழநாட் டிலே சோழர் ஆதிக்கம் குறையத் தொடங்கியபோது இலங்கையிலும் அவர்களுடைய செல்வாக்குக் குறைந்தது. 1153-1186-ல் பராக்கிரமபாகு அரசாட்சியை மீண்டும்

அடைந்து சிங்கள ஆட்சியை நிலைநிறுத்தினன். அவன் மிகவும் வல்லமையோடு ஆண்ட அரசன். அவன் வெற்றியுடன் ஆண்டதனால், அதுமுதல் இலங்கையின் நடுப்பகுதியும் தென்பகுதியும் சிங்களருக்கே வந்துவிட்டன. வடபகுதி தமிழரிடமே நின்றுவிட்டது.

சிங்கள ஆரிய சக்கரவர்த்திகள்

13-ம் நூற்றாண்டு முதல் யாழ்ப்பாணம் தனி அரசு ஆகிவிட்டது. அதனைத் தமிழரசர்கள் ஆண்டுவந்தனர். அவர்கள் சிங்கள ஆரிய சக்கரவர்த்திகள் என்ற பட்டத்துடன் ஆண்டார்கள். அவர்கள் பரராசசேகரன் செகராச சேகரன் என்ற பட்டங்களை மாற்றி மாற்றி வைத்துக் கொண்டார்கள். 1215 கி. பி. முதல் 1620 வரை ஏறக்குறைய 400 ஆண்டுகள் அந்த அரசமரபு ஆட்சிபுரிந்தது. 17 அரசர்கள் ஆண்டார்கள். அவர்களிலே இறுதி அரசன் சங்கிலி என்பவன் பறங்கியர்களால் பிடிபட்டுத் தலை வெட்டுண்டான். அதுமுதல் அந்த மரபு தொலைந்தது. அதுமுதல் பறங்கியர் என்ற போர்த்துகீயர் ஆட்சிபுரியத் தொடங்கினர்.

இந்தத் தமிழ் அரசர்களிலே சிலர் புலவர்களாக இருந்தனர். எல்லாரும் தமிழ்மொழியை ஓம்பிவந்தார்கள். பல தமிழ் நூல்கள் அக்காலத்தில் இயற்றப்பட்டன. புராணம், மாலை, பிள்ளைத்தமிழ், பள்ளு முதலிய பல வகை நூல்களை அக்காலத்தில் இயற்றியிருக்கிறார்கள்.

இவ்வரசர்கள் சைவர்கள். ஆகவே, பொதுவாகச் சைவக் கோயில்களைக் கட்டியும் ஓம்பியும் வந்திருக்கிறார்கள். இவர்கள் காலத்தில்தான் நல்லூர் கந்தசாமி கோயில் கட்டப்பட்டது. மற்றக் கோயில்கள் பல கட்டப்பட்டும் காத்து வளர்க்கப்பட்டும் வந்தன. பறங்கியர்கள் வந்த பிறகு பல கோயில்களை அழிக்கத்தொடங்கினர்; பல தமிழர்களைக் கிறித்தவர்கள் ஆக்கினர்; கிறித்தவ கோயில்களையும் கட்டினர். இத்தனைதான் யாழ்ப்பாண வட்டத்தில் கிறித்து சமயம் மிகப் பெருகத் தொடங்கியது.

பறங்கியர்கள் ஆட்சி மக்களுக்குப் பிடிக்கவில்லை. அவர்களை ஒட்டிவிடவேண்டும் என்று கண்டி யரசனும் முயன்றான். அதற்குள் ஒல்லாந்தர் என்ற டச்சுக்காரர்கள் வந்தார்கள். அவர்கள் பறங்கியரைத் துரத்தி, 1658-ல் யாழ்ப்பாணக் கோட்டையை முற்றுகையிட்டுப் பிடித்தார்கள். ஒல்லாந்தர் அது முதல் யாழ்ப்பாணத்தை ஆளத் தொடங்கினர். ஒல்லாந்தர் ஆட்சியும் கொடுங்கோன்மை கொண்டுதான் இருந்தது. கிறித்தவர்கள் ஆக்குவதே அவர்களுடைய தொழில். பலபேர் கிறித்தவப் பெயர்களை வைத்துக்கொண்டு மறைவாகவும் இருந்தார்கள். பல வகையான புது வரிகளும் போடப்பட்டன.

பிறகு, ஆங்கிலேயருக்கும் ஒல்லாந்தருக்கும் 1782-லும் 1795-லும் இரண்டுமுறை போர் மூண்டது. 1796-ல் யாழ்ப்பாணம் ஆங்கிலேயரிடம் வந்துவிட்டது. அது முதல் யாழ்ப்பாணம் ஆங்கிலேயரிடமே இருக்கின்றது.

பேசும் மொழி—யாழ்ப்பாணத் தமிழர் பல நூற்றாண்டுகளுக்கு முன்னேயே தமிழ்நாட்டிலிருந்து குடியேறிப் போய்விட்டபடியால், மொழியின் உச்சரிப்பும் மொழியின் நடையும் வேறுபட்டிருக்கின்றன. பேச்சைக் கேட்ட உடனேயே இந்த வேறுபாட்டைக் கண்டுகொள்ள முடியும். நம் நாடுகளிலேயே கொங்குநாட்டிற்கும் சோழநாட்டிற்கும் வேறுபாடு உண்டு; தொண்டைநாட்டிற்கும் பாண்டிநாட்டிற்கும் வேறுபாடு உண்டு. எனவே, தமிழ்நாட்டிற்கும் பல நூற்றாண்டுகளுக்கு முன் குடியேறிப் போன யாழ்ப்பாணத்திற்கும் வேறுபாடு இருப்பது இயல்பே! அவர்கள் சென்ற காலத்தில் எந்த உச்சரிப்பிலும் நடையிலும் பேசினார்களோ, அவைகளை மிகுதியாக வைத்துக்கொண்டிருப்பது இயல்பே.

மேலும், யாழ்ப்பாணத்திற்குக் குடியேறிப்போன பிறகு, அங்குப் பிறநாட்டார் பலரோடு பழகிவந்திருக்கிறார்கள். அப்போது அந்நாட்டார்களுடைய மொழிகளைத் தங்கள் பேச்சில் ஏற்றியிருப்பதும் இயற்கையே. அவ்வாறு யாழ்ப்பாணத்து மக்கள் கூட்டுறவுகொண்டு பழகிய

பிற நாட்டார்கள் சிங்களர், அராபியர், போர்த்துகீயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் முதலியோர்கள். இந்தப் பிறநாட்டார்களிடம் பற்பல சொற்களையும் கடன்வாங்கிக்கொண்டு இருக்கிறார்கள். நாளடைவில் இச்சொற்கள் தமிழியல்பே ஆகிவிட்டன. அவ்வகைச் சொற்களில் எடுத்துக்காட்டுக்களாகச் சில இங்குக் கொடுப்போம்.

1. சிங்களம் :—காமம் = கிராமம்—வலிகாமம்.
வில் = குளம்—கொக்குவில்.
தோடம்பழம் = கிச்சிலி.

2. போர்த்துகீயம் :—கரத்தை = வண்டி—Cart.
தவரணை = கட்கடை—Tavern.
அலமாரி = பீரோ—Almyra.
கச்சேரி = பகுதி—Cutcheri.
பிராக்தர் = Proctor.

3. ஆங்கிலம் :—கோச் = புகைவண்டி—Coach.

இவைகளே யன்றித் தமிழ்நூல்களில் வழங்கும் சில மொழிகள் பேச்சில் வழங்குகின்றன. அவை நமது நாட்டில் நூல்களிலே மட்டும் வழங்குகின்றன.

நிற்பாடு—நிறுத்தம்
வருத்தம்—நோய்
வடிவாக—அழகாக
சுணக்கம்—தாமதம்

சில மொழிகள் யாழ்ப்பாணத் தமிழில் உண்டு. தமிழ் நாட்டில் இல்லை.

ஒழுங்கை—சந்து
கமக்காரன்—உழவன்
மணித்தியாலம்—மணிநேரம்
இடியாப்பம்—சேமியா
சொதி—தேங்காய்ப்பால்கறி.

யாழ்ப்பாணத் தமிழர் பேச்சிற்கு எடுத்துக்காட்டுக்களாகச் சில சொற்றொடர்களைக் கீழே தருகிறேன்.

"இந்தியாவிலிருந்து இரண்டு சைவப் பெரியார்களை அழைத்தோம் நாங்கள். அவர்களை யாழ்ப்பாணக் கோச்சிலே சந்தித்து வரவேற்றிறோம் நாங்கள். அவர்களை அழைத்துக்கொண்டு நாவலர் வீதியாகச் சென்றோம். பெட்டியும் படுக்கையும் ஒரு கரத்தையில் ஏற்றிக்கொண்டு சேர்த்திறோம். வண்ணார்பண்ணையில் அமர்த்தின ஒரு வசதியிலே நிற்பாட்டினோம். அவர்களுக்குச் சிற்றுண்டி ஒழுங்கு செய்திருந்தோம். இடியாப்பமும் சொதியும் ஆயத்தமாக இருந்தன. தோடம்பழமும் தேன்கதலியும் தந்தோம். அன்புடன் உண்ணும்படி விரும்பினோம். பகலில் எங்கள் கமக்காரன் தந்த அரிசியைச் சமைப்பித்து உணவு இட்டோம். 'இது செந்நெல் அரிசி, வயிற்றை வலிக்காது. உண்டாலும் வருத்தம் உண்டாகாது,' என்றோம். 'வெள்ளை அரிசி இந்தியாவிலிருந்து படகிலும் கோச்சிலும் வரும். ஆனால் அது கனவிலை,' என்றோம். இதற்குள் மூன்று மணித்தியாலம் ஆகிவிட்டது. மாலையில் இராசவல்லிக் கிழங்கில் ஆயத்தம் செய்த சிற்றுண்டி தந்தோம். அக் கிழங்கு இந்நாட்டில் மிச்சம் விளைவு. அலமாரியிலிருந்து ஒரு கிழங்கை மாதிரிக்காக எடுத்துக்காட்டினோம். சுவைத்து வியப்படைந்தார்கள். 'கடற்கரைக்குப் போகலாம் நாங்கள் காற்றுவாங்க,' என்று அழைத்தோம். அவர்கள் உடன்பட்டு வரவே, ஒரு கட்டை வழி நடந்து, தவணை தாண்டிப் பறங்கிகள் பேட்டை சென்று கழி அடைந்தோம். 'மாலைக்காட்சி எத்தனை வடிவாக இருக்கிறது,' என்று விளக்கினோம். கனதூரம் ஓடத்தில் ஏறித் திரும்பினோம் நாங்கள். 'திரும்பும்போது அங்கே கண்ட பறங்கிகளுக்கு என்ன தொழில்?' என்று கேட்டார்கள். 'அவர்களுக்குக் கச்சேரியிலும் கந்தோரிலும் வேலை; சிலர் அப்புக்காத்து, ப்ரொக்தர், பிரசித்த நொத்தாரிஸ் ஆகவும் உள்ளார்,' என்றோம். கரையில் இறங்கி ஒரு கானைத் தாண்டிப் பேட்டை வந்தோம். அங்கே பிடவைக்கடையில் சிங்களர் உடுக்கும் சாரம், கம்மாளம் இவைகளைக் கண்டு, 'விலை என்ன'? என்று கேட்டார்கள். 'அது கூடலாக இருக்கும்; இங்கே பிடவைகள் மிகச் சுணக்கம்' என்றோம். பின்னே ஓர்

ஒழுங்கைவழியே நடந்தோம். அங்கே ஒரு வளவுக்குள் மா பலா தென்னை மிச்சமாக வளர்ந்திருந்தன. 'என்ன வடிவான இடம்!' என்றார்கள். 'எச்சரிக்கை, இங்கே இருட்டு வந்துவிட்டதிலை புலிமுகச்சிலந்தியும் திருநீலகண்டனும் மிச்சமாக இருக்கும். மெல்ல வீட்டைச் செல்வோம்,' என்றோம். 'வசதி சேர்ந்து கோப்பி அருந்திவிட்டுக் கந்த கோட்டம் செல்வோமா?' என்றோம். 'ஓம், போகலாம்,' என்றார்கள். 50 சதம் கொடுத்துவிட்டுக் கரத்தை ஏறிச் சென்றோம். கோயில் வழிபாடு செய்துவிட்டுத் திரும்பினோம். அன்று ஊருத்துறை பருத்தித்துறை அளவெட்டி செல்ல இயலவில்லை. 'பையச் செல்வோம்,' என்று சொல்லிவிட்டு உறங்கினோம்."

இதில் தடித்த சொற்கள் இலங்கையில் யாழ்ப் பாணர்கள் வழங்கும் சொற்கள். இவைகளை எழுதி வாசித் தால் மிகுந்த மாறுபாடு இருப்பதாகத் தோன்றுவ தில்லை. ஆனால், பேசும்போது தோன்றும். அஃது உச்ச ரிப்பின் தன்மையால் என்று அறியவேண்டும். நமது நாட்டில் பேச்சுவழக்கில் இல்லாத சொற்களை ஒருவர் எடுத்துப் பேசினால் அந்த நடை புதிதாகத் தோன்றும். இலக்கண வழக்கு மிகுந்த செந்தமிழ்போலத் தோன்றும். அந்தக் காரணத்தினால்தான் யாழ்ப்பாணர்கள் தமிழை இலக்கணமாகப் பேசுகிறார்கள் என்று எண்ணுகிறோம். உண்மையில் அந்நடையில் இலக்கணச் சார்பு மிகுந்துள்ள தாகக் கூறமுடியாது. நமது நாட்டுப் பேச்சுமொழியைப் போலவே அங்கேயும் கொச்சைமொழி வழக்கத்தில் உள்ளது என அறியவேண்டும். நமது நாட்டில் எவ்வாறு வடமொழி, திசைமொழி, மேல்நாட்டுமொழி இவைக ளோடு கூடித் தமிழ் மணிப்பிரவாளமாகப்போய் நடை கலப்படமாக இருக்கிறதோ, அதுபோலவே, இலங்கை யாழ்ப்பாணத் தமிழிலும் மொழி தூய்மை கெட்டுப் பிற மொழிகளோடு கலந்து சீர்குறைந்து இருக்கிறதென்று சொல்லவேண்டும். ஆகவே, உச்சரிப்பினாலே தூய்மை தோன்றுகிறதே ஒழிய, உண்மையில் தூய்மை குறைவு என்று கூறவேண்டும்.

எழுதும் மொழி

தொடக்கத்தில் தூய தமிழ் யாழ்ப்பாணம் புகுந்தது. தமிழ்மக்கள் சங்க காலத்திலேயே இலங்கையில் குடியேறத் தொடங்கினர். ஆகவே, தமிழும் தூய்மையாகவே இருந்திருத்தல்வேண்டும். அங்கே அரசியல் தொடர்பும் சமுதாய இணக்கமும் சிங்களருடனே ஏற்பட்டன. சிங்களவரோ வடநாட்டு வடமொழியையும், அதன் சார்பான பாலி மொழியையுமே ஆண்டுவந்தனர். ஆகவே, வடமொழி உறவு தமிழுக்கு மிகுதியாக இருத்தல்கூடும்.

பிறகு தமிழ் அரசர்கள் அடிக்கடி இலங்கையின்மீது படையெடுத்ததினால், பல படைவீரர்களும் குடிகளும் வடபகுதியில் குடியேறித் தங்கிவிட்டார்கள். பல நூற்றாண்டுகளாகப் படையெடுப்பதும், பிறகு துரத்தப்படுவதுமாகத் தமிழர் குடியேற்றம் இருந்தது. பிறகு சோழர்கள் ஆட்சியில்தான் நிலைபேறாக ஒரு நூற்றாண்டுவரை இலங்கை தமிழர் ஆட்சிக்குள் இருந்தது. அப்போது இலங்கையின் வடபகுதி முற்றும் தமிழ்இயல்பே ஆயிற்று. ஆனால், அக்காலத்துச் சோழர்கள் வடமொழியையும், சமய நிலையங்களில் அந்தணர்களையும் மிகுதியும் போற்றினர்கள். அவர்களுடைய பட்டப்பெயர்களும் வடமொழி மணமே. அவ்வகை மனப்பான்மையில் இலங்கை சென்ற தமிழ்த் தலைவர்கட்கும் வடமொழிப்பற்றே மிகுந்திருந்தது. அவர்களே கோயில்களையும் கட்டி, தான தருமங்கள் நிபந்தங்கள் முதலியவற்றையும் ஏற்படுத்தினர்கள். எனவே, வடமொழிச்சார்பு மிகுதியாயிற்று.

பின், 13-ம் நூற்றாண்டு முதல், 17-ம் நூற்றாண்டு முடிய யாழ்ப்பாணத்தை ஆண்ட தமிழ் அரச மரபினர் வடமொழிப் பற்றுள்ளவர்களே. அவர்களுடைய பட்டப் பெயராகிய 'சிங்கள ஆரியசக்கரவர்த்திகள்' என்ற பெயரே அதனை விளக்குகிறது. அவர்கள் தமிழை வளர்த்த போதிலும், அத்தமிழ்நூல்களின் நடையையும் பொருளையும் ஆய்ந்தால் வடமொழிச்சார்பே கொண்டுள்ளதை அறியலாம். ஆரியசக்கரவர்த்திகள் காலங்களில் இயற்றப்

பட்ட நூல்களைச் சிறிது ஆராயுங்கள். அங்காதிபாதம், செகராசசேகரம் என்னும் மருத்துவ நூல், இரகுவமிசம், இரகுவமிசக் கருப்பொருள், கைலாயமாலை, சரசோதிமாலை என்ற சோதிட நூல், சர்ப்ப சாத்திரம், செகராசசேகரம் என்ற சோதிடநூல், தக்கிணகயிலாயபுராணம், திருக் கோணசலபுராணம், யாழ்ப்பாணவைபவகௌமுதி, யாழ்ப் பாணவைபவமாலை, யாழ்ப்பாணவைபவவிமர்சனம், விசய தருமு நாடகம், விசுவ புராணம் முதலிய நூல்களின் பெயர் களையும் நோக்குங்கள். இவைகளால் வடமொழிப்பற்று மிகுந்திருந்தமை அறியக்கூடாதா?

மேலும், தமிழர்களால் ஏற்படுத்தப்பட்ட கோயில் களுக்கு வடமொழிப் புராணங்களையும், அவைகளை ஒட்டிய புராணகதைகளையும் இயற்றிச் சேர்த்திருப்பதை அறிக. அக்கோயில்களில் தமிழ் நாட்டிலிருந்து ஆதிசைவக் குருக்களைக் கொண்டுவந்து பூசைக்கு வைத்துக் கொண்டார்கள். அவர்கள் வடமொழி ஆகமங்களை அங்கு ஆளத்தொடங்கினர்கள். அருச்சனை முதலியவைகளுக்கு வடமொழி மந்திரப் பெயர்களையே புகுத்தினர்கள். குடும் பத்தில் உள்ள பலவகை வைதிகச் சடங்குகளுக்கும் அவர் களை அமர்ந்தார்கள். ஆகவே, வடமொழி மந்திரங்கள் ஆட்சிக்கு வந்தன. கோயில் வழிபாடும் சடங்குகளும் வட மொழிச்சார்பு கொண்டதனால், வடமொழிப்பற்றுக்கு மிகுந்த இடம் வாய்க்கத் தொடங்கியது. இப்படியிருக்க, நடையிலும் வடமொழி புகுந்துவிடும் அன்றே? யாழ்ப் பாணர் எழுதிய உரைநடை நூல்களில் வடமொழி மிகுதியும் புகுந்துவிட்டது.

இவ்வகை இயக்கம் மொழியில் இருக்க, மிகப்பெரிய உரைநடையாசிரியர் ஆறுமுக நாவலர் எழுதத் தொடங்கிய போது அவர்கள் நடையும் இந்த இயக்கத்தினால் தழுவப் பட்டது எனவே கூறலாம். கிறித்தவர்களும் இந்நடை யையே தழுவினர். விவிலிய நூலைத் தமிழ்ப்படுத்துவதற்கு நாவலர் பெரிதும் உதவிபுரிந்தனர் என்பர். அந்நடையைச் சிறிது பாருங்கள். "யோவான் எழுதிய சுவிசேஷம்—

ஆதியிலே வார்த்தை இருந்தது. அந்த வார்த்தை தேவனிடத்தில் இருந்தது. அந்த வார்த்தை தேவனுய் இருந்தது.—அவர் ஆதியிலே தேவனோடிருந்தார்.—சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று. அவருக்குள் ஜீவன் இருந்தது. அந்த ஜீவன் மனுஷருக்குள் ஒளியாயிருந்தது.'' இதில் ஒளி என்ற ஒரு சொல் தவிர, மற்ற 13 பெயர்ச்சொற்களும் வடமொழிச்சொற்கள். இவைகளுக்குத் தமிழ்ச்சொற்கள் இல்லையா? ஏனோ இத்துணை வடமொழிச்சொற்கள்? இந்த நடையைப் படித்தால் தமிழாக இருக்கிறதா? கலப்புமொழியாக இருக்கிறதா? யாழ்ப்பாணத்துத் தமிழரால் ஆதரிக்கப்பட்ட தமிழ்க் கிறித்தவர்களின் வீட்டுமொழியையும் பாருங்கள்! ஏனோ இந்தக் கேடான நடையைக் கொண்டிருக்கிறார்கள்? ஒருமுறை ஒரு கிறித்தவ திருமணத்திற்குச் சென்றிருந்தேன். அங்கே சாமியார் சொன்ன தமிழ்ச் சொற்களைக் கண்டு மனம் புழுங்கியது.

"இப்பொழுது ஒரு புருஷனும் ஸ்திரீயும் வந்திருக்கிறார்கள். அவர்கள் கல்யாணம் செய்துகொள்ள வேண்டும் என்கிறார்கள். அது சபையாருக்குச் சம்மதமா?'' இதுதானே தூய தமிழ்?

ஆனால், இக்காலத்தில் யாழ்ப்பாணத்தில் தூய தமிழ் இயக்கம் தொடங்கிவிட்டது. இப்போது எழுதிவரும் தமிழ் மிக இயல்பான தமிழாக இருக்கிறது. இதையே யாழ்ப்பாண மக்கள் இனிமேல் தழுவுவார்களாக. அதுவே தமிழ்த்தாய்க்கு அன்னர் செய்யும் நன்றியாகும்.

பழக்க வழக்கங்கள்

இலங்கைத் தமிழர்களின் பழக்கவழக்கங்கள் பல தமிழ் நாட்டில் இருப்பவைகள்போ லில்லாமல் மாறுபட்டிருப்பதைக் காண நாம் வியப்படைவோம். அவைகளில் பல மலையாளவாசிகள் பழக்கவழக்கங்களை ஒட்டியிருக்கின்றன. இவைகளைக் கண்ட சில ஆராய்ச்சியாளர்கள் இலங்கைத் தமிழர்கள் மலையாளத்திலிருந்து இங்குக் குடிவந்திருக்கவேண்டும் என்று எண்ணுகின்றனர். அது

உண்மையாக இருக்குமேயானால், அவ்வகைக் குடியேற்றம் தற்கால மலையாளநாட்டிலிருந்து இருக்கமுடியாது; மலையாளமொழி தமிழிலிருந்து வேறுபட்டுப்போன பிறகும் இருந்திருக்கமுடியாது. நாஞ்சில்நாட்டு (தென் திருவிதாங்கூர்)த் தமிழர்களிடையே இவ்வகைப் பழக்கங்கள் சில இருப்பதனால், ஒருவேளை அப்பகுதியிலிருந்து இலங்கைத் தமிழர் குடியேறியிருக்கலாம். அல்லது மலையாளநாடு சேரர்களால் ஆளப்பட்ட காலத்தில், அஃதாவது, அது தமிழ்நாடாக இருந்த காலத்தில், அக்குடிகள் இலங்கைக்குச் சென்றிருக்கலாம். நாம் முன்னமே கூறியபடி, 2000 ஆண்டுகளுக்கு முன் சேனன், குத்தகன், ஏலேலசிங்கன், வலசகம்பர் காலத்துத் தமிழரசர்கள் ஐவர், கயவாகு காலத்தில் சென்ற தமிழர்கள், இவர்கள் எல்லாரும் மேற்கு நாடுகளாகிய சேரநாட்டிலிருந்து சென்றவர்களாக இருக்கவேண்டும். இலங்கை வரலாற்று நூலாகிய மகாவமிசத்திலும் இதற்குச் சிறிது சான்று இருக்கிறது. மேலும், கயவாகு காலத்தில் பத்தினிக்கடவுள்வழிபாடு செய்வதற்கு ஏற்பட்ட சிறந்த காரணம், சேரன் செங்குட்டுவன், வஞ்சியில் வடநாட்டிலிருந்து கொண்டுவந்த கல்லால் பத்தினிக்கடவுள் திருவுரு சமைப்பித்து நட்டதேயாகும். இவ்வாறு சேரநாட்டுச் செய்தியை முன்னிட்டுக் கயவாகு காலத்தில் ஒரு செய்கை நடந்திருக்குமானால், சேரநாட்டு மக்கள் சிறப்பாக இலங்கைக்கு அக்காலத்தில் சென்றிருக்க வேண்டும். மேலும், சேரநாடு அக்காலத்தில் சிறந்து விளங்கியது. ஆகவே, அங்கிருந்து மிகுதியாகத் தமிழ்மக்கள் குடியேறியிருக்கவேண்டும். அப்போது சேரநாட்டில் தமிழே மக்கள்மொழியாக இருந்தது என்று அறிய வேண்டும். அம்மக்கள் சேரநாட்டுப் பழக்கங்களை உடன் கொண்டுசென்று வாழ்ந்திருக்கையில், பின் சென்ற சோழர் படையெடுப்புகளில் குடியேறியவர்கள், அத் தமிழ் மக்களோடு கலந்து, அவர்களின் பழக்கவழக்கங்களையே கொண்டிருக்கலாம் என்க.

அவ்வகை வேறுபாடுள்ள சில பழக்கவழக்கங்களை இனிக் குறிப்போமாக: 1. யாழ்ப்பாணத் தமிழ்மக்களில் கண

வன் இறந்து கைம்மைபூண்ட பெண்கள் மறுமணம்செய்வ துண்டு. இந்த மறுமணம் சைவர்களிலும் உண்டு. மலையாளக் குடியானவர்களில் கைம்மை இல்லைஎன்பது இங்கே அறியற்பாலது. 2. திருமணங்களில் பெண்களுக்கு உரிமைகள் மிகுதி. மணப்பெண்ணுக்குப் பரியம் தர வேண்டும். அப்போது பொன் கொடுக்க இயலாமல் குடி யிருக்கும் வீட்டையே தந்துவிடுவது வழக்கம். தற்காலப் படிப்பு மிகுந்த இல்லங்களிலும் இவ்வழக்கம் உண்டு. 3. அவ்வாறு திருமணம் ஆனவுடன் மணப்பெண் தாய் வீட்டிலேயே இருப்பாள். மணமகன்தான் பெண் வீட்டிற் குச் சென்று அங்கே வசிக்கத்தொடங்குவான். ஆகவே, வீடு மனைவியைச் சேர்ந்தது. அது பெண்வழியேதான் செல்லும்; ஆணுக்குக் குடியிருக்கும் உரிமைதான் உண்டு. இதுதான் இப்போதும் மலையாளத் தரைவாடுகளிலும் நடந்துவரும் வழக்கம். தாய்வழி உரிமையே தவிர, தந்தை வழி உரிமை இல்லை. 4. தமிழர் குடியிருக்கும் இல்லங்கள் எல்லாம் மலையாளத் தரைவாடுகளைப்போலவே தோட்டம் தொழுவம் இவைகளுக்கு நடுவே இருப்பன. ஒரு வேலியை அடைப்பாகக்கொண்ட வளவே ஒரு குடியிருப்பு ஆகும். இதனைக் காணும்போதெல்லாம் மலையாளச் சிற்றூர் வாழ்வையே நினைப்பூட்டும். 5. ஒவ்வொரு நாளும் தவறு மல் ஆணும் பெண்ணும் ஒருமுறையன்றி இருமுறையும் குளிப்பார்கள். தூய்மையாகத் துணிகளைத் துவைத்து உடுத்திக்கொள்ளுவார்கள். பெண்கள் உடைகளை உடுக்கும் முறையும் மலையாளநாட்டை ஒத்திருக்கும். 6. பெண் கள் அணியும் அணிவகைகளும் ஒருவாறு ஒத்திருக்கக் காணலாம். தமிழ்நாட்டுத் தமிழர்களைப்போல் மிகுதியான அணிகளை அணியும் வழக்கம் இல்லை. மலையாளத்தாரைப் போலக் காதில் ஒரே தோடு அணிவார்கள். மூக்கில் இடப் புறத்தில் தொங்கடம் கொண்ட ஒரு மூக்குத்தி அணிவார் கள். படித்தவர்கள் அதுவும் அணிவதில்லை. மலையாளநாட் டில் நாயர்களில் இவ்வகைத் தொங்கடம் கொண்ட மூக் குத்தி அணிவது முன்னுளின் வழக்கம் என்க. 7. பேசும் பேச்சில் மலையாள நாட்டுச் சாயல் இருக்கக் காண்போம்.

மேலும் 'ஆ' என்ற எழுத்தை 'ஒ' என்று உச்சரிப்பது இரு நாடுகளிலும் காணும் பழக்கம். 'ஆம்' என்பதை 'ஒம்' என்றும், 'காப்பி' என்பதைக் 'கோப்பி' என்றும் வழங்குவது இயல்பு. 8. கோயில்களில் மிகக் கடுமையான ஒழுக்கங்கள் இருநாடுகளிலும் உண்டு. மார்பின்மேல் மேலாடை இட்டுக்கொண்டு உள்ளே செல்லல்கூடாது, கைகால் கழுவிவிட்டுத்தான் உள்ளே செல்லல்வேண்டும் என்பவை கடுமையாகக் கைக்கொள்ளப்படுகின்றன. 9. கோயில்களில் பெரும்பான்மையாக ஒட்டுவில்லை மண்டபங்களே உண்டு. இது மழை மிகுதியின்பொருட்டாக இருக்கலாம். 10. தமிழர்கள் 'சட்டம்' 'தேசவளமை' என்ற வழக்கப்படி நடைபெறுகிறது. இந்தியாவில் இருப்பதைப் போல வடநாட்டு மிதாட்சரமோ விக்ஞானேசுரமோ இல்லை. சொத்துரிமை, தத்து எடுத்தல் முதலிய குடும்ப முறைகள் எல்லாம் நாட்டுவழக்கத்தின்படியே நடைபெறுகின்றன. இந்த வழக்கங்களை ஆராய்ந்துபார்க்கையில் சேரநாட்டு வழக்கங்களையே மிகுதியாக இலங்கைத்தமிழர்கள் போற்றிவருகின்றனர் என்பது அறியக்கிடக்கிறது.

வேறு சில பழக்கங்களும் இந்நாட்டில் புகுந்திருக்கின்றன. நோய் முதலியவைகள் நீங்குவதற்காகச் சில வேண்டுதல்கள் செய்வதுண்டு. ஊர்தேவதைகளுக்கு இவைகளைச் செய்வார்கள். இவைகளைப் பெரும்பாலும் பிற்காலத்தில் வன்னியர்கள், மறவர்கள் முதலிய தமிழ்க் குடிகள் போர்க்காலங்களில் குடியேறினபோது கொண்டு சென்றிருக்கலாம். மறவநாடு, தென்பாண்டிநாடு இவைகளிலிருந்து இவ்வழக்கங்கள் புகுந்திருக்கக்கூடும். அய்யனார் கோயில்களிலும் அம்மன்கோயில்களிலும் ஆடு, கோழி முதலியவை பலிகொடுத்துக் குருதி சிந்துதல், கரகம் எடுத்துக்கொண்டும் காவடி எடுத்துக்கொண்டும் ஆடுதல், வேல் எடுத்துக்கொண்டு வெறியாடுதல், நெருப்புக் குழி மிதித்தல், நாக்கிலும், கன்னங்களிலும், முதுகிலும் ஊசிகளையும் கம்பிகளையும் குத்திக்கொண்டு ஆடுதல், சலாகைத்தேர், பூந்தேர் இவைகளை இழுத்தல், நெருப்புச் சட்டி என்ற பூச்சட்டி யெடுத்து ஆடுதல் இவைகளில் சில.

கற்பூரம் பற்றவைத்துப் பூசை செய்தல் மிகுதி. தெய்வங்கள் ஊர்வலம் வரும்போது அவரவர்கள் வீட்டு வாசலில் ஒரு விசிப்பலகை இட்டு, அதன்மீது இரண்டு விளக்குகள், ஒரு பூரணகும்பம், தேங்காய், பழம், அடைக்காய் வெற்றிலை முதலியவைகளை வைப்பார்கள். அருச்சகர் அங்கே வந்து தேங்காய் உடைத்துப் பூசைசெய்துவிட்டுச் செல்வார். இப்பழக்கம் மிக நன்றாக இருக்கிறது. பெரியார்கள் ஊர்வலம் வரும்போதும் இவ்வாறு செய்வதுண்டு.

கோயில்களிலே வெடிகாய் உடைத்தல், பவனிகளிலே விடுபழம் எறிதல் முதலியவைகளும் உண்டு. நமது நாட்டில் சூறைவிடுவது என்று சொல்லுவார்கள்.

இதுவரை முத்தின் தலைப்பகுதியின் பொலிவை விவரித்தோம். இனி, முத்தின் பரப்பிற்குச் செல்வோம். பரப்பிலே வடபகுதியிலே ஒரு சிறந்த சித்திரம் செதுக்கப்பட்டு விளங்குகிறது. அதுதான் அநுராதபுரப் பகுதியின் பண்டைச் சிற்பப் பெருமை. அதை இனி விவரிப்போம்.

---

5. முத்துப் பரப்பில் பண்டைச் சித்திரம்

அநுராதபுரப் பழைமை

காலை $7\frac{1}{2}$ மணிக்கு யாழ்ப்பாணப் புகைவண்டிநிலையத்தில் வண்டி ஏறினேன். அன்பர்கள் வண்டிநிலையத்திற்கு வந்து வழியனுப்பினர்கள். தெற்குமாகாணங்களிலே திருட்டு மிகுதி என்றும், எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்றும் கூறினர்கள். அவர்கள் அன்பே அன்பு. சிலநாட் பழக்கம்; அதற்குள் அன்பு வேரூன்றிவிட்டது. "ஒருநாட் பழகினும் பெரியோர் கேண்மை இருநிலம் பிளக்க வேர்வீழ்க் கும்மே," என்பதை அவர்களிடம்தான் கண்டேன். வண்டி நகரும் வரையில் கூடவே உட்கார்ந்துகொண்டிருந்து, நகரும் தறுவாயில்தான் கீழ் இறங்கி, வணங்கிவிட்டு விடைபெற்றுக்கொண்டார்கள்.

வழியில் பசியும் விடாயும் தோன்றுவண்ணம் சிற்றுண்டியும், ஒரு 'போத்தல்' (புட்டி) நன்னீரும் வாங்கிவைத்திருந்தார்கள். இவ்விரண்டும் மிக இன்றியமையாத பொருள்கள் என்று பின்னல் அறிந்தேன். நான் இருந்த வண்டி அறைக்கு அடுத்த அறையில் ஓர் இசுலாமிய வணிகர் இருந்தார். அவரை என் அறைக்கு அழைத்தேன். "மங்கையர்கள் கூட இருப்பார்கள் என்று எண்ணி வரவில்லை; இப்போது வருகிறேன்," என்று சொல்லிவிட்டு என்னுடன் அமர்ந்தார். அவர் கீழக்கரை வணிகர் என்றும், தமிழர் என்றும், இலங்கையேயன்றி, ஆந்திர நாடுகளிலும் பெருத்த வாணிபம்செய்பவர் என்றும் தெரிந்துகொண்டேன். கீழக்கரை மரக்காயர்கள் எந்தத் தொலைகளுக்கும் சென்று வாணிபம் செய்கிறவர்கள். மிகுந்த பொருள் பெற்று செல்வாக்கோடு வாழ்பவர்கள். தங்கள் சமயத்தில் மிகுந்த ஆர்வம் உடையவர்கள். இருந்தாலும், பொறுமை அழுக்காறு இல்லாதவர்கள் என்று அறியவேண்டும். வழித்துணைக்கு ஏற்ற நண்பராக அவர் அமர்ந்திருந்தார்.

யாழ்ப்பாணத்தைவிட்டுப் புகைவண்டி தென்கிழக்காகத் தென்மருட்சிப்பகுதியில் சென்றது. ஒவ்வொரு சிறு நிலையத்திலும் நின்று நின்று சென்றது. பாதையின் இருபுறங்களிலும் தென்னந்தோப்புகளும், பனங்காடுகளும், நெல்வயல்களும் காணப்பட்டன. வலிகாமத்தைப் போல அத்துணை செழிப்பாக நிலம் இருக்கவில்லை. கொடிகாமம் முதலான பெயர்கள் சிங்கள ஆதிக்கத்தைக் காட்டின. பிறகு உப்புநீர்நிலைகள் மிகுதியாக இருந்தன. யானையிறவு வரைக்கும் நிலத்தன்மை இவ்வாறுகவே இருந்தது. யானையிறவு தாண்டினதும் நிலத்தியல்பு மாறிவிட்டது. இலங்கைத்தீவின் பரப்பிற்கு வந்துவிடுகிறோம். பாதையின் இருபுறங்களிலும் பெரிய இருளடர்ந்த காடுகள். மரங்களோ வான் அளாவி நின்றன. இடை இடையில் நீர் ஓடைகள் ஓடுகின்றன. மக்கள் தொகுதி காணப்படுவதில்லை. ஊர்களும் இல்லை. நெடுந்தொலைக்கு ஒரு நிலையம் இருக்கிறது. அதனைச் சுற்றிச்

சில குடிசைகள். காட்டுத்தொழில் ஆட்கள்தாம் காண முடியும். ஆனல், நிலமோ சமநிலம்தான். சமநிலத்தில் அப்படிப்பட்ட காடுகளை நமது நாட்டில் காணல் இயலாது. வவுனியா என்ற நிலையத்திற்கு அருகில் சில குன்றுகள் காணப்பட்டன. மதவாச்சிச் சந்தியில் மன்னுர் செல்லும் பாதை பிரிகிறது. இந்த இடத்திலும் மக்கள் தொகுதி காணப்படவில்லை. பகல் பன்னிரண்டுமணிக்கு வண்டி அநுராதபுரம் அடைந்தது. காடுகள் விலகிப் பயிர்பச்சை காணப்பட்டது. சில வீடுகளையும் கட்டடங்களையும் பார்த்தேன்.

வண்டிநிலையத்தில் அன்பர்கள் இருவர் என்னை வர வேற்றார்கள். அவர்கள் விவேகானந்த சபையின் உறுப் பினர்கள். நிலையத்திலிருந்து நான் தங்கும் இடத்திற்கு ஒரு குதிரைவண்டியில் சென்றோம். வழி முன்பார்த்த நினைவை ஊட்டிற்று. இவ்வூர் ஆறுகிய மால்வதஜயா வைக் கடந்தோம். முன் இதில் குளித்ததும், முதலைகளின் அச்சம் இருந்ததும் நினைவிற்கு வந்தன. இப்போது முதலைகள் இல்லை எனக் கேள்விப்பட்டேன். ஈசுவரமுனி கோயிற் பாதையில் திரு. இராமசாமி அவர்கள் வீட்டில் வசதிசெய்திருந்தார்கள். அப்பெரியார் தமிழி லும் சமயத்திலும் ஆழ்ந்த அன்புள்ளவர்; வழக்கறிஞர் தொழிலில் அமர்ந்தவர்; வயதில் முதிர்ந்தவர். அவர் மக்கள் வேறுதொழில்களில் அமர்ந்து வேறிடங்களில் வாழ்ந்துவருகிறார்கள். ஆகவே, அவர் இல்லம் நான் இருக்க மிக அமைதியாகவிருந்தது. அவர்தாம் விவேகா னந்த சபையின் தலைவர். என்னை அழைத்துச் சென்ற திரு. சிவராமலிங்கம் அச்சபையின் செயலாளர்; புகைவண்டி கந்தோரில் தொழில்பார்ப்பவர். மற்றொரு நண்பர் திரு. கதிர்வேலு என்பார், தேயிலை விருத்திச்சாலை யில் இருப்பவர். இவரும் சபையில் ஒரு சிறந்த உறுப்பி னர். இம்மூவரும் எனக்குச் செய்த நன்றிக் களவில்லை. அன்றைய நாள் அங்கேயே தங்கும்படி வற்புறுத்தினர்கள். நானும் ஒத்துக்கொண்டு, கொழும்புப் பயணத்தை மாற் றிக்கொண்டு, தந்திமூலமாகத் தெரியப்படுத்தினேன். இவ்

வூர்ச் சிறப்புகளை அன்று திரு. இராமசாமியும், மறுநாள் திரு. நட்டாசரும் எனக்குக் காட்டினர்கள். அவைகளின் சுருக்க விவரத்தை இனி எழுதுகிறேன்.


இருண்ட காட்டின் நடுவே திரண்ட நகரம் ஒன்று இருந்திருக்க முடியுமா என்று ஐயுறுவோம். 24 நூற்றாண்டுகளுக்குமுன் இந்த அடர்ந்த காட்டில் ஒப்புயர்வற்ற ஒரு தலைநகர் இருந்தது உண்மை. சிறந்த மன்னர்கள் இங்கே ஆட்சிபுரிந்தார்கள். உயர்ந்த துறவோர்கள் அறவாழிபயந்தஅறிவன் அறவுரைகளை மக்கட்கு உரைத்தார்கள். நாளடைவில் அரசியல் மாறிற்று. தலை நகரம் வேறிடம் ஆயிற்று. பகைவர்கள் தூய இடங்களைக் கொள்ளையடித்துப் பாழ் ஆக்கினர்கள். மக்களும் பிற இடங்கள் புகுந்தார்கள். மக்கள் இருப்பு விலங்குகள் இருப்பு ஆகிவிட்டது. நகரிடம் காட்டிடம் ஆகியது. சிறந்த நகரம் புதைந்த நகரம் எனும் பெயர் எய்தியது.

தற்போதோ பண்டைப் பெருமை ஆயும் அறிஞர்கள் தோன்றி ஆராய்ச்சி புரியலானர்கள். பௌத்தசமயத்திற்கு மறுமலர்ச்சி தொடங்கியது. பௌத்தகுரவர்கள் தற்காலப் படிப்புப் பெறத் தொடங்கினர்கள். தங்கள் பண்டைய நிலையங்களைப் புதுப்பிக்கத் தொடங்கினர்கள். பௌத்தபெரியோர்கள் அக்கரை எடுத்துக்கொண்டார்கள். ஊர் வளரத் தொடங்கியது. பண்டை ஊருக்குப் புத்துயிர் வந்தது. சிங்களர் படித்து அமைச்சத் தொழிலை ஏற்கத் தொடங்கியதும், அநுராதபுரத்தில் தூய வனத்தில் முளைத்த களைகளான உலகச் சார்பான விடுதிகளை அகற்றி, தூய இடத்தைத் தூய வனமாக்கி, உலக விடுதிகளை அருவி ஆற்றிற்கு மேற்கே தள்ளிவிட ஏற்பாடு செய்துவருகிறார்கள். அநுராதபுரத்திற்கு மீண்டும் செழிப்பு வரத் தொடங்கியது.

புத்தபகவான் மகாநிருவாணம் அடைந்த நாளே மகதநாட்டு இளவரசன் விசயன் இலங்கைக்கரை அடைந்தான். அங்கே ஒரு நாககன்னியை மணந்து இலங்கைக்கு அரசனானன். அவனுடைய வழிமுறையார் அநுராத

புரத்தைத் தலைநகர் ஆக்கினர்கள். அநுராதன் என்ற அமைச்சன் அநுராத நாளில் இந்நகரை உண்டாக்கினன். அதனாலே இந்நகர் இப்பெயர் எய்திய தென்பர். பின்னர் மகதநாட்டு மௌரிய மன்னர்மன்னன் அசோகன், புத்த தருமத்தை உலகம் முழுதும் பரப்பவேண்டும் என்ற அவாவினால், தன் மகன் மகிந்தனையும், மகள் சங்கமித்திரை யையும் இலங்கைக்கு அனுப்பினன். அவ்விரு தூயோர் களும் இலங்கைக்குப் போதிமரத்தின் (வெள்ளரசு) கிளை யைக் கொண்டுவந்தார்கள். அதனை அநுராதபுரத்தில் வைக்கவே, அது தழைத்துப் பெரிய மரமாகியது. அதுவே இப்பொழுதும் இந்த நகரில் விளங்கிநிற்கிறது. நாள் தோறும் நூற்றுக்கணக்கான மக்கள் இதனை வணங்கு கிறார்கள். திருவிழாக்காலங்களில் ஆயிரக்கணக்கான பேர் இங்கு வந்து தூய சிந்தனையில் ஆழ்கிறார்கள். மகிந் தன் இலங்கைக்கு வந்தபோது இலங்கை அரசன் திசன் என்பவன். அவனை மகிந்தனால் உபதேசம் பெற்று, புத்த தருமத்தை ஏற்றுத் தூயனாகி, தேவானும்பிரியதிசன் என்ற பெயர் பெற்று, கி. மு. 247-207 ஆண்டுகளில் பல சிறந்த தொண்டுகளைச் செய்து புகழ்பெற்றான். மகிந்தன் உபதேசம் செய்து, நாட்டுமக்களைச் சீர்ப்படுத்திய இடம் இவ்வூருக்குக் கிழக்கே சில கல் அளவில் உள்ள அழகிய மலையாகும். அது மகிந்ததலம் என்ற பெயருடன் வழங்குகிறது. மகிந்தன் திருவடி நின்ற இடம் காணுவ தற்கு 2000 படிகள் ஏறவேண்டும். அப் படிகளைப் பிற் காலத்தார் அழகாக அமைத்துள்ளார்கள்.

நகரத்திற்கு வடகிழக்கில் அழகிய ஏரிகள் இருக்கின் றன. நகரத்திற்குக் குடிவசதிக்காகவும், அடுத்துள்ள நிலங்களில் பயிரிடுவதற்காகவும் பல்லாண்டுகளுக்கு முன் னரே விசயவமிசத்து மன்னர்கள் அவ்வேரிகளைக் கட்டி யிருக்கிறார்கள். இவ்வேரிகளின் கரைகள் மிகவும் வலு வாகக் கட்டப்பட்டுள்ளன. நீர் நிறைந்துள்ளபோது அவ் வேரிகளின் கரை வழியாகச் சென்றால் மிகவும் இன்பமாக இருக்கும். இப்போதும் இந்நகரத்துப் பெருமக்கள்



போதி மரம்

[பக்கம்-எசு]

மாலை வேளைகளில் இவ்வேரிக்கரைகளின் மீது இன்ப மாக நடந்துசெல்வ துண்டு. இவ்வேரிகளில் ஒன்று நுவரவெவா என்பது. இதனுடைய பொருள் நகரவாவி என்பது. அம்மொழியின் திரிபு என்றே சொல்லவேண் டும். இந்த ஏரியின் நீர் மிகத் தெளிவாக இருக்கிறது. அதன் கரையில் அழகிய மரங்கள் வானளாவி நிற்கின்றன. அவ்வேரியிலிருந்து வழிந்தோடும் கலிங்கல் நீர், ஊர் வழி யாகக் கால்வாய்களில் பாய்ந்துசெல்வது மிகவும் அழகாக இருக்கிறது. இக் கால்வாய் அடுத்துள்ள வயல்களுக்குப் பாய்கின்றது. இவ்வேரியின் கரையில் கிழக்கு நோக்கி நின்றால், இரண்டு சிகரங்கள் அடங்கிய ஒரு மேடு தோன் றும். இம் மேட்டின்மீதுதான் 2150 ஆண்டுகளுக்குமுன், ஆனி மாதத்து முழுமதியிலே, அசோக மன்னனுடைய திருக்குமாரன் மகிந்தன் வந்திறங்கி, திசன் என்ற இந் நாட்டு மன்னனுக்குத் தருமோபதேசம் செய்தது. அங் கிருந்து மறுபுறம் நோக்கினால் தென்னந்தோப்புகளுக்கு மேலே மூன்று உயரிய செய்குன்றுகள் தோன்றும். அவைகள் பௌத்த சமயத் தூபிகள். அவைகளே இப் பண்டைய நகரத்தின் பழமையையும் தூய்மையையும் விளக்குகின்றன. மூன்றாம் காலத்து உலகிலேயே சிறந்த நகரம் இதுவாகும் என்று இவ்விகாரங்கள் காட்டி நிற்கின்றன.

சேதவன ஆராமம்

அச் செய்குன்றுகளான தூபிகளில் ஒன்று 'சேதவன ஆராமம்' என்ற பெயர் கொண்டது. இஃது இப்போது புல்லும் செடியும் அடர்ந்து கிடக்கிறது. இதனைப் பொது மக்கள் 'அபயகிரி' என்று கூறுவார்கள். இங்கேதான் 'தம்மருசி' என்ற பௌத்த சங்கத்தார் இருந்ததாகச் சொல்லுவார்கள். இத் தூபியைக் கண்டதும் அதன் வாயிலில் பௌத்த சமயத்து ஆண் பெண் பாலார்கள் எல்லாரும் முழங்காலிட்டுப் பணிவார்கள். இந்தத் தூய தலத்தில் எவரும் பொய் சொல்லத் துணியமாட்டார்கள். ஆகவே, இங்கே வழக்குகள் மிக எளிதில் தீர்க்கப்படும்.

உலோப மகாபயம்

முன்னே சொன்ன வெள்ளரசு (போதி) மரத்துக் கோயிலுக்கு முன்னுல் உள்ள பெரிய வெளியில் 'உலோப மகாபயம்' (பெரிய வெங்கல அரண்மனை) என்ற சின்னத் தொகுதி நிற்கின்றது. இதில் நூறுமுழம் சதுரமும் நூறுமுழம் உயரமும் உள்ள ஒரு கனசதுர கட்டடம் இருந்ததாம். இதனுடைய சிகரத்தில் பித்தளைத் தகடுகள் வேயப்பட்டிருந்தனவாம். இதனைக் கட்டின மன்னன் துட்டகெமுனு என்பவன். இவன் கி. மு. 161 முதல் 137 வரை ஆண்டவன். இந்நாட்டை வென்று அரசாண்ட ஏலேலசிங்கன் என்ற தமிழ் மன்னனோடு போர்புரிந்து அவனைத் துரத்திவிட்டுச் சிங்காதனம் ஏறிய இந்தக் கெமுனு என்ற மன்னன், தன் வெற்றியின் காரணமாக இப்பெரிய பவனத்தைக் கட்டினனும். இதில் பௌத்த துறவிகள் தங்கியிருந்தார்கள். இதன் நடுவில் ஒரு பெரிய சபைக் கூடம் இருந்தது. அது தேர்போல அணிசெய்யப்பெற் றிருந்தது. தங்கத் தூண்கள் நிறுத்தி, முகட்டில் தேவதை கள், தூய விலங்குகள் முதலியவைகளின் உருவங்கள் அமைக்கப்பட்டிருந்தன. ஒருபுறம் தந்தச் சிங்காதனமும், சூரியபிம்பம் தங்கத்தினாலும், சந்திரபிம்பம் வெள்ளியி னாலும், விண்மீன்கள் முத்துக்களாலும் அணிசெய்யப்பெற் றிருந்தன. இந்தப் பவனம் ஒன்பது அடுக்குகள் கொண் டிருந்தது. ஒவ்வொரு அடுக்கிலும் நூறு அறைகள் இருந்தன. அறைகளில் மெல்லிய விரிப்புகளும் பொன் ஆசனங்களும் வைக்கப்பட்டிருந்தன. முகட்டிலிருந்து மணிகளால் ஆக்கப்பட்ட பொன்மலர்கள் தொங்கவிடப் பட்டிருந்தன. இன்னும் பலவகையான சிறந்த அணிவகை களும் செய்யப்பட்டிருந்தன. இந்த அறைகளிலே துறவி கள் தங்கள் தங்கள் தகுதிக்கேற்றபடி அமர்ந்திருந்தார்கள். மேலே நான்கு திக்குகளில் முத்தர்கள் எழுந்தருளி யிருந்தார்கள். இவ்வகையான அருமை வேலைப்பாடு இந்தக் காலத்தில் மாயமாகப் போய்விட்டது. இப்போது நூற்றுக் கணக்கான கல் தூண்கள்தாம் நிற்கின்றன. பின்காலத்தில் வந்த பிற சமயத்தவர்களும் கொள்ளைக்காரர்களும்

பேராசைப் பேய்களும் இந்த அருமையான பவனத்தை அழித்துப் பாழாக்கிவிட்டார்கள்.


மகாதூபம்

துட்டகெமுனு என்ற அதே அரசன் மற்றொரு சிறந்த கட்டடத்தைக் கட்டியிருக்கிறான். அதுதான் 'மகாதூபம்' என்ற செய்குன்று. இதனைக் கட்டத் தொடங்கும் போது 500 கொத்தர்களை வரும்படி பறையர்களை அனுப் பினான். அவர்கள் ஒவ்வொருவனையும், 'நீ என்ன வேலை ஒருநாளில் செய்யமுடியும்' என்று கேட்டான். அவர்களில் ஒருவன், மிகப் பெருமையாக 'நூறு மக்கள் இழுக்கக்கூடிய வண்டியில் உள்ள களிமண் முழுவதும் செங்கல் செய்து கொடுப்பேன்,' என்றான். ஏனையோர்களும் இதைப் போலவே பெருமை பேசினார்கள். ஆனால், ஒருவன் மட்டும் 'செங்கல் செய்வதற்கு மண்ணும் மணலும் அரைக்க வேண்டியிருப்பதால், அக்காரியம் எளிதில் ஆகாது' என்றான். அதைத்தான் அரசனும் மதித்தான். அப்போது அவனுக்கு ஆவேசம் வந்து ஒரு தங்கக் கிண்ணியில் தண்ணீர் விட்டான். அதில் ஒரு அழகிய குமிழி எழுந்தது. 'அவ்வுருவத்தைப்போலத் தூபியைக் கட்டிமுடிப்பேன்' என்று சொன்னான். அரசனும் அதைக் கேட்டு மகிழ்ந்து அவனையே அவ்வேலைக்குக் காணியாளனாக நியமித்தான். வேலை செய்யும் ஆட்களுக்கு வேண்டிய துணி உணவு நீர் முதலியவைகள் கொடுக்கப்பட்டன. அந்தத் தூபியில் மிகுந்த விலை பொருந்திய பொருள்கள் வைக்கப் பட்டன. தூபி கட்டி முடிவதற்குள் கெமுனுவின் காலம் நெருங்கிவிட்டது. அதைப் பார்த்துவிட்டு உயிர்விட வேண்டும் என்ற எண்ணம் கொண்டிருந்ததனால், அவனு டைய தம்பி மூங்கிலாலும் மரத்தாலும் வேலையை முடித் துச் சாயம் அடித்துவைத்து அவனுக்குக் காட்டினான். பல்லக்கில் சென்று அத்தூபியைப் பார்த்துவிட்டு அப் பேரரசன் உயிர் துறந்தான். இத்துணை பயபத்தியுடன் தூபியைக் கட்டின கெமுனு இக்காலத்தில் மீண்டும் தோன்றினால் அவன் மனம் எவ்வகையாயிருக்குமோ அறியோம்.

ஆனல், அண்மைக்காலத்தில் பௌத்தர்கள் ஒன்று சேர்ந்து இலட்சக்கணக்கான தொகைகளைச் சேர்த்து, அம் மகாதூபியைப் புதுப்பித்துவருகிறார்கள். மேலே மூளைத் திருந்த செடிகொடிகளை அழித்துவிட்டு, அருமையான காரையினல் முழுவதையும் கட்டிவிட்டார்கள். இப்போது சமகிலத்தில் கல் பரவி வருகிறார்கள். ஆனல் இவ்வேலை முழுவதும் தமிழ்நாட்டுச் சிற்பிகளினல் செய்யப்பட்டு வருகிறது. சிங்களத் தொழிலாளிகளுக்கு இவ்வேலையும் செய்யமுடியவில்லை. இவ்வேலை முற்றுப்பெற இன்னும் பல ஆண்டுகள் செல்லும். ஆனல், முற்காலத்திலிருந்த அழகிய சிற்ப உருவங்களையும் வடிவங்களையும் இவர்களால் செய்யமுடியவில்லை.

இந்நகரத்தைக் கட்டி இதனைத் தலைநகராக்கிய மன்னன் பாண்டுக அபயன் என்பவன். அவன் 437 முதல் 367 கி. மு. வரை ஆண்டவன். அபயவாபி என்ற குளத்திற்குத் தெற்கில் ஒரு அழகிய மாளிகை கட்டி அதில் வசித்து வந்தான். ஊரில் பல தொழிலாளிகளையும் குடியேற வைத்தான். நகரைத் தூய்மைப்படுத்தற்கென்று ஆயிரம் தோட்டிகளை ஏற்படுத்தி, அவர்களுக்குத் தனியாக விடுதி கள் ஏற்படுத்தினன் என்றல், அவ்வூரின் பரப்பைப்பற்றிச் சொல்லவும் வேண்டுமா?

பண்டைய அரண்மனைகளின் அடையாளங்கள் பல காதங்கள்வரை கிடக்கின்றன. அவைகள் ஒவ்வொன்றை யும் பார்த்துவருவதற்கு நெடுங்காலம் பிடிக்கும். அரண் மனைகளின் அடையாளங்கள், துறவிகளின் இடங்கள், செல்வர்களின் வீடுகள், கோயில்களின் முற்றங்கள் பல இடங்களில் சிதறிக்கிடக்கின்றன. அவைகளில் கற்றாண் கள், படிக்கற்கள், உருவச்சிலைகள், துவாரபாலகர்கள் பல இருக்கின்றன. உருவங்களின் வேலைப்பாடு மிகச் சிறந்தது. ஒரு கல்லில் நாகப்பாம்பும் கீரிப்பிள்ளையும் மிகுந்த சினத் துடன் சண்டைபிடிப்பதுபோல் செதுக்கப்பட்டிருக் கிறது. மற்றொரு இடத்தில், ஒரு தாய்க்குரங்கு தலைகீழ் தொங்கும்போது, அதன் குட்டி அதன் கழுத்தை இறுகப்



ஈசுவரமுனி கோயில் - மிகப் பழமையான அழகிய புத்தர் கோயில்

பிடித்திருப்பதுபோல் சித்திரிக்கப்பட்டிருக்கிறது. இராணியின் அரண்மனை என்று சொல்லும் பகுதியில் ஒரு அழகிய வாயில் இருக்கின்றது. அதன் படிகளில் குறுகிய பூதங்கள், சிங்கங்கள் முதலியவைகள் சித்திரிக்கப்பட்டிருக்கின்றன. கீழ்ப்படியை ஒட்டிப் பிறைவடிவமாக ஒரு பெரிய கல் அமைக்கப்பட்டிருக்கிறது. அதில் மலர்கள் அழகாக வரையப்பட்டிருக்கின்றன. மற்றும் பல இடங்களில் சிறு-நீர் விடும் இடங்கள், கால் கழுவும் இடங்கள் இவைகள் மிகவும் அழகாகச் செதுக்கப்பட்டிருக்கின்றன. அவைகளில் உள்ள சித்திரங்கள் மிகுந்த நுண்ணிய வேலைப் பாடோடு அமைந்திருக்கின்றன. மரங்களின் நிழலில் உள்ள புத்த விக்கிரகங்கள் அருமையான வேலைப்பாட்டோடு அமைந்தவை.

தூபாராமம்

தேவனும்பிரியதிசன் ஏற்படுத்திய மற்றொரு தூபம் இலங்கையிலேயே மிகப் பழையதாகும். அதன் பெயர் 'தூபாராமம்' என்பது. அதில் புத்த பகவானுடைய ஒரு எலும்புத்துண்டு வைக்கப்பட்டுள்ளது. கெண்டாமணியைப் போல் கட்டப்பட்ட இந்தத் தூபியைச் சுற்றிலும் 22 அடி உயரமுள்ள பெரிய கல்தூண்கள் நிறுத்தப்பட்டிருக்கின்றன. மேலும், மகிந்தன் சங்கமித்திரை இவர்களுடைய ஈமச்சாம்பல்களும் சில தூபிகளில் காப்பாற்றி வைக்கப்பட்டுள்ளன. புத்தருடைய ஒரு பல்லை மிகப் பயபத்தியோடு இலங்கைக்குக் கொண்டுவந்து இந்த இடத்திலுள்ள ஒரு தூபியின்கீழ் வைத்திருக்கிறார்களாம். அந்தத் தூபி இன்றும் பத்தியோடு வழிபடப்படுகின்றது. ஏலேலசிங்கனுடைய சமாதி யென்று சொல்லப்பட்ட ஒரு செய்குன்று, இப்போது அது அன்று என்று சொல்லப்படுகின்றது.

ஈசுவரமுனி

அனுராதபுரத்தில் நான் கடைசியில் பார்த்தது ஈசுவரமுனி என்ற அருமையான இடம். இது கிசவேவா என்ற

குளத்தின் தென்கரையில் உள்ளது. இது ஒரு இயற்கைப் பாறையில் வெட்டப்பட்ட கோயில். இலங்கையிலேயே மிகப் பழமையானது; மிக அழகும் வாய்ந்தது. வயல்களின் இடையில் சுமார் 200 முழம் வரையில் ஒரு பாதையில் சென்றால், இந்தப் பெயர்பெற்ற இடத்தை அடையலாம். இப்பாறையின் அருகே ஒரு அணை கட்டப்பட்டுள்ளது. அதன்மேலில் ஏறிப்பார்த்தால் மிகுந்ததலம் என்ற மலை தெரியும். அதுதான் மகிந்தன் புத்ததருமத்தைக்குறித்து முதலுபதேசம் செய்த இடம். ஈசுவர முனியில் நீர் வசதி மிக அழகாக இருக்கும். உள்ளே சென்றதும் வலப் புறத்தில் ஒரு அழகிய குளம் இருக்கிறது. இதில் தாமரைகள் மலர்ந்திருக்கின்றன. கணக்கில்லாத சிறு ஆமைகள் நீந்திக்கொண்டிருக்கின்றன. தண்ணீரோ மிகத் தெளிவு. அருகில் ஒரு பாறையிலே பல உருவங்கள் சித்திரிக்கப் பெற்றிருக்கின்றன. இரு பாறைகளுக்கு இடையில் யானைகள் செதுக்கப்பட்டிருக்கின்றன. ஒரு பிளவை அடுத்து இவ்வுருவங்கள் இருப்பதனால், மாமல்லபுரத்தில் உள்ள அருச்சுனன் தவசு என்ற சித்திரம் என் நினைவுக்கு வந்தது. அதனை அடுத்துள்ள பாறைகளில் பல அருமையான உருவங்கள் வெட்டப்பட்டுள்ளன. உட்கார்ந்த நிலையில் புன்சிரிப்போடு ஓர் உருவம் சித்திரிக்கப்பட்டுள்ளது. இதனைக் கபிலர் என்று கூறுவர். மற்றும் சில உருவங்கள் ஆணும் பெண்ணுமாகச் செதுக்கப்பட்டிருக்கின்றன. பெண் ஆணுடைய துடையின்மீது உட்கார்ந்த வண்ணமாக இருப்பதனால், இவை சிற்றின்பப் படங்களோ என ஐயுறவேண்டும். இவை பௌத்த மடத்தில் எப்படி வந்தன என்று கேட்கலாம். ஒருவேளை இக்கோயில் முன்காலத்தில் சிவன்கோயிலாக இருந்ததோ என்று சிலர் கேட்கின்றனர். வடிவங்கள் மிக நுட்பமாக ஆக்கப்பட்டிருக்கின்றன. சிற்பி மிக அறிவாளி என்பதை அது காண்பிக்கிறது. முகங்களில் இன்பம் மிளிர்கின்ற தோற்றம் காணலாம். பாறைகளில் நடுவில் 24 படிகள் கொண்ட வழி மேலே ஏறும். இருபுறங்களிலும் துவாரபாலகர்களின் உருவங்கள் செதுக்கப்பட்டிருக்கின்றன. கைப்பிடிச் சுவர்

களில் வேறு சில உருவங்கள் உள்ளன. மேலே ஏறினதும் ஒரு ஓட்டுவில்லை மண்டபத்துள் புத்தச் சிலையைக் காண்கிறோம். இது பாறையில் குடைந்த குடைமண்டபத்தில் வைக்கப்பட்டுள்ளது. பல்லவர் குடைமண்டபத்தை ஒத்திருக்கிறது. வில்லை மண்டபம் பிற்காலத்தில் கட்டப் பட்டது என்று அதனைப் பார்த்தவுடனே தெரிய வரும். இது அந்தத் தூய இடத்தின் பெருமையைக் கெடுத்துவிடுகிறது. மேலும் பாறைகளுக்கு மேலே இரும்பு ஏணிகளும் கிராதிகளும் செய்துவைத்துள்ளார்கள். இவை களும் அவ்விடத்தின் பெருமையைக் குறைத்துவிடுகின்றன. இனி, இந்தப் பண்டைய கோயிலுக்கு வெளியில் தற்காலிக மடம் ஒன்று பெரிதாகக் கட்டியுள்ளார்கள். அதில் புத்த விக்கிரகங்கள் வைக்கப்பட்டுள்ளன. நான் அங்குச் சென்ற போது பெருத்த மக்கட்கூட்டம் இருந்தது. அது அட்டமி நாள். அட்டமி புத்தர்களுக்குத் தூய நாள். ஆண் பெண் பிள்ளைகளுடன் வழிபாட்டுப் பொருள்களை எடுத்துக் கொண்டு சிங்களவர்கள் கோயிலுக்குச் செல்லுகிறார்கள். செந்தாமரைகளை ஒவ்வொருவரும் கொண்டுசெல்கிறார்கள். அம்மலர்களைப் புத்த பகவானின் பாதத்தில் மிகுந்த வணக் கத்துடன் வைத்துத் தொழுகிறார்கள். புத்தர் 'மலர்மிசை ஏகினவர்' அல்லரோ! செந்தாமரையே அவருக்கு உகந்த மலர் என்பர்.

ஏலேலசிங்கன்

நான் இறங்கியிருந்த வீட்டிற்கு அருகில் எதிர்ப் புறத்தில் பெரிய செய்குன்று இருந்தது. அது செடிகளா லும் புற்களாலும் மறைந்துகிடந்தது. பார்வைக்கு உண் மைக் குன்றுபோலத் தெரிந்தது. இந்நாள்வரையில் இக் குன்றைத் தமிழ் மன்னனை ஏலேலசிங்கனுடைய சமாதி என்று கருதியிருந்தனர். அண்மையில் பண்டை ஆராய்ச் சிப் பகுதியார் இந்தக் கட்டடத்தை ஆராய்ந்து பார்த்தார் கள். இதுவும் ஒரு தூபி என்பது தெரிந்தது. ஏலேல சிங்கன் தமிழ் நாட்டிலிருந்து வந்த அரசன் என்று முன்னமே குறித்துள்ளோம். இவன் சிங்களரை வென்று

44 ஆண்டுகள் இலங்கையை ஆண்டான். இவனைப்பற்றி, மனுநீதிச் சோழனைப்பற்றிய கதைபோல் ஒன்று வழங்குகிறது. ஏலேலன் தன் அரண்மனை வாயிலில் ஒரு மணி கட்டிவைத்திருந்தான். முறையிடுபவர்கள் இம் மணியை ஆட்டினதும் அரசன் வந்து விசாரிப்பான். ஒருநாள் இவ் வரசன் குமாரன் திசவெவாவிற்குச் செல்லுகையில் ஒரு கன்றுக்குட்டியின்மீது தன் தேரை ஏற்றிவிட்டான். கன்று இறந்துவிட்டது. தாய்ப்பசு சீறிக்கொண்டுபோய் அரண்மனை வாயிலில் இருந்த மணியை ஆட்டிற்று. அதனைக் கேட்ட அரசனோ, அவ்வரச குமாரனை அதே தேரின் சக்கரத்தில் இட்டுத் தண்டித்தான். இவ்வகை தவறுது நீதி செலுத்தினனும். மற்றொருமுறை ஒரு காக்கை தன் குஞ்சுகளை ஒரு நாகம் விழுங்கிவிட்டதாக முறையிட்டதாம். அதனைக் கேட்ட அரசன் அப்பாம்பைப் பிடிக்கச்சொல்லி, அதன் வயிற்றைக் கிழித்து, குஞ்சுகளை வெளியே எடுக்கச் சொல்லிக் கட்டளை இட்டானும். பாம்பின் உடலை ஒரு மரத்தில் தொங்கவிடும்படி சொல்லி, அதனால் மக்கள் குற்றம் செய்யாமல் இருக்கும்படி படிப்பித்தானும். இவ் வகையாகப் பல கதைகளும் இந்தத் தமிழ் அரசனைப்பற்றி வழங்கினதாக மகாவமிசத்தில் எழுதப்பட்டுள்ளது.

ஏலேலசிங்கன் நீதிமானாக இருந்தபோதிலும், வெளி நாட்டான் என்று சிங்களவர் எண்ணினார்கள். துட்ட கெமுனு அவன்மீது படை எடுத்து வெற்றிகொண்டான். அவனுடைய தகப்பன் அத் தமிழ் மன்னன்மீது போர் தொடுக்கக்கூடாது என்று தடுத்திருந்தான். இருந்தாலும் நாட்டின்மீது வைத்திருந்த பற்று தகப்பன் மொழியையும் கடந்துவிட்டது. அதனால் துட்டன் என்ற விருது பெற்றான். வாலிபர்களைச் சேர்த்துக்கொண்டு பயிற்சி கொடுத்துக் கலகம் செய்தான். ஏலேலசிங்கன் முதிய பருவம் அடைந்திருந்தான். அவன்மீது போர் தொடுத்து அவனைத் தோற்கடித்து அரியாசனம் ஏறினான்.

துட்டகெமுனு

துட்டகெமுனு சிறந்த போர் வீரன்; சமயத்தில் ஆழ்ந்த பற்றுக்கொண்டவன். அவனே அனுராதபுரத்தை

உயர்ந்த நகர் ஆக்கினவன். அங்குள்ள பெரிய தூபிகளை அவனே கட்டி, பௌத்த துறவிகளைக் குடியேற்றினவன். அத்தூபிகளில் ஒன்று மிரிசவேதி விகாரம் என்பது. இதன் பொருள் மிளகு விகாரம் என்பதே. துட்டகெமுனு மிளகு உண்பதில்லை என்று சூளுரைத்திருந்தான். அதனை மறந்து ஒருநாள் ஒரு மிளகை உண்டு விட்டான். பிறகு திருக்குளத்தில் நீராடச் செல்லுகையில் தன் வாளைக் கரையில் சொருகிவிட்டு நீராடினன். திரும்பி வந்து வாளை எடுக்க, அது வரவில்லை. தான் செய்த தவறு தெரிந்தது. அதற்குத் தண்டனை இது என்று அறிந்து, அதற்குக் கழுவாய் ஆக இந்தத் தூபியைக் கட்டினன். அதனாலே தூபியின் பெயர் 'மிளகு தூபி' என்று ஆயிற்றும். இதற்கருகிலே மயில் அரண்மனை என்ற ஒரு இடம் இருக்கிறது. அரண்மனை மறைந்துபோய் வெறும் தூண்கள் நிற்கின்றன. ஆராய்ச்சியாளர்கள் இது அரண்மனை அன்று என்றும், ஒரு கோயிலின் சிதைவுகள் என்றும் கூறுவர்.

தமிழ் மன்னர்கள்

அனுராதபுரம் கி. மு. 450-ல் பாண்டுக அபயன் காலத்தில் தலைநகரம் ஆயிற்று. அதுமுதல் 150 அரசர்கள் அங்கே ஆண்டார்கள். 850 கி. பி. வரையில் அது தலைநகரம் ஆகவே சிறந்து விளங்கியது. அதாவது, 1300 ஆண்டுகள் அது இலங்கையின் ஒப்பற்ற தலைநகராக இருந்தது. தமிழ்நாட்டிற்கு இந்நகர் அண்மையில் இருந்தது. போக்குவரவும் எளிதானது. தமிழ் மன்னர் குடும்பங்களில் இலங்கை அரசர்கள் அடிக்கடி பெண் கொண்டதுண்டு. தமிழரில் சில மன்னர்கள் பகைகொண்டு இலங்கையின் பேரில் படை எடுத்ததும் உண்டு. ஏலேலசிங்கன் படையெடுத்ததற்குப் பிறகு ஒரு நூற்றாண்டிற்குள் ஐந்து தமிழ் மன்னர்கள் படையெடுத்து ஆண்டனர். (103—44) மீண்டும் பௌத்தர்களே ஆட்சிக்கு வந்தனர். 200 ஆண்டுகள் கழித்து, கயவாகு (113—173 கி. பி.) காலத்தில் தமிழர் படையெடுப்பு நேர்ந்தது. அவனும் தமிழர்மீது சென்றான். இவனே கண்ணகி உருவம் வைத்தவன்.

400 ஆண்டுகளின்பின் ஆறு தமிழ் மன்னர்கள் படையெடுத்து நகரைக் கைப்பற்றினர். காஞ்சி பல்லவர் (650) காலத்தில் ஒருமுறை படையெடுப்பு நேர்ந்தது. சோழர் பேரரசு தஞ்சையில் ஏற்பட்ட பிறகு, அடிக்கடி படையெடுப்புகள் நிகழ்ந்தன. 750 கி. பி. யில் இவ்வாறு தமிழர்கள் அனுராதபுரத்தின்மீது அடிக்கடி படையெடுத்து நகரை அழித்துவருவதைக் கண்ட சிங்கள அரசர்கள், அங்கிருந்து நெடுந்தொலைவில் பொலனறுவை என்ற புது நகரை உண்டாக்கி, அங்கு அரசாளத் தொடங்கினர். 750-ல் அக்கிரபோதி என்ற மன்னன் பொலனறுவையையே நிலையான தலைநகர் ஆக்கிக்கொண்டான். பிறகு ஒரேமுறை 5-ம் மகிந்தன் (1001-52) என்பவன் சில ஆண்கள் அனுராதபுரத்தில் இருந்தான். அது சரிப்படாமல் மீண்டும் பொலனறுவைக்கே போய்விட்டான். ஆகவே, தமிழர்களுடைய படையெடுப்பால் பல அரிய பெரிய கட்டடங்கள் அனுராதபுரத்தில் அழிந்துவிட்டன. சிற்பத்தின் ஆக்கத்திற்கும் அழிவிற்கும் தமிழர்களே காரணர் என்று இலங்கையர் கூறுவர்.

தற்காலநிலை

அனுராதபுரம் பௌத்த சமயிகளுடைய தலைநகரமாக இருந்தபோதிலும் தமிழர்கள் பெரும் பகுதியினராக இருக்கிறார்கள். உத்தியோகங்களில் தமிழர்களே சிறந்து விளங்குகிறார்கள். வர்த்தகமும் பெரும்பாலும் தமிழர் கையில் இருக்கிறது. தமிழ்ப் பெருமக்கள் விவேகாநந்த சபை ஏற்படுத்தி, அதில் தமிழ்ப் பாடசாலை ஒன்று நடத்திவருகிறார்கள். அதனருகே சிவன்கோயில் ஒன்று கட்டி அதனை நன்முறையில் ஒம்பிவருகிறார்கள். இரண்டாம் நாள் மாலை நான் விவேகாநந்த சபையில் "பெண்மக்கள் சேவை" என்னும் பொருள்பற்றிப் பேசினேன். திரு. இராமசாமி அவர்கள் தலைமை ஏற்றார்கள். தமிழ்ப் பண்டிதர் ஒருவர் நான் எடுத்துச்சொன்ன பண்டைத் தமிழ்த் தாய்மார்களின் வீரத்தன்மையைப் பின்பற்றிப் பேசினர். சபைக்குப் பல மங்கையர்கள் வந்திருந்தார்கள். அன்

றிரவு உணவு அருந்திய பின்னர் புகைவண்டிநிலையத்திற் குச் சென்று இளைப்பாறினேன். நடுநிசியில் வண்டி வந்தது. திரு. சிவராமலிங்கம் அவர்கள் வேண்டிய உதவி செய்து என்னை வழியனுப்பினர்கள். அனுராதபுரம் தமிழர்கள் பார்க்கத் தக்க இடம் ஆகும். அவ்வூர்ச் சிற் பங்கள் தமிழர்களால் அழிவுற்றது என்று சிங்களர் கூறின போதிலும், போர்க் காலங்களில் ஒரு சிறிது அழிவு ஏற் பட்டிருப்பது போக, பெரும்பான்மையாகக் காலம் என்ற பகையே இவைகளை அழித்திருக்கும் என்று நம்ப இட முண்டு.

தமிழ்க் கல்வெட்டுக்கள்

அனுராதபுரத்தில் ஏழு தமிழ்க் கல்வெட்டுக்கள் கிடைத் திருக்கின்றன. ருவன்வெளிசெய என்ற கட்டடத்திற் கருகில் கண்ட ஒரு கல்லில், அது ஸ்ரீ ஜகதோப்பகண்டன் பெரும்பள்ளி என்று கண்டிருக்கிறது. கோ சிரீசங்கபோதி மகாராசன் 5, 7-ம் ஆண்டுக் கல்வெட்டுக்கள் இரண்டு இருக் கின்றன. அவைகளில் சேக்கிழான் என்ற பெயர் காணப் படுகிறது. சிரீசங்கபோதி என்ற ஒரு அரசன் 252-306 கி.பி.-ல் ஆண்டதாக மகாவமிசம் கூறும். மற்றொரு நீண்ட கல்வெட்டில் பல பகுதிகள் அழிந்துவிட்டன. அதன் இறுதியில் அடியிற்கண்ட வெண்பா வரையப்பட்டுள்ளது.

> "போதி நிழலமர்ந்த புண்ணியன்போல் எவ்வுயிர்க்கும்
> தீதில் அருள்சுரக்கும் சிந்தையான்—ஆதி
> வருதன்மம் குன்றுத மாதவன் மாக்கோதை
> ஒருதன்ம பால னுளன்."

இதில், மாகோதை தருமபாலன் என்ற பௌத்தப் பெரி யாரது அறத்திறம் புகழப்படுகிறது. இதன்மேல் காணும் அழிந்த கல்வெட்டிலும் மாகோதையின் பெயர் வரு கின்றது.

முத்தின் மேல்பகுதியில் உள்ள நடுப்பகுதிப் பெரு மையை எடுத்தெழுதினேம். இனி அதற்கு இடதுபுறத் தில் உள்ள கீழ்க்கோட்டின் சிறப்பை எடுத்துக் கூறு வோம். அதுதான் திருகோணமலைச் சிறப்பு.

---

6. கீழ்க்கோட்டில் ஒரு சிற்பம்

திருக்கோணமலை

ஈழநாட்டிலே பாடல் பெற்ற தலங்கள் இரண்டு. அவைகளிலே மிக்க புகழ்பெற்ற தலம் திருக்கோணமலை. அஃது ஈழநாட்டின் கிழக்குக்கரையோரத்தில் உள்ளது. அதனை அடைவதற்கு இரண்டு வழிகள் உண்டு. அநுராத புரத்திலிருந்து கிழக்கே வண்டிப்பாதை வழியாக விசை வண்டியில் செல்லலாம். பாதை மிக நன்றாக இருக்கிறது. நான்கு மணிநேரத்தில் சென்றுவிடலாம். இந்த வழியேதான் நான் முதன்முறை இலங்கைக்குப் போன போது சென்றேன். அப்போது இரண்டாவது வழி யாகிய இருப்புப்பாதைவழி அமைக்கப்பெற்றிருக்க வில்லை. அதன்வேலை நடந்துகொண்டிருந்தது. பிற்பகல் இரண்டு மணிக்கு விசைவண்டி ஏறினேம். பாதையில் குன்றுகளும், அடவிகளும் தெரிந்தன. இவைகளுக்கு இடையிலே பாதை ஓடிற்று. ஆனால், பாதை வழுவழுப் பாக இருந்ததனால் வண்டி ஒரு சிறிதும் வருத்தம் இன்றிப் சென்றது. ஒரு மணி நேரம் சென்றதும், வழியிலே ஒரு ஊரிடை நின்றது. பிரயாணிகள் சிலர் இறங்கினர்கள். வேறு சிலர் ஏறினர்கள். பிறகு மழையும் பெய்யத் தொடங்கியது. மிக மும்முரமாகவும் அடித்தது. இருந் தாலும், நமது நாட்டைப்போல வழியில் சேறு உண்டாக வில்லை. மிக விரைவில் வெள்ளம் இருபுறங்களிலும் விலகி ஓடிவிட்டது. மாலையில் இருட்டுக்கு முன்னேயே திருக்கோணமலை எதிர்ப்பட்டது. எங்கேபோய் இறங்கு வது என்று தெரியவில்லை. கோயில் எங்கு இருக்கிறது என்று கேட்டோம். அங்குத்தான் உணவு முதலிய வசதிகள் கிடைக்கும் என்பது தெரியும். கோயிலைக் கண்டுபிடித்தோம். அஃது ஒரு வில்லைக் கட்டடம். அதன் முன்மண்டபத்திலே அமர்ந்தோம். அருகில் குடியிருந்த குருக்களிடம் சொல்லி, உணவுக்கு ஏற்பாடு செய்யச்

சொன்னேனும்; அவரும் ஒத்துக்கொண்டார். எங்களுக்கு இருந்த பெருங்கவலை தீர்ந்தது.

துறைமுகம்

சிறிது ஓய்வெடுத்துக்கொண்டு கடற்கரைஓரமாகச் சென்றோம். உலகிலேயே மிகப் பெரிய துறைமுகம் எப்படி இருக்கும் என்று பார்த்தோம். கடற்கரை தெளிந்த மணல் கொண்ட அகலமான கரை. தண்ணீரோ அலைகள் இன்றியிருந்தது. மிக நிம்மதியான நீர்ப்பரப்பைக் கண்டு வியந்தோம். எதிரே நெடுந்தொலைவில் எதிர்க் கரை தெரிந்தது. தென்னைமரங்களின் தொகுதி படர்ந்த எதிர்க்கரை நெடுங் காதங்களுக்கு அப்பால் உள்ளதெனக் கண்டோம். ஆகவே, ஒரு பெரிய ஏரிபோல அது தோன்றிற்று. அதுதான் திருக்கோணமலையின் வளைகுடா, அல்லது துறைமுகக்கடல் என்று சொல்லப்படும். இதில் தான் மாவலிகங்கையும் போய்ச் சேருகிறது. இத்துணை அகன்ற பரப்பைக் கண்டதும், எனக்குச் செங்கல்பட்டுச் செம்பரம்பாக்கத் தேரிதான் நினைவிற்கு வந்தது. எதிர்ப் புறத்தில் தாழ்ந்த குன்றுத்தொடர்கள் தெரிந்தன. நீர்ப் பரப்பை அடக்கிக்கொண்டிருக்கும் அவ்வேரியின் வடிவமே இங்கும் தோன்றிற்று. இதைப்போன்ற வேறு ஏரிகள் சிலவும் சென்னைமாகாணத்தில் உண்டு. நெல்லூர் வட்டத்தில் கணிகிரி ஏரியும், வட ஆர்க்காட்டில் காவிரிப் பாக்கம், மாமண்டூர் ஏரிகளும், தென் ஆர்க்காட்டில் வீராணத்தேரியும் இந்தத் தோற்றத்தைக் கொண்டிருக்கின்றன இவைகளை நினைத்துக்கொண்டே கடற்கரை ஓரமாகச் சிறிது தொலை நடந்தோம். ஊருக்கும் கடலுக்கும் இடையில் இருந்த பெரிய வெளி தோன்றியது. இது புல்தரையாகவும் இருந்தது. படைகள், உடற்பயிற்சி, இராணுவப் பயிற்சி செய்வதற்காக இது பயன்படுத்தப்படுகிறது. இந்த வெளியிலே சிறிதுநேரம் உலாவிவிட்டு, மீண்டும் கோயிலுக்குச் சென்றோம். எட்டு மணி ஆனவுடன் குருக்கள் வீட்டில் உணவு அருந்திவிட்டு, கோயிலுக்கு முன்புறத்தில் உறங்கத் தொடங்கினோம். கடற்கரை எதிரில் இருந்தது

னல் மிக இன்பமாக இளங்காற்று வீசியது. அன்று இரவு கடந்ததும் தெரியவில்லை. படுத்துத் தூங்கின பிறகு கண்விழித்துப் பார்த்தோம். எதிரே கிழக்கு வெளுத்து இருக்கக்கண்டோம். ஒரு விநாடியில் இரவு கழிந்து விட்டதே என்று எண்ணி வியந்தோம்.

மாணவர் சமய ஈடுபாடு

மறுநாட்காலையில் எழுந்து காலைக்கடன்களை முடித்துக்கொண்டு குளித்துவிட்டுச் சிற்றுண்டி அருந்தினோம். பிறகு, ஊர் அமைப்பைப் பார்த்துவர வெளியே புறப்பட்டோம். தமிழ்ப்பிள்ளைகள் பாடசாலைக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தார்கள். எல்லாரும் ஆங்கில உடை உடுத்துக் கொண்டிருந்தார்கள். ஒவ்வொருவர் தலையையும் ஆங்கிலத் தொப்பி அணிசெய்துகொண்டிருந்தது. 'எங்கள் நாட்டை விட மிக வெப்பமுள்ள நாடு ஆகையால், வெய்யிலிலும் மழையிலும் பிள்ளைகளுக்கு ஏற்ற தலைமறைப்பு இல்லாவிட்டால் தவிப்பார்கள் அன்றோ' என்று நாங்களே சமாதானம் செய்துகொண்டோம். பெரியவர்களும் சிலபேர் இடையில் வேட்டி கட்டிக்கொண்டிருந்தாலும், லுங்கி, என்ற சாரம் கட்டிக்கொண்டிருந்தாலும், தலையில் தொப்பி வைத்துக்கொண்டிருக்கக் கண்டோம். ஆகவே, இந்த மறைப்பு கதிரவன் காய்ப்பைத் தடுக்கத்தான் என்று முடிவுசெய்துவிட்டேன். அப்பிள்ளைகள் பாதையில் நடக்கும்போது கோயில் எதிரே வந்ததும் சிறிது நின்று தலையில் இருந்த தொப்பியை எடுத்துக்கொண்டு எதிரில் இருந்த இறைவனை வணங்கிவிட்டு, பின் தொப்பியை முன்போல அணிந்துகொண்டு சென்றார்கள். மிதியடி அணிந்து சென்றவர்கள், அதனை ஒதுக்கிவிட்டு, இறைவனைத் தெருவிலிருந்தே கும்பிட்டுவிட்டுப் பிறகு அதனை அணிந்துகொண்டு சென்றார்கள். இந்த வழக்கத்தைக் கண்டவுடனே எங்களுக்கு உண்டான வியப்புக்கு அளவே இல்லை. தென்னிந்தியாவிலே எந்தச் சைவன் அல்லது வைணவன், அதிலும் பள்ளி மாணவன், தெருவில் போகும் போது கோயிலைக்கண்டவுடன் தொழுதுவிட்டுச் செல்லு

கிறான் என்று பேசிக்கொண்டோம். அங்குச் சென்று கொண்டிருந்த இளம் பிள்ளைகளைக் கூப்பிட்டு, 'எந்தப் பாட சாலைக்குச் செல்லுகிறீர்கள்' என்று கேட்டோம். அவர்கள் விவேகானந்தர் பாடசாலைக்குச் செல்லுகிறோம் என்றார்கள். அதைக் கேட்டவுடனே அப்பாடசாலையார், பிள்ளை களுக்குக் கற்றுக்கொடுத்திருக்கும் ஒழுக்கத்தை மிகவும் பாராட்டினோம். நமது நாட்டிலும் இப்படிப்பட்ட ஒழுக் கத்தை நம் சைவ வைணவ சமய ஆசிரியர்கள் அறி வுறுத்தக்கூடாதோ என்று பேசிக்கொண்டோம்.

வங்கத் துறவிச் சிங்கம்

அமெரிக்காவிலே, 1893-ல் கூடிய சிக்காகோ பத் சமயிகளின் உலகப்பெருங்கழகத்திற்கு, வங்கநாட்டுத் துறவிச்சிங்கம் சென்று முழங்கி, ஏனையோரை அடக்கி, மிகுந்த வெற்றியுடன் தம் நாடு திரும்புகையில், இலங்கை வழியாகத்தான் வந்தார் என்ற செய்தி நினைவுக்கு வந்தது. அப்பெரியார் இலங்கை வந்தவுடனே, இலங்கையில் இருந்த பெரிய ஊர்களில் எல்லாம் அவர்கள் பெயரினாலே சங்கங் கள் ஏற்பட்டன. மக்களுக்குள் பெரிய ஊக்கம் தோன்ற, சங்கம், மடம், பள்ளிக்கூடம் முதலிய நிலையங்களை எங்கும் தொடக்கிவைத்தார்கள். இவ்வியக்கத்தை நன்கு வளர்த் துப் பல கிளைகளை ஆங்காங்கு ஏற்படுத்திய பெருமான், மட்டக்களப்பில் தோன்றி, இராமகிருட்டின மடத்துச் சீடராகி, தமிழில் சிறந்த புலமையும் ஆராய்ச்சியும் பெற்றுப் பல ஆண்டுகளாகத் தமிழ்நாட்டைகளையும் இசைக்கருவிகளை யும் ஆராய்ந்து வெளியிட்டுவந்த உயர்மிகு. விபுலானந்த அடிகள் என்பது இந்த ஊர் சென்றபோதுதான் தெரிந்தது. இந்த ஊரில் யாம் கண்ட பாடசாலையும் அப்பெரியார் பார்வையில்தான் இருந்தது என அறிந்தோம். அப்பெரி யார் பார்வையில் இருக்கும்பொழுது சிறுவர்களுடைய ஒழுக்கம் பன்முறைகளிலும் சிறந்து விளங்கும் என்பதில் ஐயம் உண்டோ? ஆகவேதான், சிறுவர்கள் கோவிலைக் கண்டபோது மிகத் தாழ்மையுடன் வணங்கிவிட்டுச் சென் றார்கள் எனத் தெளிந்தோம்.

கோயில் சென்றது

பிறகு, எங்கள் எண்ணம் திருக்கோணமலைத் திருக் கோயிலைக் கண்டு வழிபடவேண்டும் என்பதே. அதனைப் பெறும்பொருட்டுக் கோவிற் குருக்களை அண்டி விவரங் களைக் கேட்டோம். பாடல்பெற்ற தூய தலமாகிய திருக் கோயில் பறங்கிகளால் அழிக்கப்பட்ட தென்றும், அந்த இடத்தைச்சுற்றி அவர்கள் ஒரு பெருங்கோட்டையைக் கட்டிவிட்டார்கள் என்றும், பின்னல் வந்த ஒல்லாந்தர்களும் ஆங்கிலரும் அக்கோட்டையைப் படைகளின் இருப்பிட மாகப் பயன்படுத்திக்கொண்டு வந்திருக்கிறார்கள் என்றும், கோயில் இருந்த கடற்கரைப் பாறைக்குத்தான் பூசை நடக்கிறதென்றும், அதுவும் வாரத்திற்கு ஒருமுறைதான் நடத்துவதற்குக் கட்டளை தரப்படுகிறது என்றும், அதைக் காணவேண்டுமென்றால், அடுத்த வெள்ளிக்கிழமை வரைக் கும் தங்கியிருந்தால் பார்க்கக்கூடும் என்றும் சொன்னார். நாங்களோ மூன்றுநாள் தங்கி இருக்க இயலாது என்றோம். கோட்டைத் தளபதியைக் கண்டு கட்டளை பெற்றால் உள்ளே போகமுடியும் என்று அறிந்தோம். அவ்வகைக் கட்டளை பெற எண்ணிச் சென்றோம்.

காலை 9 மணி சுமாருக்குக் கோட்டை வாயிலை அடைந் தோம். வாயிற்காப்போனை விசாரித்தோம். தளபதி மைதானத்தில் உலாவிக்கொண்டிருப்பதாகச் சொன்னான். நல்ல வேளையாக அவனை அங்கே கண்டு வணக்கம் தெரி வித்தோம். அவன் ஆங்கிலேயன். உயர்ந்தநிலையில் இருந்தவனதலினால் மரியாதையுடன் பேசினான். "வெள் ளிக்கிழமை வரைக்கும் இருந்தால் கோட்டைக்குள் செல்ல லாம்" என்றான். "அதுவரைக்கும் நாங்கள் தங்கியிருக்க வாய்ப்பு இல்லை; இந்தியாவில் நெடுந்தொலைவில் இருந்து வந்திருக்கிறோம்; நாங்கள் இடங்களைப் பார்க்கவேண்டும் என்ற அவாவைத்தவிர, வேறு காரியம் இங்கில்லை; மீண்டும் ஒரு முறை வர இயலாதிருக்கிறது," என்று கூறினோம். 'நல்லது; கட்டளை கொடுக்கிறேன். நீங்கள் படித்தவர்களாகத் தோன்றுகிறீர்கள்,' என்று சொல்லிவிட்டு, எங்களுடனே

சிறிது தொலை நடந்துவந்து, வாயில் காப்போனிடம் எங்களை விடும்படி கட்டளை இட்டுவிட்டுச் சென்றான். ஒரு தாழ்ந்த குடியிற் பிறந்தவனாயிருந்தால், இவ்வாறு எங்களை விட்டிருக்கமாட்டான் என்று நாங்கள் எண்ணினோம். நாங்கள் கட்டளை பெற்றதை அறிந்த குருக்களும் மிகவும் வியப்பு அடைந்தார். அவரும் எங்களுடன் வந்து எங்களுக்குக் கடவுள் வழிபாடு செய்துவைத்தார். இதனைக் கேட்ட ஊர் வாசிகளும், நாங்கள் செவ்வாய்க்கிழமையில் சுவாமிப்பாறைக்குச் சென்று வணங்கினோம் என்று அறிந்து, 'இவர்கள் நல்லினையாளர்கள்; இதுவரை எவரா லும் ஆகாத செயலைச் செய்தார்கள்,' என்றார்கள். இவ்வகைப் புகழ் சொற்களைப்பெற என்ன நல்வினைச்செய்தோமோ என்று வியந்துகொண்டு சென்றோம்.

கோட்டை

திருக்கோணமலைத் துறைமுகமோ ஒரு வளைகுடா போன்றது என்றோம். அக்குடாவின் வடதுகை கடலுள் நீண்டு கிடக்கிறது. அது ஒரு முனைபோல இருக்கிறது. அம்முனை பெரும் பாறைகளால் ஆகியது. இப்பாறைகள் கடலின்மேல் உயர்ந்து நிற்கிறபடியால் அவைகள் மலை என்று கூறப்பட்டன. அப்பாறைகள் கோணலாக நிற் கிறபடியால் கோணமலை என்று பெயர்பெற்றது. மேலும், மலைபோன்ற இந்த முனைப்பகுதியே திருக்கோணமலை ஆகும். இந்த இடத்தில்தான் முன்னாளில் கோணேசர் கோயில் இருந்தது. அக்கோயிலைப் போர்த்துகீயர் என்ற பறங்கியர்கள் இடித்து, அதிலிருந்த பொருள்களைத் திருடிக் கொண்டு, சுற்றிலுமுள்ள சமநிலத்தைச் சேர்த்து ஒரு கோட்டை கட்டினார்கள். இக்கோட்டைதான் இப் போதும் இருப்பது. இக்கோட்டையின் வாயிலை அடைவ தற்குக் கோட்டைவெளியைத் தாண்டிச் செல்லல் வேண்டும். கோட்டைமதில்கள் கல்லால் கட்டினவை. கோட்டைவாயிலுக்குள் சென்றால், படைகள் தங்குவதற் கான கட்டடங்கள் பல உள்ளன. அவைகளையும் தாண் டிச் சென்றால் கடற்கரைப் பாறைகள் வரையில் ஒரு

பெருத்த வெளி தோன்றுகிறது. இவ்வெளியில் சிறு செடிகளும், புதர்களும் மூளைத்திருந்தன. அவைகளிலே நூற்றுக்கணக்கான புள்ளிமான்கள் மேய்ந்துகொண் டிருந்தன. ஆள் அரவம் கேட்டதே அவைகள் ஓடின. அவ்வோட்டத்தின் காட்சி மிக அழகாக இருந்தது. இப்படிப் புள்ளிமான்களை மந்தைமந்தையாக வளர்த்ததன் நோக்கம் தெரியவில்லை. வேட்டையாடுவதற்கும் படை களின் உணவிற்குமாக இருக்கலாம். அவைகளைக் கண்ட போது, சென்னையில் கவர்னர் மாளிகையின் வளைவிற்குள், முன்னுளில் இவ்வாறு புள்ளிமான்மந்தை இருந்ததன் நினைவு வந்தது. ஆனால், அம்மந்தை இப்போது கிண்டி மாளிகைக்கு மாற்றப்பட்டதுபோலும். அதுபோலவே, அண்மையில் நடந்த பெரும் போர்க்காலத்தில் திருக் கோணமலைக்கோட்டை மான்மந்தை அங்கே வைக்கப் பட்டதோ அல்லது வெளியேற்றப்பட்டதோ அறியோம்.

சுவாமிப் பாறை

கோட்டைக்குள் சமவெளியிலிருந்து கோட்டை மூனைப்பாறைகளுக்கு ஒரு பாதை செல்லுகிறது. இப் பாதை பாறைகளுக்குமேல் உயரப்போகிறது. இதன் வழியாக நடந்துசென்றால், சிறிது தொலையில் அப்பாறை களின் உச்சியை அடையலாம். இறுதிப் பாறையின் பெயர்தான் 'சுவாமிப்பாறை' என்பது. இதன்பேரில் தான் கோணேசர் மூலத்தானம் இருந்ததாகக் கூறுவர். அப்பாறை கடலின்மேல் செங்குத்தாய் நிற்கிறது. கொடிய சிங்தையினர் ஆன பறங்கியர்கள், இந்த மூலத்தானத்தை இடித்து, அப்படியே கடலில் தள்ளிவிட்டதாகக் கூறுவர். எங்களுடன் வந்த அந்தணர் தேங்காய் பழம் வைத்து அப்பாறைக்கு வழிபாடு செய்தார். நாங்கள் வணங்கி விட்டு அவைகளைப் பெற்றுக்கொண்டோம். இப்பாறை யின்மேல் நின்று பார்த்தால், கடற்காட்சி மிகவும் அழ காகத் தெரிகிறது. கடற்கரை ஓரமாக நீர்மட்டத்தில் பல பாறைகள் தோன்றுகின்றன. அலைகள் அடிக்கும்போது அவைகள் மறைந்தும் மீண்டு எழும்பியும் தோன்றும்

காட்சி காணத்தக்கது. அப்பாறைகளில்தான் பண்டைக் கருப்பக்கிருகம் கிடக்கிறது என்று அந்தணர் கூறினர். அஃது இடித்துத் தள்ளப்பட்ட காலத்தில் இப்போது காணும் காட்சியைப் போலவே அப்போதும் அக்கட்டடக் கற்கள் எழும்பியும் மூடியும் கிடந்தனபோலும் என்று எண்ணினேம். கருப்பக்கிருகக் கற்களே பெரும்பாறைகளாக மாறிவிட்டனவோ என்றும் எண்ணவேண்டி வந்தது. கடற்கரை ரேவுத் துறைகளில் துறைமுகப் பொறி நூலியலாரால் செய்து போடப்பட்ட சதுரப் பாறைகள் இவ்வாறு கடல் அலைகளுக்குள் மூழ்கி எழும்பும் காட்சிகளைச் சென்னை, தனுக்கோடி, பாம்பன், கோழிக்கூடு முதலிய இடங்களில் கண்டிருக்கிறோம் அன்றே!

கோயில் அழிக்கப்பட்டுப்போனதை எண்ணிக் கொண்டு திரும்பினபோது, அதை இடித்தவன் ஆட்சியும் அதுபோலவே அழிந்துபோகும் என்று அவன் நினைத்தானே என்று எண்ணவேண்டி வந்தது. கூடிய விரைவில் 'அந்த நாடு தன்னரசு இழந்ததுமன்றி, இலங்கைத் தீவில் அவர்களுக்கு இருந்த அரசு முழுதும் அழிந்தேபோயிற்று' என்று வரலாறு கூறுகிறது.

இயற்கைப் பிளவு

சுவாமிப்பாறையைவிட்டுத் திரும்புகையில், ஒரு பெரும் பாறையில் கத்தியால் வெட்டினதுபோல ஒரு பிளவு தோன்றிற்று. இப்பிளவை இராவணனுடைய ஒரு வரலாற்றில் புகுத்தியுள்ளார்கள். திருக்கோணமலை கைலாயமலையில் சிதைந்த ஒரு பகுதியாகையால், இதுவே 'தென் கைலாயம்' என்றும், இக் கயிலையைத்தான் இராவணன் தூக்கினன் என்றும், அதனால் அவன் அமிழ்த்தப்பட, அவன் இறந்துவிட்டான் என்று எண்ணி, இராவணன் தாயார் உயிர்துறந்தாள் என்றும், திரும்பி இராவணன் வந்து, தாய் இறந்ததுகேட்டு, இப்பாறையைத் தன் வாளால் துண்டாக்கினன் என்றும், மறுபடி கன்னியா சென்று வாளினால் நிலத்தைக் குத்தி ஏழு தீர்த்தங்கள் உண்டாக்கி, அங்கே தாய்க்கு இறுதிச்சடங்கு செய்தானென்றும் கதை

கூறுவர். கற்களின் பிளவுகளில் இயற்கை அமைப்பைக் காண்போர்கள் இப்புராணக் கதைகளுக்கு என்ன மதிப்பைத் தருவார்களோ?

கன்னியா வெப்பக் கிணறுகள்

இராவணன் தன் தாயாருக்கு இறுதிவினை செய்ததாகக் கூறும் கன்னியா தீர்த்தத்தைக் காண மறுநாள் காலையில் ஒரு விசைவண்டி அமர்த்திக்கொண்டு சென்றோம். கன்னியா என்ற இடம் திருக்கோணமலையிலிருந்து ஐந்து கல் தொலைவில் உள்ளது. அதற்குப் போகும் வழியும் மிக நன்றாகவே அமைக்கப்பட்டிருக்கிறது. வண்டிப்பாதையிலிருந்து மலைச்சாரலில் 200 முழங்கள்வரை ஏறவேண்டும். சரிவு முழுதும் பெரிய மரங்கள் அடர்ந்த காடு. அதன் நடுவில் ஒரு சிறிய சமப்பரப்பில் ஏழு சிறு கிணறுகள் இருக்கின்றன. இக் கிணறுகள் ஒவ்வொன்றும் 3 அடி நீளமும், 2 அடி அகலமும், 3 அடி ஆழமும் இருக்கலாம். நீரோ நிலமட்டத்தில் இருக்கின்றது. எவ்வளவு நீர் இறைத்தாலும் மீண்டும் ஊற்றிலிருந்து நீர் வெளிவந்து நிரம்பிவிடுகிறது. இந்த ஏழு கிணறுகளும் 40-க்கும் 30-க்கும் அளவுள்ள ஒரு வளவுக்குள் அடங்கியிருக்கின்றன. கிணறுகளைச் சுற்றிக் கல் கட்டியிருக்கிறார்கள். குவளையால் நாமே நீர் மொண்டு எடுக்கலாம். இவைகளின் சிறப்பு என்ன எனில், ஒவ்வொரு தீர்த்தத்திலும் வெவ்வேறு வகையான சூடு காணப்படுகிறதேயாகும். ஒன்று 30° என்றால் மற்றொன்று 40° இருக்கும்; மற்றொன்று 50° இருக்கும். இங்ஙனம் வகை வகையான சூடு உள்ள நீர்கள் எவ்வாறு ஒரே இடத்தில் ஊற்றிலிருந்து வருகின்றன என்பதே வியப்பு மிகுந்த செய்தி. ஒன்றிரண்டு தாங்கமுடியாத சூட்டிடனும் இருக்கின்றன. இவ் வியப்பான கிணறுகளில் நோயாளிகளும் அடிக்கடி சென்று குளிப்பதுண்டு. நாங்கள் சென்று குளித்தோம். ஒவ்வொரு குளத்திலும் எவ்வேழு செம்புகளாக 49 செம்பு வெந்நீரை இறைத்து ஊற்றிக்கொண்டேன். குளித்ததும் உடலில் எல்லாப்

பிணியும் போனதுபோல மிக நலமாகத் தோன்றிற்று. சிலபேர்களுக்கு அவற்றின் சூடு பிடிப்பதில்லை. தலைநோயும் உண்டாகிறது. இந்த வெந்நீர், நிலத்தின் அடியில் மிக ஆழத்திலிருந்து பொங்கிவரும் கந்தக நீர் என்று கூறவேண்டும். திருச்செந்தூர்க்கோயில் அருகில் உள்ள நாழிக்கிணறும் இதைப் போன்றதே. ஆனால், அங்கே கந்தக மணம் தவிர சூடு இல்லை. இமயமலைச் சாரல்களில், சிறப்பாகப் பதரிகாசிரமத்தில் இவ்வகையான வெப்பவூற்றுக்கள் கடல்மட்டத்திற்கு மேல் 12000 அடி உயரத்தில் இருக்கின்றனவாம். அப்படியாயின் மிக வியப்பே. இக் கிணறுகளுக்கு அருகில் ஒரு அம்மைகோயில் இருக்கிறது. அது மாரியம்மை கோயில் என்பர். மக்கள் அதற்கு வழிபடுவார்கள். அஃது ஒரு மரத்தின் கீழே வழிபடப்படும் கோயில். கட்டடம் இல்லை. கன்னியாதீர்த்தம் என்று பெயர் உள்ளதனாலும், இங்கே ஏழு கிணறுகள் உள்ளனவாதலாலும், இதனை 'ஏழு கன்னிகைகள்' என்ற புராணகதையுடன் தொடர்புபடுத்திவருகிறார்கள். ஆனால், இங்கே நமது நாட்டில் காணப்படுவதைப்போல ஏழு கன்னிகைகளுடைய உருவங்கள் காணப்படவில்லை.

ஐதிகம்

திருக்கோணமலையின் வரலாறு மிகவும் பண்டையது. தக்கிணகயிலாயமான்மியத்தின்படி, வடமலையின் சிகரங்களை ஆதிசேடன் தன் ஆயிரம் தலைகளால் கவ்விக் கொள்ள, வாயுதேவன் தன் ஆற்றலைக் காட்ட ஓங்கி வீசியதால், மூன்று சிகரங்கள் உடைந்து தெற்கே போய்க் கடலில் விழுந்தன. அவைகளில் ஒன்று திருக்கோணமலையாம். இஃது அந்த வகையில் மேன்மைபெற்று விளங்கியது. அங்கே கோணேசர்கோயில் இயற்றப்பட்ட காலம் எவரும் அறியார். விசயன் இலங்கை புகுந்த காலத்திலேயே அஃது இருந்ததென்பர்.

இனி, இக்கோணேசலத்தை இராவணனுடைய பிறப்பு, இளமைப்பருவம் இவைகளோடு தொடர்புபடுத்திப்

பல வரலாறுகளைப் புராணங்கள் கூறுகின்றன. இராவண னுடைய தாய் தந்தையரின் திருமணம், இராவணன் அவன் தம்பியர் தங்கை முதலியவர்களின் பிறப்பு முதலியவை களையும் மிகுதியாகக் கூறுகின்றன. இராவணன் கயிலை எடுத்த செய்தியும், தாயாருக்கு இறுதிக்கடன் செய்த வரலாறுகளும் அதில் கூறப்பட்டனவாக முன்னமே சொல்லியிருக்கிறோம். இவையெல்லாம் புராண கூற்றுக்கள்.

சரிதை

திருக்கோணமலை கோயிலைக் குளக்கோட்டன் என்ற ஒரு மன்னன் கட்டினான் என்ற ஒரு செய்தி, அங்கே இருக்கும் ஒரு கல்வெட்டினால் தெரிகிறது. இக் கல் வெட்டு சிதைந்திருந்த போதிலும், ஆராய்ச்சியாளர்கள் அதனை நிறைவுபடுத்தி எழுதிவைத்துள்ளார்கள்.

"முன்னே தளக்கோட்டன் மூட்டுந் திருப்பணியைப்
பின்னே பறங்கி பிரிக்கவே—மன்னவன்பின்
பொன்னை அதனை இயற்றஅழித் தேவைத்து
எண்ணரே பின்னரசர் கள்."

இந்தக் கல்வெட்டில் கண்ட செய்தியைக் குறித்து அடியிற் கண்ட புராண வரலாறு வளர்ந்திருக்கிறது.

மனுநீதிகண்டசோழன் 'வரராம தேவன்' என்ற பட்டப்பெயருடன் சோழநாட்டை ஆண்டுவந்தான். அவன் ஒருநாள் மச்சேந்திர புராணத்தில் தக்கிணகைலா யம் என்ற திருக்கோணமலையின் பெருமைகளைப் படித்து அறிந்து, அங்குச் சென்று கோணேசர் கோயிலைக் கட்டி, பூசை திருவிழா முதலியன நடத்தினான். ஆனால், அவனுடைய இறுதிக்காலம் அணுகி வர, திருப்பணிப் பொன்னை ஒரு கிணற்றில் இட்டுக் காவல்வைத்துத் தன் குமாரனுக்குச் செய்தி அனுப்பினான். குமாரனை குளக் கோட்டன் வருவதற்குள் அவன் சிவபதம் அடைய, குளக்கோட்டன் வந்து கிணற்றிலிருந்து பொன்னை எடுத்து, கோயிலைப் பழுதுபார்த்து, கோபுரங்களைத் திருத்தி, விளைநிலங்களைத் தானம்செய்து, ஏரியைக்

கீழ்க்கோட்டில் ஒரு சிற்பம் ஙஙங

எனக் கேட்டான். அமைச்சன் சிறிது தொலைவில் இருந்த இரண்டு மலைகளைக் காட்டி, 'அந்தக் கணவாயை அடைத்தால் பெரிய குளம் ஏற்படும்,' என்றான். அந்த வேலையை யாரால் செய்யமுடியும் என்று குளக்கோட்டன் கவலைகொண்டிருக்க, அமைச்சன் தான் நினைக்கிறபடி செய்தால், ஒன்பது நாட்களுக்குள் கட்டமுடியும் என்றான். அக்குறிப்பறிந்து குளக்கோட்டன், மாணிக்கமாலையையும் கணையாழியையும் அனுப்பினான். அமைச்சன் அவைகளை அரசிக்குத் தர, அவளும் மணம் செய்துகொள்ள உடன்பட்டாள். உடனே அரசன் குறிப்பறிந்து, பூதங்களை அனுப்பி அணை கட்டச்சொன்னான். அணை முற்றுப் பெற்றுக் குளத்தில் நீரும் தேங்கியது. உண்ணாசை நகரில் திருமணமும் நடந்தேறியது. மணமக்கள் இருவரும் குளத்தைக் காணச் செல்லுகையில் ஒருபுறம் தணிந்திருக்க, சௌந்தரி தன் பணிப்பெண்களை விளித்து அதை நிறுவச்சொன்னாள். அவர்கள் கல் வைத்துக் கட்டினதனால் அவ்விடத்திற்கு இன்றும் **பெண்கள்கட்டு** என்ற பெயர் வழங்குகிறது. இந்தக் குளந்தான் பேர் பெற்ற 'கந்தளாய்க் குளம்' என்பது. இது திருக்கோணமலை தொம்பலை வழியில் இருக்கிறது.

இக் கோயிலில் மூன்றுவதாகத் திருப்பணி செய்தவன் 'கயவாகு' என்ற மன்னன் என்று கோணேசர் கல்வெட்டு நூல் கூறுகிறது. இக் கயவாகுதான் சிலப்பதிகாரத்தில் கூறப்பட்ட, இலங்கையில் பத்தினிக்கடவுளுக்குத் திருவிழா நடத்தினவன். இவன் 113-125 கி. பி.-யில் ஆண்டவன். இவன் முதலில் கோணேசர்கோயிலை இடிக்கவேண்டும் என்று எண்ணிப் படையுடன் சென்றான். வழியில் கண் இழந்தான். பிறகு பெருமான் ஒரு அந்தணனாக வந்து திருநீறு கொடுக்கக் கண் பெற்றான். இவ்வாறு கண் பெற்ற இடம் 'கண்தழை' 'கண்டழை' என்றாகி, பின்னல் மருவி, 'கந்தளாய்' என்றானதாகவும், அங்கிருந்த குளக்கோட்டன் கட்டிய குளம் 'கந்தளாய்க்குளம்' என்று ஆனதாகவும் கூறப்படுகிறது. அரசன் திருக்கோணமலையடையும் முன்னர் அங்கிருந்த பௌத்த குருக்கள் கலகம்

விளைத்துப் பூசகர்களைக் கடலில் தள்ளிவிட்டார்களாம். கயவாகு கோணேசர் கோயிலின் மேம்பாட்டைக் கண்டு வியந்து, நடந்த செய்தியைக் கேட்டுக் கவலைகொண்டு கடற்கரைக்குச் சென்றான். அங்குப் பூசகர்கள் நீரில் தத்தளிப்பதைக் கண்டு எடுத்துவிட்டான். பிறகு அரசன் பௌத்தர்களையும் சைவர்களையும் வேற்றுமை நீக்கிக் கோயிலுக்கு ஒன்றரை மடங்கு நிபந்தங்களை ஏற்படுத்திக் கல்வெட்டுப் பதிப்பித்தானும். இக்கல்வெட்டு, 'கோணேசர் கல்வெட்டு' என்ற நூலில் எழுதப்பட்டுள்ளது. அந்தக் கட்டுப்பாட்டின்படி இந்நாட்டு மக்களும் பத்திலொரு கடமை கோயிலுக்குப் பல நூற்றாண்டுகளாகச் செலுத்தி வந்தார்களாம்.

பிறகு இலங்கை அரசர்கள் சிலர், இக்கோயிலுக்குச் சில கொடைகள் செய்துள்ளார்கள். அவர்களுடைய வரலாற்று விவரங்கள் தெரியவில்லை. அதன் பின்னர் குறிப்பிடத்தக்க செய்தி திருஞானசம்பந்தர் அருளிய தேவாரப் பதிகந்தான். ஞானசம்பந்தர் 7-ம் நூற்றாண்டில் தென்னாட்டில் கோயில்களை வழிபட்டுச் சென்றபோது, இராமேசுவரத்திலிருந்தே திருக்கோணமலையைப்பற்றிப் பாடியருளியதாகச் சேக்கிழார் கூறுகிறார். ஆனால், தலக் குறிப்புக்களை மிக விவரமாகக் கூறியிருப்பதைக் கண்டால், அங்குச் சென்றே பாடியிருப்பார்களோ என்று நம் மனத்தில் தோன்றும். திருக்கோணமலைக் கருகில்தான் மாவலி கங்கை கடலில் சேருகிறது. இதனை எண்ணித்தான்,

"கரைகெழுசந்தம் காரகிற் பிளவும்
அளப்பருங் கனமணி வரன்றிக்
குரைகடல் ஓதம் நித்திலம் கொழிக்கும்
கோணமா மலைஅமர்ந் தாரே"

என்று முதல் பாட்டில் கூறினர்போலும். வாணிபம், வேளாண்மை முதலியவைகளுக்காகத் திருக்கோணமலை நாட்டில் பல தமிழர்கள் குடியேறினர். இதனை வியந்தே,

"குடிதனை நெருங்கிப் பெருக்கமாய்த் தோன்றும்
கோணமா மலைஅமர்ந் தாரே"

என்று இரண்டாம் பாடலைப் பாடினர்போலும். பூஞ்சோலைகள் மிகுந்திருந்ததை,

"விரிந்துயர் மௌவல் மாதவி புன்னை
வேங்கைவண் செருந்திசெண் பகத்தின்
குருந்தொடு முல்லை கொடிவிடும் பொழில்சூழ்
கோணமா மலைஅமர்ந் தாரே"

என்று 6-ம் பாட்டில் கூறுகிறார். இத்தலத் தீர்த்தமாகிய பாவநாசத் தீர்த்தத்தைக் கருதியே,

"கோயிலும் சுனையும் கடலுடன் சூழ்ந்த
கோணமா மலைஅமர்ந் தாரே"

என்று பாடியிருக்கலாம். மற்றத் தலங்களைப்போலவே இராவணன் கயிலை பெடுத்த செய்தி 8-ம் செய்யுளில் கூறியிருந்தபோதிலும், இங்கே கயிலை எடுத்த செய்தி நடந்ததாகக் கூறுவதால், இஃது ஒரு சிறப்பாக விளங்குகிறது.

13-ம் நூற்றாண்டின் நடுவில் சோழவரசு குன்றிப் போய்ப் பாண்டியவரசு தலைமிர்ந்தது. அப்போது அரசாண்ட சடாவருமன் சுந்தர பாண்டியனுடைய சக அரசன் வீரபாண்டியன் என்பான் இலங்கையை அடைந்து, கோணேசர் சன்னிதியில் திருப்பணி செய்திருக்கிறான். அவன் புவனேகவாகுவை வெற்றிகொண்டதனால் தானும் புவனேகவீரன் என விருதுகொண்டான். குடுமியாமலைச் சாசனத்தின்படி (356-1906)

"முழங்கு களிறேறிப்
பார்முழுதுமறிய ஊர்வலம் செய்வித்து
தந்தை யாண்ட தடங்கட லீழ
மைந்தன் பெயரே மரபென நினைப்பிட்
டரசிட மகிழ்ந்து அவனூர் அழிச்சு
விரியச் செல்கென விடைகொடுத் தருளி"

என்பதால் அச்செய்தி காணலாம். மேலும், கடமை இல்லாதபடி ஆக்கினான் என்பதை,

"திருக்கோண அலைவரப்
பாடன் கழித்து வழங்கி யருளி"

என்றும், அம்மலையில் தனது கயல் இலச்சினையைப் பொறித்தான் என்பதை,

"காண மன்னவர் கண்டுகண் டொடுங்க
கோண மலையினுந் திரிகூட மலையினும்
உலகெழு கொடிமிசை இருகய லெழுதி"

என்றும் அவன் மெய்க்கீர்த்தி கூறுகின்றதைக் காண்க.

யாழ்ப்பாணத்தில் ஆரியசக்கரவர்த்திகள்

தென்னிந்தியாவில் பாண்டியமன்னர் வலிகுன்றிய பின்னர், யாழ்ப்பாணத்தில் 'ஆரியசக்கரவர்த்திகள்' என்ற ஓர் அரச வமிசம் ஆளத்தொடங்கியது. அவர்கள் செகராசசேகரன், பரராசசேகரன் என்ற பட்டப்பெயர்களை மாற்றிமாற்றி வைத்துக்கொண்டார்கள். அவர்களிலே செகராசசேகரன் 1380-1414-ல் ஆண்டவன். திருக்கோணமலைக் கோயிலுக்கு நகை முதலிய பல சொத்துக்களைச் செய்துதந்தான். அவன் காலத்தில்தான் 'கயிலாயமாலை' இயற்றப்பட்டது. அப்போது சைவசமயம் யாழ்ப்பாண வட்டத்தில் பெருகியது. அவனுக்குப் பிறகு வந்த பரராசசேகரன் 1467-1519-ல் திருப்பணிகளைச் செய்வித்தான். பல பெரியார்களும், திருக்கோணமலையில் இருந்த வன்னிமைப் பிரதானிகளும் பல தானங்களைச் செய்து இக்கோயிலை ஓம்பியிருக்கின்றனர். சிங்கள அரச வமிசத்தார்களில் 'கோணப்ப பண்டாரம்' என்ற பெயர் கொண்டிருந்ததைக் கருதினால், அவர்களும் கோணமலை ஈசனிடம் அன்புமேலிட்டு வழிபட்டுவந்தனர் என்பதும் கருதப்படும்.

பறங்கியர் புகுகை

இப்படியிருக்கையில், 16-ம் நூற்றாண்டுத் தொடக்கத்தில் போர்த்துகீயர் என்ற பறங்கியர் இலங்கையில் வந்து புகுந்தார்கள். முதலில் வாணிபத்தில் ஈடுபட்டுவருவதாகச் சாக்குச்சொல்லி மெல்லமெல்ல நாட்டைப் பிடித்து அரசியல் நடத்தித் தங்கள் சமயத்தையும் புகுத்தத் தொடங்கினர். போர்த்துகிய அதிபதி கான்ஸ்டெஸ்டீன் டீசா என்பவன், 1624-27-ல் இந்நாட்டில் அதிகாரம் செலுத்தினன். அவன்தான் கோணேசர் கோயிலை இடித்து, அந்த இடத்தில் ஒரு கற்கோட்டையைக் கட்டினவன். இந்தச் செய்தியைக் குறிக்கும் ஆதாரங்கள் சில உள. அந்த அதிகாரி தன் நாட்டு அரசனுக்கு எழுதிய கடிதப் பகுதி:—"திருக்கோணமலைக்கோயில் இருக்கும் இடம் 1200 மார் நீளமும், 80 அடி முதல் 30 அடி வரை அகல

மும் கொண்டது. இங்கே கோட்டை உள்ளது. உயர்ந்த பாறைகள் உள்ளதால் இது மிகுந்த வலுவாய்ந்த அரண் ஆகும். இங்கே கோட்டை கட்டப்போகையில், பல கல் வெட்டுக்களில் அடியிற்கண்ட கல்வெட்டு ஒன்று இருக்கக் கண்டேன். 'இக்கோயில் கட்டியவன் மனுராசன். இது பறங்கியர்களால் அழிக்கப்படும் காலம் வரும். அதன்பின் அதனைத் திருப்பிக் கட்ட இலங்கையில் அரசர்கள் இருக்க மாட்டார்கள்,' என்பதாம்."

மற்றொரு வரலாற்று ஆசிரியன் குவீரோஜ் என்பவன், "கான்ஸ்டெஸ்டீன்டீசா என்பவன் திருக்கோணமலைக் கோயிலை இடித்து, அதன் கற்களைக்கொண்டு கோட்டை கட்டும்போது ஒரு கல்வெட்டைக் கண்டெடுத்தான். 'இலங்கையின் அரசன் மனுராசன் இவ்வாலயத்தை வீதியா மான்டா என்ற தெய்வத்திற்கு கி. மு. 1300-ல் கட்டுவித் தான். பறங்கியர் அதனை இடிப்பர். பின்பு அதைக் கட்டியெழுப்ப இத்தீவில் அரசன் இருக்கமாட்டான்,' என்று எழுதப்பட்டிருந்தது," என்று எழுதியிருக்கிறான்.

இப்போதுள்ள கோட்டை 'போர்ட் பெடரிக்' என் பது. இது போர்த்துகீயக் கோட்டைக்குப் பிற்பட்டது. இதன் கோட்டைவாயிலில் இரண்டு கயல்களும், ஒரு வெண்பாவும் காணப்படுகின்றன. அழிந்த எழுத்துக்களை நிரப்பினால் பின்கண்ட செய்யுள் ஆகிறது.

"முன்னே குளக்கோட்டன் மூட்டுந் திருப்பணியைப்
பின்னே பறங்கி பிரிக்கவே—மன்னவன்பின்
பொண்ணை ததனை இயற்றஅழித் தேவைத்(து)
எண்ணுரே பின்னரசர் கள்."

இக் கல்வெட்டே கான்ஸ்டெஸ்டீன்டீசா பார்த்தது என் பார் உளர். இஃது ஆரூடமாக எழுதியது என்று கூறுவர். இஃது இடைச்செருகல் என்பாரும் உண்டு. இதனைக் கண்டே பறங்கியதிகாரி அழித்தான் என்பாரும் உண்டு.

திருக்கோணமலைக்கு மூன்றுகாதத் தொலைவிலே கழனி மலை என்ற ஓர் இடம் உண்டு. பறங்கியர் கோயிலை அழிக்க வருவதைக் கண்டு, கோயிலார் கோயில் மூர்த்திகளை அவ் வூருக்கு எடுத்துக்கொண்டுபோய் அங்கே வைத்துப்

பூசை செய்துவந்தார்கள். பிறகு பரராசசிங்கன் என்ற அரசன், அம்மூர்த்திகளைத் தம்பைநகருக்குக் கொண்டு போய் அங்கே கோயில் கட்டிவைத்தான். அதன்பிறகு கோயில்விழாக்கள் அங்கேயே நடைபெற்றன.

கண்டியில் 1581-1815 வரை அரசாண்ட அரசர்கள் தஞ்சை நாய்க்கர்களின் உறவினர்கள். ஆகவே, அவர்கள் வடுகவரசர்கள். அவர்கள் ஒல்லாந்தருடன் உடன் படிக்கை செய்துகொண்டு, திருக்கோணமலைக் கோட்டைக் குள் இருந்த கோயில் இடத்திற்குச் சென்று வணங்கும் உரிமை பெற்றார்கள். அதுமுதல் சைவமக்கள் சுவாமிப் பாறைக்குச் சென்று வணங்கிவருகிறார்கள்.

சைவர்கள் பெற்ற உரிமை

1798-ல் ஆங்கிலர் திருக்கோணமலையைக் கைப்பற்றி னர்கள். பிறகு 1814-ல் கண்டியும் பெற்றார்கள். அவர்கள் வந்தபிறகு திருக்கோணமலையில் வழிபட்டு வணங்குவ தற்கு வேண்டிய உரிமைகளைச் சைவர்களுக்குக் கொடுத் துள்ளார்கள்.

ஆகவே, இக்கோயில் அழிந்துவிட்டாலும், இத னுடைய வரலாறு பல காலங்களிலும் நடந்தபடி நமக்குக் கிடைத்திருப்பது ஓர் அரிய செய்தி ஆகும் அன்றோ?

திருக்கோணமலையைப்பற்றி அடியிற்கண்ட நூல்கள் இருக்கின்றன.

1. ஞானசம்பந்தர் தேவாரம் 11 பாடல்கள்.

2. குடுமியாமலைச் சாசனம் (356-1906).

3. கோணேசர் கல்வெட்டு. (பருத்தித்துறை இயந் திரசாலை) இயற்றியவர் கவிராசர்.

4. தக்ஷிண கைலாச புராணம் (பருத்தித்துறை கலாநிதி).

5. தக்ஷிண கைலாச மான்மியம் (வதிரி நாகலிங்கம் பிள்ளை).

6. திருக்கோணமலைப் புராணம். (யாழ். சம்பந்தர் அச்சகம்) இயற்றியவர் பண்டிதராசர்.

7. யாழ்ப்பாண சரித்திரம் (ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை)

8. விசுவகர்ம நாடகம் (வண்ணை. இராமசுந்தரம்).

9. விசுவ புராணம் (கிளியனூர். சிதம்பர கவிராயர்).

10. கதிரைமலைப்பள்ளு ஆராய்ச்சி (வ. குமாரசாமி).


முத்தின் கீழ்க்கோட்டின் சிறப்பைப்பற்றிக் கூறி னேம். இனி, மேற்கோட்டின் சிறப்பைக் கூறுவோம். அதுதான் கொழும்புப்பகுதி.

---

7. மேற்கோட்டில் ஓர் ஓவியம்

கொழும்புத் தலைநகர்

'கொழும்பு' இலங்கையின் தற்காலத் தலைநகர். இஃது உலகிலேயே சிறந்த துறைமுகங்களில் ஒன்று. மேற்கே ஐரோப்பிய நாடுகளுக்கும், கிழக்கே ஆத்திரேலியா கிழக்கு ஆசியா நாடுகளுக்கும், பிற தீவுகளுக்கும் இங்கிருந்தே நீராவிக்கப்பல்கள் செல்லுகின்றன. ஆகவே, உலகில் உள்ள எல்லா நாட்டு மக்களையும் இங்கே காணலாம். இஃது ஐரோப்பியர்களால் திருத்தியமைக்கப்பட்ட ஒரு புது நகரம் என்று சொல்லவேண்டும். இதனைப் பார்ப்பதற்கு இரவு புகைவண்டியில் ஏறினேன். காலை விடியும்போது 'இராகமை' என்ற ஒரு சந்திநிலையம் எட்டியது. அங் கிருந்து வடக்கே நீர்கொழும்பு, புத்தளம் முதலிய ஊர் களுக்கு ஒரு கிளைப்பாதை செல்லுகிறது. பாதையின் இரு புறங்களிலும் தென்னந்தோப்புகளும் இடையிடையே நெல்வயல்களும் காணப்பட்டன. நிலம் மேடுபள்ளங்க ளாக இருந்தது. வண்டி பள்ளத்தாக்குகளிலேயே வளைந்து வளைந்து சென்றது. மேடுகளில் பூங்கொடிகள் பூஞ்செடிகள் பூமரங்கள் அடர்ந்திருந்தன. இளங்காலையில்



கழனிகங்கை

[பக்கம்-க0எ]

இவைகளிலிருந்து அடிக்கும் மணம் நிறைந்த தென்றல் உடலுக்கு இன்பம் தந்தது. வண்டியிலிருந்து தலையை நீட்டி அழகிய காட்சிகளைக் கண்டவண்ணமாக இருந்தேன்.

புத்தபகவான் எழுந்தருளினமை

'கழனிகங்கை' என்ற அழகிய ஆறு காணப்பட்டது. இது நடுநாட்டு மலைகளிலிருந்து தோன்றிக் கொழும்புக்குச் சிறிது வடக்கில் கடலில் விழுகிறது. இவ்வாறு சிறியதாக இருந்தாலும், இருபுறங்களில் அடர்ந்த மரச்சோலைகளை உடையது. தென்னை மரங்கள் நூறு அடிவரைக்கும் உயர்ந்து நிரம்பிய காய்க்குலைகளைத் தொங்கவிட்டுக் கொண்டு, நீண்ட கீற்றுக்களை நீட்டிக்கொண்டு, ஆற்றுக்கு நிழல்கொடுப்பதுபோன்று ஆற்றின்மீது சாய்ந்து நிற்கின்றன. தென்னைகளின் இடையே மா, பலா, சீனிப் பலா, சௌரிப்பனை முதலிய இலை செறிந்த மரங்கள் கரைக்களை மறைத்து நீங்காத நிழல் கொடுத்துக்கொண்டிருக்கின்றன. ஆற்றின் நீரோ தெளிவாக ஓடுகின்றது. ஒரே நேர்கோடுபோல் ஓடாமல் வளைந்து வளைந்து போகையில் மணற்றிடர்கள் இருபக்கங்களிலும் மாறி மாறி இருக்கின்றன. பல பக்கங்களிலும் மூங்கிற்புதர்கள் பச்சைப் பசேல் என்ற தோற்றத்துடன் அடர்ந்தவண்ணமாக வளர்ந்துநிற்கின்றன. இவ்வழகிய ஆற்றின் கரையில் மிகப் பழமையான பௌத்த கோயில் ஒன்று இருக்கின்றது. பௌத்தர்கள் நூருயிரக்கணக்காக இக்கோயிலுக்குச் சென்று வழிபடுகிறார்கள். 2,500 ஆண்டுகளுக்கு முன், புத்தபகவான் இந்தத் தூய இடத்திற்கு எழுந்தருளியிருந்தனராம். இங்கே தூய்மைக்கு அறிகுறியான வெண்மைநிறத்தில் ஓர் அழகிய தூபி நிற்கிறது. அதனருகே கோயிற்கட்டடங்களும் உயரிய மணிக் கூண்டும் இருக்கின்றன. பௌத்தர்கள் தூய உடை யணிந்து, கங்கையில் நீராடிவிட்டு, செந்தாமரைகளை எடுத்துக்கொண்டு, பேரன்போடு அங்குள்ள பௌத்த திருவுருவின் திருவடியில் சாத்துவார்கள். தூய்மையான மஞ்சள்நிற உடையணிந்த பௌத்த துறவிகள் அக்கோயிலில்

இருக்கிறார்கள். இவர்கள் கமண்டலமும் விசிறியும் தவிர வேறொன்றும் வைத்திருக்கமாட்டார்கள். இல்லறத்தார்கள் இத் துறவிகளுக்குப் பிச்சை அளிப்பார்கள். ஆகவே, இவர்கள் பிக்கு அல்லது பிக்ஷுக்கள் என்று சொல்லப்படுவார்கள். இமாலய அடிவாரத்தில், 683 கி. மு. வில், வைகாசி நிறைமதியில் தோன்றிய கௌதமர், இந்த இடத்திற்குத் திருவடி தீக்கை தந்ததே இதற்குள்ள பெருமை ஆகும்.

கோட்டை

புகைவண்டியோ, ஓர் உயரிய பாலத்தின்மீது சென்று இத்தூய்மை பெற்ற ஆற்றைத் தாண்டுகிறது. இரண்டு மூன்று சிறுநிலையங்கள் வருகின்றன. பல பிரயாணிகள் இறங்குகிறார்கள். பிறகு 'மருதானை' என்ற ஒரு பெரிய சந்தி வருகிறது. இங்கிருந்து ஒரு குறுகிய பாதை இரத்தினபுரம் முதலிய நகரங்களுக்குச் செல்லுகின்றது. இந்தச் சந்திதான் புகைவண்டிகள், புகைப்பொறிகள் நிற்பதற்கு ஏற்பட்டுள்ள பெரிய நடுநிலையம். நூற்றுக்கணக்கான பேர்கள் இந்த நிலையத்தில் இறங்கிவிடுகிறார்கள். ஆனால், வண்டி மீண்டும் புறப்பட்டுக் கொழும்புக்கோட்டைக்குச் செல்கிறது. இங்கேதான் பிரயாணிகள் எல்லாரும் இறங்குவது. கோட்டை நிலையம் கொழும்புநகரத்தின் நடுவில் இருக்கின்றது. இங்கிருந்துதான் நகரத்தின் ஒவ்வொரு பகுதிக்கும் செல்லுவார்கள். போக்குவரவிற்கு உரிய எல்லா வசதிகளும் இங்கே அகப்படும். இந்த நிலையம் மிகப் பெரியது. இங்கிருந்தே இலங்கையிலுள்ள பெரிய நகரங்களுக்கு எல்லா வண்டிகளும் புறப்படும். ஒவ்வோர் இடத்திற்கும் தனித்தனி வண்டி ஏறும்படி திண்ணைகள் உண்டு. புத்தளம், தலைமன்னார், காங்கேசன்துறை, திருக்கோணமலை, மட்டக்களப்பு, கண்டி, மாத்தளை, ராகலை, வாதுளை, இரத்தினபுரி, காலி, மாத்துறை முதலிய பெருநகரங்களுக்கெல்லாம் தனிவண்டிகள் புறப்படுகின்றன. எப்போதும் மக்கட்கூட்டம் நிறைந்தே இருக்கின்றது. இந்த ஆண்டு விசாகத்தை யொட்டிப் பெருமித

மான கூட்டம் வந்துபோய்க்கொண்டிருந்தது. நிலையமும் மக்கள் நலன்கருதிப் பரவலாயும் வசதிபொருந்தவும் கட்டப்பட்டிருக்கிறது.

புத்தபகவான் உறுப்புக்கள்

வண்டி நிலையத்தைவிட்டு வெளியே வந்ததும், மக்கட் டொகுதியைக் கண்டு மலைத்துப்போனேன். மின்சார வண்டிகள், விசைவண்டிகள், இழுப்புவண்டிகள் முதலி யன கணக்கின்றி ஓடிக்கொண்டிருந்தன. எதிலும் மக்கள் கூட்டங் கூட்டமாக ஏறினர்கள். இடம் கிடைக்காமல் நிற்கும் ஆட்களுக்குக் கணக்கில்லை. முதல்முதலாக வந்தவர்கள் திண்டாடவேண்டிவரும். இத்துணை நெருக்கடி ஏன் ஏற்பட்டது என்று விசாரிக்கவே, உண்மை தெரிந்தது. நடு இந்தியாவில் 'சாஞ்சி' என்ற இடத்தில், ஒரு சிறந்த விகாரத்தில் புத்தபகவானுடைய எலும்பு உறுப்புக்கள் சேர்த்துவைக்கப்பட்டிருந்தன. ஆங்கிலப் பண்டைச் சரித ஆராய்ச்சியாளர்கள் அவைகளைத் தோண்டி எடுத்துக் கொண்டுபோய் இலண்டன் கண்காட்சி மண்டபத்தில் வைத்திருந்தனர். இந்தியாவில் உரிமையியக்கம் தோன் றவே, தலைவர்கள் அப்பொருள்களை மீண்டும் இந்தியா விற்கே தந்துவிடவேண்டும் என்று வற்புறுத்தினர்கள். பௌத்த சமயிகளுக்கு மிகவும் சிறந்ததான இவ் வடை யாளங்களை அவைகள் வைக்கப்பட்ட இடத்திலேயே வைத்தல் முறை என்று போராடினர்கள். ஆங்கிலரும் அப்பொருள்களைத் தந்துவிட ஒப்புக்கொண்டார்கள். அவைகளை ஒரு நீராவிக்கப்பலில் ஏற்றி இலங்கைக்குக் கொண்டுவந்தார்கள். இலங்கை பௌத்தநாடு ஆகையால், இங்கிருக்கும் பௌத்தர்கள் சிலகாலம் தங்கள் நாட்டில் அத்தூய பொருள்களை வைக்கும்படி வேண்டிக்கொண்டார் கள். அவர்களின் விருப்பத்திற் கிணங்க அப்பொருள்கள் கொழும்பில் நிறுத்தப்பட்டன. அவைகளைக் கொழும்பு நகரக் கண்காட்சிச்சாலையில் சிறந்த காப்புடன் வைத்துள் ளார்கள். அவைகளைக் கண்டு வணங்குவதற்காகத்தான் பல்லாயிரக்கணக்கான சிங்களவர்கள் நாள்தோறும்

சுற்றிலுமுள்ள நாட்டுப்புறங்களிலிருந்து வந்தவண்ணமாக இருக்கிறார்கள். நாள்தோறும் 30,000 பேருக்குக் குறையாமல் கொழும்புக்கு வந்துபோகிறார்கள். புகைவண்டி எதைப் பார்த்தாலும் நிற்கவும் இடம் கிடைப்பதில்லை. இது வைசாகப் பௌர்ணமி மட்டும் நடைபெறுமாம். இன்னமும் பலபகுதி மக்கள் பார்க்கவில்லையாதலால், பின்னும் ஒருமாதம் இங்கே அப்பொருள்களை வைக்கும்படி மக்கள் கேட்கிறார்கள். மக்கள் சமய ஈடுபாட்டைப்பற்றிக் கேட்கவும் வேண்டுமா? அப்பொருள்களை ஒரு விடி பார்த்தாலே தூய்மை ஏற்படும் என்ற நம்பிக்கை இவர்களுக்கு உண்டு. இந்நம்பிக்கை சம்பந்தர் காலத்திலேயே இருந்தது. அதனை அவர் கண்டித்திருக்கிறார் அன்றே?

விவேகானந்த சபை

புகைவண்டி நிலையத்தில், என்னை அழைத்திருந்த விவேகானந்த சபையாரின் பிரதிநிதிகள் வந்திருந்தார்கள். உடனே என்னை அழைத்துக்கொண்டுபோய் ஒரு விசை வண்டியில் ஏற்றினார்கள். அவ் வண்டியோ பல நெருக்கடியான தெருக்களிடை ஓடி, இறுதியில் மேட்டுத்தெருவிற்குச் சென்றது. அதற்கு ஆங்கிலத்தில் 'குன்றுத்தெரு' என்பது பெயர். அது முன்காலத்தில் சோலை அடர்ந்த குன்றாக இருந்திருக்கவேண்டும். இப்போது வீடுகள் அடர்ந்த மேடாகத் தோன்றுகிறது. அம்மேட்டின் உச்சியில் டச்சுக்காரர்கள் கட்டிய கிறித்தவ கோயில் இருக்கிறது. அங்கிருந்து பார்த்தால் கொழும்பின் பெரும் பகுதியும் தெரியும். அது கி. பி. 17-ம் நூற்றாண்டில் கட்டப்பட்டது. கடற்கரையும் துறைமுகமும் அதிலுள்ள நூற்றுக்கணக்கான நாவாய்களும் தெரிகின்றன. பார்வைக்குப் பாய்மரங்கள், இருப்புப் புகைப்போக்கிகள் அடர்ந்த காடுபோலத் தோன்றுகிறது. இந்தக் கிறித்தவ கோயிலைத் தாண்டிச் செல்லவே, ஒரு குறுக்குத் தெருவில் விவேகானந்த சபைக் கட்டடத்தின் தலைவாசல் தெரிந்தது. அதற்குள் சென்று இறங்கினேன். எனக்கு ஓர் அறை தரப்பட்டது. உடனே காலைக்கடன்களை முடித்துவிட்டு,

குழாய் நீரில் குளித்துவிட்டு, வழிபாட்டறையில் பாராயணம் செய்துவிட்டு, அவர்கள் தந்த சிற்றுண்டியை அருந்தினேன். ஊரில் அருகில் இருந்த இடங்களைப் பார்க்கச் சென்றேன்.

கோட்டையும் பேட்டையும்

தென்னிந்தியாவில் உள்ள பல பெரிய ஊர்களைப் போலவே கொழும்பிலும் கோட்டையும் பேட்டையும் உண்டு. 'கோட்டை' என்றால் மதில்களால் சூழப்பெற்ற ஓர் அரண் செய்த இடம். அதற்குள் தலைவருடைய மாளிகையும், இராணுவத்தார் இடங்களும், அரசியல் விடுதிகளும், அவைகளைச் சேர்ந்த மக்கள் இடங்களும் இருப்பனவாம். 'பேட்டை' என்பது, கோட்டையை அடுத்து, ஏனைய பொதுமக்கள் விடுதிகளும், வணிக நிலையங்களும், கடைத்தெருக்களும், தொழிற்சாலைகள் தொழிலாளர்விடுதிகள் முதலியனவும் இருக்கும் பகுதி. இவ்விரண்டு பகுதிகளும் கொழும்பில் இருக்கின்றன. பேட்டையிலே செட்டித்தெரு முதன்மையானது. அதனை அடுத்துப் பல கிளைத்தெருக்கள் இருக்கின்றன. செட்டித் தெரு துறைமுகத் தெருவிற்கு அண்மையில் நேராகப் போகின்றது. இத் தெருவில் இந்தியர்களின் கடைகள், வட்டிக்கடை, காசுக்கடை, உணவுக்கடை, புடைவைக் கடை, சில்லறைப்பண்டக்கடை முதலிய எல்லாக் கடைகளும் உண்டு. நகரத்தார் கடைகள் சிறப்பாக உண்டு. இதே தெருவில் கதிரேசன்கோயில், சிவன்கோயில் முதலியவை உண்டு. இந்தத் தெருவின் வடகோடியில் திரு. இராமநாதன் கட்டிய சிறந்த கற்றளிச்சிவன்கோயில் இருக்கிறது. பேட்டையில் மற்றத் தெருக்களிலும் பெரும்பான்மையாக இந்தியாவிலிருந்து சென்ற மக்களும், யாழ்ப்பாணப்பகுதியிலிருந்து வந்த சைவர்களுமே நிரம்பியுள்ளார்கள். இவர்கட்குச் செல்வாக்கு மிகுதியும் உண்டு. கொழும்பில் பெரும்பான்மையான வாணிபம் இந்திய மக்களிடையும், அரசியல் பகுதிகளின் அலுவல்கள் யாழ்ப்பாணத் தமிழர் இடையிலும் இருக்கின்றன. சிங்களவர்

களோ நாட்டுப்புறங்களில்தான் சிறந்திருக்கிறார்கள், அண்மையில் சிங்களவர்களுக்கும் ஒரு புத்துணர்ச்சி தோன்றி வாணிபத்தையும் உத்தியோகத்தையும் கைப்பற்ற எண்ணுகிறார்கள்.

கோட்டைப்பகுதியிலே அரசியல் மாளிகை இருக்கிறது. இதற்கு 'அரசிவிடுதி' என்று பெயர். இதில் இலங்கையதிபரான கவர்னர் வசிக்கிறார். இதனை அடுத்து ஓர் அழகிய பூங்கா இருக்கிறது. அருமையான மரங்கள், செடிகள், கொடிகள் இதனை அழகுசெய்கின்றன. இதில் வானக்கல் ஒன்று இருக்கிறது. வானத்தில் ஓடும் பெரும்பாறைகளில் சில தற்செயலாய்ப் பூமியால் இழுக்கப்பெற்று நிலத்தில் விழுந்துவிடுவதுண்டு. அப்படிப்பட்ட அதிசயக் கல் இந்தப் பூங்காவில் வைக்கப்பட்டிருக்கிறது. இவைகளை அடுத்துக் கப்பல்துறைக்குச் செல்லும் பிரயாணிகள் பாலமும், சரக்கறைகளும், பண்டகசாலைகளும், பெரிய அரசியல்நிலையங்களும் இருக்கின்றன. கொழும்பில் உள்ள பெரிய நிலையங்கள் முழுமையும் இங்கே நிறைந்திருக்கின்றன. மற்றும் பெரிய வணிகசாலைகளும் உயர்ந்த உணவுவிடுதிகளும் இங்கு உண்டு. இவைகளையெல்லாம் பார்க்க நெடுநேரம் ஆகும்.

அடிமைத்தீவு

கோட்டை பேட்டைகளுக்குத் தெற்கே 'அடிமைத் தீவு' என்ற பகுதி ஒன்றுண்டு. சுற்றிலும் ஆற்றுக்கழியிலால் சூழப்பெற்றதால் 'தீவு' என்ற பெயர் பெற்றது. இதன் வடக்கிலும் தெற்கிலும் இரண்டு ஏரிகள் இருக்கின்றன. இத்தீவு முன்னே மிகச் செழிப்பான புற்பூண்டுகளால் நிறைந்து, எங்கும் பச்சைப்பசேல் என்று இருந்தது. இப்போது பல தெருக்களும், கிறித்தவக்கோயிலும் கலாசாலையும் இருக்கின்றன.

தீவிற்கும் கடலுக்கும் இடையில் சிறந்த நிலையங்கள் இருக்கின்றன. ஆங்கிலர்களுடைய சிறந்த விடுதிகள் இருக்கின்றன. இங்கே கடற்கரையில் மணல்வெளியும், அதனை அடுத்த பெருந்தெருவும் மிகவும் அழகாக இருக்கும்.

மாலைநேரங்களில் செல்வர்கள் இங்கே கடற்காற்று வாங்கச் செல்வார்கள். இவ்விடத்திற்குக் 'காலி முகம்' (Galle Face) என்பது பெயர்.

தீவிற்குத் தென்மேற்கே 'இலவங்கப்பட்டைத்தோட்டம்' என்ற இடம் இருக்கிறது. இங்கே முன்காலத்தில் வாசனை விளைபொருள்களை விற்பனை செய்துவந்தார்கள். இப்போதோ அழகிய குடியிருப்புகள் இங்கே உண்டு. இதனை அடுத்துப் பூங்காவும் காட்சிச்சாலையும் பௌத்தக் கலாசாலையும் இருக்கின்றன. இங்கே ஒரு தெருவில் இசுலாமிய மசூதி இருக்கிறது. இதனை அடுத்துப் பல்கலைக் கழகமும், குதிரைப்பந்தய நிலமும் இருக்கின்றன. இவைகளை அடுத்துத் தெற்கே பல கற்கள் நீளம் புது வீட்டு வசதிகள் ஏற்படுத்தியிருக்கிறார்கள். தமிழர்களில் செல்வர்கள் 'வெள்ளவத்தை' என்னும் இடத்தில் வசிக்கிறார்கள். இங்கே கடற்கரை ஓரத்தில் புதிய மாளிகைகள் கட்டப்பட்டுள்ளன. கொழும்பிலிருந்து 10 கல் வரைக்கும் குடியிருப்புகளாகவே இருக்கும். போக்குவரவுப்பாதைகள் மிக நன்றாக இருக்கின்றன. விசைவண்டிகள் மிகுதியாகக் கிடைக்கும். புகைவண்டிவசதிகளும் மிகுதியாக உண்டு. இந்த வகையில் கொழும்பு புத்தம்புதிதான நகரம் என்னலாம். ஆனால், அடுத்தடுத்தே கூறைச்சாலைகளையும், எருத்துவண்டிகளையும் கண்டால், பழமைக்குப் பழமை என்றும் கூறலாம். இவ்வாறு எதிர் எதிர் பழக்க வழக்கங்கள் குடிகொண்டிருப்பது இந்தத் தலைநகர்.

பண்டைத் தலைநகர்

ஐரோப்பியர்கள் வருவதற்கு முன்னர், கொழும்பு தலைநகரமாக இருக்கவில்லை. ஏனெனில், கீழ்நாட்டார்கள் பொதுவாகக் கப்பல்தொழிலில் பழக்கமில்லாதவர்கள். துறைமுகங்களில் வாணிபர்களே இருப்பார்கள். அரசர்கள் நாட்டின் நடுவில் கோட்டைகளில் வாழ்வார்கள். ஆகவே, தலைநகரங்கள் பெரும்பாலும் நாட்டின் நடுவில் அரண் செய்யக்கூடிய இடங்களில் இருக்கும். நன்னீர்வசதியும், நாட்டில் இடையில், ஆற்றோரங்களிலும்

குளத்தோரங்களிலும் கிடைக்கும். ஆகவே, ஆசியா நாட்டுத் தலைநகர்கள் ஆற்றங்கரைகளிலும் நன்னீர்நிலைகளுக்கு அருகிலும் இருக்கக் காண்போம். தமிழ்ப் பொருளிலக்கணத்திலும் ஊர்கள் மருதநிலத்தில் சொல்லப்பட்டதை அறியலாம். கடற்கரையாகிய நெய்தல்நிலங்களில் துறை, பட்டினம் இவைகளே காணப்பட்டன. மதுரை, உறையூர், தஞ்சை, காஞ்சி முதலிய தலைநகர்கள் உள்நாடுகளிலே ஆற்றங்கரைகளில் கட்டப்பட்டன. அதுபோலவே இலங்கையிலும் தலைமையூர்கள் கடற்கரையைவிட்டு நெடுந்தொலைவில் இருந்தன. அநுராதபுரம், பொலனறுவை முதலிய தலைநகரங்கள் இலங்கை நடுவே இருந்தன. பிற்காலங்களில் கோட்டையும் கண்டியும் உள்நாட்டிலே கட்டப்பட்டன. கடற்கரைநகரங்களில் வாணிகம் மிகுதியாக இருந்தது. அங்கே மீன் பிடிப்போரும் கப்பல்வாணிபர்களும் இருந்தனர். இத் தொழில்களில் சோனகர்கள் ஈடுபட்டனர். இவர்கள் அரபியா நாட்டிலிருந்து குடிவந்த இசுலாமியர். பிற் காலத்தில் மீன்பிடிப்பவர்களில் மிகுதியானவர் கிறித்தவர்கள் ஆகிவிட்டனர்.

கி. பி. 1344-ல் 'இபின் பதூதா' என்ற ஓர் அரபிப் பிரயாணி இலங்கைக்கு வந்தார். அவர் ஆப்பிரிக்காவில் பிறந்த அரபியர். கீழ்நாடுகளில் 24 ஆண்டுகள்வரை சுற்றுப்பிரயாணம் செய்துவிட்டுத் தான் கண்டவைகளை எழுதிவைத்திருக்கிறார். கிழக்கிந்தியாத் தீவுகளைப் பார்த்த போது யாழ்ப்பாணத்தில் இறங்கினர். அங்கே ஆரிய சக்கரவர்த்தி ஆண்டுகொண்டிருந்தார். பிறகு, சிவனொளி பாதமலை காண விரும்பி உள்நாடு புகுந்தார். அந்தக் காலத்தில் காலி, கொழும்பு என்ற துறைமுகங்களைக் கண்டிருக்கிறார். அத்துறைமுகம் பெரிதாகவும் அழகாகவும் இருந்ததாகக் கூறியிருக்கின்றார். அந்தக் காலத்திலேயே அழகாக இருந்திருந்தால், இப்போது சொல்லவும் வேண்டுமா? அப்போது இயற்கையழகுகள் மலிந்திருக்கும்; இப்போது செயற்கையழகுகள் மலிந்து கிடக்கின்றன.

போர்த்துகியர் வருகை

கி. பி. 1505-ல் போர்த்துகியர்கள் இலங்கைக்கு வந்தார்கள். இசுலாமியர்கள் இலங்கையின் கடற்கரைகளில் மிகுதியாக வாணிபம் செய்துகொண்டிருந்தார்கள். அதனைக்கண்ட போர்த்துகல் அரசன், தன் பிரதிநிதியாக இந்தியாவில் இருந்த 'அல்மைதா' என்பவனை இலங்கையைக் காணும்படி கட்டளையிட்டான். அவன் தன் மகனை அங்கு அனுப்பினன். அவன் சென்ற கப்பல், காற்றினால் மோதுண்டு, காலி என்ற துறைமுகம் சேர்ந்தது. பிறகு கொழும்புக்கருகில் அந்நாட்டரசன் இருக்கிறான் என்று கேள்வியுற்று, கொழும்புத் துறைமுகத்தில் இறங்கினன். அவர்கள் இறங்கிய இடத்திற்குக் 'கொலன் தோடா' என்பது அப்போதைய பெயர். அவன் இறங்கியபோது இசுலாமிய வணிகர்கள் கருவாப்பட்டையைக் கப்பல்களில் ஏற்றிக் கொண்டிருந்தார்கள். அதனைக்கண்ட போர்த்துகியர்களுக்கு நாக்கில் நீர் ஊறிற்று. இந்நாட்டையும் இதன் வாணிபத்தையும் கைப்பற்றவேண்டும் என்று ஆசைப்பட்டார்கள். உடனே அரசனுக்குச் செய்தி அனுப்பினர்கள். அரசன் இருந்த இடம், கொலோன்தோடாவிற்கு ஆறுகல் தொலைவில் இருந்தது. அதன் பெயர் சயவர்த்தனபுரம். ஆனால், பொதுமக்கள் கோட்டை என்றே வழங்கிவந்தார்கள்.

போர்த்துகியர் கோட்டை கட்டினது

போர்த்துகியர் வந்த செய்தி அச்சம் பொருந்த அரசனுக்குத் தெரிவிக்கப்பட்டது. அவர்களுடைய பீரங்கிகள் கல்மதில்களையும் தகர்த்துவிடுகின்றன என்று சொல்லப்பட்டது. அரசன் இளவரசனை அனுப்பி, அஃது உண்மை என்று தெரிந்துகொண்டான். அப்படிப்பட்டவர்களோடு சமாதானமாகப் போவதே நன்றென்று எண்ணி, அரசன் தூதுவர்களை அனுப்பினன். தூதுவர்கள் போர்த்துகியரை நேரடியாக அழைத்துச்செல்லாமல், காடுகளின்வழி சுற்றிச்சுற்றி செலுத்திக்கொண்டு, ஊர் சேர மூன்றுநாள் செய்தார்கள். அந்த ஏமாற்றத்தை அவர்கள்

எளிதில் கண்டுகொண்டார்கள். "போர்த்துகீயர் கோட்டைக்குச் சென்ற விதம்" என்பது ஒரு பழமொழியும் ஆயிற்று. போர்த்துகீயர் கொழும்பில் வாணிகம் செய்ய அனுமதிக்கப்பட்டார்கள். 1518-ல் போர்த்துகலிலிருந்து 17 கப்பல்கள் வந்தன. உடனே கொழும்பில் ஒரு பண்டக சாலே கட்டினர்கள். அரசனும் இசுலாமியரும் எதிர்த்தும் பயனில்லாமல் போய்விட்டது. பிறகு, மண்ணினால் ஒரு கோட்டை கட்டினர்கள். அரசன் எதிர்ப்புப் பயனில்லாமற்போய்விட்டது. அதுகண்டு போர்த்துகீயர் கருங்கல்லாலே வலுவான கோட்டை கட்டி அரசனிடம் கப்பமும் வாங்கினர்கள். இவ்வாறு கொழும்பு போர்த்துகல் வசம் ஆகிவிட்டது.

1520-ல் சிங்களர் கொழும்புக் கோட்டையை முற்றுகையிட்டார்கள். ஆனால், போர்த்துகீயர் அவர்களை விரட்டிவிட்டார்கள். இருந்தாலும், சிங்களவர்களுடைய பகைமையை விரும்பாத போர்த்துகீயர், தங்கள் கோட்டையை இடித்துவிட்டனர். மீண்டும் 1551-ல் பெரிதாகக் கட்டினர்கள். இப்போதைய கோட்டை பேட்டை என்ற இரண்டு இடங்களையும் வளைத்துக் கட்டிவிட்டார்கள். போதாக்குறைக்குச் சிங்களவர்களைக் கிறித்து சமயத்திற்குக் கொண்டுசெல்லத் தொடங்கினர்கள். சிங்களவர்களுடைய ஆட்சி மிகவும் தளர்ந்திருந்தது. ஆகவே, போர்த்துகீயருடைய செல்வாக்கு வளர்ந்தது.

ஒல்லாந்தர் வருகை

போர்த்துகீயர் 100 ஆண்டுகள்வரை செல்வாக்கோடு ஆண்டார்கள். ஆனால், ஐரோப்பாவிலே அவர்களுடைய செல்வாக்குக் குறைந்து இசுபானியர்களுக்குப் பணிந்து விட்டார்கள். ஆகவே, வெளிநாடுகளிலும் அவர்கள் வல்லமை குறையத்தொடங்கிற்று. இதனைக் கண்ட ஒல்லாந்தர்கள் புதிதாகக் கீழ்நாட்டு வாணிபம் தொடங்கினர்கள். 1602-ல் ஒரு கம்பெனி நிறுவினர்கள். பிறகு, மெல்ல இலங்கையில் இறங்கிப் போர்த்துகீயரை எதிர்க்கத்தொடங்கினர்கள். சிங்களவரசனைத் தம்முடன் சேர்த்

துக்கொண்டு போர்த்துகீயரைத் துரத்தத் தொடங்கினர் கள். 1655-ல் கொழும்பினை முற்றுகையிட்டார்கள். போர்த்துகீயரோ மிகவும் துணிவுடன் போராடினர்கள். கோட்டைக்குள் பஞ்சம் ஏற்பட்டது. அப்படியிருந்தும், கோட்டையை அவர்கள் விடவில்லை. 1656 மே மாதத்தில் போர்த்துகீயர் அடைக்கலம் அடைந்தார்கள். கொழும்பு ஒல்லாந்தரிடம் வந்துவிட்டது.

ஆங்கிலேயர் வருகை

முதலில் ஒல்லாந்தர்கள் காலியைத் தங்கள் தலைநகராகக் கொண்டிருந்தார்கள். பிறகு யாழ்ப்பாணத்தைப் பிடித்த வுடன் கொழும்புவைத் தலைநகராக்கிக்கொண்டார்கள். ஆகவே, 1656 முதல் கொழும்பு டச்சுத் தலைநகர் ஆகி விட்டது. முதல் கவர்னர் ஏட்ரியன் என்பவன். 1794 வரை 32 கவர்னர்கள் ஆண்டனர். 1796-ல் கொழும்பு ஆங்கிலரிடம் ஆகிவிட்டது. ஆங்கிலருக்கும் டச்சுக்க ாரருக்கும் நடந்த சண்டையின் காரணத்தினால் இலங்கை முழுதும் ஆங்கிலரிடம் வந்துவிட்டது. 1798-ல் முதல் ஆங்கில கவர்னர் 'நார்த்து' என்பவர் அதை ஆளத் தொடங்கினர்.

விவேகானந்தர்

இந்தப் பெரிய நகரத்தில் மேட்டுத்தெருவில் விவேகா னந்தசபை ஒன்று இருப்பதாக முன்னமே குறித்துள் ளேன். 1893-ம் ஆண்டில் அமெரிக்காவில் சிக்காகோ என்ற பெரிய நகரத்தில் உலகசமய மாநாடு ஒன்று நடந்தது. அதற்கு உலகத்திலிருந்த எல்லாச் சமயத்தார் களும் தங்கள் தங்கள் பிரதிநிதிகளை அனுப்பியிருந்தார்கள். இந்து சமயத்திற்காகச் சுவாமி விவேகானந்தர் சென்றிருந் தார். அவ்வுலகமாநாட்டில் வெற்றிகரமாகப் பேசினது மட்டுமன்றி, அங்கேயே மூன்று ஆண்டுகள் இருந்து அந் நாட்டில் இந்துசமயத்தைப்பற்றிச் சொற்பொழிவுகள் செய்து மடத்துக்குப் பல கிளைகளும் ஏற்படுத்தினர். இந்து மதம் மேல்நாடுகளிலே சென்று நிலவுவதற்குச் சுவாமிகளை

காரணம். மூன்றாண்டுகள் கழித்துச் சுவாமிகள் இந்தியா திரும்பினபோது, கொழும்புத்துறைமுகத்தில் இறங்கி வந்தார்கள். அப்போது அவர்களுக்குத் தந்த வரவேற்பிற்கு அளவில்லை. ஒவ்வொரு ஊரிலும் பண்டிதரும் பாமரரும், செல்வர்களும், வறியர்களும் எல்லாருமே மிக மகிழ்ச்சியுடன் அழைத்தார்கள். அக்காலத்தில் இலங்கையில் சமய ஊக்கம் பெருகியது. அதன் விளைவாக இலங்கை முழுவதும் சமய மறுமலர்ச்சி ஏற்பட்டது. அதன் மூலமாகப் பல ஊர்களில் விவேகானந்த சபைகள் தோன்றின. அவற்றில் ஒன்று கொழும்பு விவேகானந்தசபை ஆகும். இது சென்ற 45 ஆண்டுகளாக அருமையான திருத்தொண்டு செய்துவருகின்றது.

விவேகானந்த சபை அமைப்பு

விவேகானந்த சபையைச் சேர்ந்த நிலையத்தில் சொற்பொழிவு இடம், பாடசாலை, பூசையிடம், புத்தகசாலை முதலியன இருக்கின்றன. இதன் காரியக்குழுவில், கொழும்பில் வசித்துவரும் தமிழ்மக்களில் சிறந்தவர்கள் எல்லாரும் இருக்கின்றார்கள். அவர்கள் செய்யும் திருத்தொண்டுகளால் நூல்நிலையம், புத்தகசாலை, சமயத்திருப்பணிகள், குருபூசை, சொற்பொழிவுகள், சிறைச்சாலை, மருத்துவசாலை ஆட்களுக்குச் சமயபோதனை, சைவசமயத்தேர்வு, பரிசுகள், பாடசாலை, விடுதிச்சாலை, வெளியில் சமயநூல்வகுப்புகள், பேச்சுகள் முதலியன நடைபெறுகின்றன. அண்மையில் கட்டட வசதிகளை உயர்த்துவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய முயன்றுவருகிறார்கள். இலங்கையில் உள்ள தமிழ்மக்கள் எல்லாரும் ஒன்று கூடித் தங்கள் முயற்சிகளை வெற்றியுடன் நிறைவேற்றிக் கொள்ளுவதற்கு இந்தச் சபையே முதற்காரணமாக இருக்கிறது.

நான் கொழும்பில் இருந்தபொழுது, என்னை ஒரு சொற்பொழிவு நிகழ்த்தும்படி வேண்டிக்கொண்டு அதற்கு வேண்டிய விளம்பரம் செய்துவந்தார்கள். மாலை $6\frac{1}{2}$ மணிக்குச் சொற்பொழிவுமண்டபத்தில், முதலியார்

சபாரத்தினம் அவர்கள் தலைமையில் சொற்பொழிவு நடந்தது. 'வெளிநாட்டில் தமிழர் நாகரிகமும் சமயமும்' என்னும் பொருள்பற்றிப் பேசினேன். பல பெரியோர்களும் அம்மைமார்களும் வந்திருந்தார்கள். ஏறக்குறைய $1\frac{1}{2}$ மணி நேரம் அப்பொருளைப்பற்றிப் பேசினேன். அமைதியோடு கேட்டதுமன்றி, அப்பொருளை எழுதித்தரும்படியும் சொன்னார்கள். சொற்பொழிவு முடிந்ததும், உடனே புகைவண்டிக்குச் செல்லவேண்டிவந்தது. அன்பர்கள் என்னை வழியனுப்பியதன்றி, எனக்கு அறிவிக்காமலேயே, பலவகைத் தின்பண்டங்களைக் கட்டி என் அறையில் வைத்திருந்ததைக் காண, எனக்கு மிக வியப்பு ஏற்பட்டது. என்மீது அவர்கள் ஒரு விஞ்சியில் கொண்ட அன்பிற்கு அளவும் உண்டோ?

சமய நிலையங்கள்

கொழும்பிலே சிறந்த சமயநிலையங்கள் பல இருக்கின்றன. அவைகளை இந்த முறையில் நான் பார்க்க இயலாமற்போனாலும், சென்றமுறை பலவற்றைப் பார்த்திருக்கிறேன். இந்துக்கோயில்களில் இராமநாதன் அவர்கள் கட்டிய சிவன்கோயில் மிகப் பெயர்பெற்றது. தென்னிந்தியாவிலிருந்து சிற்பிகளை அழைத்து, மிகத் தொலைவிலிருந்து கருங்கற்களைப் பெருஞ்செலவில் கொண்டுவந்து, தென்னாட்டுக் கோயில்களைப்போலவே கட்டியிருக்கின்றார். அவர் இருந்தபோதே பெரும்பகுதி முடிந்துவிட்டது. பிறகு, அதனை நிறைவுசெய்ததாகத் தெரியவில்லை. வேலை மிகத் திறமையுடன் செய்யப்பட்டுள்ளது. மூகமதியப் பள்ளிகள் பல உண்டு. அவைகள் இசுலாமிய வணிகர்களாலேயே கட்டப்பட்டு ஓம்பப்படுகின்றன; ஒன்று இலவங்கப்பட்டைத்தோட்டத்திற் கருகில் உள்ளது. மேலும் மிகப் பழைமை பொருந்தியதும் சிறந்ததுமான பௌத்தப் பள்ளிகளிலே சிறந்ததொன்று இருக்கிறது. இதில் பௌத்தச் சிலைகளின் உருவங்கள் மிக நேர்த்தியாக இருக்கின்றன. போர்த்துகீயர், டச்சு முதலியவர்களுடைய கிறித்தவப் பள்ளிகள் உள்ளன.

கண்காட்சிச் சாலை

கண்காட்சிச்சாலை மிகச் சிறந்தது. இந்துப் பௌத்த சிலைகளும், திருவுருவங்களும் மிக முயற்சியுடன் சேர்த்து வைக்கப்பட்டுள்ளன. சென்றமுறை பார்க்கச் சென்ற போது சிலவற்றின் பெயர்கள் மாறுபட்டிருந்தன. எடுத்துக்காட்டாகத் திருஞானசம்பந்தருடைய திருவுருவத்தின் கீழ் 'நடன கிருஷ்ணன்' என்று எழுதியிருந்தது. அதைத் தெரிவித்தபொழுது மாற்றிவிடுவதாக அதிகாரிகள் கூறினர்கள். கண்டியரசர்கள், அரசகுமாரிகள் அணிந்திருந்த ஆடைகள், அணிகள் முதலியவைகள் வைக்கப்பட்டிருக்கின்றன. இவைகளால் அக்காலத்து ஆடை அணிகள் எவ்வகையாக இருந்தன என்பது அறியமுடியும்.

இக் கண்காட்சிச்சாலையில் சில கல்வெட்டுக்கற்கள் சேர்த்து வைக்கப்பெற்றிருக்கின்றன. அவற்றில் ஒன்றில் அடியிற்கண்ட அழகிய வெண்பா காணப்படுகின்றது.

> கங்கணம்வேற் கண்ணினையாற் காட்டினர் காமர்வளைப்
> பங்கயற்கை மேற்றிலதம் பாரித்தார்—பொங்கொலிநீர்ச்
> சிங்கைநகர் ஆரியனைச் சேரா அனுரேசர்
> தங்கண் மடமாதர் தாம்.

யாழ்ப்பாணத்தை ஆண்ட அரசர்கள் 'சிங்கை ஆரியசக்கரவர்த்திகள்' எனப்பட்டார்கள். அனுரேசன் என்பதற்கு 'அனுரையின் அரசன்' என்பது பொருள். அனுரை-அநுராதபுரம். அதன் அரசர் சிங்களவேந்தர். ஆரியனுக்குச் சிங்களன் தோல்வியடைந்ததை வியந்து இவ்வெண்பாப் பேசுகிறது. இது 13-ம் நூற்றாண்டுச் செய்தி என்பர். இவ்வெண்பாவைத் தவிர, வேறு இரண்டு கல்வெட்டுக்களும் அங்கு உள்ளன (616 to 618/1912). முதல் கல்வெட்டில் ஈழமண்டலத்திற்குச் சோழர் இட்ட பெயர் 'மும்முடிச் சோழமண்டலம்' என்றும், மாதோட்டத்திற்கு 'இராசராசபுரம்' என்றும், அங்குக் கட்டியிருந்த கோயிலுக்கு 'இராசராசீசுவரம் உடையார்கோயில்' என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. மற்றொரு கல்வெட்டு 'திருமன்னிவளர' என்ற தொடக்கத்து இராசேந்திரன் கல்

வெட்டாகும். அதில் மாதோட்டமான இராசராசபுரத்தில் உள்ள கோயில் இறைவனின் பெயர் 'திருவிராமீசுரமுடையார்' என்று குறிக்கப்பட்டுள்ளது.

மூத்தின் மேற்பகுதி, பொதுவாக நயமாகவும் பளபளப்பாகவும் இருக்கும். சில முத்துக்களில் அழகிய நீர்த்தாரை இருக்கும். மேற்கோட்டுப் பகுதியின் அருகே ஓர் அழகிய நீர் ஓட்டம் இருக்கிறது. அதுதான் 'கழனிப் பள்ளத்தாக்கு'. அதன் பெருமையை எடுத்துச்சொல்வோம்.

---

8. நடுவில் ஓர் இரேகை

கழனிப்பள்ளத்தாக்கு

கொழும்புவைப்பற்றிக் கூறும்போது கழனிகங்கையைப்பற்றியும், அதன் கரையின்மேல் இருக்கும் கழனிப் பௌத்தர் கோயிலைப்பற்றியும் எழுதினோம். அவ்வாறு கொழும்பிற்கு அருகில் கடலில் சேருகிறது என்று அறிவோம். அந்தப் புகழ்பெற்ற கோயிலும் கொழும்பிற்கு இரண்டரை கல் தொலைவில் உள்ளது என்றும் கண்டோம். இந்த ஆற்றின் இருபக்கங்களிலும் அழகான பசுஞ் சோலைகள் இருக்கின்றன. மூங்கில்புதர்களும் தென்னந் தோப்புகளும் மிகுதியாக வளர்ந்திருக்கின்றன. இந்தச் செழிப்பெல்லாம் அவ்வாற்றினுடைய வண்டல்நீராலேயே ஏற்படுகிறது என்று அறிதல் வேண்டும். இலங்கையின் நடுப்பாகம் முழுதும் மலைகள் அடர்ந்த நிலம். அங்கே மிகுந்த மழை எக்காலத்திலும் பெய்யும். அம் மழைநீர் வெள்ளமாகப் பெருகி, மலைகளில் உள்ள வண்டல்களை எல்லாம் அடித்துக்கொண்டு பள்ளத்தாக்குகளின் வழியாக ஓடி, சமநிலத்தில் பாய்ந்து, இருபுறங்களிலும் உள்ள நிலங்களைச் செழிப்பிக்கின்றது. இந்த வகை வெள்ளத்தினால் ஆகிய ஆறுகள் பல உள. அவற்றில் கொழும்புக்குச் சிறிது வடக்கே கடலில் பாய்வதுதான் கழனிகங்கை

என்பது. இவ்வாறு கிழக்குமலைகளில் தோன்றி, ஒரு செழிப்பான பள்ளத்தாக்கின் வழியாகப் பாய்ந்து கடலுக்கு வருகிறது. இந்தப் பள்ளத்தாக்கின் பெயர் 'கழனி ஆற்றுப் பள்ளத்தாக்கு' என்பது. இந்தச் செழிப்பான பள்ளத்தாக்கில் நெல் முதலிய உணவுப்பொருள்களும், தென்னை முதலிய மரங்களும் மிகுதியாக வளர்வதையன்றி, இரப்பர்த் தோப்புகள் அளவுகடந்து பயிரிடப்படுகின்றன. இலங்கைக்குப் பணவருவாய் மிகுதியாகத் தரக்கூடிய தோட்டப்பயிர் இரப்பர்மரம் ஆகும். இந்த மரங்களிடையே ஒரு 'குழந்தைப் புகைவண்டி' ஓடுகிறது. அதன் பாதை மிகக் குறுகியது. இந்தப் பாதைக்குக் 'கழனிப் பள்ளத்தாக்குப் பாதை' என்பது பெயர். இதன் வழியே செல்வோம்.

அகலமான புகைவண்டிப்பாதையில் போய்ப் பழகியவர்கள் கழனிப்பாதையைப் பார்த்தால், இஃது என்ன, 'குழந்தை வண்டியோ' என்று எண்ணுவார்கள். யாழ்ப்பாணம்—கொழும்பு வண்டி $5\frac{1}{2}$ அடி அகலம் இருக்கும். ஆனால், கழனிப்பாதையோ $2\frac{1}{2}$ அடி அகலந்தான் இருக்கிறது. ஆகவே, வண்டி மெதுவாகப் போவதல்லாமல் குறைவான ஆட்கள்தான் ஏறிச் செல்லமுடியும். அது கொழும்புக் கோட்டையிலிருந்து புறப்பட்டு இராகமை வழியாக அவிசாராவலைக்குப் போகிறது. அங்கே இரண்டு கிளைகளாகப் பிரிந்து, ஒன்று இரப்பர் தோட்டத்திற்கும், மற்றொன்று இரத்தினபுரம் வழியாக ஓபநகைக்கும் செல்லுகிறது. இவ்விரண்டு நிலையங்களோடு இந்தச் சிறு பாதை முடிவு அடைகிறது. இது மேற்குமாகாணம், சபரகமுவா மாகாணம் என்ற இரு மாகாணங்களின் போக்குவரத்துகளுக்குப் பயன்படுகிறது.

இரப்பர்த் தோட்டம்

இந்த வண்டியில் போகும்பொழுது இரு பக்கங்களிலும் இரப்பர்மர வரிசைகள் இருக்கும் என்று கூறினேம். இரப்பர்மரம், தொடக்கத்திலே தென்னமெரிக்காவில் பயி



சிங்களப்பெண் இரப்பர் எடுக்கிறது

[பக்கம்-கஉங]

ராகிக்கொண்டிருந்த மரம். அதனை அந்தக் கண்டத்திலிருந்து ஆசியாவிற்கு இறக்குமதி செய்து, பல ஆசியாத் தீவுகளில் நட்டு விளைவித்தார்கள். அவைகளிலே இலங்கை மலேயா முதலிய இடங்களில், அம்மரம் மிகச் செழிப்பாக வளர்ந்தன. அதனுடைய ஊதியத்தை அறிந்து, அந்நாட்டு மக்கள் மிகவும் பெருக்கிவந்தார்கள். முதலில் ஆங்கிலத் தோட்டக்காரர்கள் பெரும்பொருள் போட்டுத் தோட்டங்களை உண்டாக்கினர்கள். இன்றைக்கும் அவர்களுடைய தோட்டங்கள்தாம் மிகப் பெரியவை. ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களை இரப்பர் சாகுபடிக்கு உட்படுத்தினர்கள். தோட்டங்களிலே வேலைசெய்வதற்காக இந்தியாவிலிருந்து கூலிகளைத் தருவித்தார்கள். அவர்கள் ஒப்பந்தத்தின் பேரில் இங்கு வந்து கூலிவேலை செய்வார்கள்.

தொடக்கத்தில் நாட்டுமக்களாகிய சிங்களவர் இரப்பர் தோட்டங்களில் ஈடுபடவில்லை. ஆனால், நாளாவட்டத்தில் இரப்பர் வினைவால் மிகுதியான ஊதியம் கிடைக்கிற தென்று கண்ட சிங்களக் குடியானவர்களும் தங்கள் நெல்வயல்களிலும் இரப்பர்மரங்களை நட்டுப் பெரிய தோட்டங்களை உண்டாக்குகிறார்கள். சிங்களப்பெண்கள் தோட்டங்களில் வேலைசெய்வது தாழ்ந்தது என்று எண்ணிக்கொண்டிருந்தார்கள். அதனால்தான் இந்தியாவிலிருந்து கூலிகள் இலங்கைக்குக் கொண்டுபோகப்பட்டார்கள். ஆனால், இப்போதோ காலம் மாறிவிட்டது. ஊதியம் மிகுதியாக வருகிறது என்று கண்டதும், சிங்களப் பெண்கள் மிகுதியாகத் தோட்டவேலைகளில் அமரத் தொடங்கிவிட்டார்கள். இரப்பரின் விலை மிகவே, தொழிலாளிகளின் கூலியும் மிகுதியாகத் தொடங்கியது. ஆகவே, எங்கும் இரப்பர்பண்ணைகளும் தொழிலியக்கமும் ஏற்றம் அடைந்துவருகின்றன. இதுவரைத் தொழில் முயற்சிகளில் ஈடுபடாத சிங்களப்பெருமக்கள், இரப்பர் முதலிய தோட்டங்களில் பெருஞ்செல்வத்தை முதலாக வைத்து, இப்போது நாட்டுவளமையைப் பெருக்குகிறார்கள்.

இரப்பர்த்தாள்கள்

புகைவண்டியில் போகும்போதே இரப்பர்த்தோட்டக்களில் எவ்வாறு வேலைசெய்கிறார்கள் என்பதை அறியலாம். மரங்கள் வரிசையாகப் பத்து அடிக்கு ஒன்று வளர்ந்திருக்கும். மரத்தின் அடிப்பகுதி 3 அடி கனம் இருக்கும். நிலமட்டத்திலிருந்து 3 அடிக்குமேலே மரப்பட்டையைக் கூரிய கத்தியால் நறுக்கிவிடுவார்கள். அந்தக் கீறல் சாய்வாக அந்த மரத்தைச் சுற்றிக் கீழே செல்லும். ஒரு சுற்றுக்குமேல் கீறல் வெட்டு இருக்காது. அவ்வெட்டின் நுனியில் ஒரு கொட்டாங்கச்சியோ, அலுமினக் கிண்ணியோ தொங்கவிடுவார்கள். கீறின காயத்திலிருந்து இரப்பர்பிசின்சாறு கீழே ஒழுகி அந்தக் கிண்ணியில் விழும். அக்கிண்ணி நிரம்பியவுடனே அதனை எடுத்து, ஒரு பெரிய பாத்திரத்தில் நிரப்புவார்கள். இவ்வாறு நிரப்பின சாறு அல்லது பாலை எடுத்துக்கொண்டுபோய் இரப்பர் ஆலைகளில் சேர்த்துவைப்பார்கள். அங்கே திராவகத்தை அச்சாற்றில் விடுவதனால், அச்சாறு உறைந்து கெட்டியாகும். இருபத்துநான்குமணி நேரத்தில் அது ஒருவகையான கெட்டித்தன்மை பெறும். பிறகு அந்தப் பதத்திலே அதனை இயந்திரங்களில் இட்டுத் தகடுகளைப்போல அமுக்கிவிடுவார்கள். அவ்வகைத் தகடுகள் அல்லது தாள்களை உலரவைத்துத் தூய்மைப்படுத்துவார்கள். இந்தத் தாள்கள் வெளிநாடுகளுக்குப் பலவகை வேலைகளுக்காக அனுப்பப்படுகின்றன.

பெரிய இரப்பர்ப்பண்ணைகளில் நடத்தும் வேலைகளைச் சிறு பண்ணைக்காரர்களும் செய்யக் கற்றுக்கொண்டிருக்கிறார்கள். ஊர்ப்புறங்களில் வசிக்கும் நாட்டுப்புறத்தார்களும் தங்கள் சின்னஞ்சிறு தோட்டங்களில் இரப்பர் மரங்களை உண்டாக்கி, அவைகளிலிருந்து சாறு எடுத்துத் தாள்களாக ஆக்குகிறார்கள். இவர்கள் பெரிய இயந்திர சாலைகளை வைப்பதற்குமாறாக, சிறுசிறு வசதிகளை ஏற்படுத்திக்கொண்டு, மிகுந்த வருத்தமும் பணச்செலவும் இல்லாமல் தாள்களை உண்டுபண்ணுகிறார்கள். அவை

களைப் பெரிய வியாபாரிகளுக்கு விற்றுவிடுவார்கள். ஆகவே, இரப்பர்தொழில் நாட்டுப்புறங்களில் ஒரு குடிசைத்தொழிலாகவும் அமைந்திருக்கிறது. நாம் புகை வண்டியிலாவது விசைவண்டியிலாவது செல்லும்போது குடியானவர்கள் பாலைக் காய்ச்சுவதையும், தாள்களாக்கிக் கயிறுகளில் உலரவிட்டிருப்பதையும் நேரில் பார்க்க முடியும்.

சிறு இருப்புப்பாதை

கழனியாற்றுப் பள்ளத்தாக்கு மிகவும் செழிப்பானது என்று அறிந்தோம். தொடக்கத்திலிருந்தே ஆற்றின் இரு புறங்களிலும் நெல்வயல்களும் தென்னந்தோப்புகளும் மிகுதியாக இருந்தன. இவற்றின் மாசூல்களைத் தலைநகருக்குக் கொண்டுபோகவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. கொழும்பு வியாபாரத்திற்கு மிகவும் சிறந்த நகரமாக ஏற்பட்டு, வெளிநாடுகளுக்குத் துறைமுகம் வழியாக ஏற்றுமதி மிகுதியாகப் பெருகினபடியால், எளிதாகக் கழனிப்பள்ளத்தாக்கின் விளைபொருள்களைக் கொண்டு வந்து சேர்க்கவேண்டிவந்தது. பண்டைக்காலத்து எருத்து வண்டிகள் மூலம் சரக்குகளைக் கொண்டுவரச் செலவும், காலக்கழிவும் இடர்களும் உண்டாவதால், இருப்புப் பாதை கட்டாயமானது என்று அரசியலார் அறிந்தார்கள். அப்பள்ளத்தாக்கின் அமைப்பைக் கருதிக் குறுகிய பாதை போடுதல்தான் ஏற்றமானது என்று அறிந்து அதையே போட்டார்கள். பின் இரப்பர்விளைவு மிகுதியாக ஏற்படவே, இந்தப் பாதை மிகச் சிறியதாயிருந்தபோதிலும் மிகுந்த பயனைத் தந்தது. சரக்கு ஏற்றுமதிக்கு இப் பாதை இன்றியமையாததாகவும், மிக ஊதியம் தருவதாகவும் ஆகிவிட்டது.

இவ்வாறு முதலில் உணவுப்பொருள் ஏற்றுமதிக்கு இப்பாதை ஏற்பட்டபோதிலும், இது மக்கள் பயணத்திற்கும் மிகுதியாகப் பயன்பட்டது. ஆகவே, இதனை மற்ற ஊர்களுக்கும் தொடர்ந்து நீட்டிவிட்டனர். போகும் வழியிலே மிகப் புதுமையான இயற்கையழகுகளைப்

பார்த்துக்கொண்டே செல்லுவோம். கழனிகங்கையின் கரையோரமாகப் போகும் வழியில் பல சிற்றோடைகளும் பேராறுகளும் வந்து அதில் சேருவதைக் காணலாம். எதிரே மலைச்சரிவுகளில் அழகிய நீரருவிகள் விழும் காட்சிகள் தோன்றும். கரிய பாறைகளில் வெள்ளிக்கம்பிகள்போல நீரருவிகள் பாய்வதைக் கண்டால், நாம் நிலவுலகத்தில் இருக்கிறோமா என்று எண்ணைக்கூடும்.

தெருங்கிய ஊர்கள்

இருப்புப்பாதை குறுகியதாக இருந்தாலும், மிகவும் செழிப்பான நிலத்தில் செல்லுகிறபடியால், குடிநெருக்க முள்ள ஊர்களுக்குப் பயன்படுகிறது. ஆகவே, ஒரு கல் இரண்டு கற்களுக்கு ஒவ்வொரு வண்டிநிலையம் கட்டப் பட்டுள்ளது. இந்தப் பாதையில் அவிசாவலை என்பது ஒரு சந்தி. இது மருதாணையிலிருந்து 37 கல்லில்தான் உள்ளது. இந்தத் தொலைவுக்குள்ளாக 19 நிலையங்கள் இருக்கின்றன. அவிசாவலையிலிருந்து ஒரு கிளை எட்டியாந்தோட்டைக்குச் செல்லுகிறது. இது கழனிகங்கையின் பள்ளத்தாக்கி லேயே செல்லுகிறது. இதற்குப் பின்னாலே பெரிய மலைத் தொடர்கள் சுவர்போல நிற்கின்றன. ஆற்றங்கரை யில் நின்றுகொண்டு மலைகளைப் பார்த்தால் காட்சி மிக இன்பமாகத் தோன்றும். அவிசாவலையிலிருந்து மற்றொரு கிளை தென்கிழக்காக மலைநாட்டின் அடிவாரத்திலேயே ஒபனாக்கைக்குப் போகிறது. அவிசாவலையிலிருந்து ஒபனாக்கை 48 மைல். இதில் 12 நிலையங்கள் இருக் கின்றன.

கோட்டை

மருதாணையிலிருந்து பழைய தலைநகரான கோட்டைக் குச் செல்லும் பாதையில் இரண்டாவது நிலையம் அக் கோட்டை. அஃது அங்கிருந்து நான்கு கல் தான் இருக்கும். அதன் முழுப்பெயர் சயவர்த்தனகோட்டை. இது போர்த்துகீயர் கொழும்புக்கு வந்தபோது இலங்கை யின் தலைநகராக இருந்தது. கோட்டை 1351 கி.பி.-யி

லிருந்து 1581 வரை, அஃதாவது 230 ஆண்டுகள்வரை இலங்கையின் தலைநகராகத் திகழ்ந்தது. பறங்கியருடைய துன்பம் பொறுக்கமுடியாமல் தலைநகர் மாற்றப்பட்டு உள்நாடு சென்றது.

சீதவாகை

கழனிகங்கைப் பள்ளத்தாக்கின்வழிச் சென்ற இருப்புப்பாதை தென்கிழக்கே திரும்பிச் செல்லுகிறதென்றோம். இங்கே 'சீதாவாகை' என்ற ஓர் ஆறு எதிர்ப்படுகிறது. இதன் பெயரே சீதை என்ற பெருமாட்டியின் பெயருடன் தொடர்புபட்டிருப்பதைக் காணலாம். பண்டைக்காலத்தில் இலங்கை அரசன் இராவணன் இராமனுடைய மனைவி சீதையைக் கவர்ந்து, தன் அசோகவனத்தில் சிறையிட்டிருந்தபோது, இராமன் வானர சேனையுடன் வந்து பெரும்போர் புரிந்து இராவணனைக் கொன்று, சீதையைச் சிறைமீட்டது இந்த இடத்தில் என்பர். அப் பெருமாட்டியின் பெயரே இந்த அழகிய ஆற்றிற்கு வைக்கப்பட்டதாம். இப்பண்டைக்காலக் கதை எவ்வாறாக இருந்தபோதிலும், 16-ம் நூற்றாண்டிலே இந்த இடத்திலே பெரிய அரசியல் தொல்லைகள் நடைபெற்றன என்று அறியவேண்டும்.

விசயவாகுவின் வீழ்ச்சி

கோட்டையிலே விசயவாகு (1527-1534) அரசனாக இருந்தான். அவனுக்குத் தன்னலமும் பொறுமையும் தவிர வேறு நற்குணங்கள் இல்லை. ஆகவே, நாட்டில் எங்கும் கலவரமே மிகுந்திருந்தது. ஒவ்வொருவரும் தன் ஆட்சி பெற முயன்றனர். அதனைத் தடுப்பதற்கு அவனுக்கு ஆற்றல் இல்லை. பெயரளவிலே மற்றச் சிற்றரசர்கள் கோட்டைவிசயவாகுவின் குறுநிலமன்னர்களாக இருந்தார்கள். இந்தச் சமயத்தில் அறிவில்லாத அந்த அரசன், தன் சொந்த மக்களைப் புறக்கணித்துவிட்டு மாற்றுள் மகனை இளவரசாக்கினான். போதாக்குறைக்குத் தன் சொந்த மக்களை இயமனுலகத்திற்கு அனுப்புவதற்கு முயற்சியும் எடுத்துக்கொண்டான். இதனை அறிந்த சொந்தமக்கள்

பழிவாங்க எண்ணினர்கள். ஒரு பெருஞ் சேனையைத் திரட்டிக் கோட்டையை முற்றுகை செய்து அதனைச் சூறையாடி, விசயவாகுவைக் கொல்லுவித்தார்கள். அவர்களில் மூத்தவனை 'புவனேகவாகு' என்பவன் பட்டத்திற்கு வந்தான். மற்ற இருமக்களில் மாயாதுனை சீதவாகையிலும் இராயிகப்பண்டாரம் இராயகாமத்திலும் ஆட்சிபுரிந்தார்கள். அப்போதுதான் சீதவாகையும் ஒரு தலைநகர் ஆயிற்று.

புவனேகவாகுவின் பொருந்தாச்செய்கை

புவனேகவாகுவும் அறிவாளியல்லன். தன் தகப்பன் செய்த குற்றத்தையே தானும் செய்ய முயன்றான். அவன் மகள் வயிற்றுப் பேரன் தருமபாலன் என்ற அரசகுமாரன் ஒருவன் இருந்தான். அவனை இளவரசாக்கினதாகத் தெரிவித்தான். இச்செய்தி மாயாதுனைக்குப் பிடிக்கவில்லை. மாயாதுனை மிகத் திறமையுள்ளவன். உடனே சீதவாகையைப் பலப்படுத்தினன். ஆனால், புவனேகவாகுவோ போர்த்துகீயருடன் உடன்படிக்கை செய்துகொண்டு, சீதவாகைமேல் படையெடுத்து அதைப் பிடித்தான். மாயாதுனை முகமதியருடைய துணை பெற்றும் பயனில்லை. சீதவாகை இருமுறை எரிக்கப்பட்டது. புவனேகவாகுவை இலங்கைமக்கள் வெறுத்தார்கள். ஆகவே, அவன் போர்த்துகீயருடன் சேர்ந்துகொண்டு அவர்களுடைய வலுவினால் அரசை நிலையாக்கிக்கொள்ள முயன்றான். இதற்காக ஒரு தந்திரம் பண்ணினன். அத்தந்திரமே வினை ஆயிற்று. தன் பேரன் தருமபாலனைப் போல் ஓர் உருவம் செய்து போர்த்துகலுக்கு அனுப்பி, அங்கே போர்த்துகல் மன்னனால் அதற்கு முடி அணிவிக்கச்செய்தான். அம்முடிஅணிதல் மிக ஆரவாரத்துடன் நடத்தப்பட்டது. போர்த்துகல் அரசன் தருமபாலனுக்கு 'டான்ஜுவான்' என்ற பட்டமும் தந்தான். இச்சடங்கினால் புவனேகவாகு போர்த்துகலுக்குக் கீழ்ப்படிந்த சிற்றரசன் ஆனன். இதுமட்டுமேயன்றி, இலங்கை முழுதும் கிறித்துவ சமய போதகர்களை அனுப்பி அங்கே

மதமாறுதல் செய்யக் கட்டளையும் பெறப்பட்டது. இந்தத் தீங்குகள் எல்லாம் நாட்டுமக்களுக்குப் பிடிக்கவே இல்லை.

இப்படியிருக்க, 1551-ல் புவனேகவாகு இறந்தான். கழனியாற்றங்கரையில் ஒருநாள் புவனேகவாகு நடந்து கொண்டிருந்தான். திடீரென்று ஒரு வெடி கிளம்பியது. அது புவனேகவாகுவின் மண்டையில் பட, கீழே விழுந்து இறந்தான். அது போர்த்துகீயர் செய்த சூழ்ச்சியென்பர். சிலர் தற்செயலாய்ப் பட்டதென்பர். உண்மை தெரியவில்லை. தருமபாலன் பட்டத்திற்கு வந்தான். அப்போது மாயாதுனை சீதவாகையிலும் வீரவிக்கிரமன் கண்டியிலும் ஆண்டுகொண்டிருந்தனர். தருமபாலன் பேருக்கு மட்டும் கிறித்தவனாக இருந்தான். ஆனால், நாட்டுமக்களில் பலபேர் கிறித்தவப் பெயர்களை இட்டுக்கொண்டு கிறித்தவ கோயில்களுக்குச் சென்றுவந்தனர். அவ்வாறு செய்ததனாலே போர்த்துகீயரிடம் வேலையும் பணமும் கிடைத்தன. மன்னர்வட்டம் முழுதும் கிறித்துவ சமயமாகி விட்டது. அதனால், தருமபாலன் கிறித்தவர் துணையின்றி வெளியே வரமுடியவில்லை.

போர்த்துகீயர் தோல்வி

சீதவாகையில் ஆண்ட மாயாதுனையின் நோக்கமே வேறு. போர்த்துகீயரை இலங்கையிலிருந்து துரத்திவிட்டுத் தானே அரசனாகவேண்டுமென்பதே அவனுடைய அதன்பொருட்டுச் சீதவாகையை நன்றாகப் பலப்படுத்திக் கட்டினான். அக்கம்பக்கத்தில் இருந்த நாட்டாண்மைக் காரர்களைத் தனக்குள் இணைத்துக்கொண்டான். அவன் மகன் திக்கிரிபண்டாரம் என்பவன் திறமையுள்ளவன்; பெரிய போர்வீரன். அவன் தன் தகப்பனுக்கு மிகுதியும் உதவிசெய்தான். மாயாதுனையின் ஆட்சியும் புகழும் பெருகின. அதைக் கண்ட தருமபாலனும், போர்த்துகீயரும் அவனை அடக்க முயன்றனர். பெருஞ் சேனையைத் திரட்டிக்கொண்டு மாயாதுனையை எதிர்த்தனர். மலை நாட்டுப் பள்ளத்தாக்குகளில் போர் நிகழ்ந்தது. போர்த்துகீயர் தோல்வியடைந்தார்கள். கோட்டை முற்றுகை

யிடப்பட்டது. தருமபாலன் கொழும்புக்கு ஓடிவிட்டான். அப்போது மாயாதுனை பெரும்புகழ் அடைந்து ஆண்டு வந்தான். ஆனால் அஃது எத்தனை நாள் நடந்தது? 1581-ல் மாயாதுனைக்கு முடிவு வந்தது. தன் தகப்பனைக் கொல்லுவித்தான். அந்தப் பழி போகுமா? திக்கிரிபண்டாரம் எத்தனை நாள் காத்திருப்பது என்று எண்ணி மாயாதுனையை உடனே கொன்றுவிட்டு, இராசசிங்கன் (1581-1592) என்ற பட்டத்துடன் சீதவாகையில் அரசாளத் தொடங்கினன். இவன் மிக வலிமைவுடன் ஆண்டான்.

இராசசிங்கன் பட்டத்திற்கு வந்ததும் போர்த்துகீயர் மறுபடியும் போர் தொடங்கினர்கள். சீதவாகையைப் பிடிக்க முயன்றார்கள். முதலில் இராசசிங்கன் தன் படைத்தலைவனை அனுப்பினன். அவனால் எதிர்க்கமுடியவில்லை. பிறகு இராசசிங்கனே நேரில் சென்றான். முன்னேரிவாவியில் (1581) பெரும் சண்டை நடந்தது. 1700-ல் போர்த்துகீயர் கொல்லப்பட்டனர். உடனே அரசன் கோட்டையின்மீது படையெடுத்து அதைப் பிடித்தான். இதற்குள் போர்த்துகீயருக்குத் துணை கிடைத்தது. கோவாவிலிருந்து மற்றொரு படை வந்தது. மீண்டும் போர் தொடங்கியது. போர்த்துகீயர் மிக முன்னேற்பாட்டுடன் வந்தனர். இருந்தாலும் இம்முறையும் தோல்வி பெற்றார்கள். கொழும்பும் முற்றுகை யிடப்பட்டது. ஆனால் அதைப் பிடிப்பதற்குள் உள்நாட்டுக் கலகம் தொடங்கிவிட்டது என்று அறிந்த இராசசிங்கன் முற்றுகையை விட்டுவிட்டுத் தலைநகர் சென்றான்.

இராசசிங்கன் வீழ்ச்சி

இராசசிங்கன் வெற்றியுடன் ஆண்டுவந்தான். ஆனால், அவன் இரக்கம் சிறிதும் இல்லாதவன். உள்நாட்டுத் தலைவர்களை அடக்குவதில் மிகக் கொடுமை புரிந்துவந்தான். கொடுங்கோல் பொறுக்கமுடியாததாகி எங்கும் பகைமையே தோன்றின. இதற்குள் வயது முதிர்ந்தது. இருந்தாலும் கொடுமை நிற்கவில்லை. வீரசுந்தர பண்டாரம்

என்ற ஒரு சிற்றரசன் இருந்தான். அவன்மீது ஐயம் கொண்டு, அவனைச் சீதவாகைக்கு விருந்துக்கு அழைத்து, வரும் வழியில் ஈட்டிகள் நிறுத்தின ஒரு குழியில் அவனைத் தள்ளிவிடும்படி கொலையாளிகளை அனுப்பி, அவ்வாறே கொல்லுவித்தான். அதை அறிந்த அவன் மகன் கோணப்ப பண்டாரம் கொழும்புக்கு ஓடிப் போர்த்துகீயரிடம் அடைக்கலம் புகுந்தான். போர்த்துகீயரோ அவனைக் கிறித்தவனுக்கி மன்னருக்கு அனுப்பிவைத்தார்கள். அங்கிருந்து அவன் கலகம் செய்தான். இதற்குள் இராச சிங்கனுக்குப் பல பகைவர்கள் தோன்றினர்கள். தன் தகப்பனைக் கொன்ற நினைவு அவன் நெஞ்சைப் பிளந்து கொண்டிருந்தது.

ஒருநாள் தந்தைக்கொலையைக் குறித்து எண்ணுத எண்ணம் எல்லாம் எண்ணிக்கொண்டு வருத்தத்தில் மூழ்கிக்கிடந்தான். அப்போது தன் புத்த சமயக் குரு வந்தார். அவரை அடுத்துத் தான் செய்த கொலையைப் பற்றிச் சொல்லி, அதற்குக் கழுவாய் உண்டோ என்று கேட்டான். அப்படிப்பட்ட பெருங் குற்றத்திற்குக் கழுவாய் இல்லை என்று குரு சொல்லிவிட்டார். மற்ற குருக்களையும் கேட்டான். எல்லோரும் கழுவாய் இல்லை என்று சொல்லிவிட்டனர். அதனால் எழுந்த வருத்தத்தினால் நெஞ்சு மரத்துப்போய்விட்டது. பிறகு இந்து கோயிலுக்குச் சென்று அங்கிருந்த குருக்களைக் கேட்டான். அவரோ, கோயில்களைக் கட்டினாலும் புதுப்பித்தாலும் எந்தக் கொலைக்குற்றமும் நீங்கிவிடும் என்று சொல்லி, நூல்களிலிருந்து மேற்கோள்கள் எடுத்துச் சொன்னர். இராசசிங்கனுக்கு மிகவும் மகிழ்ச்சி ஏற்பட்டது. உடனே புத்தகோயில்களை இடித்து, இந்து கோயில்களைக் கட்டினான். பல பௌத்த துறவிகளைக் கொன்று இந்துக் குருக்களுக்கு உதவிசெய்தான். சிவனொளிபாத மலையிலிருந்த கோயிலையும் இந்துக்குருக்களிடம் ஒப்புவித்துவிட்டான். இந்த வகையில் இவனுக்கு நாடு எங்கும் பகைவர்கள் ஏற்பட்டார்கள்.

அவிசாவலைநிலையத்திலிருந்து எட்டியன்கோட்டை போகும் வழியில் ஒரு கல் தொலைவில் ஒரு சிவன் கோயில் இருக்கிறது. இதன் பெயரைப் 'பேரண்டக் கோயில்' என்றும் கூறுவர். இதன் பொருள் "மீட்கப்பட்டவன் கோயில்" என்பது. இராசசிங்கன் சைவனாகி, உடல்முழுதும் திருநீறு பூசிக்கொண்டு, இக்கோயிலைக் கட்டத் தொடங்கினன். ஆனால் அக்கோயில் முற்றுப் பெறவில்லை. அதற்குள் நாட்டில் கலகம் பெருகிவிட்டது.

மன்னருக்குச் சென்ற கோணப்பன் படையைத் திரட்டிக்கொண்டு, போர்த்துகீயருடைய உதவியின் பேரில் கண்டிமீது படையெடுத்தான். பிறகு சீதவாகையின்மேல் சென்று அதனை முற்றுகையிட்டான்.

அடுத்துள்ள நாடுமுழுவதும் அழிக்கப்பட்டது. போர்த்துகீயர் சமயம் பார்த்துத் தென்மாகாணத்தில் இருந்த பௌத்த இந்து கோயில்களை எல்லாம் அழித்தார்கள். தோண்டரை, மாத்துறை முதலிய ஊர்களில் இருந்த கோயில்கள் முழுதும் அழிக்கப்பட்டன. சண்டை முதிர்ந்து, கடுகள்ளவை என்ற கணவாயில் பெரிய போர் நிகழ்ந்தது. கோணப்பனுடைய படை வெற்றி அடைந்தது. கிழவனாகி இருந்த இராசசிங்கனுடைய கால் முறிந்தது; சில நாட்களில் இறந்துபோனான்.

விமலதருமன் ஆட்சி

கோணப்பபண்டாரம் உடனே அரசுகட்டில் ஏறினான்; கிறித்துவ சமயத்தைக் கைவிட்டான். விமலதருமன் என்ற பட்டப்பெயர் வைத்துக்கொண்டு போர்த்துகீயரை எதிர்க்கத்தொடங்கினன். இவனுக்கு எதிராகக் கண்டியில் வேறொருவனை அரசனாக்கியது இவனுக்குப் பிடிக்கவில்லை. உடனே 'பிலிப்' என்ற அவனை நஞ்சூட்டிக் கொல்லுவித்தான். தானே கண்டி அரசனானான். பிலிப்பினுடைய மகளைத் தானே வலிய மணம்செய்துகொண்டு வலிமை காட்டி ஆட்சிபுரிந்தான். அதுமுதல் சீதவாகையின் பெருமை குறைந்துவிட்டது. தலைநகராக இருக்கையில்

அது பல தடவை அழிந்தும் பின் எழுந்தும் நின்றது. இறுதியில் அதன் புகழ் கண்டிக்குச் சென்றுவிட்டது. சீதையின் பெயர் எந்தப் பொருளோ, உயிரோ, நகரமோ, எதற்கு இடப்பட்டபோதிலும், அவற்றின் இயல்பு துன்பப்படவேண்டியதே என்பது இந்தியரின் நம்பிக்கை. அதுவே சீதவாகைக்கும் ஏற்பட்டதுபோலும்!

இரத்தினபுரம்

அவிசாவலையிலிருந்து தென்கிழக்கே 27 கல் சென்றால் இரத்தினபுரம் சேருவோம். இரத்தினபுரம் என்ற சொல்லுக்கு 'மணிபுரம்' என்பது பொருள். தமிழ்க் காவியங்களில் காணும் மணிபல்லவம் இது ஆகுமோ என்று ஆராயவேண்டும். இந்த நகரத்தைச் சுற்றித்தான் பலவகையான விலையுயர்ந்த கற்கள் கிடைக்கின்றன. ஆகவே, இது மணிபல்லவம் ஆக இருக்கலாம். (மணி = விலையுயர்ந்த கல்; பல்லவம் = மூலை. ஆகவே மணிகள் மூலைக்கும் இடம் என்போமா?) இந்நகர் பண்டைக்காலம் முதற்கொண்டே மிகச் சிறந்து விளங்குகிறது. இப்போதும் இந்நகர் சிறந்த தலைநகரமாக இருக்கிறது. 'சபரகாமம்' என்ற மாகாணத்திற்கு இந்நகரமே தலைநகராக இருக்கிறது. ஆகவே, இந்நகரத்தைப்பற்றி நாம் சிறிது ஆராயவேண்டும்.

அரபியர் வாணிகம்

ஆயிரம் ஆண்டுகளுக்கு முன், மேல்நாடுகளிலே அராபியர்களே கப்பல் பயணத்துக்குப் பேர்போனவர்கள். கிழக்குநாடுகளுடன் பெருவாரியாக வாணிகஞ்செய்து வந்தார்கள். காலிபாக்கள் பாக்தாத் நகரத்தை ஆண்ட காலத்தில், பாரசீக வளைகுடாவில் இருக்கும் 'பசரா' என்ற துறைமுகத்தில் இருந்து அரபி வர்த்தகர்கள் கப்பல் ஏறி, கீழ்நாடுகளிலும் தீவுகளிலும் சென்று வர்த்தகம் செய்வார்கள். அவர்கள் சிறப்பாக விலையுயர்ந்த இரத்தினங்கள், இரத்தினக்கம்பளங்கள், மணப்பொருள்கள் முதலியவைகளை வாங்கிக்கொண்டுபோய்த் தம் நகரங்களிலும், ஐரோப்பா நகரங்களிலும் விற்பார்கள். அப்படிப்பட்ட யாத்திரைகளில் கண்ட செய்திகளைக் காவியங்கள் போல

அரபிக்கவிஞர்கள் எழுதிவைத்துள்ளார்கள். அவைகளில் சிறந்த நூல் '1000 இரவுகளில் கூறிய அரபிக்கதைகள்' என்பது. இந்நூலில் பல கதைகள் உண்டு. அவைகளை உலகில் எல்லா மொழிகளிலும் ஆக்கி எழுதியிருக்கிறார்கள். அக்கதைகள் பெரும்பாலும் பாக்தாது நகரத்தை ஆண்ட ஹரூன் அல்ரஷீது என்ற காலிபாக் காலத்தில் நடந்தனவாகக் கூறப்பட்டுள்ளன. அந்தக் காலிபாக் காலத்தில் பாக்தாத் நகரத்தில் இருந்த 'சிந்துபாது' என்ற நாவிகன், ஏழுமுறை யாத்திரைகள் செய்தான் என்று கூறும். அந்த யாத்திரைகளில் பலமுறை படகு உடைந்து தீவுகளில் அகப்பட்டும், பல துன்பங்களைப்பட்டும், இறுதியில் தெய்வச்செயலாக எல்லா இடையூறுகளிலிருந்தும் தப்புவித்துக்கொண்டும், பெரும் பொருள்களை யீட்டிக் கொண்டும் தன் ஊருக்குச் சென்றதாக அக்கதை கூறும். அவைகளில் ஒரு முறை ஒரு தீவில் இரத்தினங்கள் எடுக்கும் நகருக்குச் சென்றிருக்கிறான். இரத்தின வியாபாரிகள் கூட்டாக ஒரு மலையின் சிகரத்திற்குச் சென்றார்கள். மலை உச்சியிலிருந்து கீழே நோக்கினால் ஒரு ஆழமான பள்ளத்தாக்கு தெரியும். அதற்குள் இவர்களால் இறங்கமுடியாது. பெரிய இறைச்சித்துண்டுகளை அப்பள்ளத்தாக்கில் வீசுவார்கள். அத்துண்டுகள் அடியில் விழுந்தால் அவைகளில் இரத்தினங்கள் ஒட்டிக்கொள்ளும். சிறிதுநேரத்தில் வானத்திலிருந்து பெரிய கழுகுகள் அம் மாமிசங்களைத் தின்ன வரும். அவைகளை எடுத்துக்கொண்டு கழுகுகள் மேலே பறந்துசெல்லுகையில், வர்த்தகர்கள் அவைகளின் மீது கல் எறிவார்கள். அவைகள் இறைச்சிகளைக் கீழே போட்டுவிட்டுப் பறந்துவிடும். அவ்விறைச்சிகளில் ஒட்டிக் கொண்ட கற்களை வர்த்தகர்கள் பொறுக்கிக்கொண்டு செல்வார்கள். இம்முறைதான் அக்காலத்தில் நடந்த 'இரத்தினத் தேடுமுறை' என்று அரபிக்கதைகள் கூறும்.

சிந்துபாத்து கதை

சிந்துபாத்து ஒருமுறை இவ்வாறு இரத்தின வியாபாரிகளுடன் செல்லுகையில், அங்கே இருவராகச் சேர்ந்து

இரத்தினங்களைக் கைப்பற்றினதில், சிந்துபாத்துக்கும் அவன் கூட்டாளிக்கும் இரத்தினங்களைப் பிரிப்பதில் சண்டை ஏற்பட, சிந்துபாத்தைக் கொல்ல முயன்று கூட்டாளி அவனை அப் பள்ளத்தாக்கில் தள்ளிவிட்டான். கீழே விழுந்த சிந்துபாத்து, தெய்வச்செயலால் இறக்காமல் பிழைத்துக்கொண்டான். அங்கே மிகுந்த இரத்தினங்களை வாரிக்கொண்டான். ஆனால், வெளியேறும் வழி தெரியாது தவித்தான். பிறகு ஒரு தந்திரம் செய்தான். அங்கு இறைச்சிக்காக வரும் பறவைகளோ மிகப் பெரியவை; மனிதனையும் தூக்கிச் செல்லக்கூடியவை. ஆகவே, ஒரு பெரிய இறைச்சித்துண்டோடு தன்னைக் கட்டிக்கொண்டான். சிறிதுநேரத்தில் ஒரு பெரிய கழுகு அவ் விறைச்சித்துண்டைத் தூக்கிக்கொண்டு போக, தானும் கூடவே தூக்கப்பட்டான். அது மலையுச்சியில் ஒரு பாறையில் அவனைப் போட்டுவிட்டுப் போயிற்று. அந்தக் காலத்தில் அவன் கட்டு அவிழ்த்துக்கொண்டு, வெளியே சென்று தப்பித்துக்கொண்டு கடற்கரை சேர்ந்து, தான் பொறுக்கின இரத்தினங்களுடன் ஊர்போய்ச் சேர்ந்தான். இதுதான் சிந்துபாத்து இரத்தினத்தீவில் அடைந்த அனுபவம் என்று அந்நூல் கூறுகிறது.

மணி பொறுக்குதல்

இக்கதையில் கண்ட செய்தி உண்மையில் நடந் திருக்குமா என்பது கேள்வி. மனிதனைத் தூக்கும் பறவை கள், இறைச்சித்துண்டுகளால் இரத்தினங்களைப் பொறுக்கு தல் முதலியவைகளைக் காவியத்திற்காக எழுதின செய்தி கள் என்று தள்ளிவிடலாம். ஆனால், மலைகளில் பள்ளத் தாக்குகளில் இரத்தினங்கள் கிடைக்கும்; அவைகளை எடுப்பதற்காக வர்த்தகர்கள் செல்வார்கள் என்பது உண்மை. இப்பொழுதும் இரத்தினபுரிக்கு அருகில் நடக் கும் ஒரு முறையை நாம் அறியமுடியும். மழைகாலங்களில் மழை நன்றாகப் பெய்து, நிலத்தில் உள்ள மண்ணை வாரிக் கொண்டு போகையில், சில விலையுயர்ந்த கற்கள் வெளியே தெரியும். அவைகளை யாராவது கண்டால் அச்செய்தி

நகரத்தில் பரவிவிடும். உடனே வியாபாரிகள் அங்கே சென்று மணிகளைத் தேட முயலுவார்கள். நிலத்தை வெட்டிக் கற்களைக் கழுவி மினுக்கும் கற்களைப் பொறுக்குவார்கள். அவரவர்கள் அதிட்டப்படி உயர்ந்த கற்கள் கிடைக்கும். ஆழமாகத் தோண்டிச்சென்றால் அச் சுரங்கங்களில் ஊற்றுநீர் பெருகும்; அவைகளை இறைத்துவிட்டு மணிகளைப் பொறுக்குவார்கள். சுரங்கங்களில் இறங்குவதற்கு மரங்களாலும் மூங்கில்களாலும் சாரம் கட்டுவார்கள். இவைகளின் வழியாக இறங்கி, இடுப்பளவு நீரிலும் நின்றுகொண்டு, மண்ணை வாரி வெளியே சேர்ப்பார்கள். அம்மண்ணை நன்றாகக் கழுவிக் கற்களைப் பொறுக்கியெடுப்பார்கள். அக் கற்களை வகைவகையாகப் பிரித்து விலை மதிப்புப் போடுவார்கள். இந்த முறைதான் சென்ற ஆயிரமாயிரம் ஆண்டுகளாக நடைபெற்றுவரும் முறை. ஆப்பிரிக்கா ஆத்திரேலியா முதலிய இடங்களில் நடக்கும் விஞ்ஞானமுறைகள் இந்த நாட்டில் இன்னும் ஏற்பட வில்லையாம்.

இரத்தினபுரத்திற்கு அருகில் உள்ள புலங்களில் கிடைக்கும் கற்கள் பெரும்பாலும் பச்சை, நீலம், சிவப்பு, பூனைக்கண், புட்பராகம், கோமேதகம், வைடூரியம் முதலியவைகள். இவைகள் மிக மதிப்புள்ளவைகள். மேலும் பல நிறப் படிகக்கற்களும் கிடைக்கின்றன. அவைகள் விலை குறைவானவை.

சாணைத் தொழிலும் மணி இழைப்பும்

இயற்கைக்கற்கள் பளபளப்பாகத் தோன்றா. வெளிப்பார்வைக்கு வெண்கல் செங்கல்போல இருக்கும். அவைகளை வெட்டுவது ஒரு அருமையான தொழில். வெட்டிப் பட்டை இட்டால்தான் மதிப்பு மிகும்; உண்மை ஒளிகொண்டு ஒளிரும். இந்தத் தொழிலுக்குச் சாணைத் தொழில் என்று பெயர். ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகப் பல இசுலாமியக் குடும்பங்கள் இந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கின்றன. சாணை இடும் இயந்திரம் மிக எளிமையானது. ஒரு உருளைச்சக்கரத்தில் சாணை இடும் வட்டம்

இருக்கும். கயிற்றினுல் அதனைத் திருப்பவேண்டும். அவ் வட்டம் மிகக் கடினமான உருக்கினுல் செய்யப்பட்டி ருக்கும். அது மிக விரைவாகத் திரும்பும்போது கற்களை அதனோடு ஒட்டிப்பிடித்தால் பட்டை பட்டையாக ஆகி விடும். கற்களை வீண் ஆக்காமல் சாணை பிடிக்கும் திறலோர் இவ்வூரில் உண்டு. டச்சுக்காரர்களுடைய தலைநகருக்குச் சென்று பெரும்பொருள் கொடுத்துச் சாணை பிடிக்க வேண்டியதில்லை. மிக எளிமையிலேயே இந்நாட்டில் அதே வேலை நடக்கிறது.

உலகத்திலேயே மிகப் பெரிய சிவப்புகளும், பச்சை களும், நீலங்களும் இலங்கை பர்மா முதலிய நாடுகளில் தான் கிடைத்திருக்கின்றன. நான் பார்த்தவற்றில் பெரிய பச்சை திருத்தணி கோயிலிலும், பெரிய நீலம் கொல்லூர் மூகாம்பிகா கோயிலிலும், பெரிய சிவப்புகள் மதுரை, இராமேசுவரம் கோயில்களிலும் இருந்தன. இவைகள் இலங்கையில் எடுக்கப்பட்டிருக்கவேண்டும்.

சிவனொளிபாதம்

கழனிப்பள்ளத்தாக்குப் பாதையாகிய இரத்தினபுரி இருப்புப்பாதைக்கும், கண்டி-வதுளை இருப்புப்பாதைக் கும் இடையில் இருப்பன, இலங்கையின் மத்திய மலைத் தொடர்கள். இம்மலைத்தொடர்கள் மிகவும் அழகானவை. மிக உயர்ந்த கொடிமுடிகளைக் கொண்டு வானத்தை அளாவிநிற்பன. எப்போதும் மேகங்களால் சூழப்பட்டுள் ளன. அம்மேகங்கள் அம்மலைகளைச் சுற்றிக்கொண்டே நிற்கும். சில காலங்களில் அம்மேகங்களுக்குமேலேயும் சிகரங்கள் ஓங்கிநிற்கும். அப்படிப்பட்ட சிகரங்களில் மிகச் சிறந்தது 'சாமந்தகூடம்' என்ற உச்சிச்சிகரம். இதனை எல்லா மதத்தாரும் மிகுந்த தூயதான சிகரமாகக் கொண்டாடுகிறார்கள். இதனைப் பௌத்தர்களே 'சாமந்த கூடம்' என்கிறார்கள். இம்மலை இரத்தினபுரியிலிருந்து நேர் குறுக்கு வழியாக 20 கற்கள்தான் இருக்கும். ஆனல் அவ்வாறு நேராக மக்கள் போகமுடியாது. வளைந்து வளைந்து போகவேண்டும். அவ்வழி மிகத் தொலைவு.

இரத்தினபுரி வழியைவிட, கண்டி-கம்பளை-ஹட்டன் வழி எளிமையான தென்பர். இதன் உயரம் கடல் மட்டத்திற்கு மேல் 7360 அடி. இரத்தினபுரியிலிருந்து செல்லும் வழி உண்மையில் மிக வருத்தம் நிறைந்தது. உச்சியில் சில இடங்களில் இருப்பு ஏணிகள் வைக்கப்பட்டிருக்கின்றன. அவைகள் பாறைகளோடு கொக்கிகளால் இணைக்கப்பட்டிருக்கின்றன. சில இடங்களில் சங்கிலிகளால் கட்டப்பட்டுள்ளன. இவைகளைப் பிடித்துக்கொண்டு ஏறுவது வருத்தந்தான். அப்படியிருந்தும் ஆயிரக்கணக்கான அன்பர்கள் இம்மலைக்குச் சென்றுகொண்டேயிருக்கிறார்கள். இந்த ஏணி-கொக்கி-சங்கிலி, இவைகளை முன்காலத்தில் அலெக்சாண்டர் அரசன் மாட்டியதாகச் சொல்லுவார். அவைகள் பல நூற்றாண்டுகளாக இருப்பது உண்மை. ஆதலால், அவைகள் துருப்பிடித்துப்போயிருக்கின்றன.

பௌத்தச் சார்பு

கி. மு. ஆறாம் நூற்றாண்டின்போது புத்தர் இந்த மலைக்கு வந்து இதனைத் தரிசித்ததாக ஒரு செய்தி உண்டு. அவர் வந்து போனதற்கு அறிகுறியாக அவரது அடிச்சுவடு அங்கே இருக்கிறது. அது இயற்கையைவிடப் பெரிய அடிச்சுவடாகும். பௌத்தர்கள் வந்து இங்கே மிகுதியாக வணங்குகிறார்கள்.

சைவச் சார்பு

இந்துக்களும் இம்மலையைத் தூய மலையாகக் கருதி, இங்கு உள்ள திருப்பாதத்தை வணங்குகிறார்கள். அவர்கள் இதனைச் சிவபிரான் திருவடி என்று சொல்லுகிறார்கள். இந்துக்கள் இம்மலைக்கு இட்டிருக்கும் பெயர் 'சிவனொளி பாத மலை' என்பதாகும்.

இசுலாமியச் சார்பு

இசுலாமியரும் இதனை ஒரு தூய இடமாகக் கருதி யாத்திரை செய்கிறார்கள். 'ஆதாம்' என்ற ஆதி மனிதன், கடவுள் சொன்ன கட்டளையை மீறி, 'தின்னவேண்டாம்' என்று சொன்ன கனியைத் தின்றதனாலே இன்பவனத்தி

லிருந்து நீக்கப்பட்டபோது, இந்த மலைமீதுதான் வந்து தங்கினதாக அவர்கள் எண்ணுகிறார்கள். தான் செய்த குற்றம் மன்னிப்பு அடையும்பொருட்டு, ஒற்றைக்காலிலே இந்த இடத்தில் நின்று தவம் செய்தனனும். அவ்வாறு பல ஆண்டுகள் இங்கேயே நின்றுகொண்டிருந்ததனாலே, இந்த இடத்தில் அவனுடைய பாதச்சுவடு ஊன்றிவிட்டதாம். இறுதியில் காப்பிரியேல் என்ற தேவதூதன் அவன் மீது இரக்கங்கொண்டு, அவன் மனைவி ஏவாளை அவனிடம் சேர்த்துவிட்டதுமன்றி, இலங்கைத்தீவை அவ்விருவருக்கும் பரிசாகக் கொடுத்தானும். அவ்விருவரும் முதலில் வாழ்ந்துவந்த ஈடன் தோட்டத்திற்குப் பதிலாக இலங்கைத் தீவு அவர்கள் குடியிருப்பாகிவிட்டதாம். இவ்வகையாகப் பௌத்தர்களும் இந்துக்களும் இசுலாமியர்களும் இந்த மலையைத் தங்கள் தங்கள் தூய இடமாகக்கொண்டு நாளதுவரையில் யாத்திரை சென்று வணங்கிவருகிறார்கள்.

சபரகாமம்

இனி, இரத்தினபுரி 'சபரகாமம்' என்ற மாகாணத்தின் தலைநகரம் என்று கூறினேனும். சபரகாமம் என்பது தனி மாகாணமாக கி.பி. 1889-ல் ஏற்படுத்தப்பட்டது. ஆனால், அந்தப் பெயர் ஒரு பண்டைப் பெயரே ஆகும். சபரகாமம் என்ற சொல் 'சபரர்கிராமம்' என்ற சொல்லின் திரிபு ஆகும். சபரர் அல்லது சவரர் என்பார், ஒரு வேடர்வகுப்பைச் சேர்ந்த கிளையினர்.

"வேட்டன செய்யும் வேட்டுவினைக் கருந்தொழில் கவர்கணை வாழ்க்கைச் சவரர் புளிஞர்" என்று உதயணன் கதையில் வருவதைக் காண்க. சபரர்கள் மலைச்சாரலில் அரண்களை உறைவிடமாகக்கொண்டு, ஆறலைத்துச் சூறை கொண்டு உயிர்வாழும் வேட்டுவச் சாதியினர் என்பது புலப்படும். இவர்கள் இப்போது இந்தியாவில் மலைநாடுகளில் வசிக்கும் காடர், புலையர், மலசர், இருளர் போன்ற குடிகள். மத்திய இந்தியாவில், கஞ்சம் சில்லாவிற்கு மேற்புறம் உள்ள மலை இடங்களில் 'சவரர்' என்ற ஒரு மலைச் சாதியார் இன்னும் இருக்கின்றனர். இவர்கள் பண்டைத்

திராவிடக் குடிகள் என்று கூறுவர். சுற்றிலும் உள்ள குடிகளைப்போல் இல்லாமல், பலவகைகளிலும் நடையுடை பாவனைகளில் மாறுபட்ட கொள்கைகளை உடையவர்கள். இவர்கள் மரவுரிகளைக் கட்டிக்கொண்டு, காட்டுக்கிழங்குகளையும், காட்டுத்தேனையும் உட்கொண்டு, தினைமாவைப் பிசைந்து தின்று பிழைப்பவர்கள். இந்த வகுப்பார்களை பண்டைக்காலத்தில் இலங்கையில் குடியேறியிருக்கலாம். அவர்கள் பெயராலே இந்தப் பகுதிக்கு 'சபரகாமம்' என்று பெயர் வந்திருக்கக்கூடும்.

மேலும், இராமாயணத்தில் 'சபரி' என்ற ஒரு மலை நாட்டுப் பெண்மணி இராமபிரானைக் காண்பதற்காகவே உயிர்வைத்திருந்ததாகவும், இராமன் வந்தவுடன் அவனை எதிர்கொண்டு உபசரித்துத் தேனும் தினைமாவும் அருந்தும்படி விருந்து அளித்ததாகவும், அவ்வாறு விருந்தளித்தவுடன் மிகுந்த மகிழ்வோடு உயிர்துறந்ததாகவும் ஒரு கதை கூறப்பட்டுள்ளது. இந்தச் சபரி அந்தச் சவரர் குலத்தைச் சேர்ந்தவள் என ஊகிக்கப்படுகிறது.

இப்போதும் தென்னிந்தியாவில் மலையாளம் சில்லாவில் 'சபரிமலை' என்ற ஒருமலை இருக்கிறது. அதில் காட்டு மனிதர்கள்தான் வாழ்கிறார்கள். பாலைக்காடு முதலிய இடங்களில் தேசீயக்கொள்கை உள்ள சில நண்பர்கள், தங்கள் இருப்பிடங்களுக்குச் 'சபரி ஆச்சிரமம்' என்ற பெயரை இட்டுக்கொள்ளுகிறார்கள். ஒரு கைத்தொழிற் கல்விச்சாலையைத் தேசீய முறையில் நடத்தும் அன்பர் தமது நிலையத்திற்கு இந்தப் பெயரையே இட்டு நடத்துகிறார்.

இணைப்பு

சில முத்துக்களில் நடுமையத்தில் ஒரு மேடு இருக்கும். அதனை அழகுபடுத்தி ஓர் ஓவியமாக அமைப்பது உண்டு. அதைப்போல ஓர் ஓவியம் கண்டிப்பகுதி ஆகும். அதுவே பண்டைப் பெருமையை எடுத்துக்காட்டுவது. அந்த நடுநாயக ஓவியத்தை இனிக் காண்போம்.

---

9. நடுநாயக ஓவியம்

மாறுதலில் இன்பம்

மாறுதல் மனிதனுக்கு இன்பம் ஊட்டும். காலைமுதல் மாலைவரையில் ஒரேவகையான செயல்களை நாள்தோறும் ஒருவன் செய்துகொண்டிருந்தால் அவனுக்கு மிக விரைவில் சலிப்பு ஏற்படும். அவன் வாரத்திற்கு ஒரு முறை ஓய்வு கொள்ளவேண்டும். இல்லாவிட்டால் ஒரு சிறு மகிழ்வும் அவனுக்கு ஏற்படாது. ஆனால், அவனுடைய வேலைகளில் சிறிது மாறுபாடு இருந்தால், அதுவே அவனுக்கு ஓர் ஓய்வைப்போல் மகிழ்வை ஊட்டும். மனிதன் செய்யும் வேலைகளில் மாறுதல் இருக்கவேண்டும். அம்மாறுதலை அவனுடைய ஐந்து பொறிகளும் அடைய வேண்டும். அப்போது அவன் அடையும் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. மெய், வாய், கண், மூக்குச் செவி ஆகிய ஐம்பொறிகளும் ஒரு சிறிய மாறுதலை நுகர்ந்தபோதிலும் இன்பம் அடையும். அந்நுகர்ச்சி மிகுதியாகின், அதனை ஒரு புதுமையாகக்கொண்டு பாராட்டி மகிழ்ச்சி அடையும். இந்நுகர்ச்சிகளில் கண் பெறும் மகிழ்ச்சியே சிறந்தது. ஏனைய பொறிகளும் இவ்வின்ப நுகர்ச்சிகளை அனுபவிக்கின்றன. இம் மாறுதல்களும் மிக விரைவில் ஒன்றன்பின் ஒன்றுகத் தோன்றினால், அவைகள் செய்யும் இன்ப நுகர்ச்சிகளுக்கு அளவுண்டோ? விரைவு என்பதிலே சில நாட்டார்கள் மிகுந்த விருப்பங்கொள்வார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு விரைவில் ஏற்படும் மாறுதல்களின் பயனை எடுத்துச்சொல்லவும் வேண்டுமா? 'அப்படிப்பட்ட விரைவு மாறுதல்கள் எந்த நாட்டில் உண்டு?' என்று வினவினால், 'இலங்கைக்கு வந்து பாருங்கள்' என்று அத்தீவு அழைக்கிறது.

வழிச்செழிப்பு

கொழும்புக் கோட்டையை விட்டுப் புகைவண்டி ஏறுங்கள். அது முதலில் ஒத்த தரையில் செல்லுகிறது. சில இடங்களில் சிறிய திடல்கள்தான் காணப்படும். ஆறு

களைத் தாண்டுவோம். வயல்களிடையே செல்வோம். தென்னந்தோப்புகளுக்குள் புகுவோம். மா, பலா, பாதிரி மரங்கள் வானை அளாவிக்கொண்டு எதிரே தோன்றும். அவைகளைக் கடந்துகொண்டே செல்வோம். இடையிடையில் சில நிலையங்கள் தோன்றும். அவைகளுக்கு இருபக்கங்களிலும் வீடுகள் தோன்றுகின்றன. வீடுகள் தோட்டங்களின் இடையே கட்டப்படுகின்றன. தென்னிந்தியாவில் உள்ளவர்கள் இது மலையாளமோ என மயங்குவார்கள். 'தோட்ட நகரங்கள் வேண்டும்' என்று பறைசாற்றும் நகரமைப்புக் கலைஞர்கள் இந்தத் தீவுக்கு வந்தால் என்ன கூறுவார்களோ! இவ்வகையாகப் பூஞ்சோலை ஊர்களை அடிக்கடிப் பார்த்தவண்ணமாகச் சென்றால், ஒன்றரை மணி நேரத்தில் 'பொலகாவலை' என்ற வண்டிச்சந்தி நிலையத்தை அடைவோம். இங்கிருந்து வடக்கே யாழ்ப்பாணத்திற்கு ஒரு கிளையும், மலைநாட்டிற்கு மற்றொன்றும் செல்லுகின்றன. மலைநாட்டுக் கிளையில் இனிச் செல்வோம்.

அயவழி

பொலகாவலையிலிருந்து மேடு தொடங்குகிறது. முதலில் சிறுசிறு குன்றுகள்; பிறகு பெரிய குன்றுகள் தோன்றும். பெரிய மரங்களும் அடர்ந்த புதர்களும் தோன்றும். வண்டி 'ஊச்சுவிட்டுக்கொண்டு' மலை ஏறும். 'தண்டவாளம் வழவழப்பாக இருக்குமே; ஏன் இவ்வாறு பெருமூச்சுவிட்டுக்கொண்டு போகிறது,' எனலாம். வழவழப்பான தண்டவாளத்தின்மேலும் பெரும் பாரத்தை உயர இழுப்பதற்கு ஆற்றல் மிகுதியாக வேண்டும் அன்றோ? 'நாம்புக்கனை' என்ற நிலையம் வந்ததே பாதையின் ஏற்றம் மிகுதியாகிறது. அங்கே பின்னுக்குத் தள்ளுவதற்கு மற்றொரு இயக்கியைப் பூட்டுவார்கள். இனி வண்டி மும்முரமாக இழுத்துக்கொண்டு செல்லும்.

துளைவழி

இனி, ஒரு சுரங்கவழி அல்லது துளைவழி தெரிகிறது. அதனுள்ளே வண்டி நுழைகிறது. உள்ளே இருட்டு;

ஒலியோ கொடுமையாக இருக்கும். இருந்தாலும் அஞ்ச வேண்டுவதில்லை. ஒன்றிரண்டு நிமிடங்களில் அச்சுரங்க வழியைத் தாண்டி வண்டி மேலேறுகிறது. இங்கே காட்சியைப் பாருங்கள்! முற்றும் மாறுதல்! மனத்திற்கு என்ன மகிழ்ச்சி! எங்கும் மலைத்தொடர்கள்! ஒருபுறம் செங்குத்தான மலை! மறுபுறம் ஆழ்ந்த பள்ளம்! வழியோ மலைகளின் சரிவுகளில் வெட்டப்பட்டுள்ளது. அது சரிவுக்கு ஏற்றபடி வளைந்துவளைந்து செல்லுகிறது. இந்த மலைகளில் இப்படிப்பட்ட வழியை எவ்வாறு ஒரு சிற்பி கண்டுபிடித்தானே என்று வியப்புறவேண்டும். புதிய விஞ்ஞான கலைகளை அறிந்தவன் அருமையான கருவிகளைக்கொண்டு இவ்வழியை அளந்து குறியிட்டான். அதனைக் கொண்டு நமதுநாட்டு ஆட்களே வேலைசெய்தார்கள். 'கடவுள் ஆக்கின இயற்கை அமைப்பில் மனிதன் படைத்த செயற்கைப்பாதை இது அன்றே' என்று நாம் பெருமிதத்தோடு செல்வோம். எதிரே பச்சைப்பசேல் என்ற புல்மேடுகள்; இடையிடையே பழுப்பு மரங்கள், புதர்கள் இவைகள் மாறுபட்டிருக்கின்றன.

அருவிகள்

இன்னும் மேலே செல்லச்செல்ல பள்ளத்தாக்குகளில் அருவிகள் ஓடுவதைக் காணலாம். சில இடங்களில் நீர் வீழ்ச்சிகள் உள்ளன. கானக நீரை அணைகட்டி மேடுகளில் நீர்பாய்ச்சி நெல்வயல்களைச் சாகுபடிசெய்கிறார்கள். நீர் வழிந்து ஓடாமல் படிக்கட்டுகள்போல் நிலத்தை மட்டங்கள் செய்துள்ளார்கள். இவைகளின் இடையே தென்னை, கமுகந் தோப்புகளும் தோன்றுகின்றன. மனிதனுடைய தொழில் செய்யும் வகையினை வியந்து பாருங்கள்!

சில குன்றுகளைப் படித்தளங்கள் ஆக்கி, நிரம்ப நீர் பாய்ச்சி இருத்தலால் நெற்பயிர் செழித்து விளைந்திருக்கின்றது. அதனுடைய பசுமை அக் குன்றுகளின்மேல் பச்சைப்போர்வை இட்டாற்போலக் காட்டுகிறது. சில தளங்களில் நீர் நின்றிருப்பதனால், கதிரவன் கிரணங்கள் அவைகளின்மேல் பட்டு ஒளிவீசுவதனால் பெரிய

பெரிய கண்ணுடிகளைக் குன்றுகளில் பரப்பினதைப் போலத் தெரியும். சில வயல்களில் உழவர்கள் முழங் கால் வரையில் சேற்றில் நின்றுகொண்டு வேலை செய்வ தைக் காணலாம். மனிதன் தன் வயிற்றுப்பாட்டிற்கு என்ன முயற்சிகள் கொள்ளுகிறான் என்று அறியலாம். வண்டி வளைந்து வளைந்து ஏகுகையில் ஒரு மலை தோன்றும். அது மறையும்; மறுபடியும் தோன்றும். இவ்வாறு மாறி மாறிக்கொண்டுசெல்லும் காட்சிகளைக் கண்டு களித்துக் கொண்டே மேல் செல்வோம்.

கொத்தளப்பாறை

அதோ அந்த மலைச்சிகரம். அது ஒரு கோட்டைக் கொத்தளம்போல் தெரிகிறதே! 'அதன் பெயர் என்ன?' என்று கேட்போம். அது 'கொத்தளப்பாறை' என்பார் கள் (Castle Rock). இயற்கை அரசாளும் கொத்தளமோ என்று எண்ணுவோம். சிறிது தொலை செல்வோம். 'ஒரு சிகரத்தின்மீது ஒரு புத்தகம் வைத்ததுபோல் தெரி கிறதே; அது என்ன?' என்போம். அது புத்தகப்பாறை (Bible Rock) என்பர். இயற்கை இளவரசன் இந்நூலைத் தான் வாசிக்கிறான்போலும். பின்னும் சிறிது தொலை செல்வோம். குடைபிடித்தாற்போல் ஒரு பாறை நிற்கும். இதன் பெயர் 'குடைப்பாறை' என்பர் (Umbrella Rock). இயற்கைமகனும் மழையைக் கண்டு அஞ்சு கிறான்போலும். அவனுக்கும் ஒரு குடை வேண்டும் போலும். மற்றொரு பாறை கப்பல் அடித்தளம்போல் நீளமாய் ஒடுங்கிய பாழியைக் கொண்டிருக்கிறது. இதைக் கீல் பாறை (Keel Rock) என்பர். இனி எல்லாவற்றிலும் மிகச் சிறந்த ஒரு காட்சியைக் காண்கிறோம். 'அலகல்லாபி' என்ற இடத்தை அணுகியதே நெடுங்குன்றுகள் சுமார் 50 கல் அளவில் செல்லுகின்றன. செங்குத்தான பாறை கள் சுமார் 1000 அடிவரை சுவர்போல் நிற்கின்றன; அப் பாறைகளின் உச்சியில் புகைவண்டி ஓடுகிறது. அங் கிருந்து கீழே பார்க்கையில், தலை கிறுகிறு என்று சுற்று கிறது. விழுந்தால் என்ன ஆய்விடுமோ என்ற அச்சம்.

மயிர்க்கூச்சல் உண்டாகிறது. ஆகவே, அந்தப் பாறைக்குக் 'கூச்சல் மூலை' என்பது பெயர் (Ranstin Rock). இவ்வகையாக நாம் செல்லும் வழியெல்லாம் புதுமையான பாதைகளைக் காண்கிறோம். இவைகளுக்கு மக்கள் இட்ட பெயர்களும் ஏற்றனவாகவே இருக்கின்றன. இத்தகைய பெயரிடுவதற்கு எப்படிப்பட்ட சடங்குகளை யார் செய்தார்களோ நான் கூற இயலாது.

கணவாய்களும் தோட்டங்களும்

கடுவண்ணமை கணவாய் அடைந்ததும், அங்கே இருப்புப்பாதையும் வண்டிப்பாதையும் சந்திக்கக் காண்போம். இந்த இரண்டு பாதைகளைத்தவிர, கொழும்புமக்கள் மலை நாட்டு மக்களைச் சந்திக்க 1865 வரை வேறு வசதிகள் இருக்கவில்லை. இவ்வசதிகள் ஏற்பட்டவுடனே மலைநாட்டு மலைபடு பொருள்கள் வெளிவரத் தொடங்கின. கீழ்நாட்டுப் பொருள்களும் மலையேறின. ஞாயிற்றுக்கிழமைகள் தோறும் ஒவ்வொரு ஊரிலும் சந்தைகள் கூடும். மிகுந்த கூலியாட்கள் கூடுவார்கள். மலைகளிலும், தோட்டங்களிலும் தொழில்செய்யும் ஆட்கள் எல்லாரும் மிகுதியாக வந்து ஒரு வாரத்திற்கு வேண்டிய உணவுப்பொருள்களை வாங்கிக் கொண்டு செல்வார்கள். மலைச்சாரல்களில் வெட்ட வெளியில் பலவகையான காய்கறிகள் பழவகைகள் தட்டு முட்டுச் சாமான்கள் வைக்கப்பட்டிருக்கும். வகைவகையான நிறங்களைக்கொண்ட ஆண் பெண் பாலர்கள் மகிழ்வுடன் அச்சந்தைகளுக்குச் சென்று வேண்டியவற்றை வாங்கிக்கொண்டு வீடுகளுக்கு ஏகுவார்கள். இந்தக் காட்சிகள் மனத்திற்கு மிகவும் மகிழ்ச்சி தரும். மக்கள் ஒருவரோடு ஒருவர் உறவாடிக்கொண்டு சாமான்களை எடுத்துச் செல்வதைக் காணலே நல்ல காட்சி. இந்தக் காலங்களில் மலைப்பண்டங்களும் நாட்டுப்பண்டங்களும் மிகுதியாகக் கிடைக்கின்றன. இந்தக் காட்சிகளை இருப்புப்பாதை நிலையங்களிலிருந்தே நேரில் காணலாம்.

பேராதனை

இக்காட்சிகளைக் கண்டு மகிழ்ந்துகொண்டே 10 கல் சென்றால் 'பேராதனை' சேர்வோம். அங்கே பாதை இரு

பிரிவுகளாகப் பிரிகிறது. ஒரு பிரிவு வாதனை செல்லுகிறது. மற்றொன்று கண்டி வழியாக மாதனை செல்லுகிறது. பேராதனை உலகப் புகழ்பெற்ற இடம். இதற்கருகில் 'மாவலி கங்கை' என்ற பேராறு ஓடுகிறது. அதுதான் இலங்கையிலேயே மிகவும் நீளமான ஆறு. மத்திய மலைகளில் தோன்றி, மலைகளையெல்லாம் தாண்டி, வடகிழக்கே சமநாட்டில் ஓடி, திருக்கோணமலைக்கு அருகில் கடலில் விழுகிறது. இதன் முகத்துவாரத்தில் உலகிலேயே மிகச்சிறந்த பெரிய துறைமுகம் ஏற்பட்டிருக்கிறது. இந்தப் பெரிய ஆறு பேராதனைக்கருகில் வரவே, ஒரு பெரிய வளைவு போட்டுக்கொண்டு ஓடுகிறது. சைவப் பாடல் பெற்ற மலையாகிய திருப்பருப்பதத்தைப் பாதாள கங்கையாகிய கிருட்டினவேணி ஆறு வளைந்து செல்லுவதைப் போலவே, பேராதனையை இக்கங்கையும் வளைந்துசெல்லுகிறது.

பூங்கா

இவ்வளைவிற்குள் 4 கல் நீளமும் அகலமும் உள்ள செழிப்பான நிலம் இருக்கிறது. இந்த இடத்தை உலகிலேயே சிறந்த பூங்காவாக்கி வைத்திருக்கிறார்கள் அரசியலாளர்கள். இப்பூந்தோட்டத்தில் உலகில் வெப்பநாடுகளில் வளையக்கூடிய செடிகொடி மரங்கள் எல்லாம் உண்டு.

முதல் முதலாகக் கற்பூரச் செடியையும், சவ்வரிசி மரத்தையும், இலவங்கச் செடியையும் இங்குதான் கண்டேன். நறுமணம் வீசும் மலர்கள் அழகு செய்கின்றன. முல்லையும் நாகமும் இருக்கின்றன. இனிய சுவையான பழங்கள் நாக்கில் நீர்ஊறச் செய்கின்றன. அழகிய பழவகைகளும், பருத்த காய்கறிகளும் வயிற்றைப் பேசச் செய்கின்றன. இலைகள் காற்றிலே அலைப்புண்டு இயற்றும் இன்னிசை செவிகளை மகிழ்விக்கின்றது. மென்மையான புற்றரைகள் மெய்யினை அமரக்கூறுகின்றன. இவ்வாறு நமது ஐம்புலன்களையும் இன்புறச்செய்யும் பூஞ்சோலை வேறு எங்கு இருக்குமோ சொல்ல இயலாது. இந்தப் பூந்தோட்டத்தில் இல்லாத செடி கொடி மரங்களும் வேறிடத்

தில் உண்டா என்று இங்கு பறக்கும் பறவைகளும் மெதுவாகக் கேட்கின்றன. இந்தத் தோட்டத்துக்குள் ஒருமுறை சென்றுவிட்டால் திரும்பி வெளியேபோகவே மனம் வராது.

எதிர்காலக் கலைக் கழகம்

இந்த அழகிய பூந்தோட்டத்தைக் கல்விக்களஞ்சிய மாக்க அரசியலார் நினைத்துள்ளார்கள். இலங்கைப் பல் கலைக் கழகத்தை இந்தத் தோட்டத்திலே அமர்த்த எண்ணங் கொண்டு, 4000 மாணவர்கள் இருந்து படிக்க வசதிகள் ஏற்படுத்தும் முயற்சிகள் செய்யப்படுகின்றன. அது நிறைவேறினால் திருமகளும் கலைமகளும் இருவருமே இந்த நிலமகளோடு ஒத்துழைத்து மாவலிகங்கையாகிய அலை மகளுடன் கூடி வாழ்வார்கள். இப்படிப்பட்ட கூட்டுறவு வேறு எந்த நாட்டிலும் இல்லாமற்போனபோதிலும், இலங்கைநாட்டில் ஏற்படக்கூடும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

கண்டிப் பெருநகர்

பேராதனைக்கு மூன்றுகல் அளவில் கண்டி இருக் கிறது. நான் பார்த்த அழகான நகரங்களில் இது ஒன்று. சிங்களமக்கள் இதனை மிகுந்த பயபத்தியுடன் கொண்டாடு கிறார்கள். பலவகைகளிலும் இது சிறந்து விளங்குகிறது. இயற்கையழகு, புனிதவாய்ப்பு, வரலாற்றுமேன்மை முத லான பல துறைகளிலும் கண்டி சிறந்தது. அண்மைக் காலத் தில் இதனை 'மேன்மையான நகரம்' என்று பொருள்படும் 'நுவர' என்னுஞ் சொல்லால் வழங்குவதாக முடிவுசெய் துள்ளனர். அவர்களுடைய மனஎழுச்சிக்குத் தக்க சிறப்புக் கள் இந்நகரில் உண்டு. குடகு வீரராசேந்திரப் பேட்டையின் மலையமைப்பும், நீலகிரிக் குன்னூரின் தெளிந்த குளிர்காற்று வீச்சும், கோடைக்கானலின் அழகிய குளத்தின் நீலவண்ணமும், ஒத்தையின் ஏரிக்கரைச் சோலையழகும் ஒருங்கு சேர்ந்து திரண்டுநின்ற நிலைதான் கண்டிநகரத்தோற்றம் என்க. இத்துணைச் சிறப்புவாய்ந்த நகரைக் கண்டு மகிழ வேண்டியதே மக்கள் கடமை ஆகும்.

அருமைப்பாடு

இலங்கையிலே தன்னரசுபெற்று வாழ்ந்த சிங்கள அரசர்களுடைய இறுதித் தலைநகர் 'கண்டி' என்பது. ஆகவே அண்மையான காலம் வரையில் மிகச் சிறப்புடன் கருதப் பட்ட ஊர். ஊரோ மிகப் பெரியது என்றுவது, வர்த்தகத் தில் பணப்பெருக்கம் உடையது என்றுவது, கைத் தொழிலில் சிறந்தது என்றுவது சொல்வதற்கில்லை. சோலை கள் அடர்ந்த இயற்கை மலை வளந்திரத்தின் இடையிலே, அழகுபெற அமைக்கப்பெற்ற ஒரு சிறிய ஊர் என்றே இதனைச் சொல்லலாம்.

மாத்தளையிலிருந்து வரும் பாதை ஒன்றே மிக நீளமாக உள்ளது. அது கண்டிக் குளக்கரைமட்டும் செல்லுகின்றது. மற்றொரு பாதை கொழும்பிலிருந்து பேராதனை வழியாக வந்து அதனுடன் கலக்கிறது. இருப்புப்பாதை நிலையத்தை ஒட்டிச் சமநிலமும் ஊர்க்கட்டும் உண்டு. எதிர்ப்பகுதி களில் சோலை நிறைந்த மலைத்தொடர்களே. எரிக்குச் சுற்றிலும் மலைத்தொடர்கள். ஒரு அழகிய சுற்றுப்பாதை ஒன்று ஓடுகிறது. மாலைவேளைகளிலே இப்பாதைவழியே உலாவிச்சென்றால் மிக மகிழ்ச்சியாக இருக்கும். இந்த ஏரியை இறுதியில் ஆண்ட விக்கிரமராசசிங்கன் கட்டி னனும். அந்தத் தெளிந்த நீர் ஏரியிலே அடுத்த மலைகளின் நீலநிறத்தோற்றம் மிக அழகாகத் தோன்றும். அவ் வேரி மிக ஆழமானதாம். நீர் மிகக் குளிர்ச்சியாக இருக்கும். இக்காரணங்களினால் எந்த மனிதனும் இந்த ஏரியை நீந்தித் தாண்டினதில்லை என்பர்.

கண்டியின் ஒரு பகுதிக்கு 'கடுகஸ்தோட்டா' என்பது பெயர். அதற்கருகிலே மாவலிகங்கை ஓடுகிறது. அதன் கரையில் வீதிகளும் நடைபாதைகளும் இருக்கின்றன. இவைகளின்வழியே நடந்துசென்றால், மிக மனமகிழ்ச்சி யாக இருக்கும். யானைகள் தெரு ஓரங்களில் வேலைசெய் வதையும் ஆற்றில் நீராடுவதையும் காணலாம். இக்காட்சி களைக் காணவே இங்குச் செல்லலாம்.

புத்தர் கோயில்

கண்டியிலே சிறந்த கட்டடம் புத்தர்கோயில்தான். இது எரிக்கரையிலே மலைச்சரிவிலே இருக்கிறது. இக் கோயிலின் வாயிலுக்கு எதிரே தோன்றுவது 'தலித மாளிகை' என்னும் திருக்கோயில். இதில் புத்தருடைய பல் வைக்கப்பட்டிருக்கிறது. இதனை மதிப்பிடக்கூடாத அரிய தூய பொருளாகக் பௌத்தர்கள் மதித்துப் பாது காக்கிறார்கள். இந்தப் பல் எங்கெங்கு தலைநகர் மாற்றப் பட்டதோ அங்கு எல்லாம் கொண்டுசெல்லப்பட்டதாம். இறுதியில் கண்டியிலே தங்கிவிட்டது. அரசு ஒழிந்ததனால் வேறு இடத்திற்கு அது செல்லவில்லை. இந்தத் தந்த மும் அதன் தூய கோயிலும் கண்டியில் இருப்பதனாலே தான் கண்டிக்கு இக்காலத்திலும் இத்துணை மதிப்பு வந்திருக்கிறது.

இந்தக் கோயிலில் எட்டுக்கோணமுள்ள ஒரு அழகிய பெரிய மண்டபம் இருக்கிறது. அதன் உச்சி ஓடுகளால் வேயப்பட்டது. பார்வைக்கு மலையாளநாட்டுக் கட்டடம் போலத் தோன்றும். இந்த மண்டபத்தில் மிகவும் அருமை யான பௌத்த சமய நூல்களும் வைக்கப்பட்டுள்ளன. பெரும்பான்மையாகப் பண்டைக்காலத்து ஓலைச்சுவடி களே அதில் சேர்த்து வைக்கப்பட்டுள்ளன.

பெரஹரர்

ஒவ்வொரு ஆண்டிலும் ஆனி மாதத்தில் கண்டிக் கோயிலில் பெரிய திருவிழா நடைபெறும். கோயிலைச் சேர்ந்த யானைகளும், கண்டி அரசகுமாரர்களின் யானை களும் நன்முக அணிசெய்யப்பட்டுக் கோயிலுக்கு எதிரே மாலைநேரத்தில் நிறுத்தப்படும். அப்போது நடிகர்களும் இசைவல்லார்களும் முன்னால் நிற்பார்கள். அவர்கள் பலவகையான வேடங்களைப் பூண்டு அழகுசெய்து கொண்டு இருப்பார்கள். ஆயிரக்கணக்கான பந்தங்கள் ஏற்றப்படும். அங்கிருந்து வாத்திய ஒலிகளுடனும் ஆடல் பாடல்களுடனும் அந்த ஊர்வலம் ஊரில் உள்ள பெருந் தெருக்கள் வழியாகச் செல்லும். ஊர்வலம் 'பெரஹரா'

என்று சிங்களத்தில் சொல்லப்படும். அந்த ஊர்வலம் செல்லும் தெருக்கள் எல்லாம் தோரணங்களால் அணி செய்யப்பெற்றிருக்கும். அளவற்ற விளக்குகள் ஏற்றி யிருப்பார்கள். ஊர்மக்கள் இதனைப் பார்க்க ஆயிரக்கணக் காக வந்துநிற்பார்கள். திருவிழாக்காலங்களில் எல்லா மக்களும் ஆண் பெண் குழந்தையுடன் புது உடுப்புகளும் விலையுயர்ந்த நகைகளும் இட்டுக்கொண்டு நிற்பார்கள். இக் காட்சி மிகவும் சிறப்பாக இருக்கும்.

இவ்வகைத் திருவிழா பத்துநாள் நடக்கும். இறுதி நாளில் ஊர்வலம் மிகச் சிறப்பாக இருக்கும். புத்த பகவானுடைய சின்னங்களில் தந்தத்தைத் தவிர, ஏனைய தூய பொருள்களை யானையின்மீது ஏற்றி ஊர்வலம் செய் வார்கள். அந்த ஊர்வலத்திற்கென்று மிகப் பெருமை பொருந்திய யானையை நிறுத்துவார்கள். ஊர்வலம் முடிந் ததும் சின்னங்கள் கோயிலிலே சேர்க்கப்படும். இந்த விழாவே கண்டிக்கு ஒரு பெருமை தருகிறது.

குருக்கள்

இந்தக் கோயிலிலே இருபகுதியினரான பௌத்த துறவிகள் இருக்கிறார்கள். இவர்களின் ஆதி குருமார்கள் சீயநாட்டிற்குத் தொடர்புபட்டவர்கள். இவர்களின் மூல மாகப் புதிய துறவிகளுக்குச் சமயதீக்கை தரப்படுகிறது. அப்படிப்பட்ட மாணவத்துறவிகள் இங்கே பெரிய குருக்கள்மார்களாலே சமயப்படிப்புக் கற்பிக்கப்படுகிறார் கள். தேர்ந்த மாணவர்கள் குருக்களாகி மற்றக் கோயில் களுக்கு அனுப்பப்படுவார்கள். ஆகவே, இக்கோயில் குருக்கள்மார் தோற்சிக்கு ஒரு நடுநிலையமாக இருக் கிறது.

வரலாறு

கண்டி, சிங்களவரசர்களின் இறுதித் தலைநகர் என்று சொன்னேம். அது 1600 கி. பி. அளவில் தலைநகர் ஆகி, 1815 வரையில், அதாவது இரண்டு நூற்றாண்டுகள் அவ்



இலங்கை புத்த குருக்கள்

[பக்கம் கடு0]

வகையில் இருந்துவந்தது. அந்த நாளில்தான் அதன் சிறப்புகள் பெருகிச் சிறந்த கோயில்களும் மாளிகைகளும் கட்டப்பட்டன. 'சேனரதன்' என்ற அரசன் முதலில் இங்கே வந்தான். அவனுக்குப்பின் இராசசிம்மன் (1635), தருமன் (1687), நரேந்திரன் (1707), விசயராச சிம்மன் (1735), கீர்த்தி ஸ்ரீராசசிம்மன் (1747), இராசாதி ராசசிம் மன் (1780), விக்கிரம ராசசிம்மன் (1798-1815) என்பவர் கள் அரசாண்டார்கள். ஆகவே, 8 அரசர்கள் 215 ஆண்டு கள்வரை இங்ஙகரில் ஆண்டிருக்கின்றார்கள்.

பரங்கியர்

கண்டி தலைநகர் ஆவதற்குமுன், கோட்டை தலைநக ராக இருந்தது. அது 1350 முதல் 1600 வரை 250 ஆண்டுகளாகத் தலைநகராக இருந்தது. அக் கோட்டை கொழும்புக்கு 6 கல் அளவில் உள்நாட்டில் இருக்கிறது. 1509-ம் ஆண்டில் போர்த்துகீயர் கொழும்பில் இறங்கி அதை மெல்லமெல்ல வசப்படுத்திக்கொண்டார்கள். அவர்கள் சிங்களவரசனுக்குச் செய்த இடையூறுகள் சொல்லமுடியா. அவர்களுடைய படைவலி மிகுதி யானது. பீரங்கிகளையும் படையில் மிகத் தேர்ந்த போர்வீரர்களையுங்கொண்டு நாடுகளைப் பிடித்தும், மக்களைத் துன்புறுத்தியும், வரிகளை வசூலித்தும் வந்தார்கள். தங்கள் மதத்தில் மிகுந்த அழுத்தங்கொண்ட பௌத்தர்களை துன்புறுத்திக் கிறித்தவர் ஆக்கினர்கள். அவ்வாறு செய்கை யில், அரச வழியினரையும் சிறிதேனும் மேன்மைபெற நடத்தாமல், விரட்டிக் கப்பம் வாங்கிக் கிறித்தவர்கள் ஆக்க முயன்றார்கள். இவ்வாறு பொறுக்கமுடியாத துன் பங்களினால் அரசர்கள் தங்களுடைய தலைநகரை மாற்றிக் கொள்ளவேண்டிவந்தது. கண்டி கொழும்புக்கு நெடுந் தொலைவில் உள்ளதனாலும், அது மலையடர்ந்த நாட்டில் உள்ளதனாலும் அதுவே சிறந்த அரண்கொண்ட இடம் என்று கருதி, அதைத் தலைநகர் ஆக்கிக்கொண்டார்கள். அதுமுதல் கண்டி இரண்டு நூற்றாண்டுகள்வரை தலைநகராக இருந்தது.

'கோணப்ப பண்டாரம்' என்ற ஒரு இளவரசன் கிறித்தவனாகியிருந்தான். அவன் கண்டியரசன் இராசசிங்கனோடு போர்புரிந்து 1592-ல் கடுகன்னவையில் வெற்றியடைந்தான். உடனே சிங்காதனம் ஏறி, புத்தமதத்தைத் தழுவி, 'விமலதருமன்' என்ற பெயர் பூண்டு ஆளத்தொடங்கினன். போர்த்துகீயர் கிறித்துவசமயத்தில் சேர்ந்த 'டோனகாதரினு' என்ற ஒரு இளவரசியை முன்னிட்டு, கண்டியின்மீது படையெடுத்தார்கள். ஆனால் விமலதருமன் அவர்களைத் தோற்கடித்து, அவ்விளவரசியைச் சிறைப்படுத்திக்கொண்டு சென்று, தானே மணந்துகொண்டான். போர்த்துகீயர் பின்தங்கிவிட்டார்கள்.

ஐரோப்பாவிலே போர்த்துகீயர்மீது ஸ்பெயின் தேயத்தார் படையெடுத்து அந்நாட்டை வென்று அடக்கி ஆண்டார்கள். ஆகவே, போர்த்துகீயருடைய வலிமை கிழக்கேயும் குன்றிவிட்டது. அச்சமயத்தில் ஒல்லாந்தர்கள் வணிகத்தை முன்னிட்டுக் கிழக்கு நாடுகளுக்கு வந்தார்கள். கி. பி. 1602-ல் ஒரு வர்த்தகக்கம்பெனி ஏற்படுத்தி, முதலில் மட்டக்களப்பில் இறங்கினர்கள். ஒல்லாந்தர்கள் விமலதருமனுடன் கலந்து பேசத் தொடங்கினர்கள். 1604-ல் விமலதருமன் இறந்தான். அவனுடைய இளமகனுக்காக டோனகாதரினு இராச்சியத்தை நடத்தினாள். அவளை மணந்துகொள்ளப் பலபேர் முன்வந்தார்கள். அவர்களிலே சேனரதன் என்ற ஒரு பௌத்த குரு ஒருவன். அவன் அவளை மணந்துகொண்டு இல்லறம் தழுவி அரசை நடத்தினன். அவன் ஒல்லாந்தரிடம் உதவி கோரினன். போர்த்துகீயரோடு சண்டை நடந்தது. அந்தப் போரில் போர்த்துகீயத் தளகர்த்தன் வெட்டுண்டான். பிறகு 1633-ல் சமாதானம் ஆகி, சேனரதன் இரண்டு யானைகளை மட்டும் கப்பங்கட்டுவதாக ஒப்புக்கொண்டான்.

1634-ல் சேனரதன் இறக்க, அவன் மகன் 2-ம் இராசசிம்மன் பட்டத்திற்கு வந்தான். போர்த்துகீயர் மீண்டும் துன்புறுத்தத்தொடங்கினர். அதனைப் பொறுக்காமல் இராசசிம்மன் டச்சுக்காரர்களின் உதவியை நாடி

னன். டச்சுக்காரர் அதனை ஒத்துக்கொண்டு, போர்த்துகீயரோடு போர்புரிந்து, காலி என்ற சிறந்த துறைமுகத்தை 1640-ல் பிடித்தனர். டச்சுக்காரர்கள் வெற்றியைக் கண்டு இராசசிங்கனுக்குப் பிடிக்கவில்லை. இதற்குள் ஐரோப்பாவில் போர்ச்சுக்கல்லுக்கும், ஒல்லாந்துக்கும் சமாதானம் ஏற்பட்டது. இலங்கையில் இருவரும் தங்கள் நாடுகளைப் பிரித்துக்கொண்டார்கள். எட்டு ஆண்டுகட்குப் பின்னர் மீண்டும் போர் மூண்டது. அப்போது டச்சுக்காரர் கொழும்புத்துறைமுகத்தை முற்றுகையிட்டு, இறுதியில் 1656-ல் பிடித்தனர். ஆனால், முதலில் நினைத்தபடி கொழும்பு இராசசிம்மனுக்குக் கொடுக்கப்படவில்லை.

இருநூறு ஆண்டுகளுக்குமுன் கண்டிநாடு இருந்த நிலைமையை 'காக்ஸ்' என்ற ஐரோப்பியன் எழுதிய குறிப்புகளிலிருந்து அறியலாம். அரசனன இராசசிம்மன் 75 வயது கொண்டவனயிருந்தும், பார்வைக்கு அத்தனை வயது கொண்டவனகத் தோன்றவில்லை. அந்த வயதிலும் ஊக்கத்தோடு வேலை செய்வான். தலையில் உயர்ந்த முடியும், அதில் ஒரு அழகிய துராயும் அணிந்திருப்பான். மார்பில் ஒரு நிற மூள்ளதும், கைகளில் வேறு நிறமுள்ளதுமான சொக்காயை அணிவான். இடுப்பில் தங்கப்பிடியுள்ள வாளும், கையில் மணிகள் பொதிந்த செங்கோலும் வைத்திருப்பான். அரசனுடைய மாளிகை எப்போதும் பல காவலாளிகளால் பாதுகாக்கப்படும். அவர்களில் ஒருவர்க்கொருவர் பேசிக் கொள்ள இடம் இருக்காது. சிறுகுற்றங்களுக்கும் பெருந் தண்டனை இடுவான். இரத்தம் சிந்துவதில் சிறிதும் இரக்கம் இல்லாதவன். நிலம் அரசனுடையது; குடித்தனம் செய்கிறவர்கள் போர்புரியவேண்டும்; அல்லது அரசனுக்கு வேலை செய்யவேண்டும். வியாபாரிகள் வியாபாரச் சரக்கில் ஒருபகுதி அரசனுக்குத் தரவேண்டும். துறவிகளுக்கு மட்டும் வரி இல்லை. அரசனுடைய அலுவலாளர்கள் படிப்படியாக இருப்பர். அதிகாரிகள், (நீதிமான்கள்) திசவர் (கவர்னர்), விதானர் (ஜில்லா கலெக்டர்) இவர்கள் வரி வசூல், நீதி இவைகளைக் கவனிப்பார்கள். ஊர்வழக்குகளை முடிவுசெய்வதற்கு ஊர்ச்சபைகள் இருந்தன.

குடிகளுடைய சிறந்த தொழில் உழவு. நெல் விளைவு மிகுதி. வீடுகள் சிறியவை. ஒரே அறைதான் இருக்கும். மேலே கூறைதான். வில்லை கல்லு சுண்ணும்புப் பூச்சாவது இல்லை. உணவுக்காக உயிர்களைக் கொல்லுவது இல்லை, உண்பதும் இல்லை; பள்ளிக்கூடங்கள் இல்லை; ஆனல் உலோக வேலை, மரவேலை மிகச் சிறந்தன. கண்டிநாட்டார் வீரமக்கள். புத்த சமயம் தாழ்ந்திருந்தது. அரசன் சமயத்தில் ஈடுபடவில்லை. கிறித்தவர், இசுலாமியர், பௌத்தர் எவரும் தம் விருப்பப் படி தொழலாம்.

ஒல்லாந்தர்

இராசசிங்கன்காலத்தில் கடற்கரையோரம் டச்சுக் காரரிடம் வந்துவிட்டது. உள்நாடு கண்டியரசனிடம் இருந்தது. ஆகவே, வியாபாரம் முழுதும் டச்சுக்காரரிடமே இருந்தது. இலவங்கப்பட்டை, யானை, பாக்கு, மிளகு, ஏலக்காய், சாராயம் இவைகள் முதன்மையான வியாபாரச் சரக்குகள். இசுலாமியர்கள் போட்டியிட்டார்கள். அவர் களை அடக்க முயன்றும் டச்சுக்காரர்களால் முடியவில்லை.

1687-ல் இராசசிம்மன் இறந்தான். அவன் மகன் விமலதருமன் 1707 வரை ஆண்டான். இவன் காலம் முழுதும் அமைதியாகவே இருந்தது. டச்சுக்காரர்கள் படிப்புக்கு அக்கறைகாட்டிப் பல பாடசாலைகளைக் கட்டினர் கள். நீதியும் நன்முகச் செலுத்தப்பட்டது. ஆகவே, டச்சுச் சட்டம் நாட்டில் புகுந்தது.

1707-ல் விமலனுடைய மகன் நரேந்திரன் பட்டம் பெற்று 1739 வரை ஆண்டான். இவன் பௌத்த சமயத்தை வளர்த்துப் பல கோயில்களைப் புதுப்பித்தான். படிப்பை வளர்த்தான். காதலிக் சமயத்தை வெறுத்து அவர்கள் கோயில்களை இடித்தான். இவனுடன் சிங்கள அரசவமிசம் முடிவடைந்தது. இவன் மதுரைமன்னன் மகளை மணந்தான். அவள் 1721-ல் இறந்தாள்.

1739-ல் நரேந்திரன் இறந்ததும், அவன் மனைவியின் உடன்பிறந்தான் மதுரையிலிருந்து வந்து அரியாசனம்

ஏறினான். அவன் இந்துவாக இருந்தபோதிலும் புத்த சமயத்தைத் தழுவிக்கொண்டான். அவன் பெயர் விசயராச சிங்கன். அவன் 1747-ல் இறந்தான். அவனும் மகன் இன்றி இறக்க, அவன் மைத்துனன் கீர்த்தி ஸ்ரீராச சிம்மன் 1747 முதல் 1780 வரை ஆண்டான். அவனும் சீயத்திற்குத் தூதரை அனுப்பிப் பௌத்தகுருமாரைத் தருவித்தான். அவன் புத்த விகாரங்களுக்கு நிரம்ப நிலங்களைக் கொடுத்தான். பௌத்த தந்தத்தை ஊர்வல மாகச் செலுத்தும் 'பெரஹரா' என்ற திருவிழாவை இவனே தொடங்கியவன். 1760-ல் சிங்களவர்களுக்கு டச்சுக்காரர் கள்மீது வெறுப்பு உண்டாயிற்று. 1765-ல் டச்சுக்காரர் கள் கண்டியின்மீது படையெடுத்து அதனைப் பிடித்தனர். 1766-ல் சமாதானம் ஏற்பட்டது. டச்சுக்காரர் ஆட்சி வலுப்பட்டது. வர்த்தகம் பொதுவாக்கப்பட்டது. ஆனால் இலவங்கப்பட்டை, தந்தம், மிளகு, ஏலம், காப்பி, பாக்கு, மெழுகு இவைகள் டச்சுக்காரர்களுக்குமட்டும் வாங்க உரிமை ஏற்பட்டது.

1780-ல் கீர்த்தி ஸ்ரீராசசிம்மன் இறக்க அவன் தம்பி இராசாதிராசன் பட்டத்திற்கு வந்து 1798 வரை ஆண்டான். அவன் ஆங்கிலருடன் நட்புக்கொண்டு டச்சுக் காரரைத் துரத்திவிட முயன்றான். அச்சமயத்தில் டச்சுக் காரருக்கும் ஆங்கிலருக்கும் போர் உண்டாயிற்று. அப்போது தான் ஐரோப்பாவில் பிரஞ்சு அரசியல் புரட்சி ஏற்பட்டு, அக்கண்டம் முழுதும் அல்லோலகல்லோலப் பட்டது. 1795-ல் திருக்கோணமலை ஆங்கிலரால் பிடி பட்டது. 1796-ல் கொழும்பும் பிடிபட்டது. 1802-ல் இலங்கை ஆங்கிலருக்கு ஆயிற்று.

மூன்று நூற்றாண்டுகளாக ஐரோப்பியர்கள் ஆண்ட தனால் நாட்டின் நிலைமை ஒருவாறு மாறுதல் அடைந்தது. கடற்கரை ஓரத்தையோ போர்த்துகீயர்கள் 134 ஆண்டு களும் (1506-1640) டச்சுக்காரர் 156 ஆண்டுகளும் (1640-1796) ஆண்டார்கள். இவர்கள் சிறப்பாக மாற்றினது சமயம். போர்த்துகீயர் காதலிக் சமயத்தையும், டச்சுக்காரர்

பிராடஸ்டன்ட் சமயத்தையும் புகுத்திவிட்டார்கள். போர்த்துகீயர் கொடுமைசெய்து சமயத்தைப் புகுத்தினர் கள். டச்சுக்காரர் பாடசாலை முதலியவைகளில் புகுத்தி னர்கள். போர்த்துகீயர் பல சொற்களைத் தந்தார்கள். டச்சுக்காரர்களோ சட்டத்தைத் தந்தார்கள். இந்த மாறுதல்கள் ஏற்பட்டன. ஆனல், உள்நாட்டில் அவர்கள் இயக்கம் மிகுதியாகப் புகவில்லை.

ஆங்கிலர்

ஆங்கிலர்கள் வந்தவுடன் மும்முரமாக உள்நாட்டினும் புகத் தொடங்கினர்கள். 1798-ல் இராசாதிராசன் குழந் தைகளின்றி இறந்தான். முதல் அலுவலாளனய் இருந்த பிலோமிதலவி என்பவன், அவனுக்கு வேண்டிய கண்ணு சாமி என்பவனை அரியாசனம் ஏற்றினன். இவன் இறந்து போன அரசனுக்கு மனைவிவழியில் சொந்தமானவன். இவனுக்கு அரசுரிமை இல்லை. பட்டம் பெற்றவுடன் விக்கிரம இராசசிம்மன் என்ற பெயர் பூண்டுகொண்டான். உடனே இறந்த அரசனுடைய உறவினர் கொல்லப்பட்டார் கள். அவன் மைத்துனன் முத்துசாமி ஆங்கிலரிடம் அடைக்கலம் புகுந்தான். ஆங்கிலக்கவர்னர் முயற்சி செல்லவில்லை. 1803-ல் போர் தொடங்கியது. கண்டி பிடிபட்டது. முத்துசாமி பட்டம் கட்டப்பட்டான். பிலோமி என்பவனுக்கு முத்துசாமி வந்தது பிடிக்கவில்லை. கண்டியில் இருந்த ஆங்கிலர்களை எல்லாம் பிலாமி வதை செய்துவிட்டான். மூர்களையும் இரக்கம் இன்றிக் கொன்றுவிட்டான். 1803 முதல் 1815 வரை யாதொரு செய்தியும் நடைபெறவில்லை.

கொடுங்கோன்மை

இதற்குள் கண்டியில் கொடுங்கோன்மை ஏற்பட்டது. எங்கும் கலவரங்களே தொடங்கின. மக்கள் மிகத் துன்பம் அடைந்தார்கள். பிறகு பிலோமி என்ற முதல் அலுவலாளனுக்கும் அரசனுக்கும் பகை ஏற்பட்டது. பிலோமி தன் மகனுக்கும் முன்னைய அரசனுடைய பேத் திக்கும் மணம் நடத்த முயன்றான். அரசனை இதனல்

பிலோமி அரசைக் கவர எண்ணுகிறான் என்று நினைத்து, அவனுடைய அலுவலிலிருந்து அவனை நீக்கிவிட்டான். அவனை அரசனைக் கொலைசெய்யச் சூழ்ச்சிசெய்தான். சூழ்ச்சி வெளிவந்தது. 1811-ல் பிலோமியும் அவன் உறவினர்களும் கொல்லப்பட்டார்கள்.

பிறகு, பிலோமியின் தமையன் மகன் எலபொலனை அதிகாரியாக அரசன் ஏற்படுத்தினான். ஆனால், இருவருக்கும் விரைவில் மனவருத்தம் ஏற்பட்டது. எலபொலன் தன் நாட்டிற்குச் சென்றான். அங்கே அவனை மக்கள் விரும்பினர்கள். அதுகண்டு அரசன் அவனை அதிகாரத்திலிருந்து நீக்கிவிட்டு, 'இரண்டாம் அதிகாரியை அவன் மீது போர்புரிய அனுப்பினான். எலபொலன் கொழும்பிற்குச் சென்று ஆங்கிலரிடம் அடைக்கலம் புகுந்தான். அரசனை ஒடிப்போன அதிகாரியின் குடும்பத்தாரை வதைத்த வகை கூறவொண்ணாத கொடுமை வாய்ந்தது. எலபொலனின் குடும்பத்தார்கள் கொலைத்தண்டனை பெற்றார்கள். அவனுடைய தம்பியரும் பிள்ளைகளும் தலை வாங்கப்பட்டார்கள். பெண்கள் நீரில் அமிழ்த்தப்பட்டார்கள். எலபொலனின் பிள்ளைகள் தலையைவெட்டும்போது, பெரிய பையன் அழுதுகொண்டு தன் தாயை அணைத்துக் கொண்டான். ஆனால், 9 வயதுள்ள சிறியனை வீரத்தோடு முன்னால் போய்நின்று, தன் தமையனை அஞ்சவேண்டாம் என்று சொல்லிவிட்டுத் தன் தலையைக் காட்டி வெட்டச் சொன்னானும். கொலையாளி ஒரே வெட்டால் அவ் வீரச் சிறுவனின் தலையை வெட்டிவிட்டானும். பிறகு மற்றவர்களும் கொலைசெய்யப்பட்டார்களாம்.

கண்டி வீழ்ச்சி

ஆங்கிலேயர் குடிகளான சில இசுலாமிய வர்த்தகர்களை அவன் பிடித்து, மூக்கும் காதும் வெட்டிவிட்டானும். உடனே ஆங்கிலர் போர்தொடங்கினர்கள். படையெடுக்கப்பட்டது. அரசன் ஒடிவிட்டான். எதிர்ப்பு இன்றிக் கண்டி பிடிபட்டது. அரசன் ஒரு குகையில் ஒளிந்து கொண்டிருந்தான். பிடிக்கப்பட்டுக் கண்டிக்குக் கொண்டு

வரப்பட்டான். தலைவர்கள் சபை கூட்டப்பட்டது. அரசன் தள்ளப்பட்டான். ஆங்கிலக்கொடி கண்டியின் மீது ஏறியது. 2300 ஆண்டு ஆண்ட சிங்கள அரசு முறிந்து விழுந்தது. விக்கிரமசிங்கன் குணச்சிறப்பு கூற இயலாது. நல்ல குணமும் கெட்ட குணமும் உண்டு. கண்டி ஏரியையும் புத்தகசாலையையும் அவன் கட்டினான். நகரை அழகுபடுத்தினான். ஆனால் மக்களை வதைப்பதில் பெரிய அசுரன். அவனோடு தன்னரசும் போயிற்று.

சிலகாலம் கழிந்தபிறகு, கண்டித் தலைவர்கள் பிறர் ஆட்சியை விரும்பவில்லை. 1817-லும் 1848-லும் சிறு கலகங்கள் நடந்தன. அவைகள் உடனே அடக்கப்பட்டன. 1816-ல் இருந்து பல கவர்னர்கள் ஆண்டார்கள். கண்டி ஒரு பொதுவான நகரம் ஆயிற்று என்றாலும், அதன் அழகும் சிறப்பும் குறையவில்லை. சிறந்த நகரங்களில் ஒன்றாக அது இன்றும் விளங்குகிறது.

மாத்தளை

இந்த அழகிய நகரைவிட்டு மீண்டும் புகைவண்டியேறி, நேராக 18 கல் சென்றால், 'மாத்தளை' என்ற மற்றொரு நகரத்தை அடையலாம். இந்த இருப்புப்பாதை கணவாய்கள் வழியாக மலையின்கீழே இறங்குகிறது. இருப்புப்பாதையை ஒட்டியே வண்டிப்பாதையும் செல்லுகிறது. வண்டிப்பாதை மிகவும் நன்றாக ஆக்கப்பட்டிருக்கிறது. இவ்விரு பாதைகளின் இருபக்கங்களிலும் காப்பித் தோட்டங்களும், பாக்குத் தோப்புகளும், தென்னந் தோப்புகளும், இரப்பர் தோட்டங்களும் மிகுதியாக இருக்கின்றன. இந்திய நாட்டிலே தென்னந்தோப்புகள் சமநிலத்தில் இருக்கக் காண்கிறோம். இங்கேயோ மலைச்சரிவுகளில் இருக்கின்றன. நீர்ப்பாய்ச்சலுக்கு என்ன வசதி அமைத்துள்ளனரென அறியக்கூடவில்லை. ஆனால், இந்த நாட்டிலே மழை மிகுதியாக இருப்பதால் பாய்ச்சல் வேண்டியதில்லைபோலும். முதன்முதலாக இரப்பர் மரங்களைக்கொண்டு இந்நாட்டிலேயே இரப்பர் சாமான்கள் செய்தால் எவ்வளவு வருமானம் வருமென்று யார்

சொல்லுவது? அதனை எவர் முயற்சிப்பது? அப்போது தான் உண்மை சுயஅரசு கிட்டும்.

மாத்தளை சமநிலத்தில் உள்ள ஒரு அழகிய சிறு ஊர். இதிலிருந்து தம்புளைக்கும் திருக்கோணமலைக்கும் செல்லலாம். மாத்தளைக்கு அருகே உள்ள ஒரு பண்டைய ஊர் அலுவிகாரம் என்பது. இங்கே பாறைக்கல்லில் வெட்டப்பட்ட குகைக்கோயில்கள் இருக்கின்றன. தமிழ் அரசன் ஏலேலசிங்கனால் தோல்வியடைந்த சிங்களமன்னன், வாலகம்பன் காடுகளின்வழியே ஓடிச்சென்று, இந்த இடத்தில் இருந்த குகைகளில் ஒளிந்துகொண்டானும். பிற்காலத்தில், அதாவது 80 கி. மு. வில் இந்த இடத்தில் பௌத்த குருமார்கள் சபைகூடி, புத்த பகவானுடைய முதுமொழிகளை எல்லாம் திரட்டி ஏடுகளில் எழுதிவைத்தார்கள். அந்தத் திரட்டுநூலுக்குத் **திரிபிடகம்** என்று பெயர். அதில்தான் பௌத்தத்துறவிகளும் இல்லறத்தாரும் நடக்கவேண்டிய விதிகள் முற்றும் எழுதப்பட்டுள்ளன.

குகைக்கோயில்

இந்த ஊரில் உள்ள கோயில்களுக்குப் போகும்வழி அழகிய தென்னந்தோப்புகளின் இடையே செல்லுகிறது. பல கற்களின்மீது ஏறினால் ஒரு பொதுவான வில்லைக் கட்டடம் தெரிகிறது. அதற்குப்பின்னால் ஒரு குகை இருக்கிறது. அப்பாறையில் ஒரு மிக உயர்ந்த பௌத்தச் சிலை இருக்கிறது. அதனைப் பல நிறங்களால் அண்மையில் தீட்டியிருக்கின்றனர். பழைய ஓவியங்களை சேற்பூச்சுகளால் கெடுத்துவிட்டனர். என்றாலும், நாட்டுமக்களின் தெய்வபத்தி குறையவில்லை. எப்போதும் இக்கோயிலுக்கு யாத்திரை செய்கிறவண்ணமாகவே இருக்கின்றனர்.

பிறகு, இரண்டு பெரிய பாறைகளுக்கு இடையே ஒரு சிறு வழி தெரிகிறது. அவ்வழியில் கல் வளைவுகள் கட்டி, அதன்மேல் ஒரு செங்குத்தான வளைவில் ஒரு பெரிய கண்டாமணியைக் கட்டியுள்ளார்கள். அதற்குள்ளே சென்றால், துறவிகள் மடம் இருக்கிறது. அங்கே ஒரு

போதிமரம் நிற்கிறது. இது அனுராதபுரத்து அரசமரத்தின் கிளையிலிருந்து வளர்ந்ததாம்.

இயற்கைவளங்களும், செயற்கைக்கோயில்களும் உள்ள இந்தப் பண்டைய இடத்தைப் பார்க்கவேண்டுவது இன்றியமையாதது.

இணைப்பு

முத்தின் நடுநாயகமான மேட்டுப்பகுதிக்கு அடியில் அழகான சரிவுகள் உண்டு. அந்தச் சரிவுகளே தென் மலைநாடு. அதனை இனி விவரிப்போம்.

---

10. இயற்கைமேட்டின் பொலிவு

தென்மலைநாடு

இலங்கையின் நடுவில் இருப்பது மலை அடர்ந்த நாடு. அந்நாட்டில் கண்டி, மாத்தளைவரைக்கும் செல்லுகிற பாதையைப்பற்றி முன்னரே கூறியுள்ளோம். இனி, கண்டிக்கடுத்த பேராதனையிலிருந்து தென்கிழக்கே போகும் பாதையில் காணும் இடங்களைப்பற்றிக் கூறுவோம். இந்தக் கிளைப்பாதை தெற்கே ஹட்டன்வரைக்கும் சென்று, பிறகு கிழக்கே திரும்புகிறது. நனுஓயா என்ற ஆறுவரைக்கும் ஒரே பாதையாகச் சென்று பிறகு இரண்டு கிளைகளாக மாறுகிறது. ஒரு கிளை சிறிய பாதையாக நுரளை, இராகலைவரைக்கும் சென்று நின்றுவிடுகிறது. மற்றொரு கிளை பெரிய பாதையாக ஹபுதலை, பண்டாரவளை வழியாக வதுளைவரைக்கும் செல்லுகிறது. இந்த வழியெல்லாம் மலைகள் அடர்ந்த நாடு. பாதை மலைகளைச்சுற்றி வளைந்து வளைந்து செல்லுகிறது. நுரளை வரைக்கும் 7000 அடி உயரக்கிளம்புகிறது. பிறகு இராகலை, வதுளை என்ற ஊர்களுக்குக் கீழே இறங்கி 3000 அடிவரை தாழுகிறது. ஆகவே, இந்தக் கிளை செல்லும் பாதை முழுதும் ஏற்றத்தாழ்வுகளாக மிகவும் அழகாக இருக்கும். உலகத்திலே மிகச்சிறந்த இடங்

களைப் பார்க்கவேண்டும் என்று எண்ணினால், இந்தக் கிளைகளின் வழியாகத்தான் செல்லவேண்டும். ஆகவே, இவைகளைப்பற்றிச் சில விவரங்கள் குறிக்கவேண்டியது கட்டாயம் அன்றோ?

அதன் செழிப்பு

இங்கே மழை நிரம்பப் பெய்யும் மலைத்தொடர்கள் இருக்கிறபடியால், வானை அளாவிய மரங்கள் எங்கும் வளரும். மலைகளுக்கு இடையில் பெரும் பள்ளத்தாக்குகள் பாதாளத்தை நோக்கி இருக்கும். அப்பள்ளத்தாக்குகளில் காட்டாறுகள் ஓடிக் கலந்து பெரிய ஆறுகளாகச் சமநிலத்தை நோக்கி ஓடும். அவ்வாறு ஓடும்போது பாறைகளின்மீது விழுந்து அருவிகளாகி ஒலியிடும். எங்குப் பார்த்தாலும் செடிகொடிகள் அடர்ந்து பாறைகளையும் மண்தரைகளையும் காணவொட்டாமல் மூடிவிடும். இவ்வகையான செழிப்புவாய்ந்த கரடுமுரடான இடங்களிலே காட்டுவிலங்குகள் மிகுதியாக வசிக்கும். புலி, சிறுத்தை, கரடி, மான், ஓநாய், நரி முதலிய விலங்குகளும், நாகம், விரியன், மலைப்பாம்பு முதலிய பாம்புவகைகளும், மயில், குயில், ஆந்தை, கிளி, கருடன் முதலிய பறவை வகைகளும், தேள், சிலந்தி, பூரான், ஓணன் முதலிய நச்சுயிர்களும் மிகுதியாக இருக்கும். ஆகவே, மனிதநடமாட்டம் மிகக் குறைவு. போதாக்குறைக்கு யானை, பன்றி, முள்ளம்பன்றி குரங்கு முதலியவைகள் பயிர்களும் வளரவொட்டாமல் கிழங்குகளைத் தோண்டி அருந்தி, உணவுப்பொருள்களையும் நாசம் செய்யும். எதோ சில இடங்களில் காட்டுவாசிகள் தினை முதலிய காட்டுப்பயிர்களைப் பயிரிட்டு வாழ்வார்கள். பாறைகளில் தேன்கூடுகளைப் பிரித்துத் தேன் எடுத்துக் குடிப்பார்கள். காட்டு ஏலம், மஞ்சள், மிளகு முதலியவைகளையும் பலவகைப் பிசின்களையும் எடுத்துச் சமநிலங்களில் விற்பார்கள். இந்த வகையில் முன்னாளில் பெரிய மலையிடங்கள் மிகக் குறைந்த பயனை நாட்டிற்கு அளித்துவந்தன. அந்த வகையில்தான் இலங்கையில் தென்மலைநாடு இருந்துவந்தது.

பண்ணைத் தோற்றமும் நில மாறுபாடும்

ஆனால், சென்ற இருநூறு ஆண்டுகளாக இந்த நிலைமை முழுதும் மாறிவிட்டது. மேற்குநாடுகளிலிருந்து ஐரோப்பியப் பண்ணையாளர்கள் இங்கே குடியேறத் தொடங்கினர்கள். ஒவ்வொரு பண்ணையாளனும் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களை அரசியலாரிடம் பெற்று, பெருந்தொகைகளை முதலாக வைத்துக்கொண்டு, தேயிலைப்பண்ணை, இரப்பர்பண்ணை, மிளகுபண்ணை, கறுவாய்ப்பட்டைப் பண்ணை முதலியவைகளை ஏற்படுத்தத் தொடங்கினர்கள். மரங்களை வெட்டி, நிலத்தைச் செம்மைசெய்து, புதுப் பயிர்களை நட்டுப் பெரும் பண்ணைகள் ஆக்கினர்கள். உள் நாட்டு மக்களைக் கருதாமல், இந்தியாவிலிருந்து எளிதாக ஒப்பந்தக் கூலிகளைத் தருவித்து, பண்ணைகளை நடத்தினர்கள். இந்த வகையில் அடர்ந்த மலைக்காடுகள் எல்லாம் அழகிய தோட்டங்கள் ஆகிவிட்டன. நூறு ஆண்டுகளுக்குள் நிலத்தின் தன்மையே மாறிவிட்டது. மலைநாடு எங்குப் பார்த்தாலும் தேயிலைச்செடிகள், இரப்பர்மரங்கள், பழ வகைகள், அவைகளுக்கு இடையிடையே பண்ணையர் மாளிகைகள், ஆலைக்கட்டடங்கள், மின்சாரவசதிகள், பாதைகள், கூலியாள் குடிசைகள் முதலியன நிரம்பிக் கிடக்கின்றன. இந்த மாறுதல்களினால் எங்கும் மலை வளம், நீர்வளம் பெருகி, ஆயிரமாயிரம் மடங்கு மிகுதியான வருவாய்களை அளிக்கத்தொடங்கிவிட்டன. இந்த மாறுதல்களைப் புகைவண்டியில் போகும்போதே கண்டு கொண்டு செல்லலாம்.

கம்பளை

இந்த அழகான மலைநாட்டைப் பார்ப்பதற்குக் கண்டிக் கடுத்த பேராதனையில் புகைவண்டிப்பாதை மாற்றித் தெற்கே செல்லவேண்டும். பதினான்கு கல்லில் 'கம்பளை' என்ற நகரத்தை அடைகிறோம். அந்நகரம் பதினான்காம் நூற்றாண்டில் சில ஆண்டுகள் தலைநகராக இருந்தது. அதனை ஆண்ட அரசர்கள் 4-ம் புவனேகபாகு (1347), 5-ம் பாரக்கிரமபாகு (1351), விக்கிரமபாகு முதலிய

வர்கள் ஆவார்கள். ஆனால் இப்போது பார்த்தால், அது தலைநகராக இருந்தது எனக் காட்டக்கூடிய சின்னம் ஒன்றும் தெரிகிறதில்லை. ஆற்றோரத்தில் சில கற்படிகள் இருக்கின்றன. இவைகளின் வழியாக அரசகுடும்பத்தினர் இறங்கி ஆற்றில் குளித்துக்கொண்டிருந்தனர் என்று பொதுமக்கள் கூறுவதுண்டு. மற்றும் இவ்வூருக்கு அடுத்திருக்கும் ஒரு பாறையின்மேல் ஒரு சிங்கத்தின் உருவம் செதுக்கப்பட்டிருக்கிறது. சிங்க உருவம் சிங்களருடைய சின்னம் ஆகும். இக்குறி சிங்கள அரசர் ஆண்டகாலத்தில் செதுக்கப்பட்டது என்றும், அதனாலே அவர்கள் இங்கே ஆண்டிருக்கவேண்டும் என்றும் கருதப்படுகிறது.

சமய நிலையங்கள்

நாம் புகைவண்டிப்பாதையில் சென்றாலும் வெறும் வண்டிப்பாதையில் சென்றாலும் கம்பளைக்குள் புகுந்துதான் செல்லவேண்டும். ஊரில் புகுந்தவுடனே இரண்டு பள்ளிவாசல்களும் ஒரு பெரிய சிவன்கோயிலும் தெரிகின்றன. இவ்விரண்டிற்கும் அருகில் தென்னஞ்சோலைகள் இருக்கின்றன. சிவன்கோயிலின் கோபுரம் பெரியது. ஏழு நிலைகள் கொண்டது. வாயிலும் சிகரமும் விட்டு ஐந்து நிலைகளிலும் அழகான பெரிய காரை உருவங்கள் செய்யப்பட்டுள்ளன. கோபுரம் தென்னிந்தியாக் கோபுரத்தைப் போன்ற திருப்பணி கொண்டது. இக்கோயில் நூலைக்குப் போகும் பெரிய பாதையில் இருக்கிறது. கோயிலுக்கு இருபுறங்களிலும் கடைத்தெருவுள்ளன. கடைகள் எப்போதும் கூட்டமாகவே இருக்கும். வியாபாரம் மிகுதி. அடுத்தாற்போல் உள்ள தோட்டங்களில் வேலை செய்யும் கூலித்தொழிலாளிகள் சாமான்களை வாங்குவதற்கு இவ்வூருக்குத்தான் வருவார்கள். இங்கே துணிக்கடைகளும் மிகுதி. இவ்வூரைச் சுற்றித் தேயிலை முதலிய பயிர் செய்யும் பண்ணைகள் மிகுதி. அவைகளில் ஆயிரக்கணக்கான தொழிலாளிகள் வேலைசெய்கிறார்கள். இவ்வூரில் கடைக்காரர்கள் பெரும்பான்மையாகத் தமிழ்நாட்டார்

களே. இவர்கள் கூலியாட்களுக்கு வேண்டிய சரக்குகளை விற்றுப் பொருள் தேடுகிறார்கள். இவ்வகைச் செழிப்பான வர்த்தகத்தினால்தான் இவ்வூரில் சிறந்த சிவன்கோயில் ஏற்பட்டது. வியாபாரிகளும் தொழிலாளிகளும் சேர்ந்து சிவன்கோயிலை நடத்துகிறார்கள். இக்கோயிலில் விழாக்களும் மிகச் சிறப்பாக நடைபெறும். அவைகளுக்கு ஆகக் கூடிய செலவு பொதுமக்களாலே நடைபெறுகிறது. அந்தந்த நாள் விழா அந்தந்தக் கட்டளைக்காரர்கள் சொந்தச் செலவிட்டு நடத்துவார்கள். இம்முறை இலங்கை முழுதும் உண்டு. அதுதான் கோயிலை நடத்துவதற்கு எளிதான வழி.

பண்ணைப் பெருக்கம்

கம்பளையிலிருந்து புகைவண்டி வழியாகத் தெற்கே ஒன்பது கல் சென்றால் 'நாவலப்பிட்டி' என்ற ஒரு பெரிய வண்டிநிலையம் இருக்கிறது. அதற்கு அருகில் ஒரு பெரிய ஊர் வளர்ந்துவருகிறது. தேயிலைத்தோட்டங்களுக்கு நடுநாயகமாக இருப்பது இந்த ஊர். இதனருகில் இரப்பர் தோட்டங்களும் உண்டு. அத்தொழில்கள், இருப்பிடங்கள் இவ்வூரைச்சுற்றிலும் மிகுதியாக இருக்கின்றன. இவ்வூரில்தான் தொழிலாளர் இயக்கமும் பெருகிக்கொண்டு வருகிறது.

தொழிலாளர் சேர்க்கையும் அவர்கள் நிலைமையும்


சென்னை மாகாணத்திலே நாட்டுப்புறங்களில் புன்செய்க்காடுகளில் தாழ்ந்த வகுப்பார்களும், பயிர்செய்வோர்களும் பஞ்சக்காலங்களிலும் மழைமாரி குறைந்த நாளிலும் வேலையின்றித் திண்டாடுவார்கள். அவர்களை அழைத்து, ஒப்பந்தத்தில் கையெழுத்து வாங்கிக்கொண்டு, கண்காணிகள் இலங்கை முதலிய இடங்களுக்கு அனுப்புவதுண்டு. அவ்வகைக் கூலிகளுக்கு முன்பணமாகச் சிறிய தொகை கொடுப்பதுண்டு. பிறகு வழிச்செலவும் கொடுப்பார்கள். கண்காணிகளுக்குத் தரகும் உண்டு. இவ்வகையே சேர்க்கப்பட்ட ஆட்கள் ஆயிரக்கணக்காக

கப்பலில் ஏற்றி இலங்கைத்தோட்டங்களுக்குக் கொண்டு போகப்படுவார்கள். தோட்டங்களிலே இவர்களுக்கு வீடுகளும் உண்டு. அங்கிருந்துகொண்டு வேலை செய்ய வேண்டும். ஒப்பந்தக் கெடு வரையில் வேலைசெய்யவேண்டும். கெடு முடிந்ததும் அதுவரை சம்பாதித்த சம்பளத்திலிருந்து வாங்கின பணம் போக மீதியைத் தந்து ஊருக்கு அனுப்புவார்கள். இவ்வகை ஒப்பந்தக்கூலித்திட்டத்தை நடத்துவதற்கு இந்தியாவிலும், இலங்கையிலும் அலுவலகங்கள் உண்டு. கூலிகள் தொத்துநோய் முதலியவைகள் கொண்டு செல்லாமல் பாதுகாப்பதற்காக, 'மண்டபம்' என்ற நிலையத்திற் கருகில் ஒரு பெரிய குடியிருப்பில் அவர்களை ஏழுநாள் நிறுத்தி, வைசூரி குத்தி, மருந்து முதலியவைகளைக் கொடுத்துப் பிறகு கப்பல் ஏற்றுவது வழக்கம். கூலிகள் பொதுவாகக் குடும்பங்களோடு செல்வதுண்டு. இக்கூலிகள் பெரிதும் தாழ்ந்தவகுப்பார்களிலிருந்தே செல்லுகிறபடியால், நடையுடைபாவனைகள் தாழ்ந்து இருக்கும். அவர்களுக்கு கட்டிக்கொடுத்திருக்கும் குடிசைவசதிகள் மிகக் குறைவுள்ளவை. சில குடிசைகள் ஆடுமாடுகளின் பட்டிகள் போல இருக்கும். சுற்றிலும் உடல்நல வசதிகள் இல்லை. குப்பைகூளங்களுக்கு இடையில் வசிப்பதாலே மழைகளால் மிகுதியாக நோய்கள் உண்டாகும். தூய்மையான நன்னீர் இல்லாமல் ஓடைநீர் குடிப்பதால் அடிக்கடி வயிற்றுக் கடுப்பு உண்டாகும். இந்த வகையில் பலர் இறப்பதும் உண்டு. மருந்துச்சாலைகள் பேருக்குத்தான் இருக்கும். படிப்பு என்பது இல்லை. குழந்தைகளுக்குப் பாடசாலைகள் இல்லை. உடுக்கச் சரியான துணிகளும் இல்லை. இந்த முறைகளிலே கூலியொப்பந்தத்தில் சிக்கின பலர் திரும்பி ஊருக்குச் செல்வதே இல்லை. பண்ணைக்காரர்களுக்கு வேலையே பெரிது. போகும் தொழிலாளிகளின் நிலைமை இன்னதென்ற கவலையே இல்லை. இந்த முறையில் கேள்வி கேட்பாரு மின்றி ஒப்பந்தக்கூலிகள் இருந்தார்கள். இந்த மோசமான நிலையை நன்கு அறிந்த இந்தியாநாட்டுச் சில சீர்திருத்தக்காரர்கள், இக்கூலிகளின் நிலையைப்பற்றி அக்கரை எடுத்துக்கொண்டு வாதாட முயன்றார்கள். இதன்

பயனாக இப்போது கூலிகளின் நிலைமை சிறிது சீர்திருத்தம் அடைந்துகொண்டுவருகிறது. இலங்கையிலும் தொழிலாளிகளின் சங்கங்கள் ஏற்பட்டுவருகின்றன. இந்தியாவிலிருந்தும் சில தொழிலாளர் இயக்கங்களில் ஈடுபட்ட பெரியோர்கள் இலங்கைக்குச் சென்று இச் சீர்திருத்த முறைகளில் பாடுபட்டார்கள். அண்மையில் தொழிற்கட்சியில் சிறந்த தலைவர்கள் இந்த ஊரில் மாநாடுகள் கூட்டி இயக்கத்தை வளர்த்துவருகிறார்கள். இதன்பயனாக இலங்கையில் ஓர் இந்தியப் பிரதிநிதியும் ஏற்பட்டு, தொழிலாளர் முன்னேற்றத்தைக் கவனித்துவருகிறார்கள். இந்த இயக்கத்திற்குத் தலைமையிடம் இந்த நாவலப்பிட்டியே ஆகும். ஆகையால், இந்த ஊரில் இறங்கி, இங்கு இருக்கும் தோட்ட வேலைகளைப் பார்த்துத் தொழிலாளர்களின் இருப்பிடம் முதலிய வசதிகளைக் கண்காணிப்பது நன்று.

தேயிலைப்பயிர்

தேயிலைச்செடி இந்தியாநாட்டுச் செடியன்று. இலங்கையிலும் முதலில் இருக்கவில்லை. அது சீனநாட்டில் பயிரிடப்பட்ட செடி. அந்தச் செடியில் இலைதான் சிறந்தது. மற்றைப்பகுதிகளால் யாதொரு பயனும் இல்லை. இலையைக் கிள்ளியெடுத்துச் சூடேற்றிப் பக்குவமாக உலரவைத்தால் அதில் மிக நல்ல மணம் வரும். அவ்விலைகளை இட்டுச் சாறுவடித்தால் அஃது ஓர் இனியகுடிநீர் ஆகும். இந்தத் தேநீர்க்குடி உலகம் முழுதும் இப்போது பொதுவான காலங்களிலும் விருந்துகளிலும் கையாளப்பட்டு வருகின்றது. மாலைநேரங்களில் மகிழ்ச்சியாகச் சிற்றுண்டி அருந்தும்போதெல்லாம் தேநீர் பருகுதல் ஒரு வழக்கம் ஆகிவிட்டது. இந்த வழக்கம் மிகப் பெருகிவிட்டபடியால், தேநீர் இருந்தாலும் தேநீர் இல்லாமலிருந்தாலும், அவ்வகையான சிற்றுண்டிவிருந்துக்குத் 'தேநீர் விருந்து' என்ற பெயரே இப்போது ஏற்பட்டுவிட்டது. ஆங்கிலநாட்டிலும் ஒரு நண்பரைச் சிற்றுண்டிவிருந்துக்கு அழைப்பதானால், தேநீருக்கு அழைப்பது என்ற பழக்கச்சொல்லே வழங்கிவிட்டது. தேயிலையில் சிறந்த சரக்கு இலங்கையிலே



தேயிலைத்தோட்டம்

தான் உண்டாகிறதென்பர். இந்தியாவில் நீலகிரி, ஆனை மலை, அசாம் முதலிய இடங்களில் மிகுதியாகப் பயிரிடப் பட்டாலும், இலங்கைத்தேயிலை உலகத்திலே மிகப் பெயர் பெற்று எங்கும் செலாவணியாகிவருகின்றது.

அதன் இயல்பு

தேயிலைச்செடி தானே வளரவிட்டால் மிக உயரமாக வளரக்கூடியது. ஆனால், அதனை அவ்வாறுக வளரவிடுவ தில்லை. விதை வேண்டும் என்றால் மட்டும் உயரமாக வளர்ப்பார்கள். மற்றச் செடிகளை வெறுங்குத்துச்செடிக ளாக வெட்டிவிடுவார்கள். பொதுவாக ஒரு செடியை மூன்று அடிக்குமேல் வளரவிடுவதில்லை. அவ்வாறு வெட்டிவிட்டால் அதன் இலைகள் புதர்கள்போல வளரும். நாள் ஆக ஆக அடிக்கட்டை மரம்போல் பருத்துவிடும். அப்போது அதனைக் கத்திரிகையாலோ கத்தியாலோ வெட்டமுடியாது; வாளால்தான் அறுக்கவேண்டும். ஒவ் வொருதடவை இலைகளை முழுவதும் கிள்ளிவிடுவார்கள். அப்போது வெறும் கட்டைகள்தான் தெரியும். அக் கட்டைகள் உலர்ந்துபோகாமல் இருப்பதற்காக அவைக ளுக்குச் சுண்ணும்பு பூசுவது உண்டு. நிலமோ சிவப்பாக இருக்கும். அதற்கு மேலே சுண்ணும்பு பூசிய கட்டை தெரிந்தால், அக்காட்சி எவ்வாறு இருக்கும்? யாதோ ஒரு தொத்துநோய் ஏற்பட்டுப் பயிர் முழுதும் பாழ் அடைந்துபோனாற்போலத் தோன்றும். ஆனால், உண் மையில் அது நோய் அன்று. அடுத்த மழைகாலம் வரவே, அந்தக் கட்டைகளைச் சுற்றிலும் பச்சைப்பசேல் என்ற இலைகள் முளைத்துவிடும். சில நாட்களுள் நிலம் முழுதும் பச்சைப்போர்வை போர்த்தாற்போல் காணப்படும். புது இலைகள் புதுக்கிளைகள் தோன்றி மண்முழுதும் மூடிக் கொள்வதைக் கண்டால், இயற்கையன்னை ஓர் இந்திர ஜாலம் செய்துவிட்டாளோ என எண்ணவேண்டிவரும். இவ்வாறான காட்சிகளை நாம் செல்லும் வண்டிப்பாதை யின் இருபுறங்களிலும் கண்டுகொண்டே செல்லலாம்.

நாற்றுவிடல்

சாய்வான மலைச்சரிவுகளில் எல்லாம் தேயிலைத் தோட்டங்களே மிகுதியாகப் பயிரிடப்பட்டிருக்கின்றன. புதிதாகப் பயிரிடும் தோட்டங்களில் முதலில் சவுக்கு அல்லது கற்பூரமரம் முதலியவைகளை நிழலுக்காக நடுவார்கள். அம்மரங்களின் நிழலில்தான் தேயிலைச்செடி நன்றாக வளரக்கூடும். ஆகவே, சரிவுகளில் பெரிய கற்பூரச்செடிகளையும் காணலாம். இவைகளை மிக ஒழுங்காகக் கோடுகள் போட்டாற்போல நட்டிருப்பார்கள். ஆகவே, தொலைவிலிருந்து பார்த்தால் அவ்வகை வரிசைகள் வரியிடப்பட்ட தாள்போல மிக அழகாகத் தோன்றும்.

இலை கிள்ளுதல்

இந்தக் காட்சிகளைக் கண்டுகொண்டே போகையில், பள்ளத்தாக்குகளில் ஓடைகளுக்கு அருகே சில அழகற்ற கட்டடங்களைக் காண்போம். இவைகளில் கணக்கில்லாத சன்னல்கள் இருக்கும். மூன்று நான்கு அடுக்குகளாகச் சன்னல் வரிசைகளைக் கொண்டு, மேலே தகர ஓடுகளால் வேயப்பட்டு, பெரிய பெரிய பெட்டிகளைப்போல அங்கே நிற்கப் பார்ப்போம். இவைகளில் யாதொரு அழகோ, சிற்பமோ காணமுடியாது. பணம் பெருக்கும் ஆலைகள் ஆனபடியால், இவைகளில் அழகைக் காணமுடியுமா? அருகில் சென்றால் தேயிலை வறுக்கும் மணந்தான் மூக்கில் ஏறும். உள்ளே சென்றால் வெறும் இயந்திரங்கள், அடுப்புகள், சக்கரங்களே தெரிவன. வேறு புதுமைகளை அங்கே காணமுடியாது. வெளியே வரிசை வரிசையாக முக்காடிட்ட கூலியாட்கள், பெரிய கூடைகளை வைத்துக் கொண்டு, நடைப்பாதை ஓரமாக உட்கார்ந்திருப்பார்கள். இக்கூலிகள் அதுவரைக் கிள்ளின இலைகளைக் கூடைகளில் இட்டுக்கொண்டு, ஆலைக்கணக்கனுக்குக் கணக்குக்கொடுக்க அங்கே உட்கார்ந்திருப்பார்கள். கணக்கன் அக்கூடைகளில் உள்ள இலையை நிறுத்துக் கணக்கு எடுத்துப் பதிவு செய்துகொண்டு, இலையைச் சரக்கு அறைகளில் போட்டுக் கொண்டு அனுப்பிவிடுவான். கூலியாட்களுக்கோ செய்த வேலைக்குத் தகுந்த கூலி கிடைக்கும்.

தரப் பிரிவினை

கிள்ளிவந்த இலைகளைப் பல இரகங்களாகப் பிரிப்பார்கள். தளிர்கள் தனியாக வைக்கப்படும். அவைகளைச் சூடேற்றினால் பொன்போல நிறம் ஏறும். அதுதான் சிறந்த தேயிலை. அஃது இங்கிலாந்து முதலிய நாடுகளுக்கு ஏற்றுமதியாகும். இரண்டாந்தரம் மூன்றாந்தரம் கொண்ட முதிராத இலைகள் ஆசியாவில் விலையாகின்றனவாம். ஆகவே, இந்த வகையிலும் வெள்ளைக்கார வர்த்தகர்கள் வேறுபாடு காட்டுகிறார்களாம். இவ்வாறு வேறுபாடு உண்டாக்கி, அதனை நிலைநிறுத்துவதற்காகச் சில சங்கங்களும் சட்டங்களுங்கூட ஏற்பட்டிருக்கின்றன. இவ்வகை மாறுபாடுகள் தொலைய எத்தனைகாலம் பிடிக்குமோ அறியோம்.

கூலிகள் கொண்டுவந்த பச்சை இலைகளை முதலில் பாய்களிலோ அல்லது கம்பிவலைகளிலோ பரப்பிக் காயவைப்பார்கள். பிறகு, அவைகளுக்கு இலேசாகச் சூடு தந்து சுருளச்செய்வார்கள். அச்சுருள்களை இயந்திரங்களில் பக்குவமாக்குவார்கள். பிறகு, இரகமாகப் பிரித்துப் பெட்டிகளில் மணம் போகாதபடி அடைத்துவைப்பார்கள். ஒவ்வொரு பெட்டியும் குறித்த அளவு கொண்டதாக இருக்கும். இவ்வகை ஆலைகளை நடத்துவதற்கு நீராவியந்திரங்களும் எண்ணெயந்திரங்களும் பயன்படுத்தப்பட்டன. இப்போது மின்சாரயந்திரங்கள் பயன்படுகின்றன. அருகிலே எங்குப் பார்த்தாலும் நீர்வீழ்ச்சிகள் இருப்பதனாலே மின்சாரவசதி நிரம்பக் கிடைக்கின்றது.

இரவில் காட்சி

வேலை மும்முரமாக நடக்குங் காலங்களில் இரவும் பகலும் இந்த இயந்திரங்கள் வேலைசெய்யும். இரவுகளிலே மலைச்சாரல்களில் எங்கும் அச்சம் மிகுக்கும் இருட்டே தெரியும். ஆனால், இடையிடையில் ஒருகல் இரண்டுகல் தொலைவுகளில் ஆலைகள் தீபத்தம்பங்கள்போல ஒளிவிட்டுக் கொண்டிருக்கும். அவ்வாலைகளுக்குள் ஒளிவிடும் மின்சார விளக்குகள் எரிய, அவற்றின் சன்னல்களிலே அவ்வொளி கணக்கற்ற கண்களைப்போல வெளியே தெரியும்.

இவ்வகைக் காட்சி எவ்வகையான மகிழ்ச்சியையும் அங்குள்ள கூலிக்குத் தருவதில்லை. இரவெல்லாம் வேலை செய்யும் இந்தக் கூலி, இவ்வொளிகளைக் கண்டு அச்சந்தான் அடைவான். இவ்வகையான காட்சிகளைக் கண்டு மகிழ்ந்து கொண்டே பயணம் செய்வோம்.

தொழிலாளர் இருப்பிடங்கள்

அங்கங்கே பெரிய பெட்டிகளைப்போல் மலைச்சரிவுகளிலே எழும்பியிருக்கும் அழகற்ற கட்டிடங்களைத் தவிர, மற்ற மலைச்சரிவுகள் எல்லாம் பச்சைப்பசேல் என்று தேயிலைத்தோட்டங்கள் தோன்றினால், கூலித்தொழிலாளிகளுடைய இருப்பிடங்கள் எங்கே என்று கேட்கலாம் அன்றோ? அவைகள் பாதைகளில் போகும் மக்களுக்குத் தெரிவதில்லை. தெரியாதபடிதான் அமைத்திருக்கிறார்கள் போலும். தோட்டங்களுக்குப் பின்னாலே கண்மறைவாகத் தாழ்வான இடங்களிலே வரிசைவரிசையாகத் தகரக் குடிசைகள் கட்டப்பட்டுள்ளன. 8 அடி சதுரமுள்ள ஒரு அறையும், அதற்கு அடுத்து 4 அடியில் ஒரு தாழ்வாரமும் கொண்டதே ஒரு குடும்பத்தினுடைய வீடு. இவ்வீட்டில் ஒரு ஆண், ஒரு பெண், இரண்டு குழந்தைகள், ஆக நான்கு பேர் சராசரி வசிப்பார்கள். இவர்களுக்குத் தனியாக மலங்கழிக்கும் இடங்கள் இல்லை. குடிநீர்வசதி அருகில் ஓடும் அருவியே. கூட்டம் நிறைந்த இடங்களில் இவ்வகைத் தண்ணீர் குடிப்பதனால் ஏற்படும் கேடுகளைப்பற்றிக் கூறவேண்டுவதே இல்லை. இக்கூலிகளுக்கு எப்போது நல்ல நாள் பிறக்குமோ?

பண்ணை மாளிகைகள்

இந்தக் காட்சிகளைக் கண்டுவிட்டுச் சிறிதுதொலை ஒரு தோட்டத்திற்குள் செல்வோம். அங்கே என்ன காண்கிறோம்? ஒரு குன்றின் உச்சி சுற்றிலும் அழகிய பூந்தோட்டம். நடுவில் மனம்மகிழத்தக்க மாளிகை. அதில் வசிப்பவன் தோட்டத்து முதலாளி. அவன் ஒரு பணக்கார வெள்ளையன். மனைவி மக்களோடு இந்திரபோகம் நுகர்கிறான். ஆயிரக்கணக்கான ஏழை இந்தியக்

கூலிகள் இரத்தம் சிந்தச்சிந்தச் செய்த தொழிலின் பயனை இந்த ஒரு வெள்ளை முதலாளிக்குடும்பம் நுகர்கிறது. மாளிகைக்குள் புகுந்து பாருங்கள். அழகான பஞ்சமளிகள், நேர்த்தியான இரத்தினக் கம்பளங்கள், ஈட்டி மேசைகளின்மீது சுவைபொருந்திய உணவுகள், தேனினும் இனிய பானங்கள், நறுமணம் வீசும் மலர்மாலைகள். இவைகளின் நடுவே இம் முதலாளி இன்புறுகிறான். இவனுக்கு வாழ்க்கை தெவிட்டாதோ என்று கேட்கலாமா என்று தோன்றும். அது தெவிட்டிப்போகாதபடி அங்கங்கே உல்லாச இடங்கள், பந்து விளையாட்டுச்சாலைகள், குதிரையேற்றம், வன வேட்டை முதலிய வசதிகள் ஏற்படுத்திக்கொண்டிருக்கிறான். இது இந்திரபோகம் அன்றோ? கூலிகளுடைய குடிசைகளை இவைகளோடு ஒத்திட்டுப்பார்த்தால், இவைகள் வெறும் கடைகெட்ட நரகங்களை ஒழிய வேறு என்ன ஆகும்? இவைகளையெல்லாம் கண்டுகொண்டே மேலே மலை ஏறுவோம்.

சிவனொளிபாதம்

இந்தப் பாதையிலே 4000 அடி உயரத்தில் 'ஹட்டன்' என்ற ஊர் இருக்கிறது. இங்கே பல கடைகள் உண்டு. அக்கம்பக்கத்துத் தேயிலைத்தொழிலாளர்கள் இங்கு வந்து வேண்டிய சாமான்களை வாங்கிச்செல்வார்கள். ஆகவே, இங்கே சில்லறை வர்த்தகம் மிகுதி. இங்கிருந்து 'மசகெலியா' என்ற ஊருக்குப் பாதை செல்லுகிறது. அப்பாதை சிவனொளிபாத மலையின் அடிவாரத்தில் செல்லுகிறது. இங்கிருந்து அம்மலை ஏறுவது எளிது. இரத்தினபுரியிலிருந்து போவாரும் உண்டு என்று முன்னேயே கூறியிருக்கிறோம். அது மிகவும் வருத்தமான வழி. ஹட்டன் பாதையிலிருந்து ஏறுவது அத்துணை வருத்தமன்று. நெடுந்தொலைவிலிருந்தே அம்மலையின் உச்சி கூர்மையாக வானத்தைத் துளைத்துக்கொண்டு நிற்கக் காணலாம். பங்குனி சித்திரைத் திங்கள்களில் காற்றும் மழையும் குறைந்திருக்கும். அப்போதுதான் இம்மலை ஏறுவது எளிது. மாலையில் சாப்பிட்டுவிட்டு மலை ஏறத் தொடங்கவேண்டும். கையில்

விளக்கு வைத்துக்கொண்டு துணையாட்கள் வழிகாட்டுவார்கள். மேடும் பள்ளமும் தாண்டிச்சென்றால், விடியும்போது உச்சி அடையலாம். பகல்நேரத்தில் சென்றால் செங்குத்தான சரிவுகளைக் கண்டு பிரயாணிகள் அஞ்சவேண்டிவரும். அதனால்தான் இரவில் செய்யும் பிரயாணம் நல்லதும் எளிதானதும் ஆகும்.

மழைவளம்

ஹட்டனைவிட்டு மலைத்தொடர்களில் ஏறிப் போகப் போகக் காட்சிகள் மிக அழகாகக் காணப்படும். மழை மிகுதியாகப் பெய்யும். மூடுபனி சிகரங்களை மறைத்துநிற்கும். சராசரி 100 முதல் 200 வரை மழை பெய்யும். ஆகவே நிலம் எப்போதும் ஈரமாகவே இருக்கும். தேயிலையும் மிகச் செழிப்பாக வளரும். ஒவ்வொரு அங்குல நிலமும் செல்வத்தைக் கக்கிக்கொண்டிருக்கும். இம்மழையின் மிகுதியால் எங்கும் ஓடைகள் காணப்படும். பாறைகளின்மேல் வெள்ளம் கூத்தாடிக்கொண்டு கீழே குதிக்கும். பல நீர்வீழ்ச்சிகளைக் காணலாம். இவைகளைப் பார்க்கையில் குறிஞ்சிப்பாட்டில் கபிலர் கண்ட காட்சி நம் கண் முன்னால் தோன்றும்.

> "நிறையிரும் பௌவம் குறைபட முகந்துகொண்டு
> அகலிரு வானத்து வீசுவளி கலாவலின்
> முரசதிர்ந் தன்ன இன்குரல் ஏற்றெழுந்து
> நிரைசெல னிவப்பில் கொண்மூ மயங்கி
> இன்னிசை முரசிற் சுடர்ப்பூட் சேஎய்
> ஒன்னூர்க் கேந்திய இலங்கிலை எஃகின்
> மின்மயங்கு கருவிய கன்மிசைப் பொழிந்தென
> அண்ணல் நெடுங்கோட் டிழிதரு தெண்ணீர்
> அவிர்துகில் புரையும் அவ்வெள் ளருவித்
> தவிர்வில் வேட்கையேம் தண்டா தாடி
> பளிங்குசொரி வன்ன பாய்சுனை."—துறிஞ்சிப்பாட்டு (47-53.)

என்ற அடிகளை நினைவுறுக!

நீர்வீழ்ச்சிகள்

நீர்வீழ்ச்சிகள் பலவற்றிலும் மிகப் பெயர்பெற்றவை இரண்டுண்டு. 'டெவன் வீழ்ச்சி,' 'க்ளேர் வீழ்ச்சி' என்

பவைகள் புகைவண்டிப்பாதைக்கு அருகிலேயே உள்ளன. வண்டியிலிருந்தே அவைகளைக் காணலாம். ஒன்று உயரமாகவும் குறுகலாகவும் பாறைகளின்கீழ் பால்வடிந்தாற் போலப் பாயும். மற்றொன்று அகலமாகப் பால் வெள்ளைத் துணி போர்த்தினாற்போலப் பாயும். இவ்விரண்டும் அடர்ந்த காடுகளின் இடையிலே நுரைகளைத் தள்ளிக் கொண்டு விழும் காட்சி அச்சம் பொருந்தத் தோன்றும். ஆனால், பாறைகளின் அடியில் விழும்போது நுண்ணிய துளிகள் மேலே எழும்பிப் புகைபோலப் படர்வதைக் காண மிகவும் அழகாக இருக்கும். இப்படிப்பட்ட காட்சிகளைச் சம்பந்தப்பெருமான் ஒருவரே கண்டு இன்புற்று உருகிப் பாடக்கூடியவர்.

"போதும் மணியும் உந்திஅருவி புடைசூழ
கூதல்மாரி நுண்துளி தூங்கும் குற்றாலம்"

என்றவை போன்ற பாடல்கள் இவ்வகை அழகுகளை எடுத்துக்காட்டக்கூடியவைகள் அல்லவோ?

உயர்ந்த மடிகள்

இந்த மலைகளின் இடையே ஓடும் புகைவண்டி நெருப்பைக் கக்கிக்கொண்டு மேலே போகும். இந்தப் பாதையை இயற்றிய பொறியியலாளர் ஆற்றலை ஆற்றல்! சில இடங்களில் வளைந்து வளைந்து செல்லும் தோற்றம் பெரிய ஒரு மலைப்பாம்பு படித்தாற்போலத் தோன்றும். இந்தப் பாதை நானுஓயா என்ற சந்தியில் இரண்டாகப் பிரிகிறது. ஒன்று நேராக இராகலைவரை சென்று அங்கே நின்றுவிடுகிறது. அது மிகச் சிறிய பாதை. வண்டியும் சிறியதே ஆனாலும் சௌகரியமாக இருக்கும். இந்தக் கிளையில்தான் நூரளை அல்லது நுவர எலியா என்ற நகரம் இருக்கிறது. இதுவே இலங்கையின் கோடைக்காலத் தலைநகர் ஆகும்.

நூரளை

இங்கே செல்வர்களின் பூந்தோட்ட மாளிகைகள் இருக்கின்றன. கடல்மட்டத்திற்கு மேல் 7500 அடி உயர்ந்த இடத்தில் இருக்கிறது. நீலகிரியில் உள்ள ஒத்தக

கல்மந்து போன்ற உடல்நலவசதி கொண்டது. இதற்கு அடுத்தாற்போல பிதுருதலகலா என்ற ஒரு சிகரமுடி உள்ளது. அது 8000 அடி கொண்டது. அது சிவனொளி பாதத்தைக்காட்டிலும் உயர்ந்தது. நுரளியை வெள்ளையர்கள் மிகு பணம் செலவிட்டு அழகிய நகரமாகக் கட்டியுள்ளார்கள். அதில் ஒரு பெரிய அழகான ஏரியையும் உண்டாக்கியுள்ளார்கள். சுற்றிலும் அழகான பாதைகளையும் தோட்டங்களையும் வளர்த்திருக்கிறார்கள்.

சீதா எலியா

நுரளிக்குக் கிழக்கே சென்றால் பாதை தாழ்வாகச் செல்லுகிறது. அங்கே மரச்சோலைகளிலிருந்து ஒரு குளிர்ந்த நீரோடை தனியாக ஓடுகிறது. அவ்வோடை ஒரு இடத்தில் சிறிய குளமாகத் தேங்கிப் பின்னும் கீழே விரைந்து ஓடுகிறது. அதனருகே ஒரு சிறிய பன்னகசாலை காணப்படுகிறது. இதனைச் சீதாகுண்டம் என்பார்கள். இதற் கருகில் உள்ள இடத்தைச் சீதா எலியா என்பார்கள். (எலியா என்றால் வெளி என்று பொருள்). இராவணன் சீதையைச் சிறைவைத்தபோது இராமனுடைய வரவைக் கருதி இந்த மறைவான இடத்தில் அவளை வைத்திருந்ததாக இங்கே ஒரு வரலாறு உண்டு. இந்த இடத்திற்கு அண்மையில் ஒரு குன்று முழுதும் கருமண் படர்ந்திருக்கிறது. அடிமண்ணும் ஒரே அடி ஆழம்தான் இருக்கிறது. அனுமான் இராவணனுடைய கோட்டையை எரித்ததனால் இவ்வாறு கரியாகிவிட்டதென்பர். ஆனால் ஆராய்ச்சியாளர்கள் இதை நம்புவதில்லை. அவர்கள் சீதாகுண்டம் என்பது சீதளகுண்டம் என்பதன் மரூஉ என்பர். இங்கே நீர் தொடமுடியாதபடி அத்துணைக் குளிர்ச்சியாக இருக்கும்.

ஹெக்கலைப் பூங்கா

இங்கிருந்து ஒருகல் கீழே சென்றால், ஹெக்கலை என்ற அழகிய இடம் தோன்றும். இங்கே ஒரு பெரிய பூந்தோட்டம் வைக்கப்பட்டுள்ளது. குளிர்நாடுகளில் வளரும் செடி கொடி மரங்களை இங்கே பயிரிட்டு வளர்க்கிறார்கள். அழகிய ஓடைகள் குளங்கள் பூமண்டபங்கள் முதலியவை

களை மிக ஒழுங்காக அமைத்திருக்கிறார்கள். வெப்பநாட்டில் காணக்கூடாத மரம் செடி கொடிகளை இங்கே ஒருங்கே பார்க்கமுடியும். தாவரநூல் மாணவர்களுக்கு இத்தோட்டம் மிக அருமையானது.

ஒரு படைவீடு

இனி நனுஓயாவிலிருந்து வதுளை போகும் வழி மிகவும் வியக்கத்தக்க முறையில் ஆக்கப்பட்டிருக்கிறது. பாதை போகப்போகத் தாழ்ந்துகொண்டே போகிறது. இங்கே ஓர் இடத்திலிருந்து சிவனொளிபாதமும் தெரியும். ஹப்புத்தளை என்ற இடம் அழகிய இயற்கை அமைப்புகளைக் கொண்டது. அங்கிருந்து மூன்றுகல் தொலைவில் தியதலமை என்ற இடத்தில் 45 ஆண்டுகளுக்கு முன் 5000 போயர் (Boer) கைதிகளைச் சிறைப்படுத்தியிருந்தனர். இப்போதும் அங்கே ஒரு படையின் தங்கல் இருக்கிறது.

பண்டாரவளை

அங்கிருந்து கீழே சென்றால் பண்டாரவளை என்ற ஒரு அழகிய நகரத்தை அடையலாம். இதன் உயரம் 4000 அடிதான் இருக்கும். ஆனாலும், மிக நல்ல வசதி பொருந்தியது. மிகுந்த குளிர்ச்சி தாங்கமுடியாத மக்கள் இங்கே வசிக்கலாம். இந்த நகரம் நாளுக்குநாள் வளர்ந்துகொண்டு வருகிறது. இங்கிருந்து திசமாராமை ஹம்பட்டன் தோட்டம் முதலிய ஊர்களைக் காணக்கூடும்.

வதுளை

இந்த இருப்புப்பாதை முடிவு அடையும் இடம் வதுளை என்பது. இவ்வூருக்குப் பின்னால் மலைகள் உயர்ந்து சுவர் போல நிற்கும். ஊரில் அகலமான தெருக்கள் உண்டு. இருபுறங்களிலும் நிழல் அடர்ந்த சாலைமரங்கள் உண்டு. இதுதான் உவா மாகாணத்திற்குத் தலைநகர். உவா மாகாணம்தான் இலங்கை அரசர்களின் இளவரசர்கள், அமைச்சர்கள் உவராசர்கள் ஆண்ட பகுதியாகும். ஆகவேதான் உவாமாகாணம் என்ற பெயர் வந்ததாம். இந்த நகருக்கு அருகில் தூனிந்தநீர்வீழ்ச்சி இருக்கிறது. இதனால் இந்நகரும் மின்சார வசதிகளை அடையும்.

வதுளை மிகவும் அழகான மலைச்சூழலில் இருக்கிறது. சுற்றிலும் தேயிலைத்தோட்டங்கள் மிகுதியாக இருந்தாலும், அருகில் நெல்வயல்களும் இருக்கின்றன. ஆகவே, இந்த இரண்டு வகையிலும் இவ்வூர் சிறந்து விளங்குகிறது. இங்கே பண்டைச் சிங்களவரசர்கள் நீர்ப்பாய்ச்சல் வசதிகளைச் செய்திருந்தார்கள். அவற்றின் அடையாளங்களை இன்னும் காணலாம்.

இணைப்பு

நடுநாயகமான மேட்டின் மற்றொரு பகுதியிலே இயற்கையான திடல்கள் உண்டு. அவைகளைச் செயற்கைப் பணியால் நயப்படுத்தி அழகுசெய்வ துண்டு. அந்தப் பகுதிதான் நடுமாகாணம்.

---

11. இயற்கையில் செயற்கை [நடு மாகாணம்]

இயற்கையோ செயற்கையோ!

ஆப்ரிக்காக் கண்டத்தில் எகிப்து தேயத்தில் பாலை வனத்தின் நடுவில் ஒரு பெரிய உருவம் படுத்திருக்கிறது. அதன் உடல் சிங்க உருவம்; தலை ஒரு வனிதையின் தலை. இப்புதுமையான உருவம் பல பல காதங்களுக்கப்பாலும் தெரிகிறது. இதை எகிப்து தேயத்தார் கட்டிப் பல ஆயிரக்கணக்கான ஆண்டுகள் ஆயின. அப்படியிருந்தும் இன்றைக்கும் அதை ஒரு புதுமையான வேலையாக உலகத்தார் மெச்சிப் பாராட்டுகிறார்கள். ஆனால் இலங்கைக்கு வாருங்கள். அங்கே மாகோ சந்தியில் வண்டி மாற்றி, திருக்கோணமலை வழியே செல்லுங்கள். வழியிலே கல் ஓயாவில் இறங்கி, வெகுதூரம் வழியே சென்று கிழக்கே திரும்பினால், ஒரு மலை கண்ணுக்குத் தோன்றும். அம் மலையே சிங்கவடிவமாக இருக்கிறது. ஒரு பேருருவுடைய சிங்கம் படுத்திருக்கிற முறையில் அது தோன்றுகிறது. இச்சிங்கவடிவம் இயற்கை வடிவமோ செயற்கை வடிவமோ என ஐயம் தோன்றும். இறைவனே இப்பெரிய உருவத்தை ஆக்கினானே என்று கேட்பீர்கள். தென்

தமிழ்நாட்டிலே குன்றக்குடி என்ற முருகக்கடவுள் கோயில் ஒன்று புகழ்பெற்றது. அதற்கு மயூரகிரி என்ற மற்றொரு பெயர் உண்டு. அந்த மலை இயற்கையிலேயே ஒரு மயிலைப்போன்ற உருவினைக் கொண்டிருக்கிறது. கொங்குநாட்டிலே கோவைக்கு மேற்கிலே வெள்ளியங்கிரி என்ற ஒரு புகழ்பெற்ற மலை இருக்கிறது. இதன் முடி ஒரு பெரிய தவளையைப்போல அமைந்திருக்கிறது. தவளைப் பாறையின் அடியில், ஒரு பெரிய இயற்கைக்குகையில், வெள்ளியங்கிரிநாதர் பஞ்சலிங்கமூர்த்தியாக எழுந்தருளி யிருக்கிறார். இவ்விதமான இயற்கை உருவில் இச்சிங்க மலை இருக்கிறதோ என்று ஐயங்கொள்ளவேண்டா. இம் மலைச்சிகரம் ஒரு செயற்கை உருவந்தான். எகிப்தியரும் வியக்கத்தக்க முறையில் இலங்கைச்சிற்பிகள் இம்மலையின் சிகரத்தை ஒரு சிங்கத்தின் முகமாகச் செதுக்கியிருக்கிறார் கள். அச்சிற்பிகளின் வேலைத்திறத்தை என்ன என்று வியப்பதோ! மனிதனால் ஏறமுடியாத ஒரு செங்குத்தான குன்றை, சிங்கத்தின் தலையைப்போலச் செதுக்குவதற்கு எவ்விதமான உயர்ந்த ஏணிகளும், ஆயுதங்களும் வைத் திருந்தார்களோ என்று நினைக்கவும் நமது மூளை ஓடாது. அதுவும் 15 நூற்றாண்டுகளின்முன் செய்யப்பட்டதென் றால், அக்காலத்துச் சிற்பிகளின் ஆற்றலைப்பற்றிக் கூறவும் வேண்டுமா? இந்தப் புதுமையான வேலையைச் செய்வித்த அரசன், தாதுசேனனின் மகன் 'காசியபன்' என்ற மன்னன் (463-479 கி. பி.). இவன் இந்த மலைச்சிகரத்தைச் சிங்க உருவமாக்கி, அதற்குச் 'சீயகிரி' (Sigiriya) என்ற பெயர் தந்தான். தென்னிந்தியாவில் பல்லவர்கள் இவ்விதமான செதுக்குவேலையில் ஈடுபட்டிருந்தார்கள். ஆனால், அவ் வேலைகளை இதற்கு ஒத்திட்டுப்பார்த்தால் மிகச் சிறியவை. மாமல்லபுரத்தில் ஒரே கல்லில் தேர் போன்ற கோயில்களை யும், யானைகளையும் சித்திரித்துள்ளார்கள். எல்லோரா என்ற இளாபுரிக்குகைகளில் கயிலாயநாதர் கோயிலில், ஒரே கல்லில் இரண்டு பெரிய யானைகள் ஆக்கப்பட்டிருக் கின்றன. பம்பாபதிக்கருகில் ஒரே கல்லில் நரசிங்கம், கணபதி, இடபம், கற்றேர் முதலியவைகள் உண்டு.

ஆனால், அவைகள் சீயகிரியின் வேலைப்பாட்டில் ஒரு கூறு என்றே கூறவேண்டும். ஆகவே, இச்செயல் புதுமையில் ஒரு புதுமை ஆகும்.

பெரியதொரு பாதகச்செயல்

இப்புதுமையான வேலைசெய்த மன்னனுக்கு என்ன கதி கிடைத்தது? இறைவனுடைய திட்டங்களை யார் அறிந்தார்கள்? நற்செயல் செய்தவனுக்கு நன்றி வருவ தில்லை. கெட்ட செயல் செய்பவனுக்குக் கெடுதி ஏற்படுவ தில்லை. காரணம் பல இருக்கலாம். நாம் அறியோம். காசியபன் தான் இயற்றிய அவ்வரிய சிற்பவேலை செய்த பிறகு, உலகில் இன்பவாழ்விலேயே இருந்தானா? இல்லை. இவனுடைய அருமைப்புதல்வனே இவன்மேல் அழுக் காறுற்று அரசைப் பிடுங்கிக்கொள்ளும்பொருட்டுத் தன்னைப் பெற்ற தகப்பனையே சிறையிலிட்டான். கம்சனை யும் மீறிவிட்டான். வெறும் சிறையில் அடைத்ததுமட்டும் அன்றி, கொலையாளிகளைவிட்டு அஞ்சத்தக்க முறையாக வருத்திக் கொலைபுரிந்தான். இவ் வஞ்சகச்செயல்களுக்கு அடிப்படைக்காரணமானவன் இவனுடைய ஒன்றுவிட்ட சகோதரனே. ஆனால், இவனுக்கு எங்கே அறிவு போயிற்று என்று கேட்கலாம். பேராசை பிடித்தவனுக்கு அறிவு எங்கு இருக்கும்? ஆனால், தந்தைக்கொலை புரிந்த பாதகம் சும்மா இருக்குமா? நாளுக்குநாள் இவனுடைய மனச்சாட்சி இவனை வருத்திக்கொண்டே இருந்தது. ஒரு அரக்கனைப் போல எப்போதும் இப்பாதகம் இவனுடைய வாழ்க் கையை நரகத்துன்பம் ஆக்கிற்று. மலையை ஒரு அரணைக் கட்டினான். அம் மலைக்கோட்டைக்குள் பதுங்கிக்கொண் டான். ஆனால், பாதகம் விடுமா? மலைக்குகைக்குள் பதுங்கிக்கொண்டிருந்த இக் கெட்ட சிங்கத்தை ஒரு போர் வீரன் பழிவாங்க வந்தான். தன் தகப்பனுக்குப்பின் சரியான உரிமை, 'மொகலன்' என்ற மாற்றுந்தாய்வயிற்று மகனுடையது. அவன் தந்தையின் கொலையைப்பற்றிக் கேட்டவுடனே தென்னிந்தியாவிற்கு ஓடிப்போய்ப் படை திரட்டினான். பதினெட்டு ஆண்டுகள்வரை காத்திருந்து

ஒரு பெரும்படை திரட்டிக்கொண்டு வந்தான். சீய கிரியை முற்றுகையிட்டான். கொடியோனை தன் குகைக்கோட்டையிலிருந்து வெளியே வந்து போர் இட்டான். அப்போது நடந்த போர் அஞ்சத்தக்க முறையில் நடைபெற்றது. காசியபன் சேனை பின்னடையத் தொடங்கியது. அதனைக் கண்ட அக்கொடியோன் தன் கைவாளால் தன்னையே குத்திக்கொண்டு விழுந்தான். தந்தைக்கொலைப் பாவம் தற்கொலையால் முடிந்தது. இச்சரிதமும் புதுமையாக இல்லையா?

மலையரண்

சீயகிரி மலைக்கோட்டை ஏறுவது மிகவருத்தமானது. அதன் அழகுகளைக் காண்பதற்கு நெட்டுக்குத்தான பாறைகளின்மேல் ஏறவேண்டும். அதனை எளிதாக்குவதற்காக அதிகாரிகள் இருப்புக்கிராதிகளையும் கற்படிகளையும் கட்டியிருக்கிறார்கள். அப்படிகள் சிங்கத்தின் பாத நகங்கள் வரைக் கட்டப்பட்டுள்ளன. அதற்குமேலும் சிகரம் வரைக்கும் ஏணிப்படிகளும் கிராதிகளும் அமைக்கப்பட்டிருக்கின்றன. அச்சிகரத்தில்தான் காசியபன் தன் அரணைக் கட்டிக்கொண்டு பதுங்கியிருந்தான். தன்னை எவரும் இந்த இடத்தில் பிடிக்கமுடியாது என்று எண்ணியிருந்தான். ஆனால், அவ்வெண்ணம் மாறுக முடிந்தது.

ஓவியங்கள்

இந்தக் குன்றில் மற்றொரு புறத்தில் அழகிய ஓவியங்கள் தீட்டப்பெற்றுள்ளன. அவைகள் உலகப்புகழ் பெற்றவைகள். அவைகளை நேரில் பார்க்க மேலே ஏறுவது கடினமானது. ஆனால், அவ்வோவியங்களின் படிகள் கொழும்புக் காட்சிச்சாலையில் வைக்கப்பட்டிருக்கின்றன. எளிதில் பார்த்து அறியலாம். இம்மலையில் தேனீக்கள் உண்டு. ஆகவே, செல்கிறவர்கள் விழிப்பாகச் செல்ல வேண்டும்.

காட்சியழகு

சீயகிரியை நேரில் காணுதவர்கள் அதனுடைய புகைப்படத்தையாவது பார்க்கக்கூடும். சீயகிரியின்

அருகில் ஒரு பெரிய ஏரி இருக்கிறது. இந்த ஏரிக்கு எதிர்ப் புறத்திலிருந்து இந்த மலையைப் பார்த்தால் மிக அழ காகத் தெரிவதோடு, அதன் நிழலும் தெளிந்த நீர்ப்பரப் பில் மிக அழகாகத் தெரிகிறது. மலையின் அடியில் இருக் கும் மரஞ்செடி கொடிகளும் அதனுடைய அழகை மிகுதிப்படுத்துகின்றன. இதன் வடிவைக் கண்டு பெருமை யடைந்த இலங்கைக்குடிகள், இதனைத் தங்கள் கடிதத் தலைச்சீட்டிலும் அழகாகப் பதித்துள்ளார்கள். அந்தத் தலைச்சீட்டில் நீலநிறக் கடிதத்தில் அச்சடித்திருப்பதனால் இதற்கு ஒருவித ஏற்றம் ஏற்படுகிறது.

புகழ் யாருக்கு?

காசியபன் எத்தனைக் கொடியவன்? இருந்தாலும் அவன் கொடிய செயல்களை மக்கள் மறந்துவிட்டார்கள். அவனுக்குக் கிடைத்த தண்டனையே அவன் பாவத்திற்கு மன்னிப்பு ஆகிவிட்டதுபோலும். மக்கள் இந்தக் காலத் தில் அவன் செய்த புதுமையான சிற்பவேலைகளையும் ஓவியத்தையும் மெச்சுகிறார்கள். இனியும் எக்காலத்திலும் மெச்சிக்கொண்டே இருப்பார்கள். ஓவியங்களைக் குறித் துப் படிகள் எடுத்து அடிக்கடி மாசிகைகளிலும் சித்திர நூல்களிலும் பதிக்கிறார்கள். அவைகளை மத்திய இந்தி யாவிலுள்ள அழகிய ஓவியங்களோடு ஒத்திட்டுப் பாராட்டுகிறார்கள். பண்டைக்காலத்துச் சித்திரக்கலை களில் சீயகிரிச்சித்திரங்களும் ஒரு பகுதியின என்ற பெருமை எக்காலத்திலும் மாறாது. இலங்கையின் தற்கால அரசியலார்களோ சீயகிரிக்குப் பெருமைகாட்டவேண்டி, அதன் படத்தைத் தங்கள் அஞ்சல் தலையில் அச்சடித் துள்ளார்கள். அஞ்சல் தலைகளில் மேன்மையான உருவங் களை அச்சடிப்பதே எந்த நாட்டிலும் ஏற்பட்டுள்ள வழக் கம் அன்றோ!

தம்பனை

சீயகிரிக்குத் தென்மேற்கில் 10கல் தொலைவில் 'தம்பனை' என்ற ஓர் ஊர் இருக்கிறது. இங்கே பல வண்டிப்பாதை கள் சேர்கின்றன. இதனைச் சுற்றிக் குறுகிய புதர்க்காடுகள்

நிறைந்திருக்கின்றன. அவைகளில் பெரும்பகுதிகளை வெட்டி, நன்செய்களாக்கி, நெல், வாழை, தேயிலை முதலிய பயிர்களை விளைவிக்கத் தொடங்கியுள்ளார்கள். நாங்கள் ஒருமுறை திருக்கோணமலையிலிருந்து கண்டிக்கு விசை வண்டி ஒன்றை அமர்த்திக்கொண்டு செல்லுகையில், இந்த ஊரின் வழியே சென்றோம். இந்தப் பாதை மிக நேர்த்தியாகச் செப்பனிடப்பட்டிருந்தது. வழியில் ஆறு கற்களுக்கு ஒருமுறை சில வேலைக்காரர்களின் வீடுகளைக் கண்டோம். ஆட்களுக்கு ஆறு வீடுகளும், கண்காணிக்கு ஒருவீடுமாகக் கட்டப்பட்டிருந்தன. இவ்வேலைக்காரர்கள் அந்த ஆறு கல் பாதையையும் எப்போதும் பழுதுபார்க்க வேண்டியவர்கள். அதனால்தான் பாதை முழுதும் மிக நேர்த்தியாக இருந்தது. அந்தப் பெரும்வழி 100 கல் தொலைவிருந்தது. பெரும்பான்மையான பகுதி பெரும் காடுகளால் சூழப்பட்டிருந்தது. மரங்கள் வானத்தை அளாவியிருந்தன. பல காட்டுவிலங்குகள் காணப்படும் என்று சொன்னார்கள். ஆனால், நாங்கள் காணவில்லை. சில இடங்களில் யானைகளின் எச்சம்தான் கண்டோம்; யானைகள் காணப்படவில்லை. விசைவண்டியின் ஒலியைக் கேட்டு அவைகள் அகன்றுவிட்டனபோலும். நாங்கள் புறப்பட்டதற்கு முன்னையநாள் இரவு நன்றாக மழை பெய்திருந்தது. பாதையில் ஈரம் சிறிது இருந்தது.

இருபக்கங்களிலும் வெள்ளம் ஓடியிருந்த சின்னங்களைக் கண்டோம். காலைநேரத்தில் அப்படி நனைந்த நிலத்தில் விரைவாகச் சென்றபோது, தென்றல்காற்று வீச, இளங்கதிர் அடிக்க, உடலுக்கு இன்பமாக இருந்தது. ஒவ்வோரிடங்களில் ஈரநிலத்தில் ஆயிரக்கணக்கான தட்டாரப் பூச்சிகள் உட்கார்ந்துகொண்டு இளஞ்சூரியனுடைய கதிர்களை நுகர்ந்துகொண்டிருந்தன. இவைகளுடைய இன்பமிகுதியை வண்டியோட்டி அறிந்தானோ! அவன்பாட்டிற்கு மிக விரைவாக ஓட்டினான். தட்டாரப்பூச்சிகள் தங்கள் இன்பநுகர்ச்சியிலிருந்து கலக்கப்பட்டன. உயிருக்கு அஞ்சி மேலே எழும்பின. ஆயிரக்கணக்கான பூச்சிகள் ஒருங்கே மேலே எழும்பினால், அந்தக் காட்சியின் அழ

கைப்பற்றிக் கூறவும் வேண்டுமா? இப்படி உயிர்த் தொகுதிகள் எழுந்து பறந்து கூத்தாடின காட்சியைப் பின் ஒருநாள் எண்ணினபோது, என் நெஞ்சில் எழுந்த கருத்துக்களை ஒரு பாவில் அமைத்துப் பாடியிருக்கிறேன்.* இவ்வகையாக அந்நாள் காலையில் புறப்பட்ட நாங்கள், நடுப்பகலில் ஹெபரானையில் போய்ச்சேர்ந்தோம். அங்கே இருந்த யாத்திரிகர்கள் விடுதியில் தங்கி உண்டி அருந்தினோம். சிறிதுநேரம் ஓய்வும் எடுத்துக்கொண்டோம்.

தொழிலாளியின் துயரங்கள்

விடுதியிலிருந்து வெளியே வந்தேன். பாதை ஓரத்திலே ஒரு ஏழைக்கூலி உட்கார்ந்திருந்தான். முகத்தைப் பார்க்கவே, தென்னிந்தியாவிலிருந்து வந்து இங்கே வேலை செய்யும் கூலியாள் என்று அறிந்தேன். அவனைக் கண்டு அவன் ஊர், குலம், தொழில் முதலியவைகளைப் பற்றி விசாரித்தேன். அவனுடைய பரிதாபநிலையைக் கண்டு நெஞ்சு கலங்கினேன். அவன் ஒரு ஒதுக்கப்பட்ட சாதியான். சக்கிலியன் என்று சொல்லும் குலத்தினன். திருச்சிச்சில்லாவைச் சேர்ந்தவன். ஊரில் பஞ்சம் ஏற்பட்டதனால் உணவிற்கு தானியம் கிடைக்கவில்லை; வேலையும் கிடைக்கவில்லை. கண்காணிகள் வந்து சிறிது தொகை கொடுத்துக் கைநாட்டுப் பெற்றுக்கொண்டார்கள். மறு

---

*திருக்கோண மலைவிட்டுச் செழுங்கண்டி ஏகையிலே,
திசைநெடுக மழையீரம் திகழ்ந்திருந்த வழியதிலே,
மருக்கோலச் சிறுமலர்கள் வனமாதர் வகுத்திடவே,
மருங் கெல்லாம் வடிவமைந்து மகிழ்வூட்டும் தன்மையிலே,
தெருக்கோலம் கொண்டதெனத் திகழ்உருவில் தட்டாரத்
தேம்பூச்சி தொகுதிகளாய்த் தெருவினிலே வீற்றிருக்க,
அருக்கோனின் ஒளியுறவே அணுகுசகட் டொலி படர
அரும்புமலர் புகைந்ததென அரவமுடன் பறந்தனவால்.

—"உயிர் இனத்து ஓட்டம்"
18—5—'33.

(அருக்கோன்—கதிரவன்; அணுகு சகடம்—நெருங்கும் விசை வண்டி)

நாள் ஆடுமாடுகளைப்போல வண்டியில் அடைத்துக் குடும்பத்தோடு ஏற்றிச்சென்றார்கள். கப்பல் ஏறி இவ்விலங்கை வருவதற்குள் குழந்தைகளுக்குக் காய்ச்சல் வந்துவிட்டது. தேயிலைத்தோட்டம், இரப்பர்த்தோட்டம் முதலியவைகளில் வேலைசெய்தார்கள். ஒன்றிரண்டு குழந்தை இறந்து போயின. பட்ட கடன் தீரவில்லை. இங்கேயே பத்து ஆண்டு வேலைசெய்தும் ஒருகாசும் மீதியில்லை. மனைவியும் இறந்துவிட்டாள். சொல்லமுடியாத துன்பம். வெறி பிடித்தவன்போலத் தோட்டத்தை விட்டு வெளியே ஓடி வந்துவிட்டான். எங்கே திரும்பிக் கைதுசெய்துவிடுவார்களோ என்ற அச்சம் ஒருபுறம். கூழ் இல்லாமல் பசி வருத்தம் மறுபுறம். இந்த நிலைமையில் இந்த விடுதிக்கு வெளியே ஏதாவது கிடைக்குமோ என்று எதிர்பார்த்திருந்தான். அக்காலத்தில் ஆளுக்கு நாட்கூலி ஐந்து அணாவாம். 'இந்தியாவில் மிகக் கூலி கிடைக்கும்' என்றேன். 'ஏமாறிவந்தேன்; திரும்பிப் போகவேண்டும்' என்றான். இந்த வருத்தமான கதைகேட்டு ஒரு வெள்ளி கொடுத்தேன். நன்றிகூறிவிட்டுச் சென்றான். இப்படிப்பட்ட கூலிகள் இந்த நாட்டில் எத்தனைப்பேரோ என்று எண்ணி ஏங்கினின்றேன்.

குகை

தம்பளையில் சமநிலத்திற்குமேலே பெரிய பாறைகளின் தொகுதி ஓங்கி வளர்ந்துநிற்கிறது. அக்குன்றுகளின் உச்சியிலே ஒரு இயற்கைக்குகை இருக்கின்றது. இவ்வியற்கைக்குகை ஒருகாலத்தில் தோல்வியடைந்த சிங்களமன்னனுக்குப் புகலிடமாக அமைந்திருந்தது. 103 கி.மு.-வில் 'வலகம்பன்' என்ற மன்னன் அநுராதபுரத்தில் ஆட்சிபுரிந்துவந்தான். அப்போது தென்னிந்தியாவிலிருந்து தமிழர்படை இலங்கையின்மீது படையெடுத்து, வலகம்பனைத் தலைநகரிலிருந்து துரத்திவிட்டது. வலகம்பனை இருக்க இடமின்றி, காடுகளின் வழியாக ஓடி, தம்பளைக்குன்றின்மீது இருந்த இந்த இயற்கைக்குகையில் ஒளிந்துகொண்டான். வலகம்பனை தோல்வியுற்றபோதி

லும் அஞ்சாநெஞ்சம் படைத்தவன்; துணிவு குன்றாத வன். தன்மீது நம்பிக்கைகொண்ட மக்களைச் சேர்த்துக் கொண்டு அவர்கள் மூலமாகச் சிறு துசிறு தாகப் படைகளைத் திரட்டினன். அவர்களைப் பயிற்றிப் பக்குவப்படுத்தி அநு ராதபுரத்தின்மீது படையெடுத்துச் சென்றான். பெரிய போர் நடந்தது. தமிழர் படை தோற்கடிக்கப்பட்டது. சிங்களமன்னன் மீண்டும் அரசாட்சி பெற்றான். தமிழர் களை நாட்டிலிருந்து துரத்தினவுடனே, தனக்குக் கெட்ட காலத்தில் அடைக்கலம் தந்த அந்தக் குகையை ஒரு தூய்மையான பௌத்த அறநிலையம் ஆக்க எண்ணி அதற்கு ஆகவேண்டிய செலவும் ஆளும் திரட்டி அனுப்பினன். அவன் செய்த திருப்பணி மிகவும் புகழ்பெற்றது. இந் நாளிலும் அவற்றின் பெருமைகளைப் போய்க் காணலாம். இலங்கையில் பார்க்கவேண்டிய இடங்களில் இதுவும் ஒன்று.

மலையின் அடிவாரத்திலிருந்து உச்சிவரைக்கும் மலைச் சரிவு ஓரமாகவே படிகள் செதுக்கப்பட்டிருக்கின்றன. அப் படிகள்மேலே எளிதாக ஏறி உச்சியை அடையலாம். படிகளின் உச்சியில் ஏறிநின்றால், சொல்லமுடியாத சிறப்பு களைக் கொண்ட காட்சிகள் நம் கண்ணெதிரே தோன்றும். வடகிழக்கே நெடுந்தொலைவில் சீயகிரி காடுகளின் இடை யிலே எழும்பிநிற்கக் காணுவோம். இனி, தெற்கே திரும்பினால் அத்திசையில் எல்லையற்ற நெல்வயல்கள் பரந்துகிடக்கக் காண்போம். அவைகளுக்கு அப்பால் மாதுளை தோன்றும். நிலம் போகப்போக உயர்ந்து கொண்டே செல்லும். அவைகளுக்குப் பின்னால் கண்டி மலை நீலநிறமாகப் படுத்திருக்கக் காண்போம்.

குகை ஓவியம்

இக்காட்சிகளைக் கண்டுகொண்டே மேலே சென்றால், வெள்ளையடித்த மண்டபங்களைக் காணுகிறோம். அவை களுக்குள் தழைந்துசென்றால் குடைமண்டபங்கள் தோன் றும். இக்குடைமண்டபங்கள் பல்லவர் குகைகளைப் போன்று நெடிய பாறையில் உளியால் செதுக்கியவைகள்.

அக்கல்மண்டபங்களுக்குள்ளே அழகான சிற்ப உருவங்கள் இருக்கின்றன. சுற்றிலும் பல நிறங்களால் தீட்டப்பெற்ற ஓவியங்கள் தெரிகின்றன. புத்தருடைய உருவங்கள் வரலாற்றின்படி பல வேறுபாடுகளுடன் ஆக்கப்பட்டிருக்கின்றன. அவர் படுத்திருக்கும் நிலையில் உள்ள ஒரு உருவம் ஏறக்குறைய 50 அடி நீளம் இருக்கும். புத்தர் உருவச் சிலைகளேயன்றி, பல இந்துசமயத் தெய்வங்களின் உருவங்களும் அக்கோயில்களில் உள்ளன. துட்டகெமுனு, ஏலேலன் இவர்களுக்குள் நடந்த போர்ச்செய்திகளும் பல நிறங்களைக்கொண்டு இங்கே சித்திரித்திருக்கிறார்கள். மேலும், வலகம்பன் முதலிய பல சிங்கள அரசர்களுடைய உருவங்களும் இங்கே இருக்கின்றன.

அலுவிகாரம்

இத்துணை அழகுவாய்ந்த தம்பலையில் மறைந்து வாழ்ந்த வலகம்பன் என்ற சிங்கள அரசன், சில காலம் மற்றொரு மலைக்குகையிலும் ஒளிந்திருந்தான் என்று வரலாறு கூறும். அந்தக் குகை தம்பலைக்குத் தெற்கே மூப்பதுகல் தொலைவிலுள்ள மற்றொரு மலையில் உள்ளது. இந்த இடமும் மிகவும் செழிப்பான மலை. இதிலும் இயற்கைக் குகைகள் உண்டு. இக்குகைகளும் பிற்காலத்தில் விகாரங்கள் ஆக்கப்பட்டு, மிகவும் தூய இடங்களாகப் போற்றப்பட்டுவருகின்றன. இந்த இடத்து விகாரத்துக்கு 'அலுவிகாரம்' என்பது பெயர். இதனைப்பற்றிக் கண்டியைப்பற்றிய பகுதியில் விரிவாக எழுதுவோம்.

விசிதபுரம்

தம்பலையிலிருந்து கேகிரவை என்ற இடத்திற்கு விசைவண்டியில் செல்லலாம். அதைச் சுற்றிப் பல அருமையான தலங்கள் உண்டு. கேகிரவைக்கு ஆறுகல் தொலைவில் நல்ல பாதையில், 'விசிதபுரம்' என்ற மிகப் பண்டைய குடியிருப்புத்தலம் உண்டு. கி. மு. 6 நூற்றாண்டுக்கு முன் விசயன் வடஇந்தியாவிலிருந்து இலங்கைக்கு வந்தபோது, அவனுடன் 'விசிதன்' என்ற ஒரு தலைவன் வந்தான். அவன் இந்த இடத்தில் காடு வெட்டி

ஊராக்கி மக்களைக் குடியேற்றினான். அதுமுதல் இவ்வூர் விசிதபுரம் என்று அவன் பெயராலே வழங்கத்தொடங்கியது. ஆகவே, இந்நகரம் கி. மு. 6 நூற்றாண்டுமுதல் இருக்கிறது என்று கூறலாம்.

பண்டைப் பெரும்போர்

இத்தலத்திலே ஒரு பெயர்பெற்ற சரித்திரநிகழ்ச்சி ஏற்பட்டது. கி. மு. 2-ம் நூற்றாண்டிலே தமிழ் போர் வீரன் ஏலேலசிங்கன் இலங்கையின்மேல் படையெடுத்து, சிங்கள அரசனைத் துரத்திவிட்டு, தானே அநுராதபுரத்தில் ஆண்டான் என்று அறிவோம். தெற்கே ஓடி மறைந்திருந்த அரசனுடைய மூத்தகுமாரன் துட்டகெமுனு என்ற இளவரசன் பெரும்படையைத் திரட்டித் தாம் இழந்த சிங்காசனத்தை மீட்கவந்தான். அப்போது அவன் தமிழர்களோடு செய்த மூதற்போர் இந்த விசித புரத்தில்தான் நடந்தது. விசிதபுரத்துக் கோட்டை வாயிலைத் தகர்த்து எறியும்படி துட்டகெமுனு தன்னுடைய கந்துலே என்ற யானையை ஏவினான். அந்த யானை பெரும் ஆற்றலோடு தலைவாயிலை மோதிற்று. அப்போது எதிரிகள் அதன்மேல் காய்ச்சி உருக்கின ஈயத்தை எறிந்தார்கள். கொழுந்துவிட்டெரியும் ஈயம் அதன் உடலை எரித்தது. அந்த வருத்தம் பொறுக்கமுடியாத யானை ஓடிப் போய் அருகே ஓடிக்கொண்டிருந்த ஆற்றிலே இறங்கி உடலை நனைக்கத் தொடங்கிற்று. அதனை அறிந்த துட்டகெமுனு, முன்னறிவுடன் அந்த யானையின் எரிபுண்களுக்குப் பலவகையான மருந்து ஏறிய சுனைநீர்களை ஊற்றிச் சிகிச்சைசெய்து, தன் கையாலேயே அதன்மேல் ஒரு குளிர்ந்த ஆடை போர்த்திவைத்தான். பிறகு, எருமைத் தோலை நன்றாக மெத்தையாக்கி, அதனை ஏழுமடக்கு மடக்கிப் போர்த்தினான். அதன்மேல் எண்ணெய் தோய்ந்த தோலை மூடி அதன் உடலைப் பாதுகாத்தான். இந்த முறையில் யானைக்கு வேண்டுவன செய்து, மீண்டும் கோட்டைவாயிலைத் தகர்க்கவந்தான். இந்தமுறை ஈயத்திற்கு யானை அஞ்சவே இல்லை. தன் தந்தங்களால்

கோட்டைவாயிலைத் துளைத்து உடைத்துக் காலால் மிதித்துத் தூள் ஆக்கியது. இந்த வகையில் தோரணவாயிலும் கொடியும் தூளாக்கப்பட்டன. பிறகு, தேர்களின் சக்கரங்களைப் பிடுங்கி எறிந்து, எதிர்க்கவந்த தமிழர்களையெல்லாம் கொலைபுரியத் தொடங்கிற்று. இந்த வகையில் விசிதபுரம் பிடிபட்டதாம். இந்தச் செய்திகள் மிகச் சுவையாக மகாவமிசத்தில் கூறப்பட்டுள்ளன. ஆராய்ச்சியாளர்கள் இந்தப் போர் பொலனறுவைக்கருகில் நடந்ததென்பர். எது வானாலும் சரி; விசிதபுரம் பண்டைக்காலத்தில் ஒரு சிறந்த ஊர் என்றும், அதில் பெரிய போர்கள் நிகழ்ந்தன என்றும் அறியவேண்டும்.

தூபி

இந்தப் பண்டைய ஊரில் ஒரு பெரிய தூபி கட்டப்பட்டுள்ளது. அது அரைகுறையாக இருப்பதை இன்றும் காணலாம். அது 90 அடி குறுக்களவும், 40, 50 அடி உயரமும் கொண்டுள்ளது. முற்றுப்பெறுததனாலோ, அல்லது இடிந்துபோனதனாலோ உச்சிப்பகுதி இப்போது இல்லை. செடி புதர் மூளைத்துப் பாழடைந்துகிடக்கிறது. அதன் அடிப்பகுதியில் அருமையான பௌத்தசமயச் சின்னங்கள் செதுக்கிவைக்கப்பட்டுள்ளன. இதில் புத்தருடைய மோவாய்க்கட்டை எலும்பு வைக்கப்பட்டுள்ளதாம். இது கட்டப்பட்டது கி. பி. 4-ம் நூற்றாண்டு என்பர்.


வாவிகள்

விசிதபுரத்திற்கு அருகே இரண்டு ஏரிகள் இருக்கின்றன. அவைகளின் பெயர்கள் காலவாவி, பாலவாவி என்பன. இவைகள் 1100 கோடி காலன் தண்ணீர் கொள்ளுமாம். இந்த ஏரியிலிருந்து அருகிலுள்ள நன்செய் நிலங்களுக்கு நீர் பாய்ச்சுகிறார்கள். மீதியான நீர் 56 கல் ஓடி அநுராதபுரத்து ஏரிகளை நிரப்புகிறது. இந்த நீர்க்கால்வாய் அரக்கர்கால்வாய் எனப் பெயர் பெறும் (யோதவல). நீர்ப்பாய்ச்சல்வசதிகள் இந்த ஏரிகளால்தான் உண்டாகின்றன. ஆகையால், இந்த ஏரிகள் நாட்டுச்செழிப்புக்கு மிக இன்றியமையாதன. ஆகவே,

இவைகளை ஆட்சிக்குள் கொண்டுபோகப் பல அரசர்கள் வாதாடினதுண்டு. அதுகண்டு இவ்விடத்தை அரண் செய்து வைத்திருந்தார்கள். இவைகளில் பாலாலவாவி பழைமையானது; ஆனல் சிறியது. பிறகு, காலவாவியைக் கட்டினனும் தாதுசேனன் (463-40) என்ற அரசன். சில சரித்தக்காரர்கள் இவ்வேரி முதல்நூற்றாண்டில் கட்டப்பட்டதென்றும், அதனைத் தாதுசேனன் பெருக்கினன் என்றும் கூறுகிறார்கள். தான் செய்த இவ்வேரித் திருப்பணியைக் கண்டு தாதுசேனனுக்குப் பெரும் மகிழ்ச்சி. ஆனல், இவன் மகன் காசியபன் வேறு எண்ணங் கொண்டிருந்தான். தன் தகப்பனிடம் பெரும்பொருள் உள்ளது என எண்ணி, அவனைச் சிறையில் அடைத்துவைத்தான். சீயகிரிக்கோட்டையில் காசியபன் இருக்கையில், தன் தகப்பனைக் கொடுமையாகத் தண்டித்து, அவன் ஒளித்து வைத்திருந்த செல்வத்தை வெளிப்படுத்தும்படி கேட்டான். காலவாவிக்குத் தன்னைக் கூட்டிக்கொண்டு போனல் காட்டுவதாகக் கூறினன். அப்படியே அவன் அவனை அழைத்துக்கொண்டு சென்றான். அங்கே காசியபன் சென்றதும், தான் அருமையாகப் பாடுபட்டுக் கட்டின அவ்வாவியில் குளித்து வெளிவந்து, அங்கிருந்து தலைநகருக்குக் கொண்டுசென்ற கால்வாயைக் காட்டி, 'இதுதான் என்னுடைய செல்வம்' என்று சொன்னன். இதன் முழுப்பொருள் அறியாத கொடிய மகன் தன் தகப்பனை உயிரோடு புதைத்துவிட்டான். இவ்வாறு அவன் சுவர் எழுப்பிப் புதைத்த இடம் காலவாவியிலே என்று கூறுவர். சிலர் சீயகிரியில் என்றும் கூறுவர். இந்தக் கொடிய செயலைச் செய்யக்கூடிய தனயனும் உலகில் இருப்பானே என்று ஐயப்படக்கூடும்.

வேலையின் அருமைப்பாடு

இந்த ஏரிகளைக் கட்டியதுபோன்ற பெரிய செயல்களைச் செய்யக்கூடிய பொறியியலாரும் அக்காலத்தில் இருந்தனரோ என்று, இவைகளைக் கண்ட தற்கால அறிஞர்களும் வியந்து பேசுகிறார்கள். காலவாவி என்ற



புத்தர்

[பக்கம்-கஅக]

ஏரி 6000 ஏக்கர் சதுர அளவு கொண்டது. இதன் சுற்றளவு 32 கல் நீளம். இதற்கு இடப்பட்ட அணை $5\frac{1}{2}$ கல் நீளம். சில விடங்களில் $58\frac{1}{2}$ அடி உயரம் உள்ளது. அவ் வணையின்மேல் நாட்டுவண்டிகளும், விசைவண்டிகளும் தாராளமாகச் செல்லக்கூடும். இந்த வாவியிலிருந்து திருப்பிவிட்டிருக்கும் 'யோதஏல' என்ற கால்வாய் 54 மைல்போய், அநுராதபுரத்திலுள்ள திசைவாவியில் நீர் நிரப்புகிறது. அந்தத் திசைவாவிதான் தலைநகருக்கு நீர் வசதியும், செழிப்பும், உணவும் தருகிறது. ஆகவே, கால வாவிதான் இந்த நாட்டிற்கு உயிர்ஊட்டுவது என்பதில் ஐயமில்லை. இக்கால்வாய் நெடுங்காலமாக உடைபெற் றிருந்தது. ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் ஆங்கிலர் அதைப் பழுதுபார்த்துத் தண்ணீர்பாய்ச்சலைப் புதுக்கி விட்டார்கள்.

அரிய புத்தசிலை

காலவாவியைப் புதுக்கி, யோதஏலையை வெட்டி, நீர்ப் பாய்ச்சலை ஏற்படுத்தியவுடனே, அரசன் வீண்பெருமை கொள்ளாமல், புத்தபகவானை அடிபணிந்து, இந்த மிகப் பெரிய வேலைகளையெல்லாம் அந்த அறவாழி மூர்த்திக்கே உடைபடுத்தினன். ஏனெனில், பொறுமையே உரு வான அந்த அறவோனால் அன்றோ தானும் தன் குடி களும் நலமும் அமைதியும் அடைகிறார்கள். அம்மூர்த்தியி னுடைய வாழ்த்துத் தன் செயல்களுக்கு வேண்டாமா? இந்த உயர்ந்த எண்ணத்துடன், யோதஏலையின் தலைமை மடைக்கு மேலே ஒன்றரைகல் தொலைவில், ஒளகன என்ற இடத்திலுள்ள பாறையில், ஓர் அழகான புத்த உருவத் தைச் செதுக்கிவைத்திருக்கிறான். அந்த உலகாசிரிய னுடைய சிலை, காலவாவியின் மிகப்பெரிய அணையை நோக் கிக்கொண்டு நிற்கிறது. அதனுடைய கூரிய அருட்பார்வை எதிரே தோன்றும். ஆயிரக்கணக்கான நன்செய்நிலங் களைக் கண்காணித்துவருகின்றது. அதனுடைய வலக் கை மேலே தூக்கி அஞ்சல் அளிக்கிறது. அங்கு வேலை செய்யும் குடிகளை நோக்கி, 'அஞ்சேல், உங்களுக்கு

உணவிற்கு யாதொரு குறைவும் இல்லை,' என்பதுபோல் தஞ்சமும் வரமும் அளித்துக்கொண்டு நிற்கிறது. இந்த எண்ணத்தை எந்தச் சிற்பி மனத்தில் கொண்டு இந்தச் சிறந்த சிலையை அமைத்தானோ, அவனுடைய நுண்ணறிவுக்கு எதுதான் இணை. இந்தக் காலத்தில் இந்த அருமையைப் போற்றுவார் இல்லையே!

அண்மைக்காலத்தில் இந் நோக்கத்தை அறியாத சில பௌத்த சமயிகள், தங்கள் ஆசிரியருடைய உருவச் சிலைக்கு ஒரு விதானம் வேண்டுமென்று கருதி, சீமை ஓடுகளால் ஒரு மூகடு கட்டியிருக்கிறார்கள். இம்மறைவு அந்த அருமையான உருவத்தை மறைப்பதன்றி, அந்த இடத்திற்குச் சிறிதேனும் ஒவ்வாத சூழ்நிலையைத் தருகிறது. உருவத்தை அமைத்தவனுடைய அருமையான நோக்கம் சிதைவுபடுகிறது. அவனுடைய கவிதா நோக்கத்தைப் பிற்காலத்தார் அறிந்தார்களா? அறிந்திருந்தால் இப்படிப்பட்ட அழகற்ற விதானம் அமைப்பார்களா?

சிலையின் சிறப்பு

இந்தச் சிறந்த உருவச்சிலையைப் பார்ப்பதற்குப் பலமக்கள் செல்லுவதில்லை. சிறிது வருத்தப்பட்டாவது சென்று பார்ப்பதே சிறப்பு என்று அறியவேண்டும். காலவாவியின் அணைக்கட்டிலிருந்து யோதவலியின் கரை மீது சிறிது தொலை நடந்து போகவேண்டும். பிறகு ஒரு காட்டின் வழியாகச் சிறிதளவு நடந்தால், ஒரு பெரும் பாறை தெரிகிறது. அப்பாறையில் ஏறுவதற்குக் கற்படிகள் செதுக்கப்பட்டிருக்கின்றன. அவைகளின்மீது ஏறவேண்டும். அண்மையில் ஒரு பௌத்த மாது இந்தப் படிகளைத் தன் சொந்த செலவில் ஆக்கினளாம். அவளுடைய அரிய செயல் யாத்திரிகருக்கு நன்மை ஆயிற்று.

இப்பெரிய உருவச்சிலையை உண்டாக்கின சிற்பியினுடைய திறமையை என்ன என்று சொல்வது? அவனுடைய திறமை ஒன்றுமட்டுமன்று; அவனுடைய மிக உயர்ந்த அறிவு மட்டுமன்று; அவனுடைய பேரவாவின்

பொலிவும் அவ்வேலையில் மிளிர்கின்றது. பெரும்பாறையில் உருவத்தைச் செதுக்கினபோது, அதற்கு முழுத்தோற்றமும் கொடுப்பதற்காகப் பின்பகுதிகளையும் உருண்டைப்படுத்திச் சிறிதளவே பாறையில் ஒட்டிக்கொள்ளும்படியாக இயக்கியுள்ளான். இவ்வகை வேலைப்பாடு சிறிய உருவங்களிலே செய்வது எளிது. பேரூர்க் கனகசபையில் உள்ள அருமையான சிற்பங்கள் இப்படிப்பட்ட நோக்கத்துடன் செய்யப்பட்டபோதிலும், அவைகள் ஆறடி உயரமே செய்யப்பட்டுள்ளன. ஆனால், இந்த உருவச்சிலையோ 46 அடி 4 அங்குலம் உயரம். இதை ஒத்த தனிச்சிலைகளை மைசூர் சீமையில் சிரவண பெலகொளாவில் காணலாம். அல்லது தென்கன்னடம் கார்க்கல்லில் காணலாம். அவைகள் வெண்கல்லாலும் கருங்கல்லாலும் ஆக்கப்பெற்ற கும்மடேசுரனுடைய உருவச்சிலைகள். இந்தச் சிலையோ அவ்வாறு தனிச்சிலையாக ஆக்கப்பெறாமல், பெரும்பாறையில் ஒட்டினது போல் செதுக்கப்பெற்றுள்ளது.

உயரம், பீடம் முதல் சிரம் வரையில் 46-4. இருந்தாலும், அதன் அமைப்புகள் இயற்கைக்கு ஒத்தே இருக்கின்றன. தலைமட்டும் $6\frac{1}{2}$ அடி உயரம், வலது முன்கை 11-அடி 8 அங்குலம், பாதம் ஆறடி பத்தங்குலம். முகமோ அமைதி நிறைந்து உள்ளது. இருந்தாலும் உபதேசிக்கிற முறையில் இருக்கிறது. அதைப் பார்த்தால் கல்லும் பேசுமோ என்று கூறவேண்டும். உற்றுப்பார்ப்பவர்களுக்கு அவ்வுருவம் சாந்தத்தை உபதேசிக்கிறது என்றே கூறவேண்டும். அவ்வுரு அணிந்திருக்கும் ஆடையைப் பார்த்தால், உண்மையான ஆடைபோல் மடிப்புகள் தொங்குவதைக் காணலாம். இத்துணைச் சிறந்த ஒரு வேலைப்பாட்டைத் தாதுசேனன் காலத்தில் செய்திருக்கமுடியுமோ என்று சிலர் ஐயுறுகிறார்கள். அத்துணைக்கல்வியும் அறிவும் அக்காலத்தில் இருந்திருக்குமோ என்பர். 56 கல் செல்லக்கூடிய கால்வாயைக் கட்ட $5\frac{1}{2}$ கல் நீளமுள்ள ஒரு அணை கட்டும் திறமையிருந்த காலத்தில், $46\frac{1}{3}$ அடி உயரமுள்ள சிலை செய்ய ஆற்றல் உள்ளவர்கள் இல்லாமல் போய்விடுவார்களா என்பதே கேள்வி.

நீர்வளம்

இலங்கை மழைவளம் பொருந்திய நாடு என்றால், அதற்கு ஏற்றபடி நிலவளமும் உண்டு. அதனாலே நாடெங்கும் செழிப்பான சோலைகளைக் காண்கிறோம். தீவின் நடுவில் மலைகள் அடர்ந்திருப்பதனால் மழைநீர் ஆறுகளாக ஓடுவது இயல்பு. ஆறுகள் மனித நடமாட்டமில்லாத காலத்தில் கடலில்போய் விழுந்து பயனில்லாமல் போகும். மனிதன் வந்ததும் அப்படி வீணாகப் போகும் நீரை அணைகட்டித் தேக்கிப் பயிர்செய்யத் தொடங்குகிறான். அறிவுள்ள மக்கள் வந்ததும் பெரிய வேலைகள் செய்து ஏரிகளைக் கட்டி உணவுக்கு வேண்டிய வசதிகளைச் செய்துகொள்ளுவார்கள்.

மின்னேரிவாவி

இவ்விதம் பயன்படத்தக்க வேலைகளைச் செய்வதிலே இலங்கை மன்னர்கள் முன்னேக்கம் கொண்டவர்கள். அவர்கள் பண்டைக்காலமுதல் செய்துவந்த அழகிய கட்டடங்கள், நீர்நிலைகள் முதலியவற்றைப்பற்றிக் கூறினோம். மற்றொரு பெரிய ஏரி ஒன்று நடுநாட்டில் உள்ளது. அது கலஓயா சந்தியிலிருந்து மட்டக்களப்புக்குப் போகும் கிளைப்பாதையில் இருக்கிறது. 'மின்னேரி' என்பது ஒரு பண்டைத் தலம். இந்த இடத்தில் மிகவும் பெயர் போன ஒரு பெரிய ஏரி இருக்கிறது. இலங்கைப் பண்டைய மன்னர்களின் நுண்ணறிவும், குடிகளுக்கு நலம் செய்யும் தன்மையும் அங்கே காண்கிறோம். அவர்களுக்கு ஒத்தாற்போல அவர்களுடைய சிற்பிகளும் மதிநுட்பம் அமைந்தவர்கள். சுருங்கிய செலவில் எக்காலத்திலும் நிற்கும்படியாகவும், மிகப் பெரிதாகவும் ஒரு ஏரி காணவேண்டும் என்றால், மின்னேரியாவைப் போன்ற வேறு காண்பது அரிது. 30 மைல் சுற்றளவு கொண்டதும், 2000 கோடி காலன் நீர் கொண்டதுமான ஏரி ஏற்படுத்துவது என்றால் எத்துணை அரிய பெரிய செய்கை.

சுற்றிலும் சிறுசிறு மலைகள்; நடுவில் பாத்திரம் போன்ற தாழ்ந்த இடம். ஒரே இடத்தில் பள்ளத்தாக்கு. அது 6200 அடிதான் குறுக்கு. இந்தக் குறுக்கை மூடி

விட்டால் பெரிய ஏரி ஆகிவிடுகிறது. வேறு எந்த இடத்தில் இந்த நன்மை கிடைக்கும்? இதைப் பார்த்தார்கள் அரசர் பணியாளர்கள். உடனே அறிவித்தார்கள். ஆட்கள் பணிசெய்தார்கள். பெரும்பாறைகளை உடைத்துத் தள்ளி, அருமையாக அந்தப் பள்ளத்தை நிரப்பினர்கள். அப்படிக் கட்டப்பட்ட அணை சிறியதன்று. 40, 50 அடி உயரமானது. சந்து பொந்து இல்லாமல் கட்டினர்கள். அக்காலத்தில் இயந்திரங்கள், காரை அரைக்கும் கருவி, சிமெண்ட் இவைகள் இல்லையே; எப்படிக் கட்டினர்கள்? எனக் கேட்கவேண்டாம். அப்போது கட்டின கட்டடம் சென்ற பதினறு நூற்றாண்டுகளாக உடையாமல் நிற்கிறதென்றால், எத்தனை வலுவாக அது கட்டப்பட்டிருக்க வேண்டும்? கட்டினவர்களுடைய மதிநுட்பத்திற்கு அளவுண்டோ? பல்லாயிரகோடி காலன் நீரையும் அந்த அணை தாங்கிக்கொண்டிருக்கிறதென்றால், அதன் வலுவைக் கூறவும் வேண்டுமா? இதற்கு இரண்டு மதகுகள் இருக்கின்றன. அவைகளின் வழியே அளவு மிகுந்த தண்ணீர் பிதுங்கிக்கொண்டு ஓடிக் காதங்கள் காதங்களாக நெற்பயிர் விளைவிக்கிறது.

இவ்வாறு குடிகளுடைய பாதுகாப்பைக் கருதி அரசன் கட்டினன். ஆனால் இங்கு அழகு இல்லையோ எனின், இயற்கை அன்னை இந்தச் செயற்கை இடத்தில் தன் முழுக் கலைகளோடு அரசாட்சி செய்கிறாள் என்றால், அது மிகையாகாது. நீர்ப்பரப்போ அவரியைக் கலந்தாற்போல நல்ல இந்திரநீல நிறத்தில் ஒளிவீசும். அதில் அடிக்கும் சின்னஞ் சிறு திவலைகள் மணற்கரையில் மோதும்போது வெள்ளை நுரைகளை எழுப்பும். நீலச்சேலைக்கு வெண் பூப்பட்டுக் கரை இட்டாற்போல அக்காட்சி தோன்றும். இப்பரவிய ஏரியில் நடுநடுவில் பச்சை நிறத்தோடு சிறுசிறு தீவுகள் காணப்படுகின்றன. அவைகளில் உள்ள அழகிய சோலைகள் தென்றற்காற்றை வீசுகின்றன.

நன்னீர்ப் பறவைகள் வரிசைவரிசையாக அதன் பரப்பில் மிதந்து செல்லுகின்றன. இவைகளும் இராணுவப்

பயிற்சி பெற்றிருக்கின்றனவா என்று நினைக்கவேண்டும். இவைகள் நீந்தும் ஒழுங்குதான் என்ன ஒழுங்கு! இப் படிப்பை யாரோ இச்சிறகினங்களுக்குக் கற்றுக்கொடுத் தது! இவைகள் அடிக்கடி நீர்த்திவலைகளில் மூழ்கி எழு கின்றன. மகளிர் நீராட்டம்போல் இவை மகிழ்கின்ற னவா? இல்லை இல்லை! தலை முழுகிப் பின் மேலே எடுக்கும் போது, அவைகளின் வாயில் மீன்கள் தெரிகின்றன. ஆமாம்! இவைகள் மீன்வேட்டை ஆடுகின்றன. இத்துணை ஆயிரக்கணக்கான நீர்ப்பறவைகளுக்கும் இந்தப் பெரிய ஏரி ஒரு உணவுச்சாலையாக ஏற்பட்டிருக்கிறது; அல் லது வேட்டையாடும் சோலை என்று சொல்லலாமோ! நடு நடுவிலே தென்னமட்டைகள் போல் மிதக்கின்றவை என்ன? அம்மட்டைகளுக்கு உயிர் உண்டா? வால் ஆடுகிறது! மூக்கு நீரின்மேல் கிளம்பி மூச்சு எழும்பு கிறது! இவைகள் பெரிய முதலைகள்! யானையும் அஞ் சும் இவைகள் இங்கு ஏனோ வந்து மிதக்கின்றன என்று கேட்கவேண்டும். அந்த அழகுகளை யெல்லாம் கொண்ட இந்தப் பெரிய ஏரிக்கு 'மின்னேரி' என்று பெயர் வாய்ந் தது சரிதான். மின்னல் கொடியின் அழகு இந்த நீலநிற ஆகாயமான நீர்நிலையில் மிளிர்கிறதன்றோ?

சமயப்பரப்பு

இலங்கையிலே அழகிய வேலைப்பாடுகளைக் கண்டால், அவைகள் குடிகளின் பயனுக்காகவும் அழகுக்காகவும் மட் டும் அமைக்கப்பெற்றன என நினைக்கக்கூடாது. தமிழ்நாட் டைப்போல இங்கும் சமயத்தின் சார்பிலேதான் அவை கள் ஆக்கப்பட்டன என அறிதல்வேண்டும். இவ்வேரியை நிறுவினவன் மகாசேனன் (277-304 கி.பி.) அவனுடைய கோயில் இரண்டா மதகுக் கருகில் அணைக்கட்டின்மேல் இருக்கிறது. அதன் பெயர் 'வேதசின்ன மாளிகை' என் பது. இதில் மகாசேனன், அவனுடைய அரசிகள், அமைச் சர்கள் இவர்களுடைய உருவங்கள் காணப்படுகின்றன. இவ்வரசனை இந்நாட்டு மக்கள் தூய மகனை நினைக்கின்றனர். இந்தக் காலத்திலும் வழக்குகள் ஏற்பட்டால் கட்சிக்காரர்

கள் இங்கே வழக்கைத் தீர்த்துக்கொள்ளுவார்கள். கட்சிக்காரர்கள் இந்த ஏரியில் முழுகிவிட்டுத் தூய்மையான ஆடைகளைக் கட்டிக்கொண்டு கோயிலின் வாயிலுக்கு ஏகுவார்கள். குற்றம் செய்தவர்களும் பொய் பேசினவர்களும் கோயிலுக்கு அருகே செல்லச்செல்லக் கால் ஒய்ந்து போய் விழுந்துவிடுவதுண்டு. எப்படிப்பட்ட வலிய நெஞ்சு படைத்தவர்களும் இறுதியில் தம் தப்புக்களை ஒத்துக்கொள்ளுவார்களாம். அத்துணைப் பயபத்தி இந்தக் கோயிலின்மேல் மக்களுக்கு உண்டு. திருச்செங்கோடு பதினெட்டாம்படிக் கறுப்புக்கும், அழகர்கோயில் கோபுரக்கறுப்புக்கும் எவ்வளவு அச்சம் நம் நாட்டு மக்களுக்கு உண்டோ, அதிலும் மிகுதியாக மின்னேரியில் வேத சின்ன மாளிகையில் சிங்களவர்க்கு உண்டு.

வேறொரு கோயில்

மின்னேரியில் இதைப்போல மற்றொரு சத்திய தேவதை கோயில் உண்டு. அதையும் மகாசேனனே கட்டினனும். அதன் பெயர் 'மின்னேரி தேவலம்' என்பது. இது பெரும்வழிக்குக் கால் கல் தொலைவில் ஒரு நன்செய் நிலத்தில் இருக்கிறது. மூலத்தானம் 15-க்கும் 8-க்கும் தான் இருக்கும். சுற்றிலுமுள்ள வளவு 25-க்கும் 15-க்கும் தான் உள்ளது. ஆகவே கோயில் மிகச் சிறியது. ஒரே வாசல்; சுற்று மதில் மண்சுவர். அதற்குள்ளே பல தூய சின்னங்கள் இருக்கின்றன. அவைகளில் ஒன்று மகாசேனனுடைய உருவம். இது பித்தளையால் செய்யப்பட்டது. அண்மைக்காலவேலை. மற்றொன்று 2-ம் இராசசிம்மன் கொடுத்த ஒரு வாள். இதில் இந்துக்கள் வழிபடுகிறார்கள்.

அழிந்த நகரம்

இந்த அழகிய ஏரியைச் சுற்றி முன் காலத்தில் ஒரு பெரிய நகரம் இருந்ததாம். ஆனால் அஃது அழிந்து விட்டது. ஒருவேளை கிளறிப்பார்த்தால் பல வியப்பான சரித்திரச் சின்னங்கள் தோன்றலாம். நம் கீழ்நாடுகளில் இந்தக் கல்விப்பணி மிகவும் குறைவாக இருக்கிறதன்றே!

இணைப்பு

முத்தின் நடுநாயகமான மேட்டின் மற்றொரு பாங்கரில் வேறொரு செயற்கையழகு போற்றத்தகும். அது கண்கவரும் காட்சி தருகிறது. அதுவே 'பொலனறுவை' என்ற பண்டைத் தலைநகரின் சிறப்பாகும்.

---

12. கண்கவரும் கண்ணியக் காட்சி

பொலனறுவைப் பழம்பதி

இலங்கையிலே பண்டைய நாகரிகத்தை முற்றும் அறியவேண்டுமாயின், பொலனறுவை சென்று அங்குள்ள சின்னங்களைப் பார்த்தால்தான் முடியும். அவ்வூர் இருப்புப்பாதையில் ஒரு நிலையமாக இருக்கிறது. ஆகவே, அங்குச் செல்வது எளிது. கொழும்பிலிருந்து வடக்கே செல்லும் பாதையில் மாஹோ என்ற சந்தியில் இறங்கி, அங்கு வண்டி மாற்றி, திருக்கோணமலைக் கிளையில் கல்ஓயா என்ற சந்தியில் மறுபடியும் இறங்கி, அங்கிருந்து மட்டக்களப்பு வழியில் சென்றால், இந்தப் பண்டைய நிலையத்தை அடையலாம்.

சிங்களத்தின் தலைநகர்

பொலனறுவை நடுக்காலத்தில்தான் இலங்கையின் தலைநகராக இருந்தது. அநுராதபுரத்தில் முன்னே சிங்கள அரசர்கள் பல நூற்றாண்டுகளாக ஆண்டுவந்தனர். சோழமன்னர்கள் அந்நகரின்மீது அடிக்கடி போர்புரிந்து கேடு விளைத்தார்கள். இராசராசன் காலத்தில் அவ்வூர் பிடிபட்டு, இலங்கை சோழர்களுடைய மாகாணம் ஆகிவிட்டது. இவ்வாறு தமிழர்களால் அடிக்கடித் துன்பம் வருகிறதென்று கண்ட இலங்கை அரசர்கள், தமிழர்களுக்கு எட்டாத்தொலைவில் இருந்தால் நல்லது என்று கருதி, பொலனறுவையில் தலைநகர் கட்டி அங்குச் சென்றார்கள். இவ்வாறு முதன்முதலில் பொலனறுவைக்குச் சென்ற அரசன், 741-ல் பட்டம் பெற்ற ஆறாம் அக்கிரபோதி என்பவன். அவனுக்குப் பிறகு சில அரசர்கள் மீண்டும் அனுராதபுரத்திற்கே வந்து

விட்டார்கள். மறுபடியும் துன்பம் பொறுக்கமுடிய வில்லை. 9-ம் அக்கிரபோதி 843-ல் பொலனறுவைக்கே சென்றுவிட்டான். பிறகு சுமார் 4 நூற்றுண்டுகள் வரை இவ்வூரே தலைநகராக இருந்தது. 4-ம் பராக்கிரமபாகு 1288 கி. பி. வரை இங்கேயே அரசாண்டான். அதற்குப் பிறகு குருணைகலை தலைநகர் ஆயிற்று. இந்த நான்கு நூற்றுண்டுகளில் பொலனறுவை மிகவும் புகழ்பெற்று விளங்கியது. இலங்கை மன்னருக்குள் மிகச் சிறந்த அரசனுல் அஃது அணி செய்யப்பட்டது. இன்றைக்கும் அங்கே பாழடைந்துகிடக்கும் அரண்கள், கோயில்கள் சித்திரங்கள் முதலியவைகளைக் கண்டால் எப்படிப்பட்டவர்களும் வியப்பு அடையாமல் இருக்கமாட்டார்கள்.

பொலனறுவை மிகச் செழிப்பான நாட்டுப்பகுதியின் இடையில் இருக்கிறது. நீர்வசதி மிகுதியாக உண்டு. சுற்றிலும் ஓடும் நதிகளிலிருந்து கால்வாய்களை வெட்டிப் பெரிய ஏரிகளை உண்டாக்கி, அவைகளைக்கொண்டு பாய்ச்சல் வசதிகளை ஏற்படுத்தியிருக்கிறார்கள். எங்குப் பார்த்தாலும் நன்செய்ப்பயிர்கள் மிகுதியாகப் பயிர்செய்யப்பட்டுள்ளன. ஆகவே, இந்த நாட்டுப்பகுதி மனித முயற்சியினுல் மிகவும் முன்னேற்றம் அடைந்த இடம். 5-ம் நூற்றுண்டில் உபதிசன் காலத்திலேயே தோபவாபி என்ற ஒரு பெரிய ஏரி கட்டப்பட்டது. பிறகு பல அரசர்கள் இந்நாட்டைச் செழிப்பாக்கினர்கள். மிகுந்த திருப்பணி செய்தவன் 1153-86-ல் ஆண்ட பராக்கிரமபாகு என்ற புகழ்பெற்ற அரசன். அவன்தான் இந்த இடத்தைத் தெய்வ உலகம் ஆக்கினவன்.

கி. பி. 1120-ல் இலங்கையரசன் விசயவாகு இறந்தான். உடனே அவன் தம்பி கயவாகு அரியாசனத்தைப் பிடுங்கிக்கொண்டான். விசயவாகுவின் மகன் விக்கிரமவாகு அப்போது தென்னிலங்கையில் இருந்தான். உடனே அவன் படையெடுத்துவந்து கயவாகுவைத் துரத்திவிட்டுப் பொலனறுவையில் 1121-ல் பட்டம் பெற்றான். விசயவாகுவிற்கு மித்தை என்ற சகோதரி இருந்தாள்.

அவள் ஒரு பாண்டிய இளவரசனை மணந்திருந்தாள். அவளுக்கு மூன்று மக்கள் பிறந்தார்கள். 1. மாளுபரணன், விசயவாகுவின் மகள் இரத்திஞவலியை மணந்தவன். 2. கீர்த்திஸ்ரீமேகன், இரத்திஞவலியின் உடன்பிறந்தாளை மணந்தவன். 3. ஸ்ரீவல்லபன் விசயவாகுவின் பேத்தியை மணந்தவன். விக்கிரபாகு அரசனைதும் மாளுபரணன் உருகுணைக்குத் தலைவனனன். விக்கிரமபாகு 1152-ல் இறந்தான். பிறகு அவன் மகன் 2-ம் கயவாகு பட்டத்திற்கு வந்தான். அவன் 1142-1164 வரை ஆண்டான். அவன் காலத்தில்தான் மாளுபரணன் மகன் பராக்கிரமபாகு அரசியல் விவகாரத்தில் தலையிடத் தொடங்கினன்.

பராக்கிரமபாகு தன் இளமையிலிருந்தே அப்பெயருக் கேற்றாற்போல வீரம் காட்டிவந்தான். மிகுந்த செயல் முறையோடும் ஊக்கத்தோடும் எந்தச் செயலையும் செய்ய வல்லவன். பேரவா பிடித்தவன். ஆனலும் மிக யுக்தியும் எச்சரிக்கையும் கொண்டவன். உடல்வலிமையும் துணிவும் இயற்கையாகவே உள்ளவன். இளவயதிலேயே இளவரசனுக்குரிய கல்வி, கலை முதலியவைகளைப் பயின்றன். இன்னிசை, நடனம், குதிரையேற்றம் வேட்டையாடல், வாட்போர், விற்போர், போர்க்கலை முதலியவைகளை நன்கு கற்றுச் சிறந்து விளங்கினன். அவனுக்கு விளையாடலிலும் நகைச்சுவையிலும் விருப்பம். இலக்கணம் கற்றுக் கவியின்பம் நுகருவான். சமயஞானமும் சடங்குகளும் அறிந்தவன். இந்தச் சிறந்த குணங்கள் அவனுக்கு நிரம்பி இருந்ததனல், அவனுடைய பேரவாவை நிறைவேற்றிக் கொள்ளும் சமயவாய்ப்பு இருந்தது. தான் இருந்த சிறு நாடு தன் பெருமைக்கு ஒரு சிறிதும் ஏற்றதன்று என்று அறிந்தான். தன் முன்னோர்களின் பண்டைநிலைமையை நினைந்து நினைந்து மனம் கசிவான். இலங்கை முழுதும் ஒரு குடைக்கீழ் கொண்டுவருவதே அவன் முழு எண்ணம். பிறநாட்டாரைத் துரத்தித் தன் நாடு முழுவதையும் உரிமை நாடு ஆக்கவேண்டும் என்பதே அவனுடைய சிறந்த அவா. அதை முற்றுவிக்கச் சிறுவயதிலிருந்தே முயன்றன.

பராக்கிரமபாகு

அக்காலத்தில் நாடு பிளவுபட்டிருந்தது. சிறுசிறு நாடுகளாகப் பிரிந்திருந்தது. ஒருவரோடொருவர் எப் போதும் பகைமைகொண்டிருந்த சிற்றரசர்கள் ஆண்டுவந் தார்கள். அவ்வரசுகளைப் போக்கி இலங்கை முழுவதையும் ஒரு குடைக்கீழ்க் கொண்டுவருவதற்கு மனஉறுதியுடன் செயன்முறை வலியிலும் வல்லவனே வேண்டும். அப்படிப் பட்ட குணவானே பராக்கிரமன். இளவயதிலேயே இராம னுடைய துணிவு, பாண்டவர்களுடைய வெற்றி, புத்தரு டைய தியாக உணர்ச்சி, மன உறுதி, சாணக்கியனுடைய தந்திரம் இவைகளை நன்கு உணர்ந்தவனுகையால், அவை களைத் தன் அரிய நோக்கத்திற்கு உதவியாக்கிக்கொண் டான். அரசகுடும்பத்தின் பெருந்தன்மையும், கல்வி தந்த அரிய உணர்ச்சியும், அவனிடம் ஒருங்கு சேர்ந்திருந்தன. அவைகளோடு துணிவும் வீரமும் போர்க்கலைஞானமும் சேர்ந்திருந்ததனுல் அவன் வெற்றிக்குத் தடை உண்டாகக் கூடுமோ?

குறை

ஆனல், இப் பெரும் குணங்களைக் கொண்ட இவ் விளவரசனிடம் ஒரு பெருங்குறை இருந்தது. வெற்றி அடைவதற்காக இவன் கையாண்ட முறைகள் அத்துணைச் சிறந்தனவல்ல. வெற்றி அடைந்த பிறகும் இரக்கத்தை இவன் காட்டவில்லை. இரக்கமும் தயையும் இவன் கொண் டிருந்தால், இவனைப்போல் ஒரு சிறந்த வீரன் உலகில் இல்லை எனலாம்.

துணிவு

இவனுடைய சிற்றப்பன் கயவாகுவோ துணிவுள்ளவன் அல்லன். அவன் தகப்பனை விக்கிரமபாகுவே அவனைப் பற்றித் தனக்கு வந்த சொத்தைப் பாதுகாக்கும் வல்லமை இல்லாதவன் என்று கூறியிருக்கிறன். ஆகவே, அவனை வைத்துக்கொண்டு தன் நோக்கங்களை முடிவுசெய்து கொள்ள பராக்கிரமன் இசையவில்லை. மற்றொரு சிற்

றப்பனை கீர்த்தி ஸ்ரீமேகனும் அரசாளத் தகுந்தவனல்லன் என்று அவனையும் நீக்க முயன்றான்.

செயல்கள்

முதலில் கீர்த்தி ஸ்ரீமேகனுடைய ஊர் ஒன்றுக்கு ஒரு படையுடன் சென்றான். அங்கே இருந்த சங்கன் என்ற தளகர்த்தன் பராக்கிரமன் வந்த நோக்கத்தை அறிந்து, கீர்த்தியிடம் செய்தி அனுப்பினன். அதை அறிந்த பராக்கிரமன் சங்கனைக் கொன்று கீர்த்தி அனுப்பிய படையை வென்றான். பிறகு கயவாகுவின் நாட்டிற்குள் தன் ஒற்றர்களைப் பாம்பாட்டிகளாகவும், தெருப்பாடகர்களாகவும், வியாபாரிகளாகவும், துறவிகளாகவும் அனுப்பித் தன் புகழைப் பரப்பும்படி செய்தான். எங்கும் பராக்கிரமன் புகழே நிரம்பியது.

இதற்குள் கீர்த்தி ஸ்ரீமேகன் இறக்க, பராக்கிரமன் அப்பட்டத்தைப் பெற்று அரசனானன். உடனே மற்றப் பகுதிகளைப் பிடிக்க முயற்சி செய்தான். போருக்கு வேண்டிய சாதனங்களைத் தயாரித்தான். நெற்களஞ்சியங்களைக் கட்டி நெல்லைக் குவிக்கத் தொடங்கினன். காடுகளை வெட்டி நன்செய்களாக்கி நிலங்களைப் பண்படுத்தினன். தூர்ந்துபோன ஏரிகளைப் பழுதுபார்த்து நீரை நிரப்பினன். புதுக் குளங்களை உண்டாக்கினன். நீர்க்கால்களை வெட்டி நிலங்களுக்கு நீர்ப்பாய்ச்சல் வசதிகளைத் தேடினன். இவைகளால் நாட்டு வளமை மிகுந்தது. குடிகள் செழித்து வாழ்ந்தனர். வரி வகைகள் மிகுந்தன. பண வருவாய் மிகுந்தது. அதன்பிறகு சேனைகளைத் திருத்த முயன்றான். சிங்களப் படைகளேயன்றித் தமிழர் வேடர் முதலியவர்களையும் படைகளில் சேர்த்து அவர்களுக்குத் தகுந்த பயிற்சி கொடுத்தான். அடிக்கடி ஒத்திகைகளை நடத்திப் படைகளைத் தேர்ச்சிசெய்தான். இவனுடைய உருகுணை என்ற நாடு அத்துணைச் செழிப்பான தன்று. அதில் போதுமான வருவாய் கிடைக்கவில்லை. ஆகவே, இரத்தினங்களை வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்து வருவாயைப் பெருக்கினன். மலைநாடு கயவாகு அரசில் சேர்ந்திருந்தது.

மெதுவாக அதன் தளகர்த்தனைத் தான் சேர்த்துக்கொண்டு அந் நாட்டை வசப்படுத்திக்கொண்டான். இம்முறை அத்துணை நேர்மையானதன்று.

வெற்றி

இவ்வாறுகப் போருக்கு வேண்டிய வசதிகளை ஏற்படுத்திக்கொண்டு, கயவாகுவின் பகுதியின்மேல் போர் தொடங்கினன். பலவகையாகப் போர் தொடங்கிக் கயவாகுவைத் தோற்கடித்தான். ஸ்ரீவல்லபன் மகன் மாணபரணனையும் தோற்கடித்தான். கயவாகு முதியவனுகிப் பெயருக்கு மட்டும் அரசனுக இருந்தான். பராக்கிரமன் இலங்கை முழுதிற்கும் ஒரே மன்னவன் ஆனன். நடுவில் ஏற்பட்ட சில்லறைக் கலகங்களை அவ்வப்போது கிள்ளி எறிந்தான். பல நூற்றாண்டுகளாகப் பிளவுபட்டிருந்த இலங்கை மீண்டும் ஒரு தனியரசு ஆயிற்று.

பிறநாடு செல்லல்

பராக்கிரமபாகு தன் வினைசெய்திறனைப் பிற நாடுகளிலும் செலுத்தத் தொடங்கினன். பர்மா தேயத்தில் 'ஏபன்னை' என்ற நாட்டு அரசன் அங்குச் சென்றிருந்த சிங்களக் குடிகளைத் துன்புறுத்தினன். இலங்கையிலிருந்து கம்போடியா சென்றுகொண்டிருந்த சிங்கள இளவரசியை அக்கிரமமாகப் பிடித்துவைத்தான். சிங்கள வர்த்தகர்களைத் துன்பப்படுத்தினன். இவைகளைக் கண்டு சினந்து பராக்கிரமன் தன் சேனைகளை அனுப்பி அம் மன்னனை வென்று, அவ்வரசனிடம் கப்பம் பெற்றனன். இது 1165-ல் நடந்தது.

தமிழ்நாட்டில்

தென்னிந்தியாவில் பாண்டிய வமிசத்தில் தாயாதிப் போர் நிகழ்ந்தது. சோழர் மதுரையை முற்றுகையிட்டனர். பாண்டியன் இலங்கை மன்னனை உதவி கேட்டான். "மதியில் முயல் அடைக்கலம் புகுந்தது. அதனை எந்த விலங்கு வதைக்க முடியும்," என்று பெருமையுடன் பேசினன். பிறகு தன் தளகர்த்தனை இலங்கா

புரத்தண்ட நாயக்கனை இந்தியாவிற்கு அனுப்பினன். அவன் பெருத்த படையுடன் சென்று பாண்டியநாட்டில் ஒவ்வொரு ஊரையும் பிடித்துச்சென்றான். இராமேசுவரத் தீவு பிடிபட்டது. மதுரையும் பிடிபட்டது. அதற்குள் உதவி கேட்ட பாண்டியன் இறந்துபோக, பின் வந்த பாண்டியனைத் துரத்திவிட்டு, வேறொரு அரசனை ஏற்படுத்தி, அவனிடம் கப்பம்பெற்றுக்கொண்டு சென்றான். சோழ நாட்டையும் சூறையடித்துப் பராக்கிரமன் பேரால் ஒரு நகரம் உண்டாக்கிப் பல தமிழர்களைப் பிடித்துக்கொண்டு சென்றான். அவர்களைக்கொண்டு, முன் சோழர்கள் பாழாக்கிவிட்ட ஊவன் வெளி விகாரத்தைப் புதுப்பித்தான். இவ்வாறு அவனுடைய வீரச்செயல் வெளிநாடுகள் எல்லாம் பரவிற்று. ஆகவே, அவனை மகா பராக்கிரமன் என்று மக்கள் அழைத்தனர்.

பொதுநலச் செயல்கள்

தன் பெரும் புகழை வெளிநாட்டில் பரவச்செய்த தன்றி, உள்நாட்டிலும் மிகுந்த ஆக்கவேலைகளைச் செய்தான். அவனால்தான் பொலனறுவை புகழ் பெற்ற நகர் ஆயிற்று. தன் சொந்த நாடாகிய உருகுனையில் எவ்வாறு ஏரிகளைக் கட்டி, நீர்ப்பாய்ச்சல் உண்டாக்கிப் புன்செய்களை நன்செய்கள் ஆக்கினானோ, அவ்வாறே, இலங்கை முழுதும் பெரிய மராமத்துவேலைகளைச் செய்யத் தொடங்கினன். நாட்டில் முன்னைய அரசர்கள் கடுமையான வரிகளைப் போட்டிருந்தனர். பராக்கிரமனோ நேர்மையான வரிகளை ஏற்படுத்தி அவைகளைத் தளரவிடாது வாங்கினன். ஏழைகளுக்கு உணவுவிடுதிகளை ஏற்படுத்தி, மருத்துவசாலைகளை நிறுவி, அவைகளில் தக்க மருத்துவர்களை வைத்தனன். நாட்டைவிட்டுக் கலவரங்களால் சிதறிப்போன குடும்பங்களை வரவழைத்து, அவர்களுக்கும் தமது சொத்துக்களை மீண்டும் தந்தனன்.

சமயத்தில் ஈடுபாடு

நாட்டுச் சமயமான புத்தசமயத்தைச் சீர்திருத்தினன். அவர்கள் மூப்பிரிவுகளாகப் பிரிந்து எப்போதும்

வழக்குகளில் ஈடுபட்டிருந்தனர். அம் முப்பிரிவுகள் மகா விகாரம், அபயகிரி, சேதவன விகாரம் என்பவைகள். அவைகளை ஒன்றுகூட்டி சமரசப்படுத்தி வைத்தனன். தகாத காரியங்களில் ஈடுபட்டிருந்த துறவிகளை வெளியேற்றினன். இவ்வாறு பௌத்தசமயம் தூயதாக்கப் பட்டது.

நாட்டு வளம் பெருக்கல்

நகரங்களில் நந்தவனங்களை ஏற்படுத்தி, அவைகளுக்கு நீர்ப்பாய்ச்சல் வசதிகளை ஏற்படுத்தினன். பாய்ச்சல் குளங்களும், குளிநீர்க் குளங்களும் கட்டினன். அழகான பவனங்களை அவைகளுக் கருகில் நிறுவினன். அவன் இவ்வகையாக 1000 குளங்களுக்குமேல் கட்டினனும். விகாரங்களைப் புதுப்பித்து, அவைகளில் அழகான புத்த உருவங்களைச் செய்துவைத்தான். அவன் கட்டின ஏரிகளில் மிகப் பெரியது 'பராக்கிரமசாகரம்' எனப் பெயர் பெற்றது. அம்பாகங்கையிலிருந்து ஒரு பெரிய கால்வாயை வெட்டிப் பல ஏரிகளையும் இணைத்தான். இந்தக் கால்வாயை 100 கல் நீளமாக்கி, மின்னேரியா, காந்தளை முதலிய இடங்களுக்குச் செலுத்தி, அதனை நீர்ப்பாய்ச்சலே யன்றிப் படகுகள் ஓடவல்ல நீர்வசதியாகவும் ஆக்கினன்.

அழகுபடுத்தியது

இவை தவிர பொலனறுவையில் புதிய கட்டிடங்கள் கோயில்கள் அரண்மனைகள் முதலியவைகளைக் கட்டி அழகுசெய்தான். இவ்வாறு மிகு புகழுடன் 33 ஆண்டுகள் ஆண்டுவந்தான். இப்படிப்பட்ட அரசனுடைய உருவம் பெருமிதத்தோற்றத்துடன் இருக்கும் அன்றோ? பொலனறுவையில் பொத்தகுல் விகாரம் என்ற கோயிலுக்கு முன்னால் பெருமிதத்தோற்றத்துடன் உருவச்சிலை ஒன்று நிற்கிறது. தலையில் உயர்ந்த முடி; முகத்தில் பரந்த மீசையுடன் தாடி; உடலில் பாதம்வரைத் தொங்கும் கலிங்கம்; கைகளில் ஏட்டை வாசிக்கும் முறையில் பிடித்துக்கொண்டு நிற்கும் தோற்றம். இந்த முறையில் நிற்கும் உயர்ந்த கல்பதுமை பராக்கிரமனுடைய உருவச்சிலை

என்பர். அவனுடைய உருவமாகவும் இருக்கலாம். ஆனால் சில ஆராய்ச்சியாளர் அவ்வுருவம் அகத்திய முனிவருடைய உருவம் என்பார். வேறு சிலர் 'அகத்திய உருவம் இங்கு வருவதற்குக் காரணம் இல்லை; அது புலத்தியருடைய உருவமாக இருக்கவேண்டும்' என்பர். முனிவருடைய உருவமாக இருக்குமாயின், அது புலத்தியருடையது என்பதே பெரும்பாலோர் துணிபு. ஏனெனில் பொலனறுவையின் பண்டைப்பெயர் புலத்தி என்பது. 'புலத்தி' என்ற பெயர் புலத்தியருடைய பெயரின் மரூஉ. புலத்தியர் வமிசத்தில்தான் இராவணன் முதலியோர் தோன்றினர்கள். ஆகவே, இவ்வுருவம் புலத்தியருடையது என்று காரணம் கூறுவர்.

அரண்மனைப் பெருமை

பராக்கிரமபாகு கட்டின அரண்மனைகளில் ஒன்று 'மாரிகாலத்து அரண்மனை' என்பது; இஃது இப்போது பாழடைந்து ஒரு பெரிய செங்கற்சூளைபோல் நிற்கிறது. இவ்வரண்மனை 7 அடுக்குகள் கொண்டு, 1000 அறைகளை உடைத்தாகி, நூற்றுக்கணக்கான அழகிய தூண்களைப் படைத்திருந்ததாம். மேற்புறங்களிலே சிகரங்களிற் பல வகைப் பூவேலைகளும், இலை வேலைகளும் செய்யப்பட்டிருந்தனவாம். மேலும் கதவுகள் கிடிகைகள் எல்லாம் தங்க இரேக்குகளால் அழகுசெய்யப்பட்டிருந்தனவாம். தொங்கவிடப்பட்டிருந்த சிறு மணிகள் தென்றலினால் அசைந்து இன்னிசை பாடுமாம். அரசன் படுக்கையறையில் பல வகையான தங்க விளக்குகளும், நறுமண வத்திகளும் எரிந்துகொண்டு அழகுபடுத்தினவாம். படுக்கைகள் தங்கத்தினாலும், தந்தங்களினாலும் பதிக்கப்பெற்றனவாம்.

இராசமாளிகை

இந்த அரண்மனைக்கு 100 கசத் தொலைவில் ஆத்தான மண்டபம் கட்டப்பட்டிருந்தது. இதில் அரசன் தன் அமைச்சர்களுடன் ஆராய்வது வழக்கம். இஃது 'இராச மாளிகை' என்ற பெயரால் வழங்குகிறது. இப்போது நில மாடமும் தூண்களுமே நிற்கின்றன. அதன் அடிக்

கட்டடத்தில் யானை, சிங்கம், பூதம் முதலிய உருவங்கள் வரிசை வரிசையாகச் செதுக்கப்பட்டிருக்கின்றன. ஒரு உருவம் மற்றொரு உருவத்தைப்போல் இல்லை; இரண்டு உருவங்கள் ஒரேமாதிரி என்று சொல்லமுடியாது. அந்த வகையில் நூற்றுக்கணக்கான உருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன. இந்தியாவில் விசயநகர ஆலயங்களில் இவ்வாறு இருக்கக் காண்கிறோம். 'உலகப் படைப்பில் இரண்டு உருவங்கள் ஒரேமாதிரி இரா' என்ற உண்மையை எடுத்துக்காட்டுதற்கு இவ்வகையாகச் சிற்ப வேலை செய்யப்பட்டது போலும்.

நீராடும் நிலையம்

அரண்மனைக்கு வெளியே நெடுந்தொலைவரைக்கும் பொதுமக்களுடைய நீராட்டுமண்டபங்கள் கட்டப்பட்டிருந்தன. அவைகளில் நிலத்தின்கீழே கால்வாய்கள் செல்ல, அவைகளிலிருந்து மதகுகள் வழியாகத் தண்ணீர் மேலே குதிக்கும்படியாக அமைப்புகள் வைக்கப்பட்டிருந்தன. சுனைநீர்கள்போல மேலே எழும்பி நீர்த்துளிகள் பரவி விழும். மழை பெய்தாற்போல நீர் விழத்தக்க பொறிகளும் வைக்கப்பட்டிருந்தன. இவைகள் இப்போது அழிக்கப்பட்டுப்போயின. அப் பகுதிகளை அரசியல்பகுதியார் தோண்டி எடுத்துப் பரிசிலனை செய்திருக்கின்றனர்.

பூங்கா

பூங்காவனம் இந்திரலோகத்திலிருந்து இங்கு வந்ததோ என்று கூறவேண்டும். தாமரைக்குளங்களுக்கும் அல்லிக் கேணிகளுக்கும் அளவில்லை. அவைகளிலிருந்து தென்றல் காற்று நறுமணத்துடன் எங்கும் பரவும். பச்சைப்பசேல் என்ற புற்றரைகளில் மயிற்கூட்டங்கள் தோகைகளை விரித்துக்கொண்டு விளையாடும். பலநிறப் பறவைகள் பூஞ்செடிகளிலும், பழ மரங்களிலும் கொஞ்சி விளையாடிப் பாடிக் குதித்துப் பறக்கும். பலவகை வண்ணரப் பூச்சிகளும் பட்டுப்பூச்சிகளும் செடிகொடிகளின் இடையே பறந்தவண்ணமாக இருக்கும். தேன்வண்டுகளோ அள

விறந்த மலர்களில் தேன் உண்டு, தாதுகளைப் பூசிக் கொண்டு உருமாறிப் போகும். இம்முறையாக அவ் வனத்தின் அழகினைப் பண்டைநூற் புலவர்கள் கூறியுள் ளார்கள். மற்றும் இதனருகே அமைந்திருந்த நாடக சாலையில், பொதுமக்களின் இன்பநுகர்ச்சிக்காக, எப் பொழுதும் கணிகையர் ஆடிப்பாடிக்கொண்டிருப்பார்க ளாம். அது மூன்றடுக்குக்கொண்டதாய், வானுலகத்தி லிருந்து இங்கே இழிந்துவந்ததோ எனக் கூறும்படியான தன்மையோடு அழகுசெய்யப்பட்டிருந்ததாம்.

இவைகளேயன்றிக் கீர்த்திமல்லன் (1187-1196) கட்டிய திருவோலக்கமண்டபம் ஒரு பக்கத்தே இருக்கின் றது. அது முன் காலத்தில் அளவு மிகுந்த அணிகளால் அழகுபடுத்தப்பட்டிருக்கவேண்டும் என்று இப்போது கிடக்கும் சில குறிகளைக்கொண்டே அறியமுடியும்.

திருக்குளம்

இதற்கருகிலே 'தோபவாவி' என்ற ஓர் அழகிய திருக் குளம் இருக்கிறது. இதனை மாலைநேரங்களில் கண்டால், சாயும் கதிரவன் கதிர்களால் பலநிறங்களும் நிழல்செய் யும் ஒளி கண்ணைக் கவரும். இதுவே பராக்கிரமசாகரத் தின் ஒரு பகுதி என்பர். இந்த ஏரியின் மேற்கரையில் ஓர் அழகிய சிறு தீவுபோன்ற இடம் தோன்றுகிறது. அது முப்புறமும் தெள்ளிய நீரால் சூழப்பட்டுள்ளது. அதில் பராக்கிரமன் கோடைக்கால மாளிகை கட்டியிருந் தான். அதன் பெயர் சீதள மாளிகை. இப்போதோ அந்த வசந்தமாளிகை அழிவுற்று, வெறும் மண் குன்று போலக் குவிந்துகிடக்கின்றது.

தோபவாவியின் வடபுறத்தில் மற்றொரு மாளிகை இருந்தது. அதில் ஒரு நடுமண்டபமும் சுற்றிலும் பல சிற்றறைகளும் இருந்தன. அவைகளில் சுவர்களிலே பல நிறங்களிலே ஓவியங்கள் தீட்டப்பெற்றிருந்தன. ஆனால் அவைகள் முழுவதும் அழிந்துபோய் இப்போது வெறும் வண்ணப்பகுதிகள் மட்டும் தெரிகின்றன. அவ்வண்ணங்

கள் மிக ஒளி மிகுந்தவை. இத்தனை நூற்றாண்டுகள் ஆகியிருந்தும் கெடவில்லை.

சமய நிலையங்கள்

பராக்கிரமன் சமயச்செயல்களுக்காக நிறுவிய சில இடங்கள் இருக்கின்றன. பிராமணர்கள் வேள்விகள் செய்து மந்திரங்கள் செபிக்க ஒரு மண்டபமும், கௌதம புத்தருடைய சரிதங்களான சாதகக்கதைகளை வாசிக்கையில், தான் அமர்ந்து கேட்பதற்காகக் கட்டின மண்டபமும், பீதாம்பரதாரிகளான பௌத்த சமயக்குரவர்கள் ஆசீர்வதித்துத் தரும் தீர்த்தம் பூணூல் இவைகளைத் தான் பெற்றுக்கொள்வதற்குக் கட்டிய மண்டபமும் இவைகளில் சேர்ந்தன. பொத்தகுல் விகாரம் என்பது ஒரு வட்டவடிவான கட்டடம். இதில் இருந்த ஓவியங்கள் மறைந்தன. இங்கே ஒரு தந்தக் கோயில் உண்டு. இது முன்னாளில் தமிழர் கட்டின கோயிலாக இருக்கலாம். தோபாராமம், நிச்சங்கலதா மண்டபம் முதலிய கட்டடங்கள் இவைகளின் அருகே இருக்கின்றன.

வட்டதகை

இனி மற்றொரு வியக்கத்தக்க கட்டடம் இருக்கிறது. அதன் பெயர் 'வட்டதகை' என்பது. இது மிகவும் பெருமை பெற்ற கட்டடம். இதைப்போல் சிறந்த கட்டடம் இலங்கையிலே இல்லை என்பர். இஃது ஒரு பெரிய வட்டமாளிகை. நாற்புறங்களிலும் நான்கு வாயில்கள் உண்டு. அவ்வாயில்களிலே இருபுறங்களிலும் துவாரபாலகர்கள் நிற்கிறார்கள். அவைகள் கற்களில் அழகாகச் செதுக்கப்பட்ட உருவங்கள். அவைகளுக்கு நடுவிலே எட்டு அகலமான படிகள் அமைந்திருக்கின்றன. அவைகளின்மேல் ஒரு பெரிய பீடத்தில் புத்தபகவான் சிலை ஒன்று வைக்கப்பட்டுள்ளது. அக்கட்டடத்தில் பல தளங்கள் உண்டு. ஒவ்வொன்றிலும் சிறந்த வேலைப்பாடு கொண்ட அரைவட்டக்கல் ஒன்று பரவப்பட்டிருக்கிறது. வெளிச்சுவர்களில் கமலம், யானை, சிங்கம், குதிரை, அன்னம், இடபம், மனிதன் முதலிய உருவங்கள் வரிசை வரிசையாகச் செதுக்

கப்பட்டிருக்கின்றன. இதைப்போன்ற ஒரு பெரிய கட்டடம் உரோமாபுரியில்தான் உண்டு. அதன் பெயர் கொலோசியம் என்பது. ஆனால் அஃது இன்பக்கடலில் முழுகிக் கிடக்கக் கட்டியது. இதுவோ அன்புக் கடலில் முழுகி இருக்கக் கட்டப்பட்டது. இஃது ஒரு சமயபவனம். இன்றைக்கும் ஆயிரக்கணக்கான பௌத்தர்கள் இந்தத் தூய இடத்திற்கேகி அழகிய செந்தாமரைகளை அத்தூய உருவங்களுக்குத் திருவடிக்காணிக்கைகளாக வைக்கிறார்கள்.

ஹெததகை

வட்டதகைக்கு எதிரே 'ஹெததகை' என்ற நீளச் சதுர பவனம் ஒன்று இருக்கிறது. இதில் 60 தூய சின்னங்கள் வைக்கப்பட்டிருந்தனவாம். இதிலும் இதற்கடுத்தும் பல புத்தசிலைகள் இருக்கின்றன. அவைகளில் ஒன்று கம்போடியாநாட்டுச் சிற்பிகளால் செய்யப்பட்டதாம். இதற்கு வலப்புறத்தில் ஒரு பெரிய கல் சாசனம் நிற்கிறது. இதனைக் 'கல்போதா' என்பார்கள். கல் போதா என்றால் 'கல் புத்தகம்' என்பது பொருள். இதில் உள்ள கல்வெட்டில் கீர்த்தி நிச்சங்கனுடைய மெய்க்கீர்த்தி எழுதப்பட்டுள்ளது. அப்புகழ்ச்சி வெறும் உயர்வு நவிற்சி. அதற்கு அடுத்தாற்போல 'சாத்மகால் பிரசாதம்' என்ற பெரிய செங்கல் பவனம் உயர்ந்து நிற்கிறது. இஃது ஏழு அடுக்குகளைக் கொண்டுள்ளது. பலபேர் பணத்தாசை கொண்டு இதனைப் பாழ்படுத்தியுள்ளார்கள். இந்தக் கட்டடத்தின் நோக்கம் இன்னதென்று தெரியவில்லை.

சிவன் கோயில்

மேலே சொன்ன இடத்திற்கு 100 கசத் தொலைவில் ஒரு பெரிய செய்குன்று இருக்கிறது. இதற்கு அடுத்தாற்போல ஓர் அழகிய சிவன்கோயில் இருக்கிறது. இது மிகவும் தோற்றப்பொலிவுள்ள கோயில். மூலத்தானத்தில் சிவலிங்கமும் முன்னும் பின்னும் நந்திகளும் இருக்கின்றன. இதற்குச் சிறிது தொலைவில் காட்டின் நடுவில் மற்றொரு

சிவன்கோயில் நிற்கிறது. அதற்கு அடுத்து நகரவாயில் அழிந்துகிடக்கிறது.

அங்கிருந்து சிறிதுதொலை சென்றால் பராக்கிரமபாகுவின் அரசிகளில் ஒருத்தியான உரூபாவதி கட்டின இரண கோட்டைவிகாரம் நிற்கிறது.

சேதவனம்

'சேதவன ஆராமம்' என்பது ஒரு சிறந்த பௌத்த ஆசிரமம். அதற்கு அருகில் இலங்காதிலகம் என்ற கோயில் இருக்கிறது. இவைகள் மிகச் சிறப்புப் பெற்றவைகள். இலங்காதிலகத்தில் கணக்கற்ற அழகிய சிற்பங்கள் இருக்கின்றன. இதற்கு அடுத்துக் கீரிவிகாரம் என்ற வெள்ளைவிகாரம் இருக்கின்றது. அதனை அரசிகளில் ஒருத்தி கட்டினாள். 'கீர்' என்றால் பால். அது பால் போன்ற வெண்மை கொண்டிருந்ததாம்.

குடைகோயில்

உத்திராராமம் என்ற வடக்குவனத்தில் கல்விகாரம் என்ற குடைகோயில் இருக்கிறது. 170 அடி நீளமும் 30 அடி உயரமும் உள்ள ஒரு பாறையில் இது செதுக்கப்பட்டிருக்கிறது. இப்பாறையின் நடுவில் 26 அடி அகலமும் 12 அடி உயரமும் கொண்ட ஒரு குகைகோயில் வெட்டப்பட்டுள்ளது. இதற்கு இரண்டு தூண்கள் உண்டு. பார்வைக்குப் பல்லவர் குடைகோயில்போல் செய்யப்பட்டுள்ளது. இதனுள் செங்குத்தான கற்சுவரில் $9\frac{3}{4}$ அடி உயரத்தில் $\frac{3}{4}$ அடி ஆழத்தில் ஒரு புத்த உருவம் செதுக்கப்பட்டிருக்கிறது. இக்கல் குகைக்கு இடப்புறத்தில் 16 அடி உயரமுள்ள ஒரு புத்த விக்கிரகம் செதுக்கப்பட்டிருக்கிறது. இதன் பிரபாவளி மிக அழகாக அமைக்கப்பட்டுள்ளது. கல்குகைக்கு வடபுறத்திலே இரண்டு பெரிய உருவங்களில் ஒன்று நின்றுகொண்டும், மற்றொன்று படுத்துக்கொண்டும் இருக்கின்றன. நின்றிருக்கும் உருவம் புத்தபகவானுடைய முதல் மாணாக்கர் ஆனந்தர் என்பர். சிலர் அதுவும் புத்தர் என்பர். அவ்வுருவம் கைகளைக்

கட்டிக்கொண்டு நிற்கும் முறையில் இருக்கிறது. அடுத்த உருவம் புத்தருடைய மகா நிருவாணநிலையைக் காட்டுவது. படுத்திருக்கும் அந்நிலை ஒரு கையைத் தலைக்கு வைத்துக்கொண்டிருப்பதைப்போல் ஆக்கப்பட்டிருக்கிறது. உயிர் நீங்கும் நிலையில் முகம் இருக்கும் முறை இதில் நன்முக விளக்கப்பட்டிருக்கிறது. இவ்விரு உருவங்களிலும் கட்டியிருக்கும் துணியின் மடிப்புகள் மிக நுணுக்கமாக ஆக்கப்பட்டிருக்கின்றன.

இனி இக்குடைகோயிலின் வடபுறத்துச் சுவரில் ஒரு அருமையான கல்வெட்டுச் செதுக்கப்பட்டிருக்கிறது. சங்கத்தாரின் அனுமதியின்மேல் அரசன் அக்கட்டளையை விடுத்திருக்கிறான். சமயத்திற்காகப் பராக்கிரமன் செய்த திருத்தொண்டு இதில் நிறைவாகத் தெரிகிறது. பிக்குக்களின் பண்புகளைத் தெரியப்படுத்தி, அவ்வாறு ஒழுங்காக நடக்கமுடியாத பிக்குக்கள் நரகத்திற்குச் செல்வார்கள் என்றும், தவறுசெய்கிறவர்கள் நீக்கப்படுவார்கள் என்றும் கண்டிப்பாக ஆணை இடப்பட்டுள்ளது. இவ்வாறே கண்டிப்பாக அரசன் நடந்ததனால் துறவிகள்சங்கம் தூயதாக்கப்பட்டதாம். ஆகவே, இக்கல்வெட்டு மிக முதன்மையானது அன்றோ?

தமிழர் மகாசயம்

இனி, கமலவாவிக்கருகில் 'தமிழர் மகாசயம்' என்ற ஒரு அழிந்த பவனம் இருக்கிறது. இது பராக்கிரமபாகு சிறைப்பிடித்த தமிழ்மக்களைக் கொண்டு கட்டியதாம். தமிழ்நாட்டுச் சிற்பக்கலைகளை இதில் காணலாம்.

இனியும் பல இடங்கள் உண்டு. அவைகளைச் சொல்ல மேலும் நீட்டிக்கும். இத்தனை உயர்ந்த நிலையில் பராக்கிரமன் கட்டிவைத்த நகரம் பின்னாலே பாழடைந்து போயிற்று. பின் வந்த அரசர்கள் அதனைப் பெருக்க எண்ணவில்லை. நகரம் பாழடைந்து போனதன்றி, எங்கும் புல் பூண்டுகள் மூளைத்துக் காடாகிவிட்டது. முன் தலை நகரமாக இருந்தது இப்போது 200 பேர் அடங்கிய

சிற்றூராகித் தாழ்ச்சி அடைந்திருந்தால், அதன் நிலை யாமையை என்ன என்று சொல்வது?

தமிழ்க் கல்வெட்டுகள்

பொலனறுவையில் 11 தமிழ்க் கல்வெட்டுகள் படியெடுத்திருக்கிறார்கள். அவைகளில் 6 சிவன்கோயிலில் இருக்கின்றன. 2 வடதகையிலும், ஒன்று தளதவலிதவையிலும், ஒன்று காட்சிச்சாலையிலும், ஒன்று கல்லாக் காட்டிலும் இருக்கின்றன. சிவாலயத்தில் உள்ள கல்வெட்டுகளில் "திருமன்னிவளர" "இருநிலமடந்தையும்" என்ற தொடக்கத்து முதல் இராசேந்திரன் (1013-1045) கல்வெட்டும், "திங்களேர் மலர்ந்து வெண்குடை மண்டலம்" என்ற தொடக்கத்துப் பரகேசரிவருமன் அதிராசேந்திர தேவன் 3-வது ஆண்டு (1072)-க் கல்வெட்டும் சிறந்தவை. இக்கல்வெட்டுக்களிலில் இவ்வூர்ச் சிவன்கோயில், சோழர்களால், இலங்கையை வென்ற பிறகு கட்டப்பட்ட தென்றும், அதற்கு இராசேந்திரனும் அவன் பேரன் அதிராசேந்திரனும் தானங்கள் செய்தனர் என்றும் அறியலாம். இந்த இராசேந்திரசோழன் என்னும் கங்கைகொண்ட சோழன்,

"பொருகடல் ஈழத்து அரசர்தம் முடியும்
ஆங்கவர் தேவியர் ஒங்கெழில் முடியும்
முன்னவர் பக்கல் தென்னவர் வைத்த
சுந்தர முடியும் இந்திரன் ஆரமும்
தெண்டிரை ஈழ மண்டல முழுவதும்
மாப்பெருந் தண்டால் கொண்ட
கோப்பர கேசரி வன்ம ரான
உடையார்ஸ்ரீ ராசேந்திரசோழ தேவர்"

என்று தன் மெய்க்கீர்த்தியில் கூறியிருப்பது போல, ஈழத்தை வென்று, முன் காலத்தில் பாண்டியன் அங்கு விட்டுவந்த முடியையும் மீட்டுவந்தான் என அறிகிறோம். அவன் பேரன் அதிராசேந்திரன் ஈழத்தைப்பற்றித் தன் மெய்க்கீர்த்தியில் சொல்லாமல் போனபோதிலும், அவன் இவ்வூர்ச் சிவாலயத்திற்குத் தானம் செய்திருப்பதால் அவன் காலத்திலும் இந்நகர் சோழர் ஆட்சி

யில் இருந்ததென்க. இவ்வரசனுக்குப் பிறகு சோழர் வமிசத்தில் மாறுதல் ஏற்பட்டது. வடக்கே வேங்கியில் இருந்த இராசேந்திரன் என்ற முதல்குலோத்துங்கன் (1073-1118) பட்டத்திற்கு வந்தான். இவனுடைய கல்வெட்டாவது இவன் வமிசத்தார்களின் கல்வெட்டுக்களாவது இங்கு இல்லை. ஆகவே, இவ்வமிச மாறுதல்களிலே ஈழம் தனியரசு பெறத்தொடங்கியது எனலாம். விசயாதி பாகு (1065-1120) வின் கல்வெட்டு ஒன்று தளதவலித வையில் இருப்பதால், சோழஆதிக்கம் ஏறக்குறைய 1075-ல் மறைந்திருக்கவேண்டும் என்று கூறலாம். அவனுக்குப் பின் 1153-ல் வந்த பராக்கிரமபாகு தமிழரைத் துரத்தினதுமன்றி, தென்இந்தியாவின்மீதே படையெடுத்த விவரம் முன்னே கூறியிருக்கின்றோம். சிவன் கோயிலில் உள்ள மற்றக் கல்வெட்டுகளில் சிறந்த செய்திகள் ஒன்றும் இல்லை. ஒரு சிவன்கோயிலின் 4 தூண்களை நிலைநிறுத்தினோர் பெயர்கள் மட்டும் கிடைக்கின்றன. அவர்கள் 1. மொகணூருடையான் திருப்பூவன தேவன், 2. தில்லைக்கரசு தியாகசிந்தாமணி மூவேந்த வேளான், 3. முகரிநாடாழ்வான் மகள் கற்பகம், 4. நல்லூருடையான் பஞ்சநெதிவாணன் என்போர்கள். அவர்கள் இலங்கைக்குக் குடியேறினவர்களோ அல்லது படையெடுப்பில் உடன்சென்றவர்களோ ஆக இருக்கவேண்டும். கோயிலின் பெயர் வானவன்மாதேவீச்சுரம் என்பது. பொலனறுவையில் சோழர் சிவன்கோயில்கள் இரண்டும் பராக்கிரமபாகுவால் அழிக்கப்பட்டன வென்று 'தென் இந்திய சிற்ப வடிவங்கள்' என்ற நூலில் திரு. நவரத்தினம் அவர்கள்கூறியிருக்கிறார். பராக்கிரமபாகு அத்துணை வெறுப்பு உள்ளவனு என்பதே கேள்வி.

மேலும் வடதகை என்ற பௌத்த கட்டிடத்தில் கண்ட இரண்டு துண்டுக் கல்வெட்டுகளில், இராசேந்திர சோழன் " திருமன்னிவளர " என்ற தொடக்கத்து மெய்க்கீர்த்தியில்,

" பலதனத் தொடுநிறை குலதனக் குவையும்
இரணசூரனே முரணறத் தாக்கி "

என்ற பகுதி கிடைக்கிறது. ஆகவே, இக்கட்டிடம் இராசேந்திரன் (1013-1045) காலத்திலேயே இருந்திருக்க வேண்டும்.


தளதகவையில் உள்ள விசயபாகுவின் கல்வெட்டு மிகப் பெரிது. இதனைத் தமிழில் பொறித்துள்ளதன் காரணம் தெரியவில்லை. அவன் காலத்தில் தமிழர்கள் அந்நகரில் இருந்திருக்கவேண்டும். அவர்கள் செல்வாக்குக் குறைந்திருக்காது. அவன் 55 ஆண்டுகள் இலங்கை முழுதும் ஆண்டதும், 73 ஆண்டுவரை வாழ்ந்த செய்தியும் கூறுகிறது. பொலனறுவையின் தமிழ்ப்பெயர் புலநரி என்றும், அதன் மறுபெயர் விசயராசபுரம் என்றும் தெரிகின்றன. வடமொழியில் அது 'புலஸ்தெப்புரம்' என்றும், இந்தப் பவனத்தின் பெயர் 'ஜினதந்த தாதுபுவனம்' என்றும் கூறப்படுகின்றன. இங்குக் கிடைத்த செப்புத் திருமேனிகளைப்பற்றி அடியிற்கண்ட பகுதி குறிக்கத் தக்கது :—

"பொலனறுவை சிவாலயத்தினருகில் கண்டெடுக்கப் பட்ட செப்புத்திருமேனிகள் பலவும் கொழும்பிலுள்ள பொருட்காட்சிச் சாலையில் வைக்கப்பட்டுள்ளன. இவையாவும் மிக அழகுவாய்ந்தனவாயும், தனித்திராவிடச் சிற்ப முறையில் அமைக்கப்பட்டனவாயும் காணப்படுகின்றன. இவ்வுருவங்களின் காலம் 13-ம் நூற்றாண்டுக்கு முன் என்பது சிற்ப ஆராய்ச்சியுடையார் கருத்து. இங்குக் காணப்படும் சுந்தரமூர்த்திசுவாமிகளதும் மாணிக்கவாசகசுவாமிகளதும் ஆகிய உருவங்களைவிட அழகிலும் சிற்பவனப்பிலும் சிறந்த அடியார் உருவங்கள் தமிழ்நாட்டில் இல்லை என டாக்டர் ஆனந்த குமாரசாமி கூறுகின்றார்." (தென் இந்திய சிற்ப வடிவங்கள் 38. India and Indonesian Art P. 167),

அரசன் கொடிவழி

இப்புகழ் வாய்ந்த அரசனுடைய கொடிவழி படிப்பவர்கள் அறிவதற்காக இங்கே வரையப்படுகிறது.

பராக்கிரமவாகுவின் கொடிவழி.



இணைப்பு

முத்தின் தலைப்பகுதியும் நடுப்பகுதியும் கூறப்பட் டன. இனி அடிப்பகுதி எவ்வாறு இருக்கிறது என்று காணுதல் வேண்டும். அவ்வடிப்பகுதிதான் தென்மா காணம். அதன் பொலிவை எடுத்துக் கூறுவோம்.

---

13. முத்தின் அடிப்பகுதி வனப்பு

தென் மாகாணம்

தெற்கே வழிநடை

தென்மாகாணம் காணப் புறப்பட்டேன். புகை வண்டி நிலையத்திலோ அளவற்ற கூட்டம். சிங்களக் குடும்பங்கள் அளவு கடந்து நின்றுகொண்டிருந்தன. ஆண், பெண், கிழவி, குமரி, குழவிகள் எல்லாரும் வண்டிகளை எதிர்பார்த்துக்கொண்டு நின்றார்கள். இத்துணைக் கூட்டம் குழுமியிருந்ததன் காரணம் தெரியும். புத்தபகவானுடைய சின்னங்கள் இலங்கைக் காட்சிச்சாலையில் வைக்கப்பட்டிருந்தன. அவைகளைக் கண்டு வணங்குவதற்கே இவ்வாறு செல்லுகின்றனர் என்பதை. சிங்களர்கள் தென்னாடுபோலவே பல வண்ணங்களைக் கொண்டவர்கள். நெல்லை யாழ்ப்பாணம் மக்களைவிடச் சிறிது மாநிறம் பெற்ற மேனி உடையவர்கள். செல்வர்கள் ஆங்கில உடை உடுக்கத் தொடங்குகிறார்கள். ஆண்கள் ஆங்கில உடை உடுத்தாலும் பெண்கள் இக்காலத்திற் கேற்ற தென் இந்திய உடை உடுக்கத் தொடங்கியுள்ளார்கள். அஃதாவது, மார்பில் முழு இரவிக்கையும், இடையில் பாவாடையும் தாவணியும் கலந்து உடுக்கிறார்கள். நகைகள் மிகுதியாக அணிவதில்லை. காதில் கடுக்கன் போன்ற பலவகையான கம்மல்களைத் தவிர, வேறு அணிகளை அணிவதில்லை. ஒவ்வொரு காதிலும் ஒரு சிறு துளையைத் தவிர வேறு துளை செய்வதில்லை. மூக்கணி எவரும் அணிவதில்லை. கழுத்தில் ஒன்றி ரண்டு மாலைகள்தான் அணிகிறார்கள். ஆகவே, பார்வைக்கு உடை மிக நேர்த்தி என்று சொல்லவேண்டும். நடுத்தரப் பெண்களும் இவ்வாறே அணிகிறார்கள். சிங்களர் பண்டைய வடநாட்டு மக்களும் ஈழத்து நாகர் பெண்களும் கலந்த சந்ததியார் என்று வரலாறு கூறுகிறது. ஆகவே, இவ்விருவர்களுடைய நடையுடைகளையும் வழங்குதல் இயல்பு. பண்டைய ஈழத்துப் பழங்குடிகள் காதுகளையும் மூக்குகளையும் தொளைசெய்து அணிகளைத் துறுத்தும் பழக்கம் இல்லாதவர்கள் என எண்ணலாம். மேலும்,

இந்தியாவில் வடநாட்டிலிருந்து வந்த ஆண்களும் அவர்களோடு வந்த பெண்களும் தங்கள் பழக்கங்களைக் கொண்டுவந்திருக்கவேண்டும். அவர்களும் அக்காலத்து அணிகளைத்தான் வழங்கியிருப்பார்கள். மூக்கணி அணியும் பழக்கம் சிங்களத்தில் இல்லாதபோது, வட இந்தியாவில் மௌரியர் காலத்தில் அவ்வழக்கு இருந்திருக்க முடியாது என எண்ணலாம். இனி, சிங்களர்களில் நடுத்தர வகுப்பாரும் தாழ்ந்த வகுப்பாரும் ஆண்களில் சிறு சொக்காயும் லுங்கியுமே அணிகிறார்கள். பெண்களும் இவ்விரண்டையுமே அணிகிறார்கள். சில ஆண்டுகளுக்கு முன் ஆண்கள் தலைவளர்த்து முடிச்சாகக் கட்டிக்கொண்டிருந்தார்கள். அப்போது ஆண்மக்களுக்கும் பெண்மக்களுக்கும் உடல் தோற்றத்தில் வேறுபாடு இருக்கவில்லை. இப்போதோ ஆண்கள் தலைமயிரைக் கத்தரித்துக்கொள்ளுகிறார்கள். இருபாலார் உடைகளும் பெருவாரியான நிறங்களைக் கொண்டவைகளே. கழுத்தில் பெண்கள் அணியும் மாலைகள் பலநிறங்களைக் கொண்ட மணிவகைகளைக் கோத்தவைகளே. இவ்வகைக் காட்சிகளைக் கண்டுகொண்டே புகைவண்டிநிலையத்தில் வண்டியை எதிர்பார்த்துக்கொண்டிருந்தேன்.

இளைஞர் எண்ணப்போக்கு

பிற்பகல் 3 மணிக்கு வண்டி வந்து நின்றது. கூட்டத்தின் நெருக்கத்தினால் வண்டி ஏற முடியவில்லை. இரண்டாவது வகுப்பில் ஏறவே முடியவில்லை. ஆகவே, முதல் வகுப்பு வண்டியில் ஏறினேன். அதில் இரண்டு காளையர்கள் உட்கார்ந்திருந்தார்கள். போகப்போக பலபேர் ஏறியும் இறங்கவும் தொடங்கினர்கள். இவ்விரு இளைஞர்களும் சிங்களக் கிறித்தவர்களாக இருக்கலாம் என்று எண்ணினேன். ஆனால் பௌத்தர்களுக்கும் கிறித்தவர்களுக்கும் வேறுபாடு கண்டுபிடிக்கமுடியாது. வண்டி ஏறினது முதற்கொண்டு வளவள என்று பேசிக்கொண்டே சென்றார்கள். பேச்சு ஆங்கிலத்தில்தான் நடந்தது. இருவர்களும் ஆங்கில உடையே அணிந்திருந்தார்கள். அவர்கள் வர்த்தகம்

அல்லது சர்க்கார் அலுவல்களில் இருந்திருக்கவேண்டும் என்று எண்ணினேன். அரசாங்கத் தேர்தல், உணவு கட்டுப்பாடு முதலியவைகளைப் பேசினது அல்லாமல், நிலையங்களில் குமரிகளைக் கண்டவுடன் அவர்கள் நடை, குணம் முதலியவைகளைப்பற்றியும் பேசினார்கள். சில சமயங்களில் அவர்களுடைய பேச்சு அருவருக்கத்தக்கதாக இருந்தது. இக்காலத்துச் சிங்கள இளைஞர்கள் எண்ணப் போக்கு தகுதியாக இல்லை என்று நினைத்தேன். அவர்கள் எப்போது இறங்கித்தொலைவார்கள் என்ற எண்ணமே எனக்கு இருந்தது. இருளும் சமயத்தில் ஒருவன் இறங்கினான். பிறகு மற்றவன் இறங்கினான். என்னுடைய மனமும் அமைதியடைந்தது.

கரையோரக் காட்சி

கொழும்புக்கோட்டை விட்டதும் இருப்புப்பாதை இலங்கையின் மேற்குக்கரை யோரமாகவே தெற்கே செல்லுகிறது. பிறகு அக்கரை தென்கிழக்கே திரும்புகையில், பாதையும் தென்கிழக்கே திரும்புகிறது. காலி என்ற பெருநகர் சேர்ந்ததும், பாதை கிழக்கே சென்று, மாத்துறை என்ற நகரில் நின்றுவிடுகிறது. இருப்புப்பாதையை ஒட்டியே வண்டிப்பாதையும் செல்லுகிறது. கரையோரமாகச் செல்லும் இருப்புப்பாதை சில இடங்களில் கடலை அணைந்து கொண்டே செல்லும். கடல் அலைகளும் பாதையின்மேல் விழக்கூடும். ஆனால் பெரும்பான்மையாகக் கடல் ஓரம் கற்பாறைகள் இருப்பதால், பாதைக்குக் கேடு இல்லை. இக்கட்டான சில இடங்களில் பெரிய கற்களை அடுக்கிச் சுவர் போல வைத்திருக்கிறார்கள். சில இடங்களில் கற்பாறைகள் கடலுக்கும் நெடுந்தொலை மூன்போல நீண்டிருக்கும். அப்படிப்பட்ட இடங்களில் கடற்கரையை விட்டு அது எட்டிச்செல்லும். கடற்கரை ஓரமாகப் பாதை செல்லுகிற படியால், இடையில் கடக்கவேண்டிய ஆறுகள் ஓடைகள் பல இருக்கின்றன. அவைகளுக்கு எல்லாம் பெரிய பாலங்கள் கட்டப்பட்டுள்ளன. ஒவ்வொரு ஆற்றுக்கும் இரண்டு பாலங்கள் உண்டு. இருப்புப்பாதைக்கு ஒன்று; நடைப்

பாதைக்கு ஒன்று. இப்பாலங்கள் எல்லாம் இரும்பு விட்டங்களால் இணைக்கப்பட்டு மிக வலுவாகக் கட்டப்பட்டுள்ளன.

செழுமை

இவ்விருப்புப்பாதை இயற்கை அழகுகளுக்கு நடுவே அவைகளை ஊடுருவிச் செல்கின்றது. கடலோரம் முழுதும் தென்னைமரங்கள் நிரம்பிய தோப்புகளே உண்டு. சில இடங்களில் மா, பலா முதலிய எண்ணிறந்த மரங்கள் அடர்ந்திருக்கின்றன. பெரும்பாலும் இத் தோப்புகளின் இடையே பாதை செல்லுகிறபடியால், காட்சி முழுதும் மனம் மகிழத்தக்கதாக இருக்கும். தென்னைமரங்கள் மிக உயரமாக வளர்ந்திருக்கின்றன. நீர் ஓரத்தில் உள்ளவைகள் நீர்மட்டத்தின்மேல் சாய்ந்து நிற்கின்றன. இவைகளின் காட்சி மிக வியப்பாக இருக்கும். கடற்கரை ஓரமாகப் பாறைகளே மிகுதியாக இருப்பதால் இப்பாறைநிலத்தில் எவ்வகையாகத் தென்னைமரங்கள் அடர்ந்து வளருகின்றன என்று எண்ணினதுண்டு. கொங்குநாட்டிலோ தென்னந்தோப்புகளுக்கு அடிக்கடி தண்ணீர் கட்டவேண்டும். நீர்ப்பாய்ச்சல் வசதி இல்லாவிட்டால், காலங்களில் எருப் போடாவிட்டால், விளைவு கெட்டுவிடும்; காய் பிடிக்காது. ஆனால், இந்தக் கடற்கரை ஓரத்திலோ தென்னைக்கு எருவாவது, நீர்ப் பாய்ச்சலாவது இல்லை. அப்படியிருந்தும் அவைகளின் செழிப்புக்கு அளவே இல்லை. சோழமண்டலக்கரையை ஒத்து இருக்காமல், மலையாளம், கன்னடம் இவைகளின் கரையோரம்போல் இவ்விலங்கைக்கரை இருக்கிறது. சீனிப்பலாமரங்கள் மிகுதியாக இருக்கின்றன. அவைகளின் இலைகள் அகலமாக இருப்பதால், பெருத்த நிழலைத் தருகின்றன. அவைகளிலே காய்களுக்கோ அளவில்லை. ஒரு பெரிய மரத்தில் 200, 300 காய்கள் விட்டிருக்கின்றன. இக்காய்கள் மஞ்சள்நிறமாகப் பந்துபோலத் தொங்குகின்றன. காய்களின் அளவு ஏறக்குறைய அரை அடி குறுக்கு இருக்கும். அவைகள் பழமாவதில்லை; கறிக்கே பயன்படுகின்றன.

ஊர் அமைப்பு

கொழும்புக்கோட்டை விட்டவுடனே ஒவ்வொரு கல் தொலைவுக்கும் ஒவ்வொரு நிலையம் இருக்கிறது. அவ் வாறு பத்து கல் வரைக்கும் காணலாம். இந்நிலையங்கள் எல்லாம் கொழும்பின் தொடர்ச்சி என்றே சொல்ல வேண்டும். அதன் புறநகர்ப் பகுதிகள் அத்துணைத் தொலைவு செல்லுகின்றன. கொழும்பில் அரசியல் முதலிய வேலை களில் இருக்கும் தொழிலாளர்கள், அரசலுவலர்கள், செல்வர்கள் முதலியோர்கள் நலவாழ்க்கைக்காக இந்த வெளியிடங்களில் வீடுகளை விலாசமாகக் கட்டிக்கொண்டு வாழ்கிறார்கள். ஒவ்வொரு வீட்டைச் சுற்றிலும் அழகிய பூந்தோட்டம் இருக்கும். ஆகவே, இப்பகுதிகள் பூந் தோட்ட நகர்ப்பகுதி எனலாம். இவைகளிலே ஒன்று வெள்ளவத்தை என்பது. இப்புறநகரில் பெரும்பாலும் தமிழ்ச்செல்வர்களே வாழ்கிறார்கள். நாள்தோறும் புகை வண்டியிலோ அல்லது சொந்த விசைவண்டியிலோ கொழும்பு சென்று, அலுவல் பார்த்துவிட்டு, ஊர் திரும்பு வார்கள். இதைப்போலப் பல தொடர்ச்சி நிலையங்கள் உள்ளன.

லெவேனியா

கொழும்பிற்கு ஆறு கல் அளவில் கடலுக்குள் ஒரு பாறைத்திடல் நீண்டுகொண்டிருக்கிறது. அதன் இரு புறமும் கடல் குடாபோல் நிலத்திற்குள் செல்லுகிறது. இந்தத் திடலுக்கு 'லெவேனியா குன்று' என்பது பெயர். ஒரு காலத்தில் இங்கே இருந்த ஒரு கவர்னர், இந்த இடத் தின் இயற்கைக்காட்சியைக் கண்டு வியந்து, தான் வாழ்வ தற்கு ஒரு கோடைக்கால மாளிகை கட்டிக்கொண்டான். ஆனால், இலண்டன்நகரத்திலிருந்த பெரிய அதிகாரிகள் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை. ஆகவே, மாளிகை வேலை நிறுத்தப்பட்டது. இந்த இடமோ இன்றைக்கும் மிக அழகானது. பல செல்வர்கள் இதனைப் பார்த்து இங் குள்ள காற்றை நுகர்தற்காகச் செல்லுவார்கள். இக் குன்றின்மேல் கட்டப்பட்ட மாளிகை மிக அழகாக

அமைந்திருக்கிறது. புகைவண்டியிலிருந்து பார்க்கையில் மிகத் தொலைவிலிருந்தே அழகாகத் தெரிகிறது. கடல் அலைகள் மிக விரைவில் பாறைகளின்மீது மோத, அவ்வலை களுக்கு மேலே தென்னந்தோப்புகள் வான் அளாவி நிற்க, அத்தோப்புகளின் இடையில் தோன்றிநிற்கும் இம் மாலிகை, குன்றின்மேல் உள்ளதால், வெள்ளைவெளேர் என்று வானத்தை எட்டி நிற்கும். அந்தக் காட்சி கடற் கரைக்கே ஓர் இனிமை தருகிறது.

தென்னந்தோப்புகள்

புகைவண்டியில் கடலோரமாகத் தெற்கே போகை யில், கதிரவன் கிரணங்கள் வண்டியில் புகுந்தாலும், அவற் றின் கொடுமையை நான் அறியவில்லை. தென்னந்தோப்பு கள் பெரும்பாலும் அவற்றைத் தடுத்துநிற்கின்றன. அம் மரங்களோ நமது நாட்டுத் தோப்புகளைப்போல ஒழுங்காக வும் செங்குத்தாகவும் வளருவதில்லை. ஒவ்வொரு மரமும் ஒவ்வொரு கோணலாக வளர்ந்துநிற்கும். இரண்டு மரங் கள் ஒரே ஒழுங்காக இருக்கும் என்பதே ஐயமாகும். ஆகவே, அடர்ந்த தோப்புகளிலே கதிரவன் எப்படி நுழையமுடியும். மேலும் தோப்புகள் இல்லாத இடங் களில், கடலுக்கு மிக அருகில் வண்டி போகையில், கடற் காற்று வீசுவதாலும், கிரணங்களின் கொடுமை தோன்று வது இல்லை. நான் புறப்பட்ட இரண்டுமணி அளவில் கதிரவன் மேற்கே சாயத்தொடங்கிவிட்டபடியால், அவன் கதிர்கள் மிக மென்மையாக இருந்தன. மாலை ஏற ஏற அவன் தோற்றம் மகிழ்ச்சியைத் தந்தது. வண்டியிலிருந்தே அவன் கடலில் மறைவதைக் கண்டேன். அக்காட்சியைக் கூறமுடியாது. காலியில் ஞாயிறு திருச்செந்தூர்க்கரை யில் தோன்றிய அழகு மிகுந்த காட்சியை நக்கீரர்,

> உலகம் உவப்ப வலனேர்பு திரிதரு
> பலர்புகழ் ஞாயிறு கடற்கண் டாஅங்கு
> ஓவற விமைக்கும் சேண்விளங்கு அவிர்ஒளி

என்று அழகுபடுத்திக் கூறினாற்போல, இலங்கை மேற்குக் கரையில் ஞாயிறு மறைதலை எந்தக் கவிஞன் அழகுபடக்

கூறி இருக்கிறான்; ஒருவன் இனியாவது பிறவாமை என்று எண்ணி வியந்துகொண்டே சென்றேன்.

புகைவண்டியிலே தெற்கே செல்லுகையில், நம் நாட்டில் காணுத ஒரு காட்சியைக் கண்டுகொண்டே சென்றேன். எங்குப் பார்த்தாலும் குடிவளமே நிறைந்திருந்தது. நம் ஊர்களைப்போல நெருக்கடி இல்லை. தெருக்கள் ஒழுங்காக அமையும்படி வீடுகள் இல்லை. ஒவ்வொரு வீடும் ஒரு சிறு தோட்டத்துள் அமைந்திருந்தது. செல்வர்கள் ஒரு அடுக்கு அல்லது இரண்டடுக்கு வீடுகள் கட்டி வாழுகிறார்கள். எல்லா வீடுகளுக்கும் மேலே ஓடு வேய்ந்திருக்கும். ஆனால், அழகாகப் பல கோணங்களை வைத்துக் கட்டியுள்ளார்கள். ஆண் பெண்கள் மிகத் தாராளமாக வீட்டுவெளியே புழங்கிக்கொண்டிருந்தார்கள். வீட்டு இருட்டில் அடைந்துகிடக்கும் வழக்கம் இந்நாட்டில் இல்லை. படுதா வழக்கம் சிறிதேனும் இல்லை. ஏழைகளுடைய வீடுகளோ தென்னங்கீற்றுகளால் வேயப்பட்டிருக்கும். நம் நாட்டைப்போல அத்துணைத் தூய்மைக் குறைவை இங்கே காணல் முடியாது. சிற்சில இடங்களைத் தவிர, பெரும்பான்மையான நாட்டுப்பரப்பெல்லாம் ஊர் நிறைந்தே தோன்றும். புகைவண்டிப்பாதையும் நாட்டு வழிப்பாதையும் இவ்வாறான ஊர் அமைதியைக் கற்பித்திருக்கின்றனவோ என்று எண்ணினேன். உள்நாட்டில் இருக்கும் நிலைமையைக் காண வாய்ப்பில்லை.

மக்கள் தொழில்

இந்த நாட்டு மக்கள் எல்லாரும் சிங்களவர்களே. அவர்கள் எல்லாரும் புத்தசமயத்தைச் சார்ந்தவர்கள். அங்கங்கே வெண்மைநிறமான விகாரங்களும், அவைகளை அடுத்துப் போதி என்ற வெள்ளரசுமர மேடைகளும் காணப்படுகின்றன. அடிக்கடி வண்டிகளிலும், நிலையங்களிலும், தெருக்களிலும் மஞ்சள் உடை போர்த்திக் கொண்டிருக்கும் பௌத்த குரவர்களாகிய பிக்குக்களைக் காண்கிறோம். இவர்கள் மீசை, தாடி முதலியவை சிறைத்துத் தலையை மொட்டையிட்டிருப்பார்கள். மஞ்சள்

துணியால் உடல் முழுதும் மறைத்துக் கட்டி, ஒரு துணியை இடப்புறமாகத் தோள்மீது போட்டிருப்பார்கள். இவர்கள் பார்வை பெருமிதமாக இருக்கின்றது. நமது நாட்டுக் காவித்துறவிகளைவிட இவர்கள் மிக நேர்த்தியாக உடுக்கிறார்கள். நான் உட்கார்ந்திருந்த வண்டியிலே ஒன்றிரண்டு பௌத்த குருமார்கள்கூடப் பயணம் செய்தார்கள். அவர்களுடன் ஓர் ஆங்கில உடை உடுத்தவர் சென்றுகொண்டிருந்தார். இவர்கள் மெதுவாகச் சொல்லாடிக்கொண்டே சென்றார்கள். அடிக்கடி ஆங்கிலச் சொற்களையும் சொற்றொடர்களையும் வழங்கிவந்தார்கள். அவைகள் உண்மை ஞானம், அரசியல் செய்திகள் இவைகளைக் குறித்தன. ஆகவே, நிரம்பப் படித்தவர்கள் என்று எண்ணினேன். ஆங்கில உடை கொண்ட அவர், விலையுயர்ந்த உடையைப் பூண்டிருந்தார். அவர் பெரிய அலுவலில் இருக்கவேண்டும் என்று நினைத்தேன். அவருடன் பேசிய குருவுக்கோ 35 வயது இருக்கும். முகத்தில் நிரம்பிய கல்வியின் ஒளி இருந்தது. அதிகாரி அவரை மிக மரியாதையுடன் நோக்கினர். மற்றக் குருவோ வயது சென்றவர். அவர் மிகுதியாகப் பேசவே இல்லை. ஒரு நிலையம் வந்ததே, அவ்வதிகாரி ஆரஞ்சுபானத்தைத் தருவித்து, அக்குருமார்களுக்கு அளித்தார். அவர்கள் குடித்ததும் அவ்வதிகாரி கடைக்காரனுக்குப் பணம் எடுத்து நீட்டினர். அக்கடைக்காரனோ, 'வேண்டாம்'; அடியார்களுக்கு இது 'தருமம்' என்று சொல்லி, அதை வாங்கிக்கொள்ள மறுத்து விட்டான்.

'இந்நிகழ்ச்சி நமது நாட்டில் நடக்குமோ! நமது சமயத்துறவிகளை இத்துணை மரியாதையுடன் நாம் நடத்துகிறோமா! துறவிகளும் அதற்குத் தக்கவாறு நடந்து கொள்ளுகிறார்களா' என்று எண்ணினேன். இத்துறவிகள் தினசரிகளை வாசித்துக்கொண்டும், நூல்களைப் படித்துக் கொண்டும் செல்லுவதைக் கண்டேன். இக்காட்சியை நமது நாட்டில் எப்போது காணுவது? பௌத்த பிக்குக்களைக் கண்டவுடன், அவர்கள் தோற்றமே, அவர்கள் நல்ல குலத்தில் இருந்து வந்தவர்கள் என்பதைத் தோற்று

விக்கும். நமது நாட்டைப்போல, உலகவிவகாரத்தில் தோல்விபெற்று அதிலிருந்து தப்பித்துக்கொள்ளவும், பெருங்குற்றங்களைச் செய்து அதனை மறைத்துக்கொள்ளவும், வயிற்றுக்கொடுமையைப்போக்க மருந்தும், மயக்கப் பொருள்களும் குடித்துவிட்டு உலகை மறந்துகிடக்கவும் இக்குருமார்கள் மஞ்சள் உடையை வாங்கிக்கொள்ளவில்லை என்று உறுதிசெய்துகொண்டேன்.

குடியிருப்பு

தெற்கே செல்லும் இருப்புப்பாதை மக்கள் குடியிருப்புகளின் நடுவிலேயே செல்வதால், மக்களின் வாழ்க்கைநிலைமையை மிக எளிதில் தெரிந்துகொள்ளலாம். மற்றநாட்டு மக்களைப்போல், இந்நாட்டு மக்கள் சோம்பேறிகளாக இருக்கக் காணவில்லை. பொதுவாக, மலையாளக்கரை மக்களைப்போல, எப்போதும் வேலை செய்துகொண்டே இருக்கக் காண்கிறோம். நமது நாட்டு ஊர்களில் பல ஆண்பிள்ளைகள் தெருத்திண்ணைகளிலும் ஊர்வெளியே அரசமரத்து மேடைகளிலும் வீணே குந்திக் கொண்டு, நாள்முழுதும் ஒருவேலையும் செய்யாமல் இருக்கக் காண்போம். ஆனால், சிங்களநாட்டுத் தென்மாகாணத்தில் இக்காட்சி காண்பதரிது. அதற்குக் காரணமும் உண்டு. இந்நாட்டில் அகலம் மிகுதி. வெறும் உணவிற்கே மிகுந்த பொருள் வேண்டும். ஆகவே, அனைவரும் வேலைசெய்தே தீரவேண்டும். வண்டிப்பாதையின் இருபுறங்களிலும் உள்ள தோப்புகளிலும், கழனிகளிலும் மக்கள் வேலைசெய்தவண்ணமாகவே இருக்கிறார்கள். ஆறுகளில் படகு ஓட்டுதலும், மீன்பிடித்தலும் உண்டு. அவைகளின் இருபுறங்களில் நெல் வேளாண்மை உண்டு. மற்ற நன்செய்களில் வாழை, கரும்பு முதலியன பயிரிடுகிறார்கள். தென்னந்தோப்புகளில் மட்டை பின்னுதல், கயிறு திரித்தல் முதலியன காண்கிறோம். சிறுசிறு குடிசைத் தொழில்கள் எங்கும் உண்டு. கடலோரங்களில் கிளிஞ்சலால் சுண்ணாம்பு செய்தல் காணலாம். இவ்வகைத் தொழில்கள் எப்போதும் நடப்பதைக் கண்டு, முன்னர்

சிங்களர்கள் சோம்பலில் மிகுதியாக ஈடுபட்டிருந்தாலும், இக்காலத்தில் வயிற்றுக்கொடுமையை நினைந்தாவது சோம்பலைத் தவிர்த்து உழைப்பைக் கைக்கொண்டிருக்கிறார்கள் எனலாம். புத்தபகவானை வணங்குவதற்காக ஆயிரக்கணக்கான மக்கள் சென்றுகொண்டிருந்ததை மேன்மேலும் கண்டேன். அவர்களைப் பார்த்த அளவிலே சோம்பல் பிடித்தவர்களாகத் தோன்றவில்லை. எல்லாரும் குடியானவர்களே; இருந்தாலும் உற்சாகத்தோடு இருந்தார்கள். ஆகவே, அவர்கள் எல்லாரும் யாதாவது ஒரு தொழிலில் ஈடுபட்டிருக்கவேண்டும் என்று எண்ணினேன். அதற்கு ஒத்தாற்போல வண்டிப்பாதைக்கு இருபுறங்களிலும் உழைக்கும் மக்களையே கண்டுகொண்டும் சென்றேன்.

வாழ்க்கைத் தொழில்

சிங்களர்கள் பெரும்பான்மையாகக் கைத்தொழிலிலும் உழவுத்தொழிலிலும் ஈடுபட்டிருக்கிறார்கள். அண்மைக்காலத்தில்தான் வர்த்தகங்களில் ஈடுபட்டுவருகிறார்கள். பல நூற்றாண்டுகளாக நாட்டுவர்த்தகம் முழுதும் முசுலீம் மக்களிடம் இருந்தது. இப்போதும் பெரும்பான்மையாக அவர்களிடமே இருக்கிறது. சிங்களர்கள் ஒரு அளவில் சில்லறைக்கடைகள், உணவுக்கடைகள், துணிக்கடைகள், விசைவண்டிகள் முதலியவைகளில் ஈடுபடத் தொடங்குகிறார்கள். சென்ற காலத்தில் 15 நூற்றாண்டுகளாகவே, அரேபியா தேசத்திலிருந்து அரேபிய வர்த்தகர்கள் நாவாய்களில் ஏறி, இலங்கையுடன் வர்த்தகம்புரிந்து வந்திருக்கிறார்கள். அவர்கள் இங்கிருந்த கரையோர மக்களை இசுலாம் சமயத்திலும் சேர்த்திருக்கிறார்கள். இவ்வாறாக இருமுறைகளிலும் இசுலாமிய மதம் கரையோரமாகப் பரவிவிட்டது. இசுலாமியர்களே ஐரோப்பிய நாடுகளுக்கும் கிழக்குஆசியாத் தீவுகளுக்கும் இடையே வர்த்தகத்தை நடத்தி வந்தவர்கள். இவர்கள் கடலைத் தாண்டிச்செல்லும் வீரமுடையவர்கள். எப்படிப்பட்ட துன்பங்களையும் அஞ்சாது பொறுக்கும் துணிவுள்ளவர்கள். முதலில் முத்துச் சலாபம், இலவங்கம் ஏலம் முதலிய மணப்பொருள்கள்,

தந்தம், மணிகள் முதலிய விலையுயர்ந்த கனிவகைகள், இவைகளிலே வாணிகம் செய்து, பெரும்பொருளைத் தேடினர்கள். இவ்வகையில் அரேபியர்கள் செய்த வியப்பான அனுபவங்களைத்தான் அரேபிக்கதைகளில், (1000 இரவுகளில் சொன்ன) சிந்துபாத்து நாவிகன் கதையில் காணுகிறோம். இரத்தினமலைகள், பள்ளத்தாக்குகள், தங்க உருவங்கள் முதலிய செய்திகள் எல்லாம் அக்காலத்து இலங்கையில் அவர்கள் கண்ட குறிப்புக்களே.

இசுலாமியர்கள்

இசுலாமியர்கள் இலங்கைக் கரைக்கு வந்து, தங்கள் சமயத்தையும் பரப்பி உள்ளார்கள் என்றோம். இவர்கள் அழகான இடங்களில் இசுலாமியப் பள்ளிகளைக் கட்டி வைத்தார்கள். சமய ஒழுக்கங்களில் சிறிதும் தவறுதவர்கள். இவர்கள் கட்டின பள்ளிவாசல்கள் மிகப் பொலிவு பெற்று விளங்குகின்றன. அவைகளில் சிறந்தது பெருவளை என்ற இடத்தில் உள்ளது. அரபியர்கள் முதல் முதலில் இந்தப் பெருவளையில்தான் இறங்கினர்களாம். அதன் நினைவாக ஒரு அழகிய பள்ளிவாசல் கட்டியுள்ளார்கள். கடல் ஓரத்திலே ஒரு பெரிய பாறை நீண்டு கிடக்கிறது. அந்தப் பாறை ஒரு செழிப்பான தீவுபோல நீலநிறக்கடலில் மிதக்கிறது. அதன் கரை முழுதும் பச்சைப்பசேல் என்று தென்னமரங்கள் சூழ்ந்துநிற்கின்றன. காற்றின் வீச்சால் அவைகள் அசையும்போது அத்தீவே அசைவதுபோலத் தோன்றும். அத்தோப்புகளின் உச்சியில் ஒரு பெரிய சதுர உப்பரிகை எழுந்து நிற்கிறது. வெள்ளைச்சலவைக் கற்களால் இழைத்ததுபோல, வானத்தை அளாவி ஓங்குகிறது. அதனுடைய பெரிய கும்பங்கள் நெடுந்தொலைவுக்கு ஒளிசெய்கின்றன. அதை எழுப்பின மக்கள் வெறும் வர்த்தக ஆசை பிடித்துக் காலத்தை வீண் ஆக்கியவர்கள் அல்லர். சமயத்தில் ஈடுபட்டு அழகில் ஆழ்ந்து கிடந்தவர்கள் என்றே சொல்லவேண்டும். இயற்கை அழகினை அறிந்து, அதற்கு ஏற்பச் செயற்கையழகையும் தீட்டின கலைஞர்கள் எனக் கூறவேண்டும். நாள்தோறும் ஐந்து

முறை இங்குள்ள திருப்பணியாளன் கடவுள் நாமத்தை உரக்கச் சொல்ல, அக்கம்பக்கத்து இசுலாமியர்கள் இப் பள்ளியில் கூடி இறைவனைத் தொழுவார்கள்.

உபாத்நிமைத்தொழில்

நான் இலங்கைக்கு வரும் வழியில் ஒரு இசுலாமிய வாலிபர் என்னுடன் அதே வண்டியில் அமர்ந்திருந்தார். அவர் உயர்ந்த சீமைத் துணிச் சொக்காய் அணிந்திருந்தார். இடையில் ஒரு விலையுயர்ந்த சாரம் அல்லது லுங்கி உடுத்திருந்தார். அந்த ஆடைகளைக் கண்டு, அவர் இராமநாதபுரம் சரகம் கீழக்கரை மரக்காயராக இருப்பார் என்று எண்ணினேன். பின்னல் விசாரித்ததில் அஃது உண்மை என அறிந்தேன். உடை, கைக்கடிகாரம் இவைகளைக் கண்டு ஒரு வியாபாரி என்று எண்ணினேன். அது தப்பு என்று பின்னர் அறிந்தேன். அவர் ஒரு ஆரம்பப்பாட சாலைத் தலைமை ஆசிரியர் என்றும், அவருடைய பாடசாலை தென்மாகாணத்தில் உள்ளதென்றும், அவர் உயர்தரப் பாடசாலையில் தேர்ந்தவர் என்றும், பிள்ளைகளுக்குத் தமிழும் ஆங்கிலமும் கற்றுக்கொடுக்கிறார் என்றும் அறிந்தேன். சம்பளத்தைப்பற்றிக் கேட்டேன். ரூ. 175 என்றார். எனக்கு பெரிய வியப்பு ஏற்பட்டது. நமது நாட்டில் தமிழ் கற்பிக்கும் ஆரம்ப ஆசிரியருக்கு 35, 40-க்கு மேல் இல்லையே! இங்கே இத்தனைச் சம்பளம் கிடைக்கிறதே என்று வியந்தேன். அகவிலைக்கு ஏற்றபடி சம்பளமும் உயர்த்தியிருக்கிறார்கள் என்றும், எல்லாப் பாடசாலைகளிலும் சம்பளம் அரசாங்கத்தார்களாலேயே கொடுக்கப்பட்டுவருகிறது என்றும் அறிந்தேன். என் வியப்புக்கு அளவில்லை. இசுலாமியர்கள் இங்கே தமிழும் அரபியும் ஆங்கிலமும் கற்கிறார்கள். உருது அவர்கள் விரும்புவதில்லை. தமிழ் அவர்களுடைய தாய்மொழி; அரபி சமயமொழி; ஆங்கிலம் அரசாங்க மொழி. ஆகவே இம்மூன்றுந்தான் இங்கே கற்கிறார்கள். இஃது இந்த நாட்டுப் பள்ளிவாசல்களைக் கண்டபோது நினைவிற்கு வந்தது.

பள்ளி நிலையங்கள்

இருப்புப்பாதை சென்ற வழிமுழுதும் ஊர் நிறைந்து இருந்தது என்று சொன்னேன். அவ்வாறு இருந்த ஊர்க் கட்டிடங்களில் அரைக்கல்லுக்கு ஒருமுறை ஒரே வகையான கட்டிடம் இருக்கப் பார்த்தேன். அங்கே பிள்ளைகள் போவதும், அங்கு உட்கார்ந்திருக்கவும் கண்டு, அவைகள் பாடசாலைகள் என அறிந்தேன். ஒரே கொட்டகை; இருபது மரத்தூண்களின்மேல் ஒரே கோப்பு; சுற்றிலும் 3 அடி சுற்றுச்சுவர்; ஒருபுறம் ஒரு அறை; இதுதான் பாடசாலைக் கட்டிடம்; மிக எளிமையானது; விலை குறைவானது; காற்றும் வெளிச்சமும் நிரம்ப வுள்ளது; பிள்ளைகளுக்கு உடல்நலம் தரக்கூடியது. இப்படியன்றோ பாடசாலைக்கட்டிடங்கள் இருக்கவேண்டும் என்று நினைத்தேன். நமது நாட்டுப் பாடசாலைகளுக்கு எத்துணை அடைப்புக்கள்; எத்துணைச் செலவுகள். இங்கே அரைக்கல்லுக்கு ஒரு பாடசாலை இருந்தால், ஏன் படிப்பு மிகுதியாகப் பரவாது. ஆசிரியர்களுக்குத் தகுந்த ஊதியமும் கிடைக்கின்றது. பிள்ளைகளுக்குச் சம்பளமும் இல்லை. ஆகவே, படிப்பு வகையில் இலங்கை மிகவும் முன்னேற்றம் அடைந்திருக்கிறது என்று சொல்லவேண்டும். யாழ்ப்பாணத்துத் தமிழர்கள் படிப்பில் மிகுந்த அக்கரை கொண்டவர்கள். சிங்களவர் அவ்வாறு இருக்கவில்லை. ஆனால் அண்மைக்காலத்தில் அவர்களிடமும் படிப்புப் பரவிவருகிறது. இசுலாமியரும் படிக்கத்தொடங்கிவிட்டனர். கிறித்தவர்களோ எல்லாரும் படித்தவர்களே.

விவிலியச் சமயம்

சில சமயங்களில் தென்னந்தோப்புகள் இடையிலே கூர்மையான கோபுரங்கள் சில தோன்றும். கோபுரங்களின் உச்சியிலே சிலுவை அமைந்திருக்கும். அக்கட்டிடங்களே கிறித்தவர்களுடைய பள்ளிகள். சென்ற நான்கு நூற்றாண்டுகளாக ஐரோப்பாவில் இருந்து இந்நாட்டிற்கு வந்த பல பாதிரிமார்கள், கடற்கரையோரமாக இருந்த பரவர் மக்களைக் கிறித்தவர்களாக்கிவிட்டனர். பிறகு

மெல்லச் சிங்களர்கள் சிலரையும் தம் சமயத்தில் சேர்த்துக் கொண்டனர். போர்த்துகீயரின் கொடுமையால் பல குடும் பத்தினர் கிறித்தவர்களாயினர். பல குடும்பங்கள் பெயர் அளவில் கிறித்தவர்களாக இருந்தும் உண்மையில் பௌத் தர்களாக இருக்கின்றனர். கிறித்தவர்களில் கத்தோலிக் சமயத்தாரும் பிராடஸ்டண்ட் சமயத்தாரும் உண்டு. இப்போது மதமாற்றம் மிகுதியாக இல்லை.

ஆறுகள்

ஆறுகள் கடலில் சேரும் காலத்தில் நேராகப்போய்க் கடல்நீரோடு கலக்காமல் வளைந்து வளைந்து கலப்பதுண்டு. சில இடங்களில் முகத்துவாரம் கழிகளாகத் தேங்கி நிற்கும். இப்படிப்பட்ட இடங்களில் நீர் ஆழமில்லாமல் இருக்கும். உவர்ப்பும் மிகுதியாக இருக்காது. அப்படிப்பட்ட நீரில் குளிப்பது நலந்தருவது. குளிக்கும்போது உடம்புக்கு மிக இன்பமாக இருக்கும். பகற்காலங்களில் அவ்வாற்றங் கழிகளில் பெரும்பான்மையான மக்கள் குளிப்பார்கள். சிங்களர்களுக்கு நீர்விளையாட்டில் மிக விருப்பம். புகை வண்டியில் போகும்போது ஆண் பெண் குழந்தைகளோடு அவர்கள் ஆறுகளில் குளிப்பதைக் கண்டு மகிழலாம். அவ்வழகை எடுத்துக்கூற ஒரு கம்பர்தான் வேண்டும்!

படகுகள்

ஆறுகளிலும் கடலிலும் படகுகள் ஓடுவதை அடிக் கடி காணலாம். அப்படகுகள் மீன் பிடிப்பதற்காகச் செலுத்தப்படுகின்றன. அவைகளின் அமைப்பு வியப் பைத் தந்தது. சென்னைக்கடற்கரையில் தோணிகளும் கட்டுமரங்களும் கிடக்கின்றன. தோணிகள் மரப்பலகை கள் பலவற்றைப் பிணைத்துச் செய்திருப்பவை. கட்டு மரங்களோ பெரிய கட்டைகள் நான்கு ஐந்து சேர்த்துக் கயிற்றால் கட்டப்பட்டிருப்பவை. இரண்டும் வெவ்வேறு இனத்தவை. ஆனால் தென்னிலங்கை மீன் படகுகளோ இரண்டும் சேர்ந்த அமைப்பைக் கொண்டவை. ஆனால், படகுப்பகுதி ஒரே மரத்தில் தோண்டியிருப்பது. கட்டு

மரப்பகுதி இரண்டு மூன்று கட்டைகளைக் கொண்டது. இவ்விரண்டையும் இணைத்துச் சில தண்டு மரங்களால் கட்டியிருப்பார்கள். இவ்வகை அமைப்பை வேறு எங்கும் நான் கண்டதில்லை. இவ்வமைப்பின் காரணம் அது நீருக்குள் அமிழாதிருக்கும்பொருட்டு என்று எண்ணினேன். படகுகள் மிகப் பெரியவைகள் அல்ல. ஆகையால் மூழ்காதிருக்கும்பொருட்டுக் கட்டுமரங்களை இணைத்திருக்கின்றனர் போலும்.

மீன்

மீன்பிடித்தல் ஒரு சிறந்த தொழில். சிங்களர் பௌத்தர்களாகியும் மீன் தின்பது உண்டு. புத்தருடைய கொல்லாமை என்ற படிப்பை அவர்கள் மறந்துவிட்டனர் போலும். எந்தக் கடையிலும் மீன் விற்கிறார்கள். அதிலும் கருவாடு என்று சொல்லும் உலர்ந்த மீன்களே மிகுதி. கடலிலிருந்து எடுக்கும் பெரிய சதுர மீன்கள் கடையில் மிகுதியாக விற்பனை ஆகும். இலங்கையிலே மீன் பிடிக்கும் தொழில் மிகுதியாக இருந்தபோதிலும், இந்நாட்டு மக்களுக்குப் போதாமையால் மலையாளத்துக் கள்ளிக் கோட்டை என்ற கோழிக்கோட்டிலிருந்தும் மிகுதியான மீன் இங்கு அனுப்பப்படுகிறது. அந்த வியாபாரத்தில் மிகுந்த இலாபம் உண்டு என்று ஒரு முசுலீம் வர்த்தகன் கூறினான்.

மரமேறிகள்

தென்னமரங்கள் மிகுதியாக உள்ளதனால் மரமேறும் வகுப்பார் இங்கு மிகுதியானோர். அவர்கள் தேங்காய்களைப் பிடுங்குவதற்காக மட்டும் மரம் ஏறுவதில்லை. அதைவிட வருமானம் தருவது கள் இறக்கும் தொழிலே. கள் மிகுதியாக இங்கு எடுக்கப்படுகிறது. சிங்களர் இக்குடிப் பழக்கத்தில் மிகுதியாக ஈடுபடத் தொடங்கிவிட்டனர். சிங்களர்களுக்குள் சமயக் குருக்கள் இருந்தபோதிலும், இவர்கள் போதனை தகுந்தபடி இருக்குமாறால், இவ்வகைக் கெட்ட பழக்கங்கள் மிகுதியாகுமா என்று எண்ணினேன்.

தென்னையின் பயனை இலங்கையர்களே மிகுதியும் அறிவார்கள். வீடு வேய்வதற்கு அதன் மட்டைகளும், கயிறு திரிப்பதற்கு அதன் நாரும், வீடு கட்டுவதற்கு அடிமரமும், எண்ணெய் எடுப்பதற்கு அதன் பருப்பும், உண்ணுவதற்குத் தேங்காயும், குடிப்பதற்கு அதன் இள நீரும் பயன்படுகின்றன அல்லவா? ஒரு இளநீரில் ஒரு ஆள் குடிக்கமுடியாத அத்தனை நீர் இருக்கக் கண்டேன். பெரிய தேங்காய் ஓடுகளைப் பலவகை அழகிய பாத்திரங்களாகவும் கோப்பைகளாகவும் துறவிகளின் ஓடுகளாகவும் பயன்படுத்துகின்றனர். நான் இலங்கையில் சொற்பொழிவு ஆற்றினபோது, அகமகிழ்ந்து தேங்காய் ஓட்டால் சித்திரித்த ஒரு அழகிய பொருளைப் பரிசாகத் தந்தார்கள். அதனை என் காட்சியறையில் வைத்துள்ளேன். அந்த அருமைப்பணி நமது நாட்டில் செய்வதரிது.

ஊர்கள்

இனி, வழியில் கண்ட சில ஊர்களைப்பற்றிக் கூற வேண்டும். கொழும்புக்குப் பதினைந்து மைலில் மோரதுவை என்ற ஊரில் மரவேலை மிகுதியாக நடைபெறுகிறது. பல குடும்பத்தார்களும் இவ்வேலையில் ஈடுபடுகிறார்கள். மரங்களின் நிழலிலே மரத்தொழில் செய்வதைப் பார்க்கலாம். குறிச்சி, நாற்காலி, சோபா, பெஞ்சிகள், மேசைகள், அலமாரிகள் முதலியன மிக நன்றாகச் செய்யப்படுகின்றன. அதற்கு வேண்டிய மரங்களைக் காடுகளிலிருந்து வெட்டி, ஆறுகளில் மிதக்கவிட்டுக் கடற்கரை வழியாகக் கொண்டுவருகிறார்கள்.

களுத்துறை

இன்னும் தெற்கே சென்றால் 'களுத்துறை' என்ற சிறந்த நகரத்தைக் காண்கிறோம். அது களுக்கங்கை என்ற அகலமான ஆற்றங்கரையில் தெற்கே இருக்கின்றது. இவ்வூரில் மிகுதியாகப் பனையோலைச் சாமான்கள் செய்யப்படுகின்றன. தொப்பிகள், கூடைகள், பைகள், பெட்டிகள், பாய்கள் முதலியன மிக நுட்பமாகச் செய்யப்படுகின்றன. பலவகை நிறங்களைக் கொடுத்து இரத்தினக் கம்பளங்

கள்போலப் பின்னுகிறார்கள். இவ்வூர் முன் காலத்தில் மிகப் பெயர்பெற்றிருந்தது. பாண்டிய வமிசத்துச் சிற்றரசன் ஒருவன் 1052-ல் இலங்கைக்கு வந்து அங்கிருந்த குழப்பத்தை முன்னிட்டு அரசபதவி ஏற்றுக், களுத்துறையைத் தன் தலைநகராக்கிக்கொண்டு ஒரு ஆண்டு ஆண்டான். பிறகு அப்பதவிகள் அவனுக்கும் இந்நகருக்கும் போய்விட்டது.

காலி

மேலும் பல நிலையங்களைத் தாண்டிச் சென்றால் 'காலி' என்ற பெரிய நகரை அடைவோம். இங்கே புகைவண்டி நின்றுவிடுகிறது. இது கொழும்பிலிருந்து 75 மைல் அளவில் உள்ளது. இதிலிருந்து ஒரு கிளை மறுபடியும் மாத்தறைக்குச் செல்லுகிறது. காலி பாறையடர்ந்த ஒரு இடம். கடலிலே பெரும்பாறை நீண்டுகிடக்கிறது. அதற்கு இருபுறத்திலும் கடல் குடாக்களைப்போல் உள்ளே செல்லுகிறது. இந்தப் பாறை கடலுக்குமேல் உயர்ந்து ஒரு பீட பூமியைப்போல் இருப்பதால், மிகுந்த வலிமை பொருந்திய இடம் ஆக இருக்கிறது. இதை அறிந்த ஐரோப்பியர்கள் முதல்முதலில் இப்பாறையை ஒரு பெரிய கோட்டையாகக் கட்டினர். அதுமுதற்கொண்டு இவ்வூர் அவர்கள் உரிமை ஆகிவிட்டது. நகரைச்சுற்றிலும் குன்றுகள் உள்ளன. ஆகவே, நகருக்கும் இயற்கையான அரண் ஏற்பட்டது. பகைவர்கள் இதனை எளிதில் அசைக்க முடியாது. இத்தனை வலுவான இடமே டச்சுக்காரர்களுக்குப் பெரிய தலைநகரமாகப் பலகாலம் இருந்தது.

பண்டை வரலாறு

அரபிய யாத்திரி இபின்பதூதா என்பவன், 1344-ல் இலங்கையைக் கண்டபோது காலிக்கு வந்திருந்தான். அப்போதே அங்கு இவ்வூர் இருந்தது. பிறகு 1506-ல் போர்த்துகீயர் முதல்முதலில் இங்கே இறங்கினர்கள். 1640-ல் டச்சுக்காரர்கள் அதனைப் பிடித்து வலுவாக்கிக்கொண்டார்கள். ஆங்கிலர் அதனை 1796-ல் கைப்பற்றினர். இப்போது தென்மாகாணத்திற்கு இந்நகரமே தலைநகரமாக இருக்

கிறது. இந்நகரம் பலவகையிலும் மிகச்சிறப்புடன் விளங்குகிறது.

ஊர் வலம்

காலிக்கோட்டைக்கு இருபுறங்களிலும் கடற்கரை ஓரமாக ஊர் பரந்திருக்கிறது. பெருந்தெரு கடற்கரையை ஒட்டியே செல்லுகிறது. ஊரின் நிலமட்டம் கடலின் நீர்மட்டத்திற்கு மேலே 20 அடி உயரத்தில் இருக்கிறது. கடைத்தெரு கோட்டைக்குத் தென்கிழக்கிலும் மேற்கிலும் உள்ளது. கிழக்கில் சில்லறைக்கடைகளும் மேற்கில் வட்டிக்கடைகளும் இருக்கின்றன. ஊர்த்தெருவிற்கும் கோட்டைக்கும் இடையில் ஒரு புற்றரை பரந்துகிடக்கிறது. மாலைவேளைகளில் பொதுமக்கள் இங்கே கூடிப்பந்து முதலியவை விளையாடுகிறார்கள். அந்த வெளியிடத்திற்கு மேற்கே பூங்கா ஒன்று இருக்கிறது. அதனையொட்டி ஒரு சிறு தெரு கடற்கரை மட்டும் செல்லுகிறது. இத் தெருவில் ஒரு சிவன்கோவில் இருக்கிறது. இதனை இவ்வூர்த் தமிழ்மக்கள் ஓம்புகின்றனர். சிவன்கோவில் தென்நாட்டு முறையில் கட்டப்பட்டிருக்கின்றது. பூசை முதலியவைகளும் ஆதிசைவக் குருக்களால் செய்யப்பட்டுவருகிறது. நான் சென்றபோது அக்கோயிலில் திருவிழா நடந்துகொண்டிருந்தது. ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு வகையார் திருவிழாப் பொறுப்பை எடுத்துக்கொண்டு நடத்தினர். நான் தங்கின இரவு திருவிழா மிக நன்முறையில் நடைபெற்றது. அந்த ஊரில் குடியிருந்த அரசியல் பகுதிக் கணக்காளர்கள் அதனை நடத்தினர்கள். ஒரு இரவில் 1500 ரூ. செலவு செய்யப்பட்டது. வந்தவர்களுக்குச் சிற்றுண்டி வழங்கப்பட்டது. இசைக்கு மட்டும் 500 ரூபாய். வாணவேடிக்கையும இருந்தது. ஒரு சகட்டின்மேல் அழகான விமானத்தை ஏற்றி, அதற்கு மின்சாரவிளக்குத் தோரணங்களை அணிசெய்வித்து, அதற்கு ஒளி தருவதற்கு ஒரு யந்திரத்தைக் கட்டி இழுத்துச்சென்றனர். அந்த ஊர்வலம் இரவு 12 மணிக்குப் புறப்பட்டுக் காலை 6 மணிவரை நடந்தது. அன்று எவரும் தூங்கவில்லை. தமிழர்களை

அன்றிச் சிங்களரும் விழாக் காண வந்திருந்தார்கள். கோயில் கொட்டகையில் நான் ஒரு சொற்பொழிவு செய்தேன். குறைவான மக்களே இதனைக் கேட்டார்கள். எல்லாருடைய கருத்தும் திருவிழாவின்மேலும் இசைக் கச்சேரியிலுமே இருந்தது. இந்த ஊரில் யாழ்ப்பாணத் தமிழர்கள் நூற்றுக்கணக்காக இருக்கின்றனர். ஆபீசுகளில் கணக்காளர்களாயும், உத்தியோகத்தர்களாகவும் ஆசிரியர்களாகவும் இருக்கின்றனர். ஏனையோர்கள் வியாபாரத்துறைகளில் முதலாளிகளாகவும், கணக்கர்களாகவும் இருக்கின்றனர். மேலும் நகரத்துச்செட்டிமக்கள் வட்டிக் கடை வைத்திருக்கின்றனர். அவர்களுக்குத் தனியாகக் கதிர்வேலன் கோயில் இருக்கின்றது. அதனையொட்டிக் கடைகள் இருக்கின்றன. சிவன்கோயிலை ஒட்டி ஒரு தமிழர்விடுதி இருக்கிறது. இதில்தான் நான் இறங்கியிருந்தேன். இந்த இடங்களுக்கு வடக்கே சிறைச் சாலையும் புகைவண்டிநிலையமும் இருக்கின்றன. இவ்வூர் ஒரு நகர அவை உள்ள பெரிய பட்டினம். கல்லூரிகள் மருத்துவசாலைகள், கிறித்தவப் பள்ளிகள், பௌத்தப் பள்ளிகள் பல இருக்கின்றன. இதற்குக் கிழக்கிலும், மேற்கிலும் பெரிய பாதை ஓடுகிறது.

குடிசைத்தொழில்கள்

காலியில் மேற்குநாட்டு யந்திரத்தொழில் புகாமல் இருந்தபோதிலும், பல குடிசைத்தொழில்கள் உண்டு. தேங்காய்த்தொட்டியில் புதுமையான வேலைப்பாடுகள், சந்திரகாந்தக் கல்லில் இழைப்பு வேலை, ஆமை ஓட்டில் புதுமையான செதுக்குப்பணிகள், கடல் கிளிஞ்சல், சிப்பி இவைகளில் விளையாட்டுப்பொருள்கள் முதலியன குடிசைத்தொழில்களாகச் செய்யப்படுகின்றன. வெளிநாட்டார்கள் இப்பொருள்களை மிகுதியும் விரும்பி வாங்குவார்கள். இவ்வூரில் தங்குவோர்க்கு உணவு விடுதிகள் உண்டு. தமிழர்கள் சிவன்கோவில் விடுதியிலும், ஆங்கிலநாகரிகத்தோர் ஐரோப்பிய உணவு விடுதியிலும் இருக்கலாம். இவ்வூரிலிருந்து பல இடங்களுக்குச் செல்ல விசைவண்டி

வசதிகள் உண்டு. பாதைகள் எல்லாம் மிகத் தூய்மையாக இருக்கின்றன. கோடைக்காலத்திலும் கடற்காற்றில் சூடு தெரிவதில்லை.

இணைப்பு

முத்தின் தலைப்பகுதியில் கோக்கும் துளை கண்டோம்; அடிப்பகுதிவரை அத்துளை செல்லுமன்றே? அதன் அடித்துளையில்தான் முத்து விழாமல் தொங்கும் வண்ணம் கம்பி பிடித்துநிற்கும். அத்துளைதான் 'கதிர்காமம்' என்னும் தூய தலம் ஆகும். யாழ்ப்பாணத்தைப் போலவே கதிர்காமமும் தெற்கே நின்று, தமிழ்த்தெய்வம் என்னும் கம்பியால், இந்தியாவைப் பிணைத்து நிற்கிறது. அதனை விளக்குவோம்.

---

14. முத்து இணைப்பின் அடித்துளை அழகு

உருகுனை வட்டம்

வடிவம்

இலங்கையின் தெற்குக்கரை செப்புப்பாத்திரத்தின் அடித்தகடுபோல் தட்டையானது. இருபுறங்களிலும் சிறிது வளைந்திருப்பதால் கடலின்மேல் மிதக்கும் பாத்திரமோ என்று படத்தைக் கண்டால் தோன்றும். நேரில் கண்டால் கடற்கரை கற்பாறைகளால் ஆக்கப்பட்டதாகத் தெரியும். ஆனால் அப்பாறைகள் நீர்மட்டத்திற்குமேல் சிறிது உயரம்தான் இருக்கும். கடலுக்குக் கரை கட்டினது போல அவை தோன்றும். சிற்சில இடங்களில் கடலுக்குள் சில கோல்கள் நீண்டிருக்கும். அவ்வகை நீண்டுள்ளவைகளில் ஒன்று காலி என்று முன்னமே கூறியுள்ளோம். மற்றொன்று மாத்துறைக்கருகில் உள்ள டோன்டணை முனை. மாத்துறைக்கு இருபது கல் மட்டும் நிலம் செழிப்பாக இருக்கிறது. பிறகு வறட்சியாக இருக்கிறது. ஆகவே புதிதான நிலவட்டத்திற்கு நாம் போகிறோம்.

பண்டைப் பிரிவுகள்

1500 ஆண்டுகளுக்கு முன்னிருந்தே இலங்கை மூப் பிரிவுகளாகப் பிரிந்திருந்தது. வடபகுதிக்கு 'ராஜராட்டம்' என்றும், நடுப்பகுதிக்கு 'மாயாராட்டம்' என்றும், தென் பகுதிக்கு 'உருகுணை ராட்டம்' என்றும் பெயர் இட்டிருந் தார்கள். ஆட்சியிலும் இளவரசர்களை இந்தப் பிரிவுகளுக்குத் தலைவர்களாக அனுப்பியிருந்தார்கள். ராஜம் என்ற வட பிரிவு மாவலிகங்கை டெடுனி ஓயா ஆற்றுக்கும் வடக்கே உள்ளது. மாயம் என்ற நடுப்பிரிவு களுகங்கைக்கு வடக்கே உள்ளது. உருகுணை என்ற தென்பிரிவு களு கங்கை மாவலிகங்கை இவைகளுக்குத் தெற்கே உள்ளது. உருகுணை என்ற பெயரைச் சிங்களர்கள் பல நிலையங்களுக் கும் இட்டு வழங்குவதைக் காணலாம். அண்மையில் இந்தத் தெற்குமாகாணத்தில் ஓடும் விசைவண்டிகளுக்கு உருகுணை என்ற பெயர் எழுதியிருப்பதை அறியலாம். காலியிலிருந்து மாத்துறை 25 கல்லில் உள்ளது. இதில் புகைவண்டியும் நடைவழியும் உண்டு. மாத்துறைக்குக் கிழக்கே திசமாராமை என்ற பெரிய நகரத்திற்கு 65 கல் இருக்கும். இந்தப் பரந்த நிலம் முற்றும் உருகுணையை சேர்ந்ததே. இதில் கரை ஓரம் சமநிலமாகவும், உள்நாடு சிறு குன்றுகள் அடர்ந்ததாகவும் இருக்கும். ஹம்பன் தோட்டத்திற்குக் கிழக்கே கடலில் சில சிறிய தீவுகள் இருக்கின்றன. அத்தீவுகளில் முன்காலத்தில் அரக்கர் இருந்ததாகக் கூறுவர். அவைகளில் பெரிய பாறைத் தீவுதான் இராவணன்கோட்டை என்பர்.

வழிநடை

காலியிலிருந்து காலை 8 மணிக்குக் கட்டுசோறு கட்டிக்கொண்டு சென்றோம். நேராகக் கதிர்காமம் வரைக்கும் ஒரு விசைவண்டி அமர்த்திக்கொண்டு சென் றோம். காலியிலிருந்த சைவநண்பர்கள் இருவர் என்னோடு வந்தார்கள். அவர்கள் வியாபாரிகள்; சைவத்திலும் தமிழி லும் மிகுந்த பற்றுடையவர்கள். எனக்கு முன்பின் பழக் கம் இல்லாதிருந்தும், சைவநூல் ஆசிரியன் என்ற செய்தி

அறிந்ததும், எனக்கு அவர்கள் காட்டின அன்புக்கு அளவில்லை. காலியிலிருந்து தங்கள் சொந்த முயற்சியில் வண்டி அமர்த்தி, கூடவே வந்து செய்யவேண்டிய வசதிகள் எல்லாம் செய்து, திருப்பி ஊருக்குக்கொண்டுவந்து விட்டுப், பின் புகைவண்டி ஏற்றி அனுப்பும்வரை என் உடனேயே இருந்தார்கள். அவர்கள் அன்பு இன்ன தன்மையது என்று எழுத்தால் எழுதமுடியாது. எந்நாளும் நெஞ்சில் இருத்திவைக்கும்படியான ஒரு நன்றியைச் செய்தவர்கள் ஆவார்கள். அவர்களோடு காலை புறப்பட்டதும் 10 மணிக்குள்ளாக மாத்துறை சேர்ந்தோம். அவ்வூர் பெரிய வர்த்தகத்தலம். புகைவண்டி இந்த ஊரோடு நின்றுவிடுகிறது. வழிமுற்றும் மிக செழிப்பானது என்று மறுமுறையும் கூறவேண்டும். மாத்துறையைவிட்டுக் கிழக்கே சென்றோம். சிறுதுதொலை கழனிகளும் தோப்புகளும் தோன்றின. வழிநெடுக உருகுனை விசைவண்டிகள் போய்க்கொண்டும் வந்துகொண்டும் இருந்தன. தங்காலை வரைக்கும் அக் காட்சி இருந்தது. பிறகு வறட்சி காணப்பட்டது. வழி கடற்கரைக்கு எட்டிச்சென்றது. பெரிய கழிநீர்நிலைகள் காணப்பட்டன. பயிர்பச்சை தோப்பு தொழுவம் குறையத்தொடங்கின. மணல்திடல்கள்தான் காண்கிறோம். வெய்யிலிலை தார்ப்பாதை சூடு ஏறிக் கண்ணை வருத்தியது. சில இடங்களில் அரசாங்கப் பண்ணைகள் தோன்றின. ஒரு பண்ணையில் வரிசையாக இலவமரங்கள் நின்றுகொண்டிருந்தன. அம்மரங்கள் நெடுங் கிளைகளை விரித்துக்கொண்டு செங்குத்தாக நின்றன. இலவங் கொட்டைகள் துருஞ்சில்கள்போல் தொங்கிக்கொண்டிருந்தன. வடநாட்டில் விசயதசமியின்போது இராவண வதத்தைத் திருவிழாவாகக் கொண்டாடுவதுண்டு. அப்போது இராவணன் கும்பகருணன் முதலிய அரக்கர்களைப் போல் கொடும்பாவிகளைச் செய்து நிறுத்தி, அம்புகளைப் போட்டுக் கொளுத்துவதுண்டு. அந்த அரக்க உருவங்கள் 50 அடி உயரமாகவும், கைகள் இருபுறங்களில் மிக நீண்டும், தலை சிறிதாகவும் அமைக்கப்பெற்றிருப்பன. அந்த உருவங்களைப் புகைப்படங்களில் பார்த்திருக்கிறேன். இந்த

இலவமரங்கள் அவ்வருவங்களைப்போல் அழகின்றி நின்றன. அந்தக் காரணத்தினால்தானே இலவமரம் வீடுகளில் இருக்கக்கூடாது என்று பெரியோர்கள் சொல்லுகிறார்கள் என்று எண்ணினேன். பிறகு, அம்பலத்தோட்டை, ஹம்பன் தோட்டை என்ற ஊர்களின் வழியே சென்றேன். செல்லும் வழியில் ஒரு இடத்தில் எங்கள் வண்டி பழுதுபட்டது. அதனைச் சரிப்படுத்த வண்டி ஓட்டியால் முடியவில்லை. வழியே சென்ற வேறு வண்டிக்காரர்கள் உதவியால் சிறிது தொலை சென்றது. இறுதியில் ஏறக்குறைய இரண்டு மணிக்கு திசமாராமை என்ற இடம் சென்றோம். அங்கே கட்டுசோறு அருந்தி, நன்னீர் குடித்துவிட்டு, சிறிதுநேரம் ஓய்வு கொண்டோம். வண்டிக்காரனும் வேறு வண்டியோட்டிகளின் உதவியால் வண்டியைச் சரிப்படுத்திக் கொண்டான். இதற்குள் 4 மணி ஆகிவிட்டது. பிறகு திசைமாராமைவிட்டுக் கதிர்காமத்து வழியே சென்றோம். இந்தச் சமயத்தில் திசைமாராமையைப்பற்றிச் சில சொற்கள் கூறவேண்டும்.

திசைமாராமை

'திசைமாராமை' ஒரு பழமையான ஊர். கடற்கரைக்கும் இதற்கும் ஏறக்குறைய 12 கல் இருக்கும். இதற்கு ஏற்பட்ட கடற்கரைத்துறைக்கு கிரிந்தை என்பது பெயர். இவ்வூர்க்கருகில் அரசியலார் ஒரு விவசாயப்பண்ணை ஏற்படுத்தி உழவுத்தொழிலைப் பெருக்கிவருகிறார்கள். முன்னாளிலேயே அருகிலுள்ள ஒரு ஆற்றின் நீரைத் தேக்குவதற்கு அணைகோலி, ஒரு பெரிய ஏரியைக் கட்டிவைத்துள்ளார்கள். ஏரியின் பாய்ச்சலால் பல ஏக்கர் நிலங்கள் நன்செய்ச் சாகுபடி ஆகின்றன. ஊரில் கடைத்தெருவும், வண்டிநிலையமும், சந்தைக்கூட்டமும். மற்றும் பலவும் உண்டு. ஊரில் பொதுக்கட்டடங்களும், ஏரிக்கரையில் ஒரு அழகிய விடுதியும் உண்டு. சுற்றிலுமுள்ள நன்செய்களில் நெல், வாழை, தென்னை, கரும்பு முதலிய விளைபொருள்கள் மிகுதியாக உண்டுபண்ணப்படுகின்றன. இதுவரையில்தான் விசைவண்டி செல்லுகிறது. கதிர்

காமத்திற்கு வாடகை விசைவண்டி செல்லுவதில்லை. எருதுவண்டியோ அல்லது சொந்த விசைவண்டியோ தான் கொண்டுபோகமுடியும்.

'திசைமாராமை' என்றசொல் திசை+மகா+ஆராமம் என்பவைகளின் கூட்டுச்சொல் ஆகும். திசை என்பதுகட்டின அரசனின் பெயர்; மகா என்றால் பெரிய; ஆராமம் என்றால் பூஞ்சோலை அல்லது நந்தவனம். பொதுவாக ஆராமம் என்பது, பௌத்தர்கள் தூய இடமாகக் கொள்ளும் சோலைக்குப் பெயர். அதில் பெரும்பாலும் பௌத்தசமய நிலையமாகிய விகாரம் ஒன்று இருக்கும். இந்த ஊரில் ஏரிக்குத் தெற்கே, நன்செய்நிலங்களின் நடுவிலே, ஒரு பெரிய வெள்ளை விகாரம் இருக்கிறது. இந்தத் தூபி நெடுந்தொலைவிலிருந்தும் தெரியும். இதைக் கட்டினவன் திசா என்ற அரசன். ஆராமம் என்பதினால், இந்த இடம் முன்னம் அநுராதபுரத்தைப்போலப் பெருஞ்சோலையாக இருக்கவேண்டும் என்று கூறலாம். அநுராதபுரம், பொலனறுவை முதலிய ஊர்களில் 'ஆராமங்கள்' என்ற தூய இடப்பெயர்கள் இருக்கக் காண்கிறோம். மேலும், ஆந்திரநாட்டில் கிருஷ்ணாநதி ஓரமாக ஐந்து ஆராமங்கள் இப்போதும் இருப்பதை அறிவோம். அவைகள் முன்காலத்தில் பௌத்தத் தலங்களாக இருந்திருக்கவேண்டும் என்க.

அதன் பெருமை

திசைமாராமை முன்னாளில் உருகுணை என்ற தென்பகுதிக்குத் தலைநகராக இருந்தது. இப்பகுதியை ஆண்ட அரச வமிசத்தினர் இங்கிருந்தே ஆட்சிபுரிந்தார்கள். கிறித்துவுக்கு ஒன்றரை நூற்றாண்டுக்கு முன்னே இலங்கையில் அரசியல் அதிகாரத்தை முன்னிட்டுப் பெரும் போர் நடந்தது. இலங்கை சிங்களருக்கா தமிழருக்கா என்பது அப்போரின் நோக்கம். முதலில் வடநாட்டு விசயன் இலங்கையின் அரசனாகி அதனை ஆண்டான். அவன் சந்ததியாரே 4 நூற்றாண்டுகள் ஆண்டனர். ஆனால், தமிழர்களோ அடிக்கடி அதனைப் பிடிக்க முயன்றனர். கி. மு. 200-ல்

ஏலேலசிங்கன் என்ற தமிழ் அரசன் இலங்கையின்மீது படையெடுத்துத், தலைநகரைப் பிடித்து அதன் அரசனைன். சிங்கள அரசன் தெற்கே ஓடிப்போய் உருகுணையில் அடைக்கலம் புகுந்தான். அவன் இத் தலைநகரைக் கட்டி ஆண்டான்.

அதன் வரலாறு

இவ்வாறு உருகுணையில் தலைநகர்கட்டி ஆண்ட அரசன் பெயர் காகவண்ணதிசன் அல்லது காவன்திசன் என்பது. அவன் மேனி காக்கைபோலக் கருத்து இருந்ததுபோலும். அந்தத் திசன் பௌத்தசமயத்தில் மிகப் பற்றுவாய்ந்திருந்தான். ஆகவே, தூய்மை பெறற்பொருட்டு ஒரு அழகிய வெள்ளைத்தூபி ஒன்றை ஆற்றோரத்தில் கட்டினான். ஆகையால், அவன் பெயர் அதற்கு ஏற்பட்டு, திசை+மகா+ஆராமம் என்று நிலைத்துவிட்டது. ஊருக்கும் அப் பெயரே ஏற்பட்டது.

இந்தத் திசன் அங்கே அரசாண்டுகொண்டிருக்கையில், கடலிலே ஒரு பெட்டி மிதந்துவந்தது. அதில் ஒரு அழகிய இளவரசி இருந்தாள். அவள் கழனியா அரசனின் மகள். அவ்வரசன் அக்குழந்தையின் சாதகம் கெட்டதென்று கேள்வியுற்று, இரக்கமின்றி அக்குழந்தையைப் பெட்டியில் வைத்துக் கடலில் விட்டானும். கடலரசனும் இக் கொடுஞ்செயலுக்காக அவ்வரசனுடைய நகரை அழித்தானும். இனி, பெட்டியில் கண்ட இளவரசி விகாரமாதேவியைத் திசன் எடுத்துக்கொண்டுபோய் வளர்த்து மணம் செய்துகொண்டான். அவளுக்கு இரண்டு குமாரர்கள் பிறந்தார்கள். ஒருவன் கெழுனு. மற்றவன் திசன். இவர்களிலே கெழுனு மிக வீரத்துடன் வளர்ந்தான். ஒருநாள் அவன் தன் படுக்கையில் கால்களைக் குறுக்கிக்கொண்டு படுத்திருந்தான். தாய் அரசி அவனை நோக்கி, 'கண்ணே! ஏன் கால்களை நீட்டி இன்பமாகப் படுக்கக்கூடாது. நீட்டிக்கொள்ளேன்!' என்றாள். "அம்மா! ஒருபுறமோ கடல்; மற்றப்புறமோ மாவலி கங்கை; அதற்கப்புறம் தமிழர்கள் இருந்து நெருக்குகிறார்

கள். அப்படியானால், நான் கால்நீட்ட எங்கே இடம்?' என்றான். ஆகவே, அச் சிறுவயதிலேயே தன் நாடு குறுகிவிட்டதைக் குறித்துக் கெழுனு கவலைப்பட்டுக்கொண்டிருந்தான். இந்தக் கவலையிலே வளர்ந்த கெழுனு தன் வல்லமையை மிகுதிப்படுத்திக்கொண்டே வந்தான். காலைப்பருவம் அடைந்ததும், தன் தகப்பனை நோக்கித் தமிழர்களை அநுராதபுரத்திலிருந்து துரத்திவிடக் கோரினான். அது தொல்லையானது என்று எண்ணி, சிறிது பொறுக்கும்படி தகப்பன் கூறினான். இவ்வாறு மும்முறையும் அரசன் மறுத்தான். இதனைக் கண்டு மிகவும் சினத்துடன் தன் தகப்பனிடம் மாதர்கலன்களான வளையலும் பந்தும் அனுப்பினான். இவ்வாறு தந்தைக்குமிஞ்சிய செயலைச் செய்ததற்காக, இவன் அதுமுதல் துட்ட கெழுனு என்று அழைக்கப்பெற்றான். பின்னர், படைகளைத் திரட்டிக்கொண்டு, அநுராதபுரத்தை வென்று, எலேலனைக் கொன்று தானே பட்டம்ஏற்றான். ஆனால், அவன் பெயர் துட்ட கெழுனு என்றே நிலைத்துவிட்டது. இந்தப் போரோடு தமிழர் படையெடுப்பு நிற்கவில்லை. பின்னரும் பல நூற்றாண்டுகளில் தமிழர்கள் படையெடுத்துக்கொண்டே இருந்தார்கள். ஆகவே, அக்காலங்களில் எல்லாம் உருகுணை ஒரு புகலிடமாகவே இருந்தது. சிங்கள அரசன் அநுராதபுரத்தில் இருந்தாலும், ஒரு இளவரசன் உருகுணையில் திசைமாராமையில் இருந்துகொண்டே இருந்தான். ஆகவே, திசைமாராமை சிறந்த நிலைமையில் எப்போதும் இருந்துவந்தது. தமிழர்களும் சலிக்காமல் படையெடுத்து, இலங்கையின் வடபகுதியைப் பிரித்து ஆண்டுவந்தார்கள். இலங்கையில் மூன்றில் ஒருபகுதி அவர்களுக்கே ஆகிவிட்டது. தெற்கேயும் அவர்களுடைய சமயச்சார்புகளை வைத்துக்கொண்டே இருந்தார்கள். அதுதான் கதிர்காமம்.

அடவிவழி

திசைமாராமைக்கு ஒரு கல் வடக்கே ஒருவழி கிழக்கில் திரும்புகிறது. இதில் சென்றால் பெரிய ஏரிக்கரை மீது அவ்வழி சென்று, வடக்கே மறுபடியும் திரும்புகிறது. ஏரிக்கரை தாண்டினதும் யாத்திரிகர் விடுதியைக்

காண்கிறோம். இவ்விடுதி ஐரோப்பிய முறையில், அதிகாரிகள் தங்குவதற்கு ஏற்ற வகையில், பெரிதாக அமைந்திருக்கிறது. ஏரியின் பரந்த நீர் நீலநிறத்துடன் விரிந்திருப்பதால், இவ்விடுதிக்குக் குளிர்ச்சியைத் தருகிறது. சுற்றிலும் பெரிய மரங்கள் நிழலைத் தருகின்றன. இங்கிருந்து பாதை இன்னும் செவ்வையாக்கப்படவில்லை. நாட்டுப்புறத்துப் பாதையைப் போலச் சிறுத்தும் கரடுமுரடாகவும் இருக்கிறது. கூடிய விரைவில் இதனையும் செவ்வைப்படுத்துவார்கள் என்று எண்ணலாம். இப்பாதையில் சில ஆண்டுகள் வரையில் மக்கள் நடந்தே போய்க்கொண்டிருந்தார்கள். பிறகு எருத்துவண்டித்தடம் ஆயிற்று. இப்போது விசைவண்டி போகக்கூடிய நிலையில் இருக்கிறது. பள்ளத்தாக்கான இடங்களை இப்போது மேடாக்கிவருகிறார்கள். இனிமேல் நீர் தேங்காது. எந்த வாடகை விசைவண்டியும் போகக்கூடியதாகிவிடும். வழியில் ஒன்றிரண்டு சிற்றார்கள் இருக்கின்றன. பிறகு, ஒரு தங்குமிடமும் தண்ணீர்ப்பந்தரும் தெரிகின்றன. பிறகு, பாதை காடுமலை இவைகளுக்கு இடையில் செல்லுகின்றது. மலையடியிலேயே செல்லுகிறதனாலே மிக ஏற்றமாவது பள்ளமாவது இல்லை. காடுகளும் மிகுதியாக அடர்ந்ததல்ல. ஆகவே, யாதொரு அச்சமுமின்றிச் செல்லலாம். பத்துக்கல் சென்றவுடனே ஒரு குளம் தெரிகிறது. அதனை இப்போது பழுதுபார்க்கிறார்கள். அதில் தாமரைக்கொடிகள் படர்ந்திருக்கின்றன. பதினொரு கல் ஆனவுடனே மாணிக்கங்கை என்ற காட்டாறு காணப்படுகிறது. அவ்வாறு நிலமட்டத்திற்குக் கீழே இருபத்தைந்து அடியில் ஓடுகிறது. குளிர்ந்த நீர்; தெளிவான ஓட்டம்; மிக அடர்ந்த மரங்கள் இடையே அது ஓடுகிறது. கதிரவன் நிழல் மிகுதியாக நீர்மேல் விழுவதில்லை. நீர் ஏறக்குறைய 3 அடி இருந்தது. எளிதில் தாண்டிவிடலாம். மழைகாலத்தில் 15 அடி நீர் ஓடுமாம். அப்போது நதியைக் காலால் கடக்கமுடியாது; இரண்டு பெரிய மரங்களை இணைத்த ஒரு கம்பிப்பாலம் கட்டப்பட்டிருக்கிறது. இதனை ஊஞ்சற்பாலம் என்பர். இதில் ஏறிச் சென்றால் உண்மையிலேயே இது ஊஞ்சல் போல்

ஆடுகிறது. இதைக் கடந்து அக்கரை சென்றால், கதிர்காம வூரை அடைகிறோம். வண்டியில் ஏறுகிறவர்கள் வண்டி களை இக்கரையிலேயே விட்டுவிடவேண்டும். இக்கரையி லும் இரண்டுமூன்று சிங்களர் வீடுகள் இருக்கின்றன. ஒரு சிற்றுண்டிக்கடையும் உண்டு. மாணிக்ககங்கைதான் இத்தலத்தின் தீர்த்தம். அது வடக்கே மலைகளில் தோன்றி, கதிர்காமத்திற்கு அருகில் ஓடி, பல மலைகளின் இடையிலே உள்ள பள்ளத்தாக்கின் வழியே பாய்ந்து கிழக்கே இருபது கல் தொலைவில் கடலில் சேருகிறது. இதற்குக் கிழக்கே பெரிய காடுகள் இருக்கின்றன. காட்டுமிருகங்களை அங்கே கட்டாயின்றிக் கொல்லக்கூடாது; வேட்டையும் ஆடக்கூடாது.

கதிர்காமம்

மாணிக்ககங்கையைத் தாண்டினால் வூர் அடைகி றோம். வூரில் இரண்டே தெருக்கள் உண்டு. அத்தெருக் கள் கங்கையை ஒட்டிக் கீழ்மேலாக அமைந்திருக்கின்றன. தெருக்களின் இருபுறங்களிலும் கட்டடங்கள் வரிசையாகக் கட்டப்பட்டுள்ளன. அவைகள் பெரும்பாலும் சத்திரங் கள் அல்லது மடங்கள். ஏனையவை வீடுகளும் கடைகளுமே. மடங்களிலே மிகப் பெரியது நகரத்தார் விடுதி. ஏனைய இடங்களிலுள்ள விடுதிகளைப்போல் இது அத்துணைச் சிறந்ததாக இல்லை. இக்காட்டில் விலையுயர்ந்த கட்டடம் கட்ட முடியவில்லைபோலும். மற்றொரு பெரிய மடம் சடையம் மாள் விடுதி. இதுவும் பெரியதே. இன்னும் இரண்டொரு பெரிய விடுதிகள் உண்டு. திருவிழாக்காலத்திற் கென்றே இவ்வகை மடங்கள் கட்டப்பட்டுள்ளன. சடையம்மாள் மடத்தில் தங்கினேம். உணவுக்கு வேண்டிய வசதி களை அம்மடத்தாரே செய்துதந்தார்கள். இத்தெருக்கள் ஏறக்குறைய இரண்டு பர்லாங்கு நீளம் இருக்கும். இவற் றின் மேற்குநுனியில் கதிர்காமத்துக்கோயில் இருக்கிறது. இதற்குக் கிழக்கில் வள்ளியம்மைகோயில் இருக்கிறது. இக்கோயில்களைத் தவிர இவ்வூரில் ஒரு மருத்துவசாலையும், ஒரு பாடசாலையும் உண்டு. மருத்துவசாலையில் மலைக்

காய்ச்சலுக்கு மருத்துவம் செய்யப்படுகிறது. நான் சென்ற போது இருந்த மருத்துவர் தமிழர்; சிறு வயதினர்; முருகனிடம் அன்புள்ளவர்; கோயிலுக்கு வந்திருந்தார்; சித்தாந்தத்தை அனுப்பும்படி சொல்லிக் கட்டணமும் தந்தார். அங்கு மராமத்துப்பகுதி அதிகாரியும் தமிழரே. அவரும் இளைஞர். வழியில் பாதையைச் செவ்வையாக்கிக்கொண்டிருந்தார். அவரும் கோயிலுக்கு வந்தார். நமது ஊரில் அதிகாரிகளுக்குக் கடவுள் நம்பிக்கை இல்லை. அவர்களிலும் ஆங்கிலமருத்துவர்களுக்கு ஒரு சிறிதும் நம்பிக்கை இருக்காது. ஆனால் கதிர்காமத்தில் வேறு வகையாக இருந்தது. இரண்டு அதிகாரிகளும் கடவுளிடம் முழு நம்பிக்கையுடன் இருக்கிறார்கள். அது கண்டு வியந்தேன். தெருக்களில் புல் மூளைத்திருந்தது. நடப்பதற்கு மென்மையாக இருந்தது. ஆனால், மாடுகள் எங்கும் படுத்திருந்தன. நாய்களும் நிரம்ப இருந்தன. இவைகளோடு பூனைகளையும் பார்த்தேன். மற்ற உயிரினங்கள் கண்ணுக்குக் காணப்படவில்லை. மாடுகள் நிரம்ப இருந்ததனால் தெருக்கள் முழுதும் சாணி நிறைந்திருந்தது. மற்றப்படி குப்பைகள் மிகுதியாக இருக்கவில்லை. புலி கரடிகள் வாழ்ந்த காட்டில் மாடு, நாய், பூனை வாழுகின்றனவோ என்று எண்ணினேன். எல்லாம் மனிதனுடைய பழக்கத்தினால் அல்லவோ?

வழிபாடும் கோயிலும்

இத்தத் தூய இடம் சேர்ந்ததும், இருக்க வசதிகளை ஏற்படுத்திக்கொண்டு, ஆற்றிற்குச் சென்று, கைகால் முகம் கழுவிக்கொண்டோம். உடனே திருநீறு அணிந்து கொண்டு கோயிலுக்குச் சென்றோம். சந்திக்காலம் வராதிருந்ததனால் கோயில் சாத்தப்பட்டிருந்தது. அதனைச் சுற்றிப் பார்த்தோம். மேற்குப்புறத்தில் இரு தெருக்களும் போய்ச்சேருமிடத்தில் கோயில் உள்ளது. எளிய வகையில் செங்கல் மதிலும், இரண்டு வாயில்களும் காணப்பட்டன. ஒவ்வொரு வாயிலும் ஒவ்வொரு தெருவை நோக்கி அமையப்பெற்றிருக்கின்றது. தெற்கு வாயிலுக்கு

எதிரே உள்ளது முருகக்கடவுள் திருமுன். வடக்கு வாயிலுக்குள்ளே தெய்வயானை அம்மன் திருமுன் இருக்கின்றது. கோயில் இரண்டு பிரிவுகளாக ஆக்கப்பட்டிருக்கின்றது. இரண்டிற்கும் இடையே சிறு மதில் உண்டு. ஆனால், ஒன்றிலிருந்து ஒன்றுக்குச் செல்ல கதவு உண்டு. மதில்களுக்குள்ளே வலம்வரத்தக்க சுற்று பரந்த இடமாக இருக்கிறது. சன்னிதிகளோ சிறியவை. செங்கல் சுவர்களும், மரக்கோப்பும், சிமை ஓட்டு முகடும் கொண்டவை. ஆகவே, அவைகள் நமது நாட்டுப்புறத்து ஊர்த்தேவதைகளின் கோயில்களைப் போன்ற அமைப்பைக் கொண்டிருக்கின்றன என்னலாம். பண்டைக்காலப் பெரிய கற்றளியைக் காண்போம் என்று எண்ணினவர்கள் ஏமாற்றம் அடைவார்கள். இங்கே யாதொரு சிற்ப வேலையோ நுண்ணிய வேலைப்பாடோ காணமுடியாது. இவ்வூர்ப் புராணங்களில் கூறியுள்ளபடி, ஆயிரங்கோடி ஞாயிற்றின் ஒளிகொண்ட நவரத்தின மிழைத்த மண்டபங்களும், வானளாவிய திரண்ட கோபுரங்களும், ஒளிவிடும் விமானங்களும் முன்காலத்தில் இருந்திருக்கலாம். இப்போதோ அவைகள் இல்லை. அவை இருந்திருக்கும் என்றாலும், அவைகளின் அடையாளங்கள் ஒரு சிறிதளவும் இல்லை. பொதுவான ஊர்க்கோயில் போன்ற கட்டடமும், மக்கள் கொண்டாடி ஆர்ப்பரிக்கும் நம்பிக்கைப்பான்மையுமே இங்கு உண்டு.

தூய்மைக் கோயில்

தெற்குப்பகுதியில் மையத்தில் இருப்பது கந்தசாமிக் கோயில். அடுத்தாற்போல் தெற்கில் உள்ளது பிள்ளையார் கோயில். அதற்கும் தெற்கில் பௌத்தர் போற்றும் திருமால் கோயில். இவைகளுக்குப் பின்னால் வெள்ளரசு மரம் பெரிதாக நிற்கிறது. அதனடியில் ஒரு மேடை இருக்கிறது. இது பௌத்தர்களுடைய தூய இடம். இவைகளுக்குப் பின்னால் மேல் மதில் ஓரமாக, இரண்டு மூன்று சிறு ஓட்டுவில்லைச்சாலைகள். அவைகளில் பைரவர், பத்தினிக்கடவுள் எழுந்தருளியிருக்கிறார்கள். கோயில்களுக்கு முன்னாலே யானை நிற்கும் கொட்டில் உண்டு.

இதில் யானையை நிறுத்தி, அதன்மேல் உற்சவமூர்த்தியை ஏற்றிவைக்க வசதிகள் கட்டியிருக்கிறார்கள். வடகிழக்கு மூலையில் ஒரு ஓட்டுக்கட்டடம் இருக்கிறது.

கோயிற் பகுதிகள்

வடக்குப்பகுதியில் மையத்தில் தெய்வயானையம்மன் திருமுன் வடக்கு நோக்கி இருக்கிறது. அடுத்துப் பின் புறத்தில் ஒரு சிறிய கோயிலில் பழனியாண்டவர் எழுந் தருளியிருக்கிறார். அம்மன்கோயில் மற்றவற்றைவிடப் பெரியது. முன்னுலே மணிமண்டபச்சாலேயும் உண்டு. இதற்கு முன்னுல், வடநாட்டுப் பாபா பூசாரியின் மடம் இருக்கிறது. அதற்கும் வெளியில் வடக்கே இரண்டு மூன்று சமாதிகள் இருக்கின்றன. இவைகளே சிறந்த பகுதிகள்.

இனித் தெருக்களின் கீழ்க்கோடியில் வள்ளியம்மை கோயில் தனியே இருக்கின்றது. நிலமட்டத்திற்கு 3 அடி உயரத்தில் இதன் தரை இருக்கிறது. இக்கோயிலின் தெற்கே ஒரு துறவியின் சமாதியும் வளவும் இருக்கின்றன. இவைகளின் வடக்கே இசுலாமியப் பெரியார் ஒருவரின் சமாதியும், அதன் வளவும் இருக்கின்றன. இவைகளுக்கு முன்னுல் வெளியிடத்தில் மற்றொரு வெள்ளரசும், அதன் முன்னிலேயில் சில வேலாயுதங்கள் நாட்டப்பெற்ற சூழலும் இருக்கின்றன. இவைகள்தான் கதிர்காமத்தில் நாம் காணக்கூடிய சிறந்த இடங்கள்.

ஊர்

கதிர்காமத்தில் நிலையாக 150 குடிகள் இருக்கிறார்கள். யாத்திரைக்காக வந்துபோகக்கூடிய மக்கள் 100 பேர் இருப்பார்கள். ஆகவே, சராசரி மக்கள் தொகை 250 இருக்கும். நிலையாக இருப்பவர்கள் கோயிலே அண்டியே பிழைப்பவர்கள். அவர்கள் பெரும்பாலும் யாத்திரிகருக்கு உணவு, இடம் முதலிய வசதிகளேச் செய்துகொடுத்து, அவர் களால் வருமானம்பெற்றுப் பிழைப்பவர்கள். முன்காலத் தில் தூய தலங்கள், மக்களுடைய தொழுகைக்காக மட்டும்

ஏற்பட்டிருந்தன. இப்போதோ அவைகள் சிலருடைய வாழ்க்கைநலனுக்காக ஏற்பட்டுள்ளன. இந்த நிலையைப் பெரியோர்கள் கடிந்திருக்கிறார்கள். கடவுள் தொழுகைக்கு ஏற்படுத்திய ஒரு இடத்தை வியாபாரத்தலம் ஆக்குவது சரியன்று என்று இயேசு கூறினதன்றி, ஏருசலேமில் கோயிலில் இருந்த கடைக்காரர்களை வெருட்டித் தள்ளினது இங்கே நோக்கத்தக்கது. இந்தியாவில் எல்லாக் கோயில்களும் வியாபாரத் தலங்களாக மாறிக் கொண்டுவருகிற நிலைமையைக் கண்டு உண்மைச்சைவர்கள் வருந்தவேண்டியிருக்கிறது. கதிர்காமம் அவ்வாறு ஆகாமல் இருப்பதாகுக.

திருவிழா

பொதுவாக எப்போதும் 250 பேர் வரையில் இருந்தாலும், ஆடிமாதத் திருவிழாக்காலங்களில் பல்லாயிரமக்கள் வந்து கூடுவார்கள். அவர்களில் பெரும்பான்மையானவர் மலைநாடுகளில் தேயிலைத்தோட்டங்களில் வேலை செய்யும் இந்திய மக்கள். இம்மக்கள் தங்கள் குடும்பங்களில் யாதாவதொரு துன்பம் நேரிட்டால், அதற்காக 'வேண்டுதல்' செய்துகொள்ளுவார்கள். ஆடி மாதத்துப் பெருந் திருவிழாவிற்குச் சென்று அதனை நிறைவேற்றுவார்கள். அப்போது 'வேண்டுதல்' என்ற பெயரால் நடக்கும் மாறுபாடான செயல்களுக்கு அளவில்லை. உடலில் நாக்கு, கன்னம் முதலிய உறுப்புக்களில் ஊசிகளைக் குத்திக் கொள்வதும், மார்பில் குண்டூசிகளைக் குத்தி எலுமிச்சம் பழங்களைச் சுமப்பதும், முதுகில் இருப்புக்கொக்கிகளை மாட்டிக்கொண்டு பூந்தேர்களை இழுப்பதும், நெருப்புச் சட்டிகளைக் கையிலும் தலையிலும் ஏற்றிக்கொண்டு நடப்பதும் அவைகளில் சில. இத்துன்பங்களைப் பொறுப்பவர்கள் துயரப்படுவதாகத் தெரிவதில்லை. அத்துணை நம்பிக்கை உண்டு. இம் மூடநம்பிக்கையை வெறுத்துத் தான் நாயனார்,

> "உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை
> அற்றே தவத்திற் குரு"

என்றார்.

அவ்வாறு அருளிச்செய்து என்ன பயன்? 2000 ஆண்டுகளுக்குப் பின்னும் அவைகள் நடைபெறுகின்றன. சில ஆண்டுகளுக்கு முன் தஞ்சை வீரசங்கிலிப்பேட்டையின் திருவிழாவின்போது, அப்பழக்கங்களை நிறுத்திவிட்டதனால், எத்துணைக் கொலைகள் நடந்தன. இவைகளைத் தவிர, காவடியெடுத்தல் முதலியன இயல்பாகும். இந்த முறையில் திருவிழா பரபரப்பான முறையில் நடைபெறும்.

கதைகள்

தென்னிந்தியாவில் கதிர்காமத்தைப்பற்றிப் பல புதுமையான கதைகள் வழங்குகின்றன. 'தானே பூசைப் பெட்டி வந்துபோகும்; தாமே தேங்காய் பழம் உள் சென்று பூசைபெறும்; பிறகு திரும்பி யாத்திரிகர் கைக்கு வந்துசேரும்,' என்பர். இவைகள் உண்மையல்ல. இவைகளைக் கேட்டே மிகுதியான மக்கள் கதிர்காமம் செல்ல எண்ணுவார்கள். பொதுவாகப் பல நாள்களில் கந்தசாமிக் கோயிலிலேயும் வள்ளியம்மை சோயிலிலேயும் கப்புராளன் என்ற சிங்களப்பூசாரி பூசைசெய்வான். பிள்ளையார்கோயிலிலும் தெய்வயானைகோயிலிலும் வடநாட்டுப் பாபா பூசைசெய்வான். இவ்விருவருக்கும் பூசை உரிமை பொறுத்தமட்டில் மிகப்பகைமை. ஆராதனை முழுதும் மூலத்தானத்தை மறைத்துநிற்கும் திரைக்கே நடக்கிறது. பிறகு பூசாரி உள்ளே சென்று தீபாராதனை செய்துவிட்டு வெளியே வந்து அன்பர்களுக்குத் திருநீறு, பால், தீர்த்தம், பிரசாதம் வழங்குவான். பூசைக் காலங்களில் மணிகளைப் பெருமுழக்கமாக ஆட்டுவார்கள். அன்பர்கள் மூலத்தானத்தைப் பார்க்கவே இயலாது. பூசாரிகள் பூசைசெய்யும்போது பேசமுடியாதபடி வாயைத் துணியால் கட்டிக்கொள்ளுவார்கள். கப்புராளன் சொக்காய் போட்டுக்கொண்டே பூசைசெய்கிறான். அவனுடைய தூய நாட்கடன்களை நாம் அறியமுடியாது. அவன் இல்லறத்தான் என்றும், அவன் வீட்டுப் பெண்களின் நடை உடையிலிருந்து அவன் வாழ்வு வெறும் உலகியல் வாழ்வே என்றும் எண்ணவேண்டும்.

நட்வடிக்கைகள்

நாடோறும் பூசை இவ்வாறுக இருக்க, ஆடித்திங்கள் திருவிழாவின்போது தெய்வம் ஊர்வலம் செல்லும். அதைக் காணவே பல்லாயிரக்கணக்காக மக்களும் செல்வ துண்டு. யானையின்மேல் ஒரு பெட்டியை வைத்து ஊர் வலம் செய்வார்கள். பூசை முதலியவைகள் இப்பெட் டிக்கே நடக்கும். பெட்டிக்குள் என்ன இருக்கிறதென்று எவரும் அறியார்கள். கப்புராளனுக்குத் தெரியுமோ என்பதும் ஐயம். ஏனெனில், இவனுடைய எதிரியாகிய வடநாட்டு பாபா இதனைக் குறித்து ஒரு கதை சொன்னன். பல ஆண்டுகளுக்கு முன் ஒருமுறை பாபாவுக்கும் கப்புராள னுக்கும் சண்டை நடந்ததாம். அதற்குமுன் பாபாவே பூசைசெய்து வந்தாராம். கப்புராளன் தக்க சிங்கள உதவி யைப் பெற்றுக்கொண்டு கோயிலை உரிமைசெய்துகொண்டா னும். அப்போது பாபா ஆள் வலியைக் கண்டு அஞ்சி வெளியேறிவிட்டாராம். வெளியேறுமுன் மூலத்தானத் தைப் பூட்டிவிட்டுச் சாவி எடுத்துக்கொண்டு வந்துவிட்டா ராம். அதனாலே கப்புராளன் மூலத்தானத்துள் புகமுடி யாமல் போய்விட்டது. பூட்டை உடைத்து உள்ளே செல்லவும் அவனுக்கு அச்சம். ஆகவே, மூலத்தானம் இன்றைக்கும் பூட்டப்பட்டுள்ளது. உள்ளே இருக்கும் மூர்த்தத்தைப்பற்றிக் கப்புராளனுக்குத் தெரியாதாம். ஆகவே, பூசைப்பெட்டிக்கு மட்டும் பூசையும் ஊர்வலமும் நடைபெறுகின்றனவாம். யானைமேலேற்றிய பெட்டியை ஊர்வலமாகக் கொண்டுசெல்வர். மக்கள் வணங்குவார் கள். தவக்கோலங்கள் பெருஞ்சிறப்புடன் முன்னே செல்லும். வள்ளியம்மைகோயிலில் பெட்டி இறங்கிச் சிறிதுநேரம் இருக்கும். அங்குப் பூசை ஆனவுடன் திரும்பி மூலத்தானம் செல்லும். இதுதான் திருவிழா வின் காட்சியும் அழகும். கற்பூரமே முதன்மையான சுடர். மக்கள் அளவில்லாமல் அதை எரிப்பார்கள்.

பெயர் வரலாறு

இனி, 'கதிர்காமம்' என்ற சொல், 'கார்த்திகேயன்' கிராமம்' என்ற தொடர்ச்சொல்லின் திரிபு என்று ஒரு

ஆராய்ச்சியாளர் கூறுவர். மற்றொருவர் 'கதிர்காமம்' என்றால், ஒளி விரும்பிய தலம் என்பார். 'கதிர்' என்றால் ஒளி அல்லது கிரணம் என்பது பொருள் அன்றோ? இவ் வுரைக்கு ஏற்றதாக வடசொற்பெயர் 'தக்கிணகயிலாய மான்மிய'த்தில் உள்ளது என்பர். அதில் காணும் பெயர் 'ஜோதிஷ்காமகிரி' என்பது. தமிழிலிருந்து வடமொழிக் குச் சென்றதோ என்று கேட்கும் இந்நாளில் இந்தக் காரணம் நிற்காது. திருப்புகழில் அருணகிரிநாதர் கதிர் காமம் என்றும், கதிரகாமம் என்றும் இருவகையாகக் கூறுவர். பிரபந்தங்களிலும் கதிரைமலை என்று கூறப்பட் டுள்ளது. சிங்களமொழியில் 'கதிரகாமம்' என்பதே வழக்கம். 'கதிரை' என்பது ஒருவகை மரம். அந்த மரங் கள் சூழ்ந்த ஊர் என்பதே பொருள் என்பர் ஆராய்ச்சி யாளர். சைவர்கள் கதிரைமலைமேல் ஒளிபொருந்திய வெற்றிவேல் உள்ளதால், இது 'கதிர்காமம்' என்றே நம்பு கிறார்கள்.

ஊர் வரலாறு

இவ்வூருக்குப் புராணவரலாறுகள் உண்டு. அவை தக்கிணகைலாய மான்மியத்தில் கூறப்பட்டுள்ளன. முருகப் பெருமான் அசுரேந்திரனை வெல்லப்போகையிலும் இலங் கையில் இறங்கிக் கதிர்காம மலையை அடைந்தார். அசு ரேந்திரனை வென்ற பிறகும் கதிர்காமத்தை அடைந்து தங்கினர். அப்போது விசுவகருமனை விளித்துத் தமக்குக் கோயில் அமைக்கும்படி அருளினர். அப்போதுதான் 'சிந்தாமணி' என்ற இவ்வாலயம் ஏற்பட்டது. அம்மலை பிள்ளையார் மலை, வீரவாகு மலை, தெய்வானையம்மை மலை, வள்ளியம்மை மலை இவைகளுக்கு இடையில் கதிர்காம மலை என்ற பெயரோடு அமைக்கப்பட்டதாம். பிறகு தேவர் முனிவர் முதலியோர் பூசித்து அருள்பெற்றனராம். பிறகு, கந்தபிரான் மரக்கலம் ஏறி, வடகரையில் இறங்கின இடம் 'காங்கேசன்துறை' என்றுபிற்றும். அங்கே தங்கின இடம் 'கந்தவனக்கடவு' ஆயிற்றும். இது புராணம்.

இனி, சரித ஆராய்ச்சியில் கண்டவற்றைக் கூறுவாம். மகதநாட்டு அசோகன் மகள் சங்கமித்திரை புத்த சமயம்

பரப்புவதற்காக இலங்கைக்குச் சென்றபோது, வெள்ளரசு மரத்தின் (போதி) கிளையைக் கொண்டுசென்றுள். அவளை எதிர்கொண்டு அழைத்தவர்களில் கதிர்காமத்து மேலோர் களும் இருந்தார்கள் என்று மகாவமிசம் கூறுகிறது. அவ் வெள்ளரசின் ஒரு கிளை கதிர்காமத்திலும் நாட்டப்பட்டது. அது கி. மு. 3-ம் நூற்றாண்டு. அதே நூற்றாண்டில் திசன் உடன்பிறந்தான் மகாநாகன் இங்கு ஒரு கிரிவிகாரம் கட்டினன். தமிழர்களால் துரத்தப்பட்ட அந்த நாகன் இந்தத் தென்னாடாகிய உவா மாகாணத்தில் ஆண்டான். தமிழ் அரசன் ஏலேலனை வென்ற துட்டகெமுனு அவ் வெற்றிக்கு நன்றிசெலுத்தும் வகையில் கதிர்காமக்கோயி லுக்குத் திருப்பணிசெய்து, மானியங்களும் தந்தானும். அதுமுதல் இத்தலம் சிங்களரிடம் இருந்தது.

தஞ்சைச்சோழர் 10ம் நூற்றாண்டில் வாகை சூடி இலங் கையை வென்று ஆண்டனர். அதில் தோல்வியுற்ற சிங் களர் தெற்கே சென்று உருகுணையில் ஒளிந்திருந்தனர். அவர்களில் மானவருமன் என்ற இளவரசன் கதிர்காமத் தில் தவம் புரிந்தானும். அதன் பயனை முருகக்கடவுள் தோன்ற, மயூரதேவர்க்குத் தாபம் தீரத் தன் கண்ணை அளித்தானும். பிறகு வரம்பெற்றுச் சோழர்களை வென் றனும். அவ்வெற்றி பராக்கிரமன் காலத்தில் முற்றுப்பெற் றது. இச்சரிதம் மகாவமிசத்தில் உள்ளது.

பிறகு, 1581-ல் இராசசிங்கன் தன் தந்தையைக் கொன்று பட்டத்திற்கு வந்தான். தந்தையைக் கொலை செய்த பாவம் அவனை வாட்டிற்று. அதனைத் தீர்க்கக் கழுவாய் தேடினன். புத்தசமயத்தில் அதற்குக் கழுவாய் கிடைக்கவில்லை. பிறகு சைவசமயத்தாரைக் கேட்க, மூர்த்தி, தீர்த்தம், தலம் இவற்றைப் பூசித்தால், கழுவாய் உண்டு என்றனர். அதைப் பின்பற்றிக் கதிரைமலையில் திருப்பணிசெய்து, தற்காலக் கோயிலைக் கட்டினனும். அக் காலத்தில் திருப்பணிசெய்த குறிப்பு, அதற்குச் சிறிது காலத்தில் தோன்றிய கதிரைமலைப்பள்ளு என்ற நூலில் இருக்கிறது.

முதல் இராசசிங்கன் காலத்தில் வடநாட்டிலிருந்து கல்யாணகிரி என்ற ஒரு வைணவ அந்தணர் கதிர்காமத்திற்கு வந்தார். அவர் முருகக்கடவுளை வடநாட்டிற்குக் கொண்டுபோகவேண்டும் என்ற எண்ணத்துடன் வந்தாராம். கதிர்காமத்தில் 12 ஆண்டு கடுந்தவம் புரிந்தபோது, முருகக்கடவுளும் வள்ளியம்மையும் காட்சி கொடுத்தார்களாம். கடவுள் ஆணைப்படி அவர் அங்கேயே அமர்ந்து, தெய்வயானையம்மன் கோயிலும், அதற்கு எதிரில் கல்யாண மடமும், ஓமகுண்ட மண்டபமும் அமைத்தாராம். பிறகு நெடுங்காலம் இருந்து இறுதியில் அங்கேயே சமாதி அடைந்தார். அவர் உடல் முத்துப்போன்ற இலிங்க மயமாகத் தோன்றினதினால், அவருக்கு முத்துலிங்க சுவாமிகள் என்று பெயர் உண்டாயிற்றும். இவர் பெயரால் சுற்றுப்புற மதிலுள் ஒரு கோயிலும் ஏற்பட்டது. இக்காலத்தில்தான் 'கதிரைமலைப்பள்ளு' எழுதப்பட்டது. அதற்கு ஆதாரம் 103 செய்யுள் ஆகும். இரண்டாம் இராசசிங்கன் காலத்தில் இவ்வூருக்கு வந்த நாக்ஸ் என்ற வெள்ளைக்காரன் கதிர்காமத்தின் பெருமையைப்பற்றி எழுதியிருக்கிறான்.

கண்டியில் கடைசி அரசன் விக்கிரமசிங்கன் காலத்தில், முத்துலிங்கர் மாணவர் சிங்ககிரி கல்யாண மண்டபத்தில் தங்கி இத்தலத்தை ஓம்பிவந்தார். அவர் காலத்தில் இந்தியாநாட்டு அரசன் கதிர்காமம் விசயம்செய்து முதற் பிள்ளையை இத்தலத்திற்குக் கொடைப்பொருளாக்குவதாக வேண்டுதல் செய்துகொண்டான். பின்னல் பாலசுந்தரி என்ற அழகிய பெண் பிறந்தது. அதனைக் கோயிலுக்கு அனுப்பாமலே அசட்டையாக இருந்தான். சுவாமி கனவில் தோன்றி நினைவுபடுத்த, அரசன் அப்பெண்ணை இங்குச் சேர்த்து, வேண்டிய உணவு ஏற்பாடு செய்தான். அவ்வரசி இங்கு இருந்தபோது விக்கிரமன் காமுற்று வலிந்து பற்ற நினைந்தான். பாலசுந்தரி இசையவில்லை. அவனும் அரசு இழந்தான். அவளோ தொண்டாற்றிவந்து மூதாட்டியாகிக் கி. பி. 1876-ல் சமாதி அடைந்தாள்.

கண்டியை ஆங்கிலர் பிடித்த பிறகு, இலங்கைக்குத் தலைவனாக வந்த பிரௌன்றிக் என்பவன் கதிர்காமத்

திற்கு விசயம் செய்தபோது, கல்யாண மடத்தில் தலைவ ராக இருந்தவர் சயசிங்ககிரி சுவாமிகள். அப்போது அவனுடன் வந்த டேவிசு என்ற படை மருத்துவர் அந்தத் தலத்தைப்பற்றியும் தலைவரைப்பற்றியும் மிகவும் வியந்து கூறியிருக்கிறார். 'கதிர்காமத்தில் கல்யாணமடம் மக்களால் போற்றப்படுகிற தூய இடம். மடத்தலைவர் அமர்ந்திருக்கும் பீடம் களிமண்ணினால் உயர்ந்த இடத்தில் கட்டப்பட்டிருக்கிறது. அதன்மீது சிறுத்தைத் தோல்கள் பரப்பப்பட்டிருக்கின்றன. பூசை சாமான்கள் அருகில் வைக்கப்பட்டிருக்கின்றன. அருகில் ஓமகுண்டம் எப்போ தும் எரிந்துகொண்டிருக்கிறது. அந்த மண்டபமே ஆசாரி யர்கள் இருப்பிடம். கல்யாணநாதர் என்ற முதற்குரு அதை இயற்றி, அந்தப் பீடத்திலேயே இறப்பு இன்றி வீடு பெற்றார் என்றும், அதிலேயே தாமும் வீடுபெற விரும்புவ தாகவும் இப்போதைய மடத்தலைவர் சொன்னார். அவர் சொன்ன முறையிலிருந்து அதனை அவர் முழு நம்பிக்கை யுடன் கூறினார் என்று சொல்வேன். அவர் உருவம் பெரு மிதத்துடன் இருந்தது; நீண்ட வெண்மையான தாடி; கூரிய கண்கள்; மெலிந்த உடல்; திறமையில் உறுதியுடன் நிமிர்ந்து நிற்கும் தன்மை அவருடைய தளர்ந்த வயதைக் காட்டவில்லை' என்று அந்த மருத்துவர் எழுதியிருக்கிறார்.

சயசிங்ககிரி சுவாமி காலத்திலேயே (1800—25) பிரயாகையிலிருந்து கேசோபுரி, ஒரு வாலிபர், கதிர்காமத் திற்கு வந்து தவம் செய்துகொண்டிருந்தார். அவர் பின்னல் காட்டிற்கேகி உணவின்றி இருந்தார். சயசிங்கருக்குப் பின் மங்கல்கிரி சுவாமி மடத்தலைவரானார். அவர் காலத்தில் சுரராசகிரி என்பவர் கதிர்காமத்திற்கு வந்தார். இவர் காசுமீர அரசன் படையில் குதிரைப்படை வீரராக இருந்து துறவியாகி இங்கு வந்தவர். இவர் ஒருமுறை சிவனொளிபாதம் காணச்செல்லுகையில், அங்கே இவருக்கு கனவு ஒன்று தோன்றியது. அதில் கேசோபுரியை அழைத்துக்கொண்டு கதிர்காமம் செல்லும்படி கட்டளை வந்தது. உடனே சுரராசர் கேசோபுரியைத் தேடிக் கண்டு பிடித்து, அவரை அழைத்துக்கொண்டு, கதிர்காமம் சேர்ந்

தார். முருகன் திருவருள் என்று கண்டு, அங்கே சோறு உண்ணத் தொடங்கினர். ஆனால் அது அவருக்கு ஏற்றுக் கொள்ளவில்லை. ஆகவே, பால்மட்டும் குடிக்கத்தொடங் கினர். ஆகவே அவருக்கு, 'பால்குடிப் பாபா' என்ற பெயர் ஏற்பட்டது. அவரே மடத்தலைவராகி மிகத் திறமையுடன் கோயில் ஆட்சியை நடத்திவந்தார். அவரே கதிர்காமம் மடத்தைப்பற்றி ஒரு நடைமுறைச் சாசனம் 1898-ல் ஏற் படுத்தினர். பிறகு சில நாள்களில் மறைந்துபோக, அவர் உடல் கதிர்காமத்தில் சமாதி செய்யப்பட்டது.

பால்குடிபாபாவுக்குப் பின் பட்டத்திற்கு வந்த சுரராசர் சில நாட்களில் சமாதி அடைந்தார். அறச்சாச னத்தின்படி மடத்தலைவராக வருகிறவர் தாத்திரேய சுவாமி சம்பிரதாயிகளாயும், தசநாமிகளில் ஒருவராகவும், பிரமசரி யம் கொண்டவர்களாகவும் இருக்கவேண்டும். சுகிர்தபுரி சுவாமி பட்டத்திற்கு வந்து 1933-ல் சமாதி ஆனர். பிறகு ஒரு பெண்மணி தலைவராக இருக்க வாதாடினள். இவ்விவ காரம் பின்னல் ஒற்றுமை ஒப்பந்தத்தோடு முடிந்தது. மடத்திற்குக் கணேசகிரிசுவாமி தலைவர் ஆனர். இப்போது இளவரசுபட்டத்தில் இருப்பவர் மராட்டிய பிராமணர். தமிழ் பேசத் தெரியும். நல்ல வடிவு உடையவர். பிள்ளை யார்கோயில் மூலத்தானத்தைக் கருங்கற்களால் கட்டி வருகிறார்.

ஆட்சி

மூலத்தானப் பரிபாலனம் இராசசிங்கன் காலம் முதல் ஏற்பட்டதுபோல நடந்துவருகின்றதாம். இந்தத் தலத்தி னுடைய பெருமை முக்கோண வீதியும், அறுகோணச் சக்கரமும் என்பர். மூலத்தானத்தில் திரைக்குள் மறை வில் இருப்பது இயந்திரப் பெட்டி. அதற்குள் அறுகோணச் சக்கரம் இருக்கிறது. அதையே யானைமேல் ஏற்றிக் கொண்டு, முக்கோண வீதியில் வலம்கொண்டு செல்வதே திருவிழா ஆகும். சிவபிரானுடைய முக்கண்களும் முக் கோணங்களாம். அதைக் காட்டுவது முக்கோண வீதிகள். ஆறுமுகக்கடவுள் திருமுகங்களே அறுகோணங்களாம்.

சிவபிரான் நெற்றிக்கண்களிலிருந்து ஆறு பொறிகளாய் வந்த ஒளிப்பிழம்பே முருகக்கடவுள் ஆயிற்று. ஆகவே, இத்தலம் 'சோதிக்கிராமம்' அல்லது 'கதிர்காமம்' ஆயிற்று எனக் கூறுவர் வைதிகர்கள்.

கதிர்காம மூலத்தானத்தில் பூசை உரிமையும் ஆட்சியும் முதலில் கலியாணமடத்துச் சுவாமிகளுக்கு இருந்தன. வள்ளியம்மைகோயில் ஆட்சி கப்புராளர்க் கிருந்தது. மெல்ல மெல்ல கப்புராளர்கள், மூலத்தானத்தின் ஆட்சியைக் கவர்ந்துகொண்டார்கள். கோயிலைச்சேர்ந்த பல சொத்துக்கள் பலவகையாகக் கைமாறிவிட்டன. இப்போதைய ஆட்சி செவ்வையாக இல்லை என்பர். திருவிழாக்களாகிய ஆடி முழுமதி, கார்த்திகை முழுமதி, மகர சங்கராந்தி, சித்திரைச் சங்கராந்தி என்ற விழாக்களில் மட்டும் ஆண்டு ஒன்றுக்கு 15000-க்கு மேலேயே வருவாய் கிடைக்குமாம். இந்து சைவக்கோயிலில் பௌத்தர்கள் ஆட்சி இருப்பதை இந்துக்கள் எதிர்க்கின்றனர். சைவர்களும் தலத்தின் பெருமையையும் மேன்மையையும் போற்றினர்களே அன்றி, உலகத்தொடர்பான அதிகாரமும் சடங்குகளும் மதிக்கவேண்டாதவையெனக் கருதியே வாளா இருக்கின்றனர்.

இலக்கியம்

கதிர்காமம் இலக்கியத்திலும் பேர்போனது. தமிழ் மக்கள் அரிய எண்ணங்களை இந்தத் தூயதலத்தில் செலுத்தி, கவிகளும் பிரபந்தங்களும் பாடியிருக்கின்றனர். இயற்கையழகிற்குப் பெயர்போன இந்தத் தலம், எந்தக் கவியினுடைய உள்ளத்தைத்தான் கொள்ளை கொள்ளாது. அதிலும் தூய்மை, கடவுள் தன்மை, அருள் வெள்ளம் இவைகள் எந்த நெஞ்சிலும் உயர்ந்த எழுச்சியை உண்டாக்கும் அல்லவோ? சென்ற 5 நூற்றாண்டுகளாகப் பல புலவர்கள் இத்தலத்தைப் பாடியுள்ளார்கள். 15-ம் நூற்றாண்டில் அருணகிரிநாதர் "வனமுறை வேடன் அருளிய பூசை மகிழ்கதிர் காமம் உடையோனே" என்று "அகரமுமாகி" என்ற அருள்திருப்புகழிலே பாடியுள்ளார். வேட

னுடைய பூசைக்கே மகிழ்பவர் தமிழன் உள்ள நிகழ்ச் சிக்கு இசையமாட்டானே? அவரோ 25 திருப்புகழ்களை அருளியிருக்கிறார். இனிக் 'கதிரைமலைப்பள்ளு' என்ற நூல், அருமையான பல கருத்துக்களைத் தெரிவிப்பது. 'கதிர்காமப் பிள்ளைத்தமிழ்' சில புதிய பருவப்பாடல்களைக் கொண் டுள்ளது. இவையேயன்றி, கலம்பகம், காதல், மாலை, பதிகம், தாண்டகம், சிந்து, விருத்தம், கீர்த்தனை முதலிய பலவகை நூல்களும் பல சிறப்புப்பாக்களும் உள்ளன. யாத்திரிகருக்கு ஏற்ற உரைநடைநூல்களும் பல வெளிவந் துள்ளன. அறிஞர்கள் எழுதியுள்ள பல ஆராய்ச்சிகளும் உளளன. இவைகளுக்கு எல்லாம் காரணம், மக்கள் உள்ளத்தில் கலியுகவரதன் தோற்றிவைக்கும் வியக்கத் தக்க எழுச்சியே என்க.

இணைப்பு

முத்தின் விவரங்களைப் பலபடியாய்ச் சொல்லி விட்டோம். இனி விட்டுப்போன சிற்சில அழகுகளைக் கூறுவாம். அவைகளே பண்டைப்பதிகள்.

---

15. முத்துப்பரப்பில் சில அழகுகள்

பண்டைப்பதிகள் சில

ஏனைய இடங்கள்

அநுராதபுரத்திலிருந்து தெற்கே புகைவண்டிப் பாதையில் சென்றால், அடர்ந்த காடுகளைப் பார்த்துக் கொண்டே செல்லலாம். இக்காடுகள் மிகுதியான மழை வளத்தினால் நாடோறும் பெருகிக்கொண்டே வருகின்றன. இயந்திரமேம்பாடு பெருகும் இந்நாளில், இந்தக் காடு களின் ஆற்றல் குறைந்துபோகக்கூடும். முன்னாளிலும் இவைகளை வெட்டிப் பௌத்த மன்னர்கள் மிகப் பெரிய கோயில்களையும் விகாரங்களையும் கட்டினார்கள். ஆனால், நாளடைவில் அவைகள் பாழாக, அடவிகளே வெற்றி யடையத் தொடங்கின. இவ்வழியில் அடவிகளுக்கு

இடையில் உள்ளது 'குறுணகலை' என்ற ஒரு பண்டைய ஊர். இவ்வூர் முன் 14-ம் நூற்றாண்டில் இராசதானியாகவும் திகழ்ந்தது. 2-ம் புவனேகபாகு (1293), 4-ம் பராக்கிரமபாகு (1295) முதல் கயவாகு முதலிய அரசர்கள் இவ்வூரைத் தலைநகராக்கி ஆண்டார்கள். ஆனால், இவ்வூரில் அரசர் நிலைக்கூடங்கள் இருந்தன என்று சொல்வதற்கு இக்காலத்தில் ஒரு அறிகுறியும் காணமுடியாது. ஆனால், பல பௌத்தச்சின்னங்கள் அங்கங்கே காணப்படுகின்றன. இவ்வூர் இருப்புப்பாதை நிலையத்திற்கு அருகில் ஏறக்குறைய 100 கோல் தொலைவில் ஒரு சிறு மலை இருக்கிறது. அம்மலையில் ஒரு குடைகோயிலைக் குடைந்து அதில் பௌத்தச் சிலையை வைத்திருக்கிறார்கள். அக்குகை காண்பதற்கு 21 கற்படிகள் ஏறிச்செல்லல்வேண்டும். அங்கே சமமான இடத்தில் ஒரு வெண்தூபியும், அதற்கு முன்னால் 6 பட்டை கொண்ட ஒரு சிறு பவனமும் இருக்கின்றன. அதன் நடுவில் தூபம் எரிக்கும் திருஅகல் இருக்கிறது.

பின்னாலே உயர்ந்த பாறையில் குகைமண்டபம் குடையப்பட்டிருக்கிறது. இதுதான் பௌத்தப்பள்ளி. இதன் முன்னிலையில் தற்காலக் கட்டடம் ஒன்று இருக்கிறது. இது நாட்டு ஓடு வேய்ந்த வீடு போன்றது. இந்த இடத்தில் பல பௌத்த துறவிகள் இருக்கின்றனர். யாத்திரிகர் இங்கே சென்று வழிபடுவது உண்டு.

யாபகுவை

கொழும்பு யாழ்ப்பாணப் பாதையில் 'மாகோ' என்ற ஒரு சந்தி உண்டு. அதற்கு அருகில் 'யாபகுவை' என்ற ஒரு பண்டைய இடம் இருக்கிறது. இதுவும் ஒரு காலத்தில் புகழ்பெற்றிருந்ததேயாம். 13-ம் நூற்றாண்டில் மாகன் என்ற கலிங்க விசயபாகு வீரன், இந்தியாவிலிருந்து படையெடுத்து வந்து, சிங்கள சிம்மாசனத்தைக் கைப்பற்றி ஆளத்தொடங்கினன். அவன் செய்துவந்த தீச்செயல்கள் பௌத்தர்களுக்குப் பிடிக்கவில்லை. அவர் நாட்டிலிருந்த சுபசேனபதி என்ற ஒரு பௌத்த தலைவன், அவ்வாட்சியைக் கண்டு பொறுதவனாகித் தலைநகரத்தை

விட்டு வெளியேறினான். காடுகள் எல்லாம் தாண்டி, யாபகுவையில் இருந்த ஒரு குன்றின்மீது ஒரு வலுவான அரணைக் கட்டிக்கொண்டு, அங்கே வாழத் தொடங்கினான். பிறகு, 50 ஆண்டுகளுக்குப் பின் முதல் புவனேகபாகு (1271-1283) என்ற அரசன் இந்த அரணைக் கண்டுகொண்டு, அதுவே தன் தலைநகருக்கு ஏற்ற இடம் என்று கருதி, அங்கே தங்கத்தொடங்கினான். அங்கே போகும்போதே புத்தபகவான் திருத்தந்தத்தைத் தன்னோடு எடுத்துக்கொண்டுபோய், அங்கே ஒரு தூபி கட்டி, அதில் நிலைபேறு செய்தான். அவன் அங்கே நெடுநாள் நிலைக்க முடியவில்லை. சில ஆண்டுகள் செல்லவே, தமிழ்ப் போர் வீரர்கள் படையெடுத்தார்கள். இந்த நகரத்தை முற்றுகையிட்டுப் பிடித்தார்கள். அரசனை நகரத்தைவிட்டுத் துரத்தினதன்றி, திருத்தந்தத்தையும் எடுத்துக்கொண்டு சென்றுவிட்டார்கள். அது தமிழ்நாடு புகுந்தது.

யாபகுவை பிடிபட்டதும், தலைநகர் குருணகலுக்கு மாற்றப்பட்டது. பின்னர் அது கோட்டைக்கும் கண்டிக்கும் சென்றதை அறிவோம்.

யாபகுவை தமிழர்களால் பிடிபட்டாலும் அந்நகரம் அழியவில்லை. பின்னரும் மூன்று நூற்றாண்டுகள்வரை அது நன்றாகவே இருந்தது. குடிகளும் நலன் பொருந்த இருந்தனர். ஆனால், 16-ம் நூற்றாண்டில் போர்த்துகீயர் இங்கே வந்து அதைப் பிடித்து அழித்தார்கள். இங்கு இருந்த கோட்டை கொத்தளங்கள் கோயில்கள் சிற்பங்கள் எல்லாவற்றையும் அடியோடு அழித்துவிட்டார்கள். இப்போது ஒரே ஒரு முகத்துவாரம் மட்டும் மிஞ்சி நிற்கிறது. இருபத்தேழு அழகிய படிகள் கொண்டு, இருபுறங்களிலும் கைப்பிடிகளும், அவற்றில் அருமையான சிற்பங்களும், ஒரு பெரிய நிலவும், இருபுறங்களில் துவாரபாலகர்களின் அறைகளும் இருக்கின்றன. அக்காலத்தில் நாட்டில் பெருங்கலவரங்கள் ஏற்பட்டிருந்தன. அப்படியிருந்தும் அருமையான சிற்பவேலை இங்கே ஆக்கப்பட்டிருப்பதைக் கண்டால் அந்நாளிலும் சிற்பிகளுக்குப் பஞ்சம் இல்லை;

சிற்பத்தைக் கண்டு களிக்கக்கூடிய அரசர்களுக்கும் குறைவில்லை எனலாம். இக்கோயிலின் அருமைப்பணி கொண்ட கதவு, கொழும்புக்காட்சிச்சாலையில் இன்னமும் இருக்கிறது.

மட்டக்களப்பு

தென்கிழக்கே செல்லும் புகைவண்டி கரையோரமாக நெடுந்தொலை செல்லுகிறது. பல கழிகளையும் நீர்நிலைகளையும் கடந்து செல்லுகிறது. கடைசியில் 'மட்டக்களப்பு' என்ற தமிழர் ஊருக்குப் போய் நின்றுவிடுகிறது. இங்கே கடற்கழியினுடைய தோற்றம் மிகச் சிறப்பானது. அது பல கிளைகொண்டு இருக்கிறது. அவைகளிலே படகுகள் மிதந்துகொண்டு செல்வது ஓர் அழகான காட்சி. காலைநேரத்தில் கதிரவன் புறப்பாடு மிக அழகாக இருக்கும். மாலையில் இருண்டபிறகு நிறைநிலாவில் படகுகள் மீது ஏறிச்சென்றால் பேரின்பமாக இருக்கும். அப்போது தென்றற்காற்றின் இனிய இசையைக் கூற இயலுமா? சிலர் அதனைக் கேட்டு மகிழ்ந்து, மீன்கள் இசை பாடுகின்றன என்றும் கூறுவார்கள். கழியைத் தாண்டிச் செல்வதற்கு இப்போது படகு வேண்டியதில்லை. பாலம் கட்டியாய்விட்டது. அப்பாலத்தின்மீது சென்றால் எதிர்க்கரையில் **பாண்டிருப்பு** என்ற ஓர் இடம் இருக்கிறது. இந்த இடத்தில் முன்காலத்தில், பாண்டவர்கள் ஐவர்களும் வனவாசத்தில் சென்று தங்கினதாக ஒரு வரலாறு உண்டு. இங்கே ஆண்டுதோறும் தீமிதிக்கும் திருவிழா நடைபெறுகிறது. துரௌபதியம்மன் கோயில்களிலே நமது நாட்டில் நடைபெறுகிற தீமிதித்தல் போன்றது இதுவாகும். இங்கே ஒரு பழைய கோட்டை இருக்கிறது. அதனால் யாதொரு பயனும் இப்போது இல்லை.

அடிகள்

'மட்டக்களப்பு' என்ற பெயரைக் கேட்ட அளவில், விபுலாநந்த அடிகளின் நினைவு எவருக்கும் தோன்றக் கூடியதே. விபுலானந்த அடிகள் மட்டக்களப்பில் ஒரு சிறந்த தமிழ்க்குடும்பத்தில் பிறந்தவர். இளவயதில் 'மயில்

வாகனம்' என்ற பெயரோடு உயர்நிலைக்கல்வி பெற்று, ஆங்கிலத்திலும் தமிழிலும் வல்லுநர் ஆகி, பேராசிரியராகிப் பல நிலையங்களிலும் பணிபுரிந்தவர். இராமகிருட்டின சமாசத்தைச் சேர்ந்து துறவுபூண்டு, அச் சமாசத்து ஞான வெளியீட்டின் ஆசிரியராக இருந்தவர். யாழிசையில் மிகத் தேர்ந்தவராகி, யாழ்நூல் என்ற பெருநூலை இயற்றினவர். அண்மைக்காலத்தில் இறைவன் திருவடி அடைந்தார். அவரது யாழ்நூலில் மட்டக்களப்பு நீர்நிலையில் தோன்றும் இன்னிசையைக் குறித்து எழுதியிருக்கிறார்.

இன்னிசை

இவ்வின்னிசையைக் குறித்துச் 'சித்தாந்தம்' மலர் 20ன் இதழ் 9-ல் 'அரமகளிர்' என்ற தலைப்பிலும், அடிகள் நினைவு மலரில் அதே தலைப்பிலும், இரண்டு கட்டுரைகள் யான் எழுதியிருக்கிறேன். பண்டைய தமிழ் இலக்கியத்தில் 'அரமகளிர்' என்ற சொல் மிகுதியாக வழங்கப்பட்டிருக்கிறது. அச்சொல்லினால் மானிடப்பெண்களிலும் சிறிது உயர்ந்த நிலை வாய்ந்தவர் என்ற பொருள் காணுகிறோம். அப் பெண்கள் மூவகையினர்: சூரர மகளிர், வானர மகளிர், நீரர மகளிர் என்று கூறப்பட்டுள்ளனர். அவர்கள் முறையே மலை, வான், நீர் என்ற இடங்களில் வாழுபவர். நீரர மகளிர்களைப்பற்றி வேறுமொழிப் புலவர்களும் பாடல் இயற்றியிருக்கின்றனர். மேல்நாட்டார் கருத்தின்படி, இப்பெண்டிர் இடுப்பிற்குமேல் அழகிய பெண்களின் உருவமும், இடைக்குக் கீழே மீனின் உருவமும் கொண்டவர்கள். நமது நாட்டு மச்சாவதார வடிவு கொண்டவர்கள். தலையில் நீண்ட கருங்கூந்தலும், அழகிய மதி முகமும், பொன்போன்ற மேனியும், திரண்ட தனங்களும், வளைந்த இரட்டைவாலும் கொண்டவர்கள். அழகாக இன்னிசை பாடி எப்போதும் மகிழ்ச்சியிலேயே இருப்பவர்கள். நீருக்குள் வாழ்ந்தாலும் வேண்டியபோது நீர் மட்டத்திற்கு மேல் எழும்பிவருவார்கள். அப்போது அவர்களுடைய உருவம் எவரையும் மனங்கவரக்கூடிய தன்மையில் பொலிந்துநிற்கும். இவ்வகையான உருவத்

தின் எண்ணமே நீரரமகளிரைப்பற்றி எல்லா நாடுகளிலும் இருந்தது.

நீரரமகளிர்

மட்டக்களப்பில் கடற்கழியோரம் தென்னம்பொழில்கள் நிரம்ப உண்டு. அப்பொழில்களுக்கு இடையில் பல அருமையான நீர்நிலைகள் உண்டு. அங்கே இயற்கையழகின் நடுவே அமைதியே எப்போதும் குடியிருக்கும். அத்தன்மைய நீர்நிலை ஒன்று புளியந்தீவுக்கோட்டைக்கும் கல்லடிக்கும் இடையே உண்டு. இதில் இளவேனிற் காலத்தில், முழுமதி நாட்களில், வானம் களங்கம் அற்றிருக்கும் வேளையில், நடுயாமத்தில், சிறுதோணியின்மீது அமர்ந்து அரவம் இன்றிச் சென்றால், ஒரு புதுமையான இகழ்ச்சி நிகழுமாம். அமைதிபெற்ற அந்நேரத்தில் சிறிது செவிசாய்த்துக் கேட்டால், நீரின் அடியிலிருந்து இன்னிசை எழும்பி, நம் செவிவாய்ப் புக்கு நமது உள்ளத்தை உருக்கிவிடுமாம். இவ்வகைப் புதுமையான ஒலி எவ்வாறு வருகின்றதென்று பல விஞ்ஞானிகள் ஆராய்ந்தும் அறியவில்லையாம். இதைப்போல இன்னிசை அமெரிக்காவில் காலிபோர்னியா நீர்நிலையில்தான் எற்படுகிறதாம். நீரினின்று எழும்பும் இவ்வின்னிசை, நீர்வாழ் உயிரிலிருந்து உண்டாகிறது என்று சிலர் கூறுவர். சிலர் அதனைப் 'பாடும் மீனினம்' (Singing fish) என்பர். மீன் நீரில் குதித்தாடுமேயன்றிப் பாடுதல் கேட்டறியோம். இதனை ஒரு கவிஞர் மிக அழகாகக் கூறியுள்ளார் என யாழ்நூல் கூறுகிறது. ஒரு பகுதியை எடுத்துக் கூறுவோம்.

"நீர்நிலையுள் எழுந்ததொரு நாதம்—
நீல வானிலே நிலவு வீசவே
மாலை வேளையே மலைவு தீருவோம்
சால நாடியே சலதி நீருளே
பாலை பாடியே பலரொ டாடுவோம்
நிலவு வீசவே மலைவு தீருவோம்
சலதி நீருளே பலரொ டாடுவோம்
நிசரி காகமா மபத நீநிசா

சரிக மாமபா பதநி சாசரீ

.....

என்ன எழுந்தது இன்னிசைத் தீம்பாடல்

.....எழுவர் மடநல்லார்

நீருள் இருந்தெழுந்து நின்றூர் அரமகளிர்."

இவ்வினிய பாடலையும், வரலாற்றையும் படித்த எனக்கு உணர்ச்சி தோன்ற, சில பாடல்கள் எழுதினேன். ஒன் றிரண்டு இங்கே குறிக்கிறேன்.

" இளமை வேட்டுவோம் வளமை ஈட்டுவோம்
உளமை குன்றிலோம் பழமை போற்றுவோம்
இனிமை போற்றுவோம் தனிமை நீக்குவோம்
நனிமெய் ஆடலின் வனிதை ஆடுவோம்
கவிதை பாடுவோம் புதுமை ஏத்துவோம்
புவியை வாழ்த்தியே பொதுமை சாற்றுவோம்
நடனம் ஆடுவோம் கடகக் கைகளால்
திடலில் கோத்துச்சீர் தொடர ஆடுவோம்
கொடியிற் கோழியை முடியில் ஏத்தியே
நொடியிற் தாள்படிந் தடியிற் போற்றுவோம்
நிலவில் ஆடுவோம் செலவில் கூடுவோம்
நலமில் போக்கியே பலருள் ஆடுவோம்
மதியம் பூத்திட முதிய மாண்பிலே
பதியம் பாடியே விதியைத் தாக்குவோம்
செழுமை பொங்கிட முழுமை ஏத்துவோம்
எழுமை ஊர்திலும் கொழுமை கொள்ளுவோம்
கமல வாவியில் அமல முற்றிட
விமல தன்னொடே நிமலன் ஏத்துவோம்
தமிழர் சோலையில் அமிழ்தப் பேச்சினில்
குமிழும் பொய்கையில் நிமிர்ந்து பாடுவோம்
நிசரி காகமா மபத நீ நிசா
சரிக மாமபா பதநிசா சரீ
ரிகம பாதபா தநிச ரீரிகா
கமப தாதநீ நிசரி காகமா."

இவ்வகையாக இன்னிசை எழும்பும் நீர்நிலை கொண்ட ஊர், தமிழர் வாழுமூர் என்றறிதல்வேண்டும். பல நூற் றாண்டுகளுக்கு முன்னமே தமிழ்மக்கள் குடியேறிச் செழித்த ஊர். தமிழர் அக்காலத்தில் கடற்கரை ஓர மாகவே குடியேறி இருந்த வளமை போற்றத்தக்கதே யாகும்.

வடமேற்கு மாகாணம்

புத்தளம்

கொழும்பு தலைநகராக இருக்கும் மேற்குமாகாணத்திற்கு நேர் வடக்கே இருப்பது வடமேற்குமாகாணம். இதற்குத் தலைநகர் 'புத்தளம்'. இந்நகர் மேற்குக்கரையில் கொழும்புக்கு நேர் வடக்கே சில கல்லில் இருக்கிறது. கொழும்பின் அடுத்த இராகமை சந்தியிலிருந்து பிரிந்து வடக்கே நேராகப் போகும் இருப்புப்பாதை புத்தளத்திற்குச் செல்லுகிறது. வழியிலே இரண்டு பெரிய ஊர்கள் இருக்கின்றன. 'நீர்கொழும்பு' என்பது கொழும்பிலிருந்து வடக்கே 24 கல்லில் இருக்கிறது. இதில் ஒரு பழைய ஒல்லாந்தர் கோட்டை இருக்கிறது. இங்கே மீன் பிடிக்கும் தொழில் சிறந்தது.

இதை விட்டு வடக்கே சில கல் சென்றால் 'சிலாபம்' என்னும் ஊர் இருக்கிறது. இங்கே முன்காலத்தில் முத்துச் சலாபம் எடுத்தார்கள்போலும்.

சிலாபம்விட்டு வடக்கே சில கல் சென்றால் புத்தளம் அடையலாம். 'புத்தளம்' என்ற தமிழ்ச்சொல் 'புதுஅளம்' என்று பிரிவுறும். அதன் பொருள் 'புதிய உப்பளம்' என்பது. இங்கே உப்புவிளைவு மிகுதி எனத் தெரிவுறும். இவ்வூர் ஒரு நீண்ட காயல் அல்லது வளைகுடாவிற்குக் கீழ்க் கரையில் உள்ளது. இவ்வளைகுடா ஒரு பெரிய துறை முகம்போல் உள்ளது.

கொழும்பிலிருந்து வடக்கே செல்லும் இருப்புப் பாதை ஒரமாக வண்டிப்பாதையும் உண்டு. மேலும் அநுராதபுரத்திலிருந்து வடமேற்காகவும், குருணைகலையிலிருந்து வடமேற்காகவும் வண்டிப்பாதைகள் உண்டு.

இந்தப் பகுதியோடு இலங்கை என்னும் முத்தின் வரலாறு ஒருவாறு முடிந்தது. இனி ஒன்றிரண்டு கருத்துக்களைக் கூறி இந்த நூலை முடிக்கின்றேம்.

பின்னுரை

இதுகாறும் இலங்கைத்தீவைப்பற்றி நான் கண்ட அளவில், கற்ற அளவில் எழுதினேன். இனிக் காணுததும், கல்லாததும், கேட்காததும் பல இருக்கலாம். மேலும் எழுதினவற்றிலும் பல பிழைகளும், திருத்தங்களும் இருத்தல் கூடும். கருத்துவேற்றுமைகளும் இருத்தல் கூடும். அவைகளை அறிவிப்பின் பின்னல் கூட்டியும், கழித்தும், திருத்தியும் செப்பனிடல் முடியும். ஆகவே, கற்றோர்கள் இதனில் உள்ளவற்றை, அவைகளின் மதிப்புக்குத் தக்க படி ஏற்றுக்கொள்ளுவார்களாக.

நான் அறிந்தவைகளைப் பிறருக்குத் தெரிவிக்கும் முறையாகவே இந்நூல் எழுதப்பெற்றுள்ளது. ஆகவே, பிறர் இதனைப் படித்து, இதனுல் யாதேனும் ஒரு சிறு பயனேனும் பெறுவார்களேயாயின், அதுவே இந்நூல் வெளிவருவதற்குள்ள பயனைப் போதுமானது.

இந்நூல் ஒரு பயணநூல்; பல இடங்களையும் சுற்றி அங்கே கண்ட செய்திகளைக் குறிக்கும் நூல். நான் இலங்கைக்கு முன்னமேயே மூன்றுமுறை சென்றிருக்கிறேன். மூன்று முறைகளிலும் கண்டு கேட்டவைகளில், அறியத்தகுந்த பகுதிகளைமட்டும் ஒழுங்குபடுத்தி எழுதியிருக்கிறேன். இதைப் படித்தால், பிறர் இலங்கைக்குச் செல்லும்போது என்னென்ன பார்க்கக்கூடும் என்று எளிதில் அறியமுடியும். ஆகவே, இதனைப் பிரயாணிகள் கையேடு எனவே மதிக்கலாம். வெறுங் கையேடுமட்டும் அன்று. அவ்வவ்விடங்களில் உள்ள கட்டடங்களைப்பற்றிய விவரமும், பண்டைவரலாறும் இதில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, இது வெறும் பிரயாணிகளுக்கேயன்றி, படிக்கப்போகும் மாணவர்களுக்கும் மிகுதியும் பயன்படக்கூடியதே. ஆங்கிலம் முதலிய மொழிகளில் பயண நூல்கள் மிகுதியாக இருக்கின்றன. இப்பொழுதும் எழுதப்பட்டு வருகின்றன. அப்படிப்பட்ட நூல்களே ஒரு தனி இலக்கியமாகவும் ஏற்பட்டுவிட்டன. ஆனுல், நமது தமிழிலோ அவ்வகை நூல்கள் மிகுதியாக இல்லை. அண்மையில்தான் சில அறிஞர்கள் பயண நூல்களை எழுதிக்கொண்டுவருகிறார்கள். சில வெளிவந்துள்ளன. சில திங்கள்வெளியீடுகளிலும் பயணங்களைப்பற்றிய கட்டுரைகளை வெளியிட்டுவருகிறார்கள். ஆகவே, தமிழ்மக்களுள் பயணநூல்களை எழுதவேண்டும் என்ற ஆர்வமும், படிக்கவேண்டும் என்ற விருப்பமும் இப்போது ஏற்பட்டிருக்கின்றன. ஆகவே, இந்நூல் வெளிவருவதற்கு ஒரு காரணம் இப்போது நாட்டில் ஏற்பட்டிருக்கிற ஆர்வம் என்று கூறலாம் அன்றே?

இலங்கையைப்பற்றித் தமிழ்நாட்டில் பலபேருக்கு யாதொன்றும் தெரியாது. அதனைத் தெரிந்துகொள்ளவேண்டியது கட்டாயமாகும் என்று தோன்றவில்லையா? இலங்கை இந்தியாவிற்கு அண்டையில் இருப்பதாலும், அங்கு இருக்கும் மக்கள் நம்மோடு உறவு பூண்டவர்கள் ஆதலாலும், அந்நாட்டு மக்களின் வாழ்க்கை நலங்களை நாம் நன்கு அறியக் கடமைப்பட்டுள்ளோம்.

இந்தியாவிற்கும் இலங்கைக்கும் 2500 ஆண்டுகளாகத் தொடர்பு உண்டு. வரலாறு, போக்குவரவு, வாணிகம், குடியேறுதல், படையெடுப்பு, அரசியல், மொழி, நடமாட்டம் முதலான பலவகைகளிலும் தொடர்பு உண்டு. இப்படியிருக்கையில் அத்தீவைப்பற்றி நாம் மிகுதியாக அறியவேண்டாமா? மேலும், தற்கால அரசியல் விவகாரங்களில் நமக்கும் இலங்கைக்கும் மிகுதியான தொடர்பு ஏற்பட்டுள்ளது. அண்மையில் அன்பு குறையக்கூடிய நிகழ்ச்சிகள் அரசியல் திட்டங்களில் ஏற்பட்டுவருகின்றன. இந்தியர்கள் பெரும்பான்மையாக இலங்கையில் குடியேறியிருப்பதனாலும், இலங்கையின் தோட்டச்செல்வங்கட்கு இந்தியத் தொழிலாளிகளே பெரும்பகுதி உதவி செய்துவந்திருப்பதாலும், இந்தியர்களுக்குச் சலுகை காட்ட இலங்கை மக்கள் கடமைப்பட்டுள்ளார்கள். அந்த விவகாரங்களையும் நாம் அறிந்துகொள்ளக் கடமைப்பட்டுள்ளோம். அந்த வகையிலும் இந்நூல் நம் மக்களுக்கு ஒரு சிறிது பயன்படும். இந்த முறையிலே இந்த நூல் நமது நாட்டுமக்களுக்குப் பயன்பட்டால் நன்மை அன்றோ?

இலங்கைத்தமிழர்களுக்கும் இந்நூல் ஒரு வகையில் பயன்படக் கூடியதே. இந்திய நாட்டான் ஒருவன் இலங்கையைப்பற்றி என்ன நினைக்கிறான் என்று இலங்கை மக்கள் தெரிந்துகொள்ளவேண்டாவோ? அவ்வந்நாட்டார் தம்தம் நாட்டுப் பெருமைகளை அறியாமலும் இருக்கக்கூடும். இந்த வகையிலும் பல குறிப்புக்கள் இங்கே தொகுத்துத் தரப்பட்டிருக்கின்றன. இதனைக்கொண்டு இலங்கை மக்கள் பயன்பெறுவார்களாக.

சேர்க்கை

I. சிங்கள அரசர்கள்

(மகாவமிசம்)

		கி. மு.	தலைநகர்
1.	விசயன்	545	தம்மண்ணுவரை
2.	பாண்டு வாசுதேவன்	504	
3.	அபயன்	474	
4.	பாண்டுக அபயன்	437	அநுராதபுரம்
6.	முத்தசிவன்	367	
7.	தேவனும்பிய திசன்	307	
8.	மகாசிவன்	257	
11.	சேனன் } தமிழர்	237	
12.	குத்தகன் }		
13.	அசலன்	215	
14.	ஏலேலசிங்கன் (தமிழன்)	205	
15.	துட்டகெமுனு	161	
20.	வலிகம்பா	104	
21.	ஐந்து தமிழர்	103	
	உலகம்பா	88	
29.	அனுல (பெண்)	47	
		கி. பி.	
37.	இளநாகன்	35	
43.	கயவாகு	113	
49.	ஸ்ரீநாகன்	196	
57.	ஜெகதீசன்	267	
58.	மகாசேனன்	277	
	(சூலு வமிசம்)		
59.	ஸ்ரீ மேகவண்ணன்	304	
61.	புத்ததாசன்	332	
63.	மகாநாமன்	412	
66.	மித்தசேனன்	435	
67.	ஆறு தமிழர்	436	
74.	காசியபன்	479	சீயகிரி
75.	முகலன்	497	
76.	குமாரதாசன்	515	
81.	தழலன்	529	

84.	மகாநாகன்	561	
85.	அகரபோதி I	564	
87.	சங்கதிசன்	608	
92.	தோடதிசன்	640	
97.	தத்தன்	689	
100.	அகரபோதி V	726	
102.	மகிந்தன் I	738	
107.	மகிந்தன் III	812	
111.	சேனன்	846	பொலனறுவை
113.	உதயன்	901	
119.	சேனன் III	955	
123.	சேனன் V	991	
125.	கஸ்யபன்	1037	உருகுனை
128.	விக்கிரமபாண்டு	1052	கலுத்துறை
130.	பராக்கிரமபாண்டு	1057	உருகுனை
131.	நீலகேசரன்	1059	கதிர்காமம்
133.	விசயன் I	1065	பொலனறுவை
134.	சயபாகு I	1120	
135.	விக்கிரமவாகு	1121	
136.	கயவாகு II	1142	
137.	பராக்கிரமவாகு I	1153	
138.	விசயவாகு II	1186	
139.	மகிந்தன் VI	1187	
144.	லீலாவதி (பெண்)	1197	
146.	கலியாணவதி	1202	
150.	பராக்கிரமபாகு II	1212	
165.	விசயபாகு II	1351	கோட்டை
173.	விசயபாகு VI	1527	
178.	சேனரதன்	1604	கண்டி
179.	இராசசிங்கன்	1635	
180.	விமலதரும சூரியன்	1657	
184.	இராசாதிராசன்	1780	
185.	விக்கிரமராசசிங்கன்	1798-1815	

II யாழ்ப்பாண ஆரியசக்கரவர்த்திகள்

விசய கலிங்கன்		சிங்கை அரசன்
குலசேகரன்	1250	பரராசசேகரன்
குலோத்துங்கன்	1284	சகராசசேகரன்
விக்கிரமன்	1284	பரராசன்
வரோதயன்	1302	சகராசன்

மார்த்தாண்டன்	1325	பரராசன்	
குணபூடணன்	1367	சகராசன்	
வரோதயன்		பரராசன்	
சயவீரன்	1380	சகராசன்	
குணவீரன்	1410	பரராசன்	
கனகசூரியன்	1440	சகராசன்	சிங்கையழிவு
சிங்கைப்பரராசன்	1478	பரராசன்	
பரசிங்க நிருபன்			
சங்கிலி	1519-1542	போர்த்துகீயரால் கொலை	

III. மேல் நாட்டார்

1. போர்த்துகீய கவர்னர் 15 பேர்
2. டச்சு ,, 5 பேர் 1640-1653 காலி
   ,, 32 பேர் 1656-1795 கொழும்பு
3. ஆங்கிலர் 1796-1947 கொழும்பு

IV. இலங்கையைப்பற்றிய சில புள்ளிவிவரங்கள்

பரப்பு :—25,332 - சதுர மைல்

மக்கள் தொகை :—(1946) - 6,658,999.

நெருக்கடி - 1 ச. மைலுக்கு 263.

மாகாணங்கள்

மேற்கு	...	1,876,625
நடு	...	1,134,584
தென்	...	962,006
வட	...	479,639
கீழ்	...	279,204
வடநடு	...	139,581
வடமேற்கு	...	668,192
உவா	...	373,059
சபரகமுவா	...	746,109

தலப்பிரிவினை

சிங்களர்	...	4,637,000
தமிழர்	...	826,000
இந்தியத் தமிழர்	...	682,000
முசுலிம்	...	393,000

மற்று இந்தியர்	...	69,000
பறங்கியர்	...	36,000
ஏனையோர்	...	16,000

சமயங்கள்

புத்த சமயம்	...	4,288,000
இந்து சமயம்	...	1,326,000
கிறித்து	...	606,000
முசுலிம்	...	433,000
ஏனைய	...	5,000

இலங்கையைச் சேர்ந்த மாலத் தீவுகள் மக்கள் } 82,068 தொழிலாளிகள்

1946—இந்தியாவிலிருந்து குடியேற்றம்— வரவு 269,404 — 78,593

போக்கு 218,915 — 75,939

1945—திருமணங்கள் ... 44,325
பிறப்பு ... 238,494
இறப்பு ... 142,931
குழவி இறப்பு ... 33,309

1945—46 அரசியல் வரவு — ரூ. 283,263,326
செலவு — ,, 312,855,337

1946—வணிகம் இறக்குமதி ... 695,568 ஆயிரம்
ஏற்றுமதி ... 764,584 ,,
இறக்குமதி—நெல் ... 5,074 ஆயிரம்
மா ... 4,259
காப்பி ... 3,846
சர்க்கரை ... 1,834
புட்டிப்பால் ... 11,329

விளைபொருள்

உழவு நெல்	...	912,000	எக்கர்	பனை	50,000
தென்னை	...	920,000	,,	கருவாப்பட்டை	33,000
இரப்பர்	...	573,000	,,	எலம்	6,000
தேயிலை	...	533,830	,,	புகையிலை	2,600
பாக்கு	...	69,000	,,	கொக்கோ	19,700

காடுகள்

விளைவு காடுகள்	...	2,516,000	எக்கர்
மொத்தம்	...	3,570,000	,,

நீர்ப்பாய்ச்சல் வசதி — 912,500 ஏக்கர்.

முத்துச்சிப்பி முதலிய கடற் பண்ணை

1903—07 வரவு — 7,340,000
1925— ,, 526,000

பிறகு—அழிவு—காரணம் என்ன ?

கனிவர்க்கம் :—காரீயம் 6 பெருங்கனிகளும், 25 சிறுகனிகளும்
மணிகள்—இரத்தினபுரத்தில்

கல்வி — 6—14 வயதில் கட்டாயம்.

1945-ல்—2,391 அரசியல் பள்ளிகள்
3,335 உதவிப்பள்ளிகள்

சிங்களம், தமிழ்ப்பள்ளிகளில் சம்பளம் இல்லை.

பல்கலைக்கழகம் 1942-ல் தொடங்கியது.

1945-ல் ஆண் 932 பெண் 133 மொத்தம் 1,065
சிங்களர் 642, தமிழ் 337,
புத்தர் 402, இந்து 202, கிறித்து 420

வைத்தியசாலைகள் பெரியவை—189 படுக்கைகள் 16,779
பிரசவம் 313 வைத்திய விடுதி 2,500
சில்லறை 888 நோயாளிகள் 7,500,000

கூட்டுறவு—1946 6,531 சாலைகள்
1,128,000 உறுப்பினர்
36,000,000 மூதல்

நீதிமன்றங்கள்—பெரிய மன்றம் 1, 1 தலைவர், 8 நீதிபதிகள்
ஜில்லா மன்றம் 23, குற்ற மன்றம் 33

போக்குவரவு—நாவாய் கொழும்புத்துறைமுகம் உலகு முழு
[தும் தொடர்பு

புகைவண்டி 912 மைல் பாதைகள் 17,500 மைல்
கால்வாய் 120 ,, மின் வண்டி 7½ ,,
அஞ்சல்(போஸ்ட்) 1,046 அகங்கள்
தந்திக்கம்பி 10,316 மைல். பேசும் கம்பி 70,445 மைல்

கண் காட்சி—கண்டி கொழும்பு இரத்தினபுரி—சாலைகள் 3

பூவியல்—தென்வடல் நீளம் 270 மைல்
கீழ்மேல் ,, 140 ,,
பரப்பு ,, 25,332 ச. மைல்

உயர்ந்த இடம்: பிகுருதலகா 8,292 அடி
நீண்ட ஆறு: மாவலிகங்கை 200 மைல்
தட்ப வெப்பம்: யாழ்ப்பாணம் 82 டிகிரி
திருக்கோணமலை 82 ,, காலி 80 டிகிரி
நூரளை (6,000) 60 ,,

மழை—கொழும்பு 7·98 காலி 9·48 யாழ்ப்பாணம் 4·77
திருக்கோணமலை 7·66 கண்டி 6.85

அரசியல்—கவர்னர் ஆட்சித்தலைவர்

பாராளு மன்றம் 2 மேல்மன்றம் 30 பேர்
கீழ்மன்றம் 101 ,,

36 பிரதமரும் மற்ற அமைச்சர்களும் ஆட்சிபுரிவர்.

மாகாணங்கள் 9 ஜில்லா 20

மேற்கு மாகாணம்	கொழும்பு, கலுத்துறை
நடு ,,	கண்டி, மாத்தளை, நூரளை
தென் ,,	காலி, மாத்துறை, அம்பந்தோட்டை
வட ,,	யாழ்ப்பாணம், மன்னர், வாளவியா
கீழ் ,,	மட்டக்களப்பு, திருக்கோணமலை
வடமேற்கு ,,	குருனகலை, புத்தளம், சிலாபம்
வடநடு ,,	அநுராதபுரம்
உவா ,,	வதுளை
சபரகமுவா ,,	இரத்தினபுரம், கேகலை

மாகாணங்களின் தலைவர்: ஏஜண்டு
கிராமாதிகாரிகள்: 3,800